Foll. 1—27. Extent, 648 granthas.

Transcribed in 1950—51 from a manuscript of Annamalai University.

This is a practical treatise on medicines. As most of the other treatises ; this is also described to Agastiyar.

Beginning :

கோரோசனை மாத்திரை

கோரசனைம்—விராகன்	எடை	க
குங்குமப்பூ—	,,	க
கஸ்தூரி —	,,	க
வால்மிளகு—	,,	க
அதிமதுரம்—	,,	க
கோஷ்டம் —	,,	க
சீரகம் —	,,	க
கருஞ்சீரகம்—	,,	க
இந்துப்பு—	,,	க
இலுப்பக்கொட்டை	,,	க

இவைகளைக் கற்றாழைச் சாறு வார்த்து அரைத்து பின்பு முலைப்பாலில் அரைத்து உண்டையாகக் குண்டுமணிப் பிரமாணம் மாத்திரை உருட்டவும். முலைப்பாலிலிழைக்கவும்—சுரம் தீரும்.

End.

வீர மெழுகு

சுத்தி பண்ணின வீரம் விராகனெடை 2. முருங்கைப்பூரசம் உழக்குச்சாறு ஒரு சரத்தில் வார்த்து வீரத்தை அதில் போட்டு இறுகக் காய்ச்சி சுக்கு பலம்-4, மிளகு பலம்-4, திப்பிலி பலம்-4, இந்த மூன்றும் வஸ்திர காயம் செய்து சரத்தில் போட்டுக் கிளறி உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு மாட்டுக்கொம்பு பரணியில் வைத்துக்கொண்டு சுக்கு மிளகு கஷாயத்தில் கொடுக்கவும். பாரிச வாயுவுக்கும், வாயுவுக்கும் கொடுக்கவும்.

(கு-பு.)—

இந்நூல், அனுபோக வைத்தியம் என்னும் பெயர்த்து. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து பிரதி செய்த பகுதியாகும். ஆராய்தற்குரியது. ஒவ்வொரு மருந்து முதலிலேயும் அகத்தியர் என வந்திருப்பதால் அகத்தியர்தம் நூலின் உரைநடையோ என ஊகிக்க இடமுண்டு.

R. No. 2377.

கொக்கோகம்

KOKKŌKAM

Foll. 28—43, Extent, 270 granthas.

Begins on foll. 28 (a) of the manuscript described under R. No. 2376.

Restored in 1950-51, from a manuscript described under R. No. 540.

(கு-பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு, 540-ஆம் எண்ணின் கீழ் வந்துள்ளதையே பிரதி செய்து வைக்கப்பட்டதாகும். அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 2378 (only two volumes).

நாராயண பரத்வம்—வியாக்கியானத்துடன்.

NĀRĀYAṆA PARATVAM WITH COMMENTARY.

Paper. 12¾ × 9¾ inches. Foll. 1—453. Lines 24, on a page. Tamil. Good. New. Extent, 10,872 granthas.

(Only two volumes).

Restored in 1950-51 form a manuscript described under D. No. 894.

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு, 894-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருப்பதையே பிரதி செய்ததாகும். அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 2379.

இயற்பா-பெரிய வியாக்கியானம்

IYARPĀ—PERIYA VYĀKHYĀNAM

Paper. 13¾ × 8, 12½ × 10 inches. Foll 1—369. Lines 24, 26 on a page. Tamil and Grantha. Good. New. Extent, 8,856 granthas.

Restored in 1949–50, from a manuscript described under R. No. 119.

(கு-பு.)—

இந்நூல் மூலவருடக் காட்லாக்கு, 119-ஆம் எண்ணின் கீழ் வந்துள்ளதையே பிரதி செய்து வைக்கப்பட்டதாகும். அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 2380.

அரிச்சுவடி

ARICCUVAḌI

Palm leaf. 16½ × 1½ inches. Foll. 1—21. Lines, 1 on a page. Tamil. Much injured. Old. Extent, 10 granthas.

Incomplete.

Same work as that described under D.No. 1.

Presented in 1950–51 by Sri K. T. Natesan, Pudupet, Nagari post, Chittoor district.

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு, 1-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க. இதில் முதல் இடை கடைகளில் உள்ள ஏடுகள் காணப்படவில்லை.

R. No. 2381.

அருணகிரி யந்தாதி

ARUṆAGIRI ANTĀDI

Palm leaf. 16½ × 1 3/16 inches. Foll. 1—26. Lines, 4 on a page. Tamil. Much injured. Old. Extent, 200 granthas.

Complete.

Presented in 1950–51 by K. T. Natesan, Pudupet, Nagari, Chittoor district.

Same work as that described under D. No. 237.

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு, 237-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 2382.

அபிராமி யந்தாதி

ABHIRĀMI ANTĀDI

Palm leaf, 17¾ × 1 inches. Foll. 1—27. Lines, 4 on a page. Tamil. Much injured. Old. Extent, 200 granthas.

Complete.

Presented in 1950–51 by Sri K. T. Natesan, Pudupet, Nagari, Chittoor district.

Same work as that described under D. No. 235.

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு, 235-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க. சிதிலமாயது.

R. No. 2383.

குமரேச சதகம்

KUMARĒSA ŚATAKAM.

Palm leaf. 14¼ × 1¼ inches. Foll. 1—29. Lines, 6 on a page. Tamil. Injured. Old. Extent, 600 granthas.

Complete.

Presented in 1950–51 by Sri K. T. Natesan, Pudupet, Nagari, Chittoor district.

Same work as that described under D. No. 143.

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு, 143–ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க. சிதிலமாயது.

R. No. 2384

திவாகர நிகண்டு.

TIVĀKARA NIKAṆḌU (DEVAP PEYAR-T-TOKUDI).

Palm leaf. 16¼ × 1¼ inches. Foll. 1—14. Lines, 6 on a page. Tamil. Injured. Old. Extent, 40 granthas.

Incomplete.

Presented in 1950—51 by Sri K. T. Natesan, Pudupet, Nagari Chittoor district.

Same work as that described under D. No. 25.

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு, 25-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 2385.

ஆத்திச்சூடி உரையுடன்
ATTICCŪḌI WITH COMMENTARY

Palm leaf. $15\frac{1}{4} \times 1\frac{1}{8}$ inches. Foll. 1—14. Lines, 6 on a page. Tamil. Injured. Old. Extent, 120 granthas.

Incomplete.

Presented in 1950-51 by Sri K. T. Natesan, Pudupet, Nagari, Chittoor district.

Same work as that described under R. No. 1698.

(கு-பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு, 1698-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க. முற்றுப் பெறவில்லை.

R. No. 2386.

விவேக சிந்தாமணி
VIVĒKA CINTĀMAṆI.

Palm leaf. $14\frac{1}{4}$—$1\frac{1}{8}$ inches. Foll. 1—15. Lines 4, 5 on a page. Tamil. Injured, Old. Extent, 112 granthas.

Incomplete.

Both in the beginning and end some folios are missing.

Presented in 1950-51 by Sri K. T. Natesan, Pudupet, Nagari, Chittoor district.

Same work as that described under D. No. 199.

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு, 199–ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க. இடையிலும் கடையிலும் சில ஏடுகள் காணப்படவில்லை.

R. No. 2387.

உபதேச நூல்
UPADĒSA NŪL (Vacanam)

Palm leaf. $18 \times 1\frac{1}{4}$ inches. Foll. 1—8. Lines, 5 on a page. Tamil. Injured. Old. Extent, 30 granthas.

Incomplete.

In the middle and end some folios are missing.

Presented in 1950-51 from Sri K. T. Natesan, Pudupet, Nagari, Chittoor district.

Same work as that described under R. No. 1394.

(கு·பு)—

இந்நூல், உபதேச நூல் என்னும் பெயர்த்தாய், வசன நடையிலுள்ளாயது. குழந்தைகளுக்குச் சிறு வயதில் "பெரியோரிடத்தில் தாழ்ந்து பணிவாக நடக்கவேண்டும்" என்பன போன்ற கருத்துக்களை உவமை மூலமாக, ஆசிரியர் விளக்குவதாக அமைந்துள்ளது. இதற்கு, ஒரு மொழி வாக்கியம், என்றும் பெயர் உண்டு. இதில் எட்டு ஏடுகளே உள. முதற்றொடங்கி இறுதி வரையில் ஓலைகள் இடையிடையே காணக்கூட வில்லை. இந்நூல், எவ்வளவு ஓலைகளைக்கொண்டதொரு நூல் என்பது ஊகிக்க இடமில்லை. இருப்பினும், மூவருடக் காட்லாக்கு, 1394-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிற நூலும் இதுவும் ஒற்றுமையுடையதாம். அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 2388.

நல்லதங்காள் நாடகம்
NALLATAṄKĀḶ NĀṬAKAM

Palm leaf. 16¼ × 1¼ inches. Foll. 1—64. Lines, 7 on a page. Tamil Injured. Old. Extent, 1200 granthas.

Incomplete.

By—Jayaraman.

Wants foll. in the beginning, middle and end.

Beginning :

(பாயிரம்)

விநாயகர் துதி (நேரிசை வெண்பா)

சீரார் மதுரைவளர் ஜெயராம லிங்கனருட்
பாரார்நற் றங்கைதமிழ் பாடுதற்கிங்—கோருந்
தற்பரமெய்ப் பொருளாகித் தாரணியெ லாம்புகழும்
கற்பகத்தின் பொற்பதமே காப்பு.

இதுவு மது

கலி விருத்தம்

மஞ்சுதவழ் மிஞ்சளக வல்லி நல்ல தங்காள்
விஞ்சுவா லாறுசொல வேயருளு வோன்முன்
கொஞ்சுமலை மாதுதரு குஞ்சர கணேசன்
செஞ்சரண பொற்கமல மஞ்சலிசெய வாமால்,

பரமசிவ வணக்கம்

விருத்தம்

விண்ணவ ரெவரு மேத்தும் வேதவே தாந்த ஞான
அண்ணலி னருளா லுற்ற வகிலமெண் டிசையோர் வாழ்த்தும்
உண்மைசேர் நல்ல தங்காள் டீகை நா டகமாய்ச் சொல்லக்
கண்ணுத லடிப்பூங் கஞ்சக் கழலிணை கருது வாமால்.

. . . .
. . . .
. . . .
. . . .

வசனம்

ஆ! கோ! கேளுங்கள் மந்திரிமார்களே!
எனது அரசுரிமையைத் தாங்குவதற்குப்
பிள்ளை இல்லாமையால் நமது நகரத்தில்
சோதிட சாஸ்திரத்தில் மிகவும் வல்லவர்களாயிருக்கும்
மறையவர்களை அதி தீவிரமாய் வருவிப்பீர்களாகில்
அவர்களை ஆய்ந்து பார்க்கச் செய்து, எனது குறையை
அகற்றிக் கொள்ளுவேன். அதி சீக்கிரமாய் வரவழைப்
பீர்கள் மந்திரிகளே . . . .

ஈறு:

நல்லண்ண ராஜன் சொல்

விருத்தம்

(இராகம்—முகாரி)

எப்படி சொல்வேன் காணி மெழில்காசி வேந்தே சேண்மோ
ஒப்பில்லா உம்மைக் கண்டு உடம்பது சுருக்கக் கொண்டேன்
கற்பனை வஞ்ச மூளிச் சண்டாளி கொடுமை யாலே
மைப்பெறு நல்ல தங்கை மக்களோ மறந்திட் டாலே

(கு-பு.)—

இந்நூல் நல்லதங்காள் நாடகம், என்னும் பெயர்த்து. இதில் முதல் இடை கடைகளில் பல ஏடுகள் காணப் பெறுமல், முடிவு பெறுததாய் அமைந்திருக்கின்றது. இந் நூல் அச்சிடப் பெற்றுள்ளது. இதன் ஆசிரியர் கடவுள் வாழ்த்துப் பாடலால் மதுரை ஜெயராமலிங்கன் என்று கொள்ளக் கிடக்கின்றது.

R. No. 2389.

வைத்திய நூல்

VAITTIYA NŪL

Palm leaf. 15¼ × 1¼ inches. **Foll. 1—46. Lines, 6 on a page. Tamil. Injured. Old. Extent, 552 granthas.**

Incomplete.

Some folios are missing in the middle.

Same work as that described under D. No. 566.

Presented in 1950–51 by Sri K. T. Natesan, Pudupet, Nagari, Chittoor district.

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு, 566–ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டுளது. அச்சியற்றப் பெற்றது. சிதிலமாயது. இடையிடையே ஏடுகள் காணக்கூடவில்லை. அதன் குறிப்பையுங்காண்க.

R. No. 2390.

வைத்திய நூல்

VAITTIA NŪL

Palm leaf. 15¼ × 1¼ inches. Foll. 1—18. Lines, 5 on a page. Tamil. Injured. Old. Extent, 200 granthas.

Incomplete.

Same work as that described under D. No. 566.

Presented in 1950–51 by Sri K. T. Natesan, Pudupet, Nagari, Chittoor district.

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு, 566–ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டு, அனுபோக வைத்தியம் என்னும் பெயர்த்ததாய் அச்சிடப்பட்டும் இருக்கின்றது. அதன் குறிப்பையுங் காண்க. இது சிதிலமாயுளது.

R. No. 2391.

மேரு மந்தர புராணம்

MĒRUMANDARA PURĀṆAM

Paper. 12¼ × 10 inches. Foll. 1—120. Lines, 24 on a page. Tamil. Good. New. Extent, 760 granthas.

Complete—Printed.

Transcribed in 1950–51 from a manuscript of Annamalai University.

This work on Jainism contains 13 Carukkams and 1406 Viruttams. It has been published.

Beginning:

குற்றங் கடிஇல்லான் குணத்தா னிறைந்தான் குணத்தான்
மற்றிந்த வையய மளந்தான் வையநின்ற பெற்றி
முற்று முரைத்தா னுரையீ ரொன்பதாய் தோற்றுற்
செற்றங்க டீர்ப்பான் விமலன் சரணசென்னி வைத்தேன்.

மேதக்க சோதி விமலன் கணத்துக்கு நாதர்
மாதக்க கீர்த்தி யுயர்மந் தரமேரு நாதர்
போதக் கடலார் புராணம் பொருளால் மனத்தைச்
சோதிக்க லுற்றேனிறைவா லொன்று சொல்லலுற்றேன்.

மலைபோல நின்று வெயிலவன் பனிமாரி வந்தா
னிலைபோத லில்லார் நிலையின்முன் னண்ணுந்து நின்றேன்
கலையா லிறைந்தார் கடந்த கவிமாக் கடலின்
நிலையாது மெண்ணு திதுநீந் துதற்கு மெழுந்தேன்.

End :

பொன்னரி மாலை சாந்தஞ் சுண்ணம்பூ மாலை தூம
மின்னெனப் பலவு மேந்தி யிமையவ ரிறைஞ்சு மெல்லை
மின்னென முனிவர் மேனி மறைந்தனை வியந்து நோக்கிப்
பன்னருந் துதிய ராகி வானவர் பணிந்து போனார்.

முடிவிலாத் தடுமாற்ற முதல்கிழியமுவிரத முறையிற் றோன்றி
இடையிலா வினைமுதலா மோகமெரிந்தாக.... வியல்பிற்றோன்றி
கடையிலாக் காதிகெடக் காட்சி வலியறி வின்பக் கண்ணே
தோன்றித்
துடர்வெலா மறவெறிந்த தோன்றிய நாற்குணத்தினு நற்சுயம்பு
வானார்.

* * * * * *
* * * * * *
* * * * * *
* * * * * *

(கு-பு.)—

இந்நூல், மேருமந்தர புராணம் என்னும் பெயர்த்ததாய், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து பிரதி செய்வித்ததாகும். இடையிடையே எழுத்துக்கள் காணக்கூடவில்லை. வைசயந்தன் முத்திச் சருக்கம், சஞ்சயந்தன் முத்திச் சருக்கம், பத்திரமித்திரவைங்கேள்விச் சருக்கம், பூரண சந்திரன் ரகசியச் சருக்கம், காலவரும் சுவர்க்கம்புக்க சருக்கம், மன்னனும் தேவியும் சுவர்க்கம் புக்க சருக்கம், சக்கராயுதர் முத்திச் சருக்கம், வச்சிராயுதன் உத்தரம்புக்க சருக்கம், பலதேவன் சுவர்க்கம் புக்க சருக்கம், நிரையத்துள் உறைமுறைச் சருக்கம், பிறவிமுடி சருக்கம், ஸ்ரீ விகாரச் சருக்கம், சயம்புவானச் சருக்கம் முதலாய பதின்மூன்று சருக்கங்கள் கொண்டதாகும். 1406 விருத்தப் பாக்கள் கொண்டது. இந்த நூல் அச்சிடப்பட்டுள்ளது. ஜைனமதத்தினைச் சார்ந்தது.

R. No. 2332.

நள சரித்திரம்
NAḶA CARITTIRAM

Paper. 10 × 12¼ inches.. Foll. 1—154. Lines, 24, on a page. Tamil, good, New. Extent, 2,745 granthas.

Incomplete.

Transcribed in 1950—51, from a Manuscripts of Nāniyār Mutt, Cuddalore.

Some leaves are missing in the middle and at the end. Written in prose, the style is poor and mediocre.

Beginning :

மிக்க வேத வியாசர் விளம்பிய
இக்க தைக்கிய லீன்றருள் செய்திட
முக்கண் வெற்பினை மும்மத வாரியைக்
கைக்கு லைக்கனை கைதொழு தேத்துவோம்.

வேகமாய் நெறிசேரும் வினைகளும்
தாகபோகமே விடாத தளர்ச்சியும்
சோகவாரி யினுல்வருந் துன்பமும்
போக வேழமு கத்தனைப் போற்றுவோம்.

* * * * * *

* * * * * *

தந்திமா முகத்தி னுரை தையலார் முகத்தி னுரை
மைந்தனுர் முந்தனுர் நளனுர் கதையை முடிக்கவே தெலுங்கிலே
அந்தமாய் திபிதை தன்னை அன்புடன் தமிழால் சொல்ல
சிந்தையில் வசனமாக செப்பிடும் வரங்கள் தாரீர்.

* * * * * *

* * * * * *

பாயிரம் முற்றும்.

வேதவியாசர், வசிஷ்டர், வால்மீகர் முற்றுமுண்டாகிய ரிஷயீசுபரர்கள், சரஸ்வதி தேவி, கவியீஸ்பரர் முதலிய பேரையும் மனதிலே தியானம் பண்ணி ஸ்ரீ அரி மகாவிஷ்ணுவாகிய ஆதிநாராயண மூர்த்தியை தெண்டஞ் சமர்ப்பித்து.

* * * * * * * *

End :

அதற்கொன்றும் நீங்கள் கிலேசப்படவேண்டியதில்லை. அதற்கு முன்னே பூமியிலே மனுஷர்கள் பிறக்கிறவர்கள் தவிர குரவர் என்கிற ஞாயம் நீங்கள் அறியீர்கள் விதியினுள்ளப் பிரகாரம் அனுபவிக்க வேணும்.

* * * * * * * *

முடிவு பெறவில்லை

(கு-பு.)—

இந்நூல் நளச் சக்கரவர்த்தியின் வரலாற்றைக் கூறுகிறது. இடை இடையே ஓலைகள் காணக்கூடாததால் எழுதப்படவில்லை. இறுதியிலும் முற்றுப்பெறவில்லை. கடலூர் ஞானியார மடத்துப் பிரதியிலிருந்து எழுதப்பட்டது வசன நடையினால் ஆனது. தாழ்ந்த நடையுடையது.

R. Nos. 2393 and 2395 (one volume).

Paper, 12¾ × 10 inches. Foll. 1—96.—Lines 24 on a page. Tamil. Good. New. Extent, 1,577 granthas.

R. No. 2393.

கந்தபுராணச் சுருக்கம் உரையுடன்

KANDAPURĀṆAC CURUKKAM WITH COMMENTARY

Foll. 1—31, Extent, 769 granthas.

Complete—Printed.

By Sambanda Saraṇālayar,

Dharumapura Ādinam Transcribed in 1950-51 from a Manuscript of Ñāniyār Mutt, Cuddalore, S.A. district.

Beginning:

காப்பு

திங்களணி செஞ்சடிலத் தேவளித்த வாறுமுகத்
தெங்களம லன்காதை யேத்துதற்குத்—துங்கமுடன்
அந்திபக லென்றணிடத் தஞ்சலென வந்தருளும்
தந்திமுகன் செங்கமலத் தாள்.

இதன் பொருள்.—சந்திரசேகரனை சிவபெருமான் தந்தருளிய ஆறுமுகக் கடவுளினது சரித்திரத்தைத் துதி செய்வதற்கு யானைமுக விநாயகரது பாதத் தாமரையை உயர்வாக இரவும் பகலும் நீ யொன்றுக்கும் அஞ்சாதே. . . . .
எனக்குத் துணையிருந்து அருள் செய்யும் என்றவாறு.

கலி விருத்தம்.

வெள்ளி மால்வரை யுதுமை மாதொடும்
வள்ள லாரும் பரமன் மகிழ்ந்துறக்
கொள்ளை யாக வமரர்கள் கூடியே
தன்ன னுமலர்க் கால்விழுந் தேத்துவார்.

End :

இதன் பொருள்.—அந்த சமயத்தில் தேவேந்திரனானவன் குமார சுவாமியை வணங்கி, " சுவாமி தெய்வயானை என்னும் கன்னிகையைத் திருமணஞ் செய்தருளவேண்டும்.

* * * * * *

* * * * * *

சேவற்கொடியும் மயிலும் வாழ்க. அடியார்களுக்கு இடையூறு வாராமல் காக்கும் வேலாயுதமும் வாழ்க. முருகப்பெருமானது திவ்ய சரித்திரத்தை ஆசையோடு துதிக்கப்பட்டவர்களும் வாழக்கடவது அதனைக் கேட்டவர்களும் வாழ்க மாதே என்றவாறு.

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் கந்தபுராணச் சுருக்கம் என்னும் பெயர்த்து. முற்றும் உரையுடன் உள்ளது. சிதிலமாக மூலப்பிரதி இருந்ததால் இடையிடையே எழுத்துக்கள் விடப்பட்டு எழுதப்பட்டுள. இதனைத் தருமபுரவாதீனத்தைச் சேர்ந்த சம்பந்த சரணலயர் இயற்றினரோவென ஊகிக்க இடமுண்டு. அந்நூல் இவண் இல்லாததால் ஒத்துப்பார்க்க இயலவில்லை.

R. No. 2394.

விண்ணப்பக் கலிவெண்பா (நூற்றெட்டுத் திருப்பதி)

VIṆṆAPPAKKALIVEṆBĀ (NŪṞṞEṬṬUTTIRUPPATṬI)

Fill. 32—39. Foll. 35 to 39 are blank Extent, 52 granthas.

Begins on fol. 35 (a) of the manuscript described under R. No. 2393.

Incomplete.

The author of the work is Tiruvaraṅkattu Amudanār.

The work was transcribed during 1950-51 from a manuscript belonging to the Annamalai University.

That those who worship Lord Viṣṇu at 108 Tirupatis (Holy places) will attain mōksha is the core of this work. The author is a famous Vaiṣṇaivite scholar and devotee.

Beginning :

திருவரங்கத்து அமுதனார் அருளிச்செய்த விண்ணப்பக் கலிவெண்பா.

காப்பு.

ஓங்கு திருவரங்கர் தாமுகந்த வொண்பதிகள்
மூங்கிற் குடியமுதன் முத்தமிழா—னீங்காத
வன்பர்தமர் வாழவருள் செய்தவந் தணர்கோன்
றன்பதுமத் தாளே சரண்.

நூல்.

பங்கயத் தோளிக்கு வாக்குக்குப் பண்டளிப்பாம்
பொங்கு பயோதிப் புரிசைநகர்—தங்கிச்
சிலநாளி னிதமர்ந்து தென்னிலங்கைக் கோமான்
குலம்வாழக் கொண்டேகும் வேலை—நலமார்ந்த
சென்னி வளவன் திருநாட்டுத் தெய்வநதிப்
பொன்னி நடுவுட் புளினத்துப்—பன்னரிய
விந்து மடுக்கரைக்கே யின்பமுற வந்தருளிச்
சந்திசெயக் கருதிச் சாருங்கால்—முந்து,

* * *

* * *

End:

சோழ மண்டல நாற்பத்தி ரண்டுடன்
றுய்யபாண்டி பதினெட்டுஞ் சொல்லியே.
வாழுமாமலை நாட்டிரு ரேழுடன்
வாணர் போற்றிய வாழ்தொண்டை மண்டல
மேழு மூன்று மிதன்மே லிரண்டுட
னிதன் வடக்குப் பதினொன்று பாற்கடல்
ஆழி யான்பதி னூற்றெட்டு மோதுவார்க்
கன்று செய்வினை யன்றே யகலுமே.

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் திருவரங்கத்து அமுதனாரால் அருளிச் செய்யப்பட்ட விண்ணப்பக் கலிவெண்பா என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது. நூற்றெட்டுத் திருப்பதிகளையும் சென்று வணங்கிடுவார்க்குத் திருமாலின் அருள்கிட்டி மோட்சமடைவர் என்ற கருத்தினை வலியுறுத்திப் பாடப்பட்டுள்ளது. இறுதியில் வாழி விருத்தப் பாட்டொன்றும் காணப்படுகிறது. இவ்வாசிரியரால் இராமநுச நூற்றந்தாதி என்னும் நூல்ஒன்றும் இயற்றப் பட்டுளது. இந்நூல் புலவர் பெருமக்களாலும் பத்திமான்களாலும் புகழ்ந்து கூறப்பட்டதொன்றாகும். படித்துத்துய்க்க நன்று. இந்நூலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து வந்த ஓலைச்சுவடியிலிருந்து பிரதிசெய்து வைக்கப்பட்ட தொன்றாகும். பிழைகள் எழுதினோரால் ஏற்பட்டனவாம்.

R. No. 2395.

சங்கரமூர்த்திக் கோவை.
SAṄKARAMŪRTTIK KŌVAI

Foll. 40 to 95. Extent, 960 granthas.

Incomplete—Printed.

Begins on fol. 40 (a) of the manuscript described under R. No 2393.

Transcribed in 1950-51 from a manuscript of Annamalai University.

There are only 319 verses instead of 400 (as a rule) in this manuscript. The style is good.

Beginning :

காட்சி.

மின்பூத்த தாமரை காவி செவ்வாம்பல் விரிந்தரும்புப்
பொன்பூத்த கொங்கம் பொலிந்தொரு பூங்கொடி பூவுலகில்
முன்பூத்த கங்கைக் குலதிபன் சங்கரமூர்த்தி நல்லூர்த்
தென்பூத்த சந்தவரைக் காவினூடு திகழ்கின்றதே. (1)

ஐயம்.

பூதலமோ கஞ்சப் போதகமோ செம்பொற் பூதரமோ
பாதலமோ கடலோ னெஞ்சமே வஞ்சப் பற்றவரை
மோதலங் கொண்ட பெலராமன் சங்கர மூர்த்திநல்லூர்
மாதலங் கார மனையார்க்கு வாய்த்தருண் மாதலமே. (2)

End :

அசைவறிந்திருத்தல்.

செல்லேயி லேசுடும் பாலேயி லேயழ னீர்க்குமென்று
சொல்லேயி லேகுளிர் சோலேயி லேவைகித் தூயநாதன்
முல்லேயி லேவளர் போரேறுஞ் சங்கர மூர்த்திநல்லூர்
எல்லேயி லேயொல்லே யிலே ருதுமினி தேந்திழையே.

(முற்றுப்பெறவில்லை.) (319)

(கு-பு.)—

இந்நூல் சங்கரமூர்த்திக்கோவை என்னும் பெயர்த்து. 319-பாடல்களே உள. செய்யுள் நடை நன்றாகவுளது. சங்கரமூர்த்தி விறலிவிடுதூது பாடல், முதலான நூல்களும் இதனோடு இந் நூல் நிலயத்திலிருப்பது ஆய்ந்துகொள நன்று. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து வந்த பிரதியினைப் பார்த்துப் பிரதிசெய்யப்பட்டதாகும்.

R. No. 2396.

நவநீதப் பாட்டியல் (உரையுடன்)

NAVANĪTAP PĀṬṬIYAL WITH COMMENTARY

Paper. 12¾ × 10 inches. Foll. 1—38, Extent, 448 granthas.

Incomplete—Printed.

Transcribed in 1950—51 from a manuscript belonging to the Annamalai University.

(கு-பு.)—

இந்நூல் நவநீதப் பாட்டியலென்னும் பெயர்த்து. உரையுடன் உள்ளது. இந் நூல்நிலைய மூவருடக் காட்டலாக்கு 433ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்புரையுங் கண்டுகொள்க. இந்நூல் இலக்கண நூலாமாதலின் இது முன்னமேயே அச்சிடப்பட்டு வெளிவந்துளது. எழுத்திற்குச் சாதிமுறைகளால் பெயர் சூட்டப்பட்ட நூலாகுமிது.

R. Nos. 2397 to 2399. (one codex).

Paper, 12¾ × 10 inches, Foll. 143. Lines, 24 on a page. Tamil. Good. New Extent, 25100 granthas.

R. No. 2397.

அகண்ட வெளி வாக்கியம்

AKAṆḌA VEḶI VĀKKIYAM

Foll. 14. Extent, 253 granthas.

Complete.

Transcribed in 1950-51 from a manuscript belonging to the Annamalai University.

This work presumed to be written by Agastiyar says that Mōksa can be attained through Wisdom (Jñânam) and Yōga and describes those methods.

Beginning :

ஆதி அறுதிமுத லந்தவரை காப்பாமே
சோதி கணேசன் துணைத்தாளே—நீதியுடன்
ஓதிய வேதாகமத்தின் உட்பொருளாய் பரத்தின்
வாதிபரை வித்தாகும் பார். (1)

வித்தாகி நின்றதல்லோ மூலமப்பா
வேறாகி நின்றதல்லோ வறிவதாகும்
சித்தாகி நின்றதல்லோ சுழினையாகும்
கர்த்த வெளியொளியில் சேர்ந்துபோகும்
பத்தாகி எட்டாகி அஞ்சு மாகிப்
பகிர்ந்ததிலே ரண்டுமொன்றாய்ப்பரமஞானம்
கத்தாவா யென்னுளத்தி லிருந்து கொண்ட
காரணநாம் பொதிகையெனக் கண்டிட் டேனே. (2)

கண்டிட்டே வாசி வைத்து ஓதுனது
கடைநாலில் ஓதியதனில் கலந்துகொள்ளு
கொண்டிட்டு மனமெறிய கண்ட வீதி
கொள்கியங்கே ஆறுதவங்கவர்ந்துபாரு
மண்டிட்டு அறிவோடு கூடுகூடு
மதிரவியும் ரண்டுமொன்றாய் மனதில்காணு
தொண்டிட்டுப் பெரியோரைப் போற்றுபோற்று
சுருதியந்த மருள்பொதிகைச் சுத்திலானே. (3)

End :

நூறுமுத லொன்றாகி விரிந்தாய் போற்றி
நுண்ணகத்தில் நுணக்கமென் னுகந்தாய் போற்றி
கூறுகிற முதலெழுத்தைப் பற்றிநின்று
குவிந்ததுவும் வளர்ந்ததுவு மானாய் போற்றி
தேறுகின்ற மனதோடு சிறந்தாய்போற்றி
சிற்பரமுந் தற்பரத்தில் சிறந்தாய் போற்றி
ஊறுகிற மதியமுர்தங் கொடுத்தாய் போற்றி
உற்பனமாம் உண்மைத்தாய் போற்றி போற்றி. (101)

அகண்டவெளி வாக்கியம்.

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் அகண்டவெளி வாக்கியம் என்னும் பெயர்த்து. முற்றுமுள்ளது. எழுத்துப் பிழைகள் உள. அகத்தியர் இயற்றியதாக ஊகிக்க இடமுண்டு. ஞானம், யோகங்களின் செய்முறைகளை வகுத்துக்கூறுவதோடு, அதனால் முத்தியடையலாம் என்றும் கூறுகிறது இந்நூல். இது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து வந்த பிரதியிலிருந்து எழுதிவைக்கப்பட்ட நூலாகும். நன்றாகவுளது.

R. No. 2398.

கீழ்வேளூர் உலா
KĪḺ VĒḶŪR ULĀ

Foll. 15—34, Fol. 34 is blank, Extent, 331 granthas.

Begins on fol. 15 (a) of the manuscript described under R. No. 2397.

Incomplete—Printed.

Transcribed in 1950–51 from a manuscript belonging to the Annamalai University.

The work has not been written in strict Kaliveṇpā metre since the original was injured in many places.

Beginning :

திருச்சிற்றம்பலம்.

கீழ்வேளூர் உலா.

சீருலா முக்க ணிலந்தைவனநாதற்குச்
சீருலா விண்ணப்பஞ் செய்ய—வேருநா
ரைவிலொழிக் கண்டே......யேந்திஞேன் மால் மருகன்
கைவிலாழிக் கன்றே காப்பு.

நூல்.

அட்சய லிங்கமே துணை கேடிலார்
கீழ்வேளூர்க் கீர்த்தியளவிட்டெளிய
நீருலாப்பாட நினைக்கின்றேன் கோடிவடதீ
யாந்திருல் சிறுகாத்தேன் கடலோரி
யருந்திருல் மென்பருதிமதிய மிரு பாணி
யணிந்தோனுஞ் சுருதி மலர்கமலத் தோனுங்கருது
மேன்மையாளுடை யன் மாசலத்துச் செய்யு
மூமையாள் மணத்திரளி னுள்ளார்.

End :

தீயோ டதிருந் திருமேனி யானிருப்பை
மாயோ னிருப்பாருக்கு மார்க்கமோ தீயிசையால்
கும்பன் மலையங் குழைத்தநாள் நீயிருந்தால்
அம்பொன் சைல மெல்லா மெல்லவோ நம்பொரு.

* * * * * *

* * * * * *

(முற்றுப் பெறவில்லை.)

(கு-பு.)—

இந்நூல் திருக் கீழ்வேளூர் உலா என்னும் பெயர்த்து. முற்றுப் பெறவில்லை. மூலப் பிரதியும் இந்நூல் நிலையத்தில் இல்லை. அண்ணு மலைப் பல்கலைக்கழகத்திலிருந்து வந்துள்ள ஓலைச் சுவடியைப் பிரதி செய்து வைக்கப்பட்டதாகும். எழுதிஞேரால் கலிவெண்பா இலக்கணப்படி முதலி லிருந்து இறுதியிலிருக்கும் அளவுவரையிலும் எழுதிவைக்கப்படவில்லை. மூலப் பிரதி மிகவும் சிதிலமுற்றுக்காணப்பட்டதே இதற்குக் காரணமாகும். இந்நூல் அச்சிடப்பட்டிருக்கிறது. கீழ்வேளூர் என்பது இதுபோது கீவளூர் என மருவி வழங்குகிறது. இவ்வூர் நாகப்பட்டினத்திற்கு அருகிலுள்ள ஓர் சிவஸ்தலமாக விளங்குகிறது.

R. No. 2399.

சிவகுரு லீலை.

ŚIVAGURU LĪLAI.

Foll. 35—143 Extent, 1,764 granthas.

Begins on fol. 35 (a) of the manuscript described under R. No. 2397.

Transcribed in the year 1950—51 from a manuscript belonging to Ñāniyār Mutt Cuddalore.

This is a work praising Śri Ārumuga Meyñāna Svāmikaḷ in carukkams. The author is called Sivashanmuga Meyñāna Svāmikaḷ.

Beginning :

திருச்சிற்றம்பலம்.

சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகன் திருவடி வாழ்க

திருநாவுக்கரையர் முதலுரை கோவற்குயர்கடவுள்
பெரியனைக் கணபதியி னிருதாளைப் பணிகுவனே.

அரிபி தாம கனுதியயர் போற்றிய
கரிய மாகளன் மேவுங் கயிலையிற்
றுரிசிலவ்வையை வைத்த துதிக்கரப்
பெரிய யானையைப் பேணுதல் செய்குவாம்.

தூலவை வனமும் லிங்கமுங் குகையொண்
சூக்கும முமையுரு வாகி
மேலதாயிறைகா ரணமு மாருதியன்
மிகுமகா காரணம் வீரன்
சீலமா ஞானோ பாயச் சாதனையைத்
தெரித்த வீரட்ட சென்னெறியின்
மேலிலாதுண்மை யீதெனு மொழிந்த
வேலவ னிணையடி பணிவாம்.

End :

அருண சலையரெனுந் துறவியின்
போதனையு ஞலையத் திருப்பணிக
ளருளிறை மனுமெய் யன்புளசாமி
முதலியாரன்பு செய் பொருளும்
பருவமு முயர்ந்த பரகதி விரும்பு
பத்தியோர் பொருளினுன் முடிக்கும்
பரசிவ மாலிங் கேசுவர தேவாம்
பர்சு சாத்தமேற் பதமே. (46)

(முற்றுப்பெறவில்லை.)

(கு·பு.)—

இந்நூல் சிவகுருலீலை என்னும் பெயர்த்து. முற்றுப்பெறவில்லை. இதில் சிவகுருலீலைச் சருக்கம், ஞானமூர்த்திப் பிள்ளையார் பூசைச் சருக்கம், இட்டலிங்க பூசையாதி தெரிசன அனுக்கிரக வனுபவச் சருக்கம், யாத்திரைச் சருக்கம், அநுக்கிரக சந்தான சருக்கம், பூரணதீதப் பிரகாசச் சருக்கம், முந்திய பீடச் சருக்கம் முதலாய ஏழு சருக்கங்கள் அடங்கியுள்ளன. இது ஆறுமுக மெய்ஞ்ஞான சுவாமிகளைப்பற்றி சிவசண்முக மெய்ஞ்ஞான சுவாமிகளியற்றியதாகக் கூறப்படுகிறது. இது புகழ்ந்து கூறும் நூல் வகையைச் சார்ந்தது. இறுதியில் பரசிவ மகாலிங்கேசுவர சுவாமி ஸ்தோத்திரம் என்னும் ஓர் சிறிய நூலும் எழுதப்பட்டிருப்பது காண்க.

R. Nos. 2400 to 2402. (one codex)

Paper 12¼ × 10¼ Inches Foll. 86, Lines 24 on a page. Tamil, good, New. Extent, 2088 granthas.

R. No. 2400.

ஏழுநகர் வணிகர் பேரில் பாடல்கள்.

ĒLUNAGAR VAṆIKAR PĒRIL PAḌALKAḶ.

Foll. 1—6. Extent, 60 granthas.

Incomplete.

Transcribed in 1950-51 from a manuscripts belonging to Annamalai University.

This contains 10 Viruttams composed for the well being of the Vaṇigar Kulam. It is not, however, Void of mistakes.

Beginning:

விருத்தம்.

பொன்னுலவு சீரகத் தார்புனையு மார்பருயர்
புகழ்கங்க குலவணிகராம்
பொற்சவடி யால்நெடும் தரம்புசெய் தென்கணிலப்
புனலிரைத் திடவருளினோர்
தென்னநிதி யஞ்சொர்ண ராஜமுடி புனையச்
சிறந்தநவ மணியருளினோர்
திரைகட லெறிந்தபொன் வலியமண் தனில்வரச்
சீர்பெருங் குலதேசிகர்
மன்னர்மகிழ் மத்தந்தி தன்னைநிறை கண்டவர்கள்
மகமேரு தனையுரைசெய்தோர்
மறையோது சிவஞானி பாண்டிநாட் டரசனை
வாழ்த்திமல ரடிபணிகுவாம்.

இந்நில மெலாமகிழ முருகேச ரிருசரண
மலரென்னு ளுமேபணிகுவோர்
எழுமர புயர்நீதர் வாழுநவ மணிமார்பர்
எழுநகர் வணிகேசரே. (2)

* * * * * *

* * * * * *

End :

வணிகேசர் நீடூழி காலமும்
இந்நிலந் தன்னில் வாழியே. (10)

(கு-பு.)—

இந்நூல், எழுநகர் வணிகர் மீதுபாடல்கள் என்னும் பெயர்த்து, விருத்தப் பாக்கள் பத்து கொண்டு முற்றுப்பெற்றுள்ளது. வணிகர் மரபு தழைப்பான் வேண்டிப் பாடப்பட்டிருக்கிறது. எழுதினோரால், பிழைபட எழுதப்பட்டிருக்கிறது. இது அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பிரதியிலிருந்து பிரதிசெய்யப் பட்டப் பிரதியாகும்.

R. No. 2400 (a)

ஏழுநகர் வணிகர் பேரில் குளுவை நாடகம்

ĒLUNAGAR VAṆIKAR PĒRIL KUḶUVAI NĀṬAKAM.

Foll 7 to 8. Extent, 25 granthas.

Complete.

Begins on fol. 7 (a) of the manuscript described under R. No 2400.

Transcribed in 1940–51 from a manuscript belonging to Annamalai University.

The text proper is not found in this work. Only some introductory verses are extent.

Beginning :

குளுவை நாடகம்.

காப்பு.

ஏருயர் இளசை மாதை யேழ்நகர் மீது
சீருயர் குளுவை நாடகந்தனைச் சிறந்து கூறப்
பாரிலுளோர் கொண்டாடப் பாரதக் கதையை முன்னாள்
மேருவில் வரைந்த தொந்தி வினாயகன்காப்பதாமே.

முருகன்.

பாரிசா தகத்தே ரேறி பாண்டிமண் டலத்து வந்தோர்
நாரியர் கணங்க ளேழு நகர்வணி கேச ரன்புக்
கூறுசெந் தமிழி னாலே குளுவைநா டகத்தைப் பாட
வீறுமயி லேறுஞ் செவ்வே ளருமுரு கேசர் காப்பாம்.

விமலைமால்.

ஆண்டவன் கிருபை தான்பெற் றருள்குரு சாமி யான
பாண்டிநாட் டரசன் பாதம் பணிந்துப தேசம் பெற்றோர்
யாண்டுயர் செல்வ ராஞோர் ஏழ்நகர் வணிகர் மீது
வேண்டிநா டகத்தைப் பாட விமலைமால் காப்ப தாமே.

நூல்.

தான தானன தான தானன தான
தானன தான தானனு.

தொடையம்.

ஏருலாவி யிளசை மாதையி லேழுநகர் வணிகர்மேல்
சீருலாவியக் குழுவண்டகம் சிறந்த செந்தமிழ்க் கூறவே
நீருலாவிய சடிலர் கயிலாசர் நித்தில வாணகை யம்மனும்
பேருலாவு மருகானுங் கற்பகப் பிள்ளை யார்பதம் பேசுவாம்.

Colophon :

ஏழுநகர் வணிகே சருக்கு மங்களம்
சீருயர் யோகருக்கும் திடவச்சிர தேகருக்கும்
நாரியர்கள் மோகருக்கு ஏழு நகர்வளர்
விபேகருக்கும் மங்களம்.

(கு-பு.)—

இந்நூல், ஏழுநகர் வணிகர் மீது குளுவை நாடகம் என்னும் பெயர்த்து. இருப்பினும், அந்நூலைப் பற்றிய செய்தி தொடங்காமல், அந்நூலைப்பற்றிப் பாடுவதற்கு முன், இறைவணக்கம் பாடியிருக்கின்றார். நூல், பாடக் காணோம். பாடியவர் மாசிலாமணிப்புலவர் என ஊகிக்க இடமுண்டு.

R. No. 2400 (b)

ஏழுநகர் வணிகர் மேல்அகவல்.

ĒLUNAGAR VAṆIKAR MĒL AKAVAL.

Foll. 9 to 15 (a) Extent, 100 granthas.

Begins on fol. 9 (a) of the manuscript described under R. 2400 Complete.

This work praises the merchants of Ēlunagar saying that charity is their inherent virtue. This makes a pleasant reading with tilting rhythms.

Beginning:

விருத்தம்.

விருதாச பயங்கர நல்வள நாடான் மேன்மைபெறு
காஞட்டுப் புலவரென்று மரபுயரும்
எழுநகர்ப் புலவ ரென்றும் வளம்பெறும்
செந்தமிழ்ப் புலவருரைத்த நூற்குப் பரிசு பொன்
ஞெரு முடிப்புக் குடுக்க ஞளிபணி யாடை
வெகுவரிசை பரிந்தென் ஞளும்
தருமசீபர் எழுநகர் வணிகேச ரென்றுந்
தழைத்தோங்கும் நாடகவல் சாற்றுவோமே.

அகவல்.

திரு நின்ற யோகர் தருமசி பேகர்
அருவையர் மோகர் வருரம ணீகர்
செந்தமிழ் நேசர் இந்திரவல் லரசர்
மந்திர விசுவாசர் சந்திர குலேசர்
செங்கணி வாயர் சங்கீத நேயர்
துங்கரு பாயர் இங்கித சகாயர்
சுந்தர தேவர் இந்திர வைபோகர்.

* * * * *
* * * * *

End:

திதிமி யெனவே சபைமகிழ் நடனக்
குதிகுதிக்கொள் சங்கீதக் குளுவன் தோன்றினனே.

முற்றும்.

(கு.-பு.)—

இந்நூல், எழுநகர் வணிகர் மீது அகவல் என்னும் பெயர்த்து அவரைப்பற்றிப் புகழ்ந்து பாடப்பட்டுள்ளது. நன்ருகவுளது. இஃது, கொடையைப் புகழ்ந்து கூறும் மரபினர்களில் சேர்ந்த புலவர் ஒருவரால் பாடப்பட்டிருக்கிறது. இதனுல் வணிக மரபினர் கொடையில் சிறந்தவர்க ளாக இருந்தனர் என்பது புலனும்.

R. No. 2400 (c)

ஏழுநகர் வணிகர் பேரில் மோகனப் பள்ளு.

ĒLUNAGAR VAṆIKAR PĒRIL MŌHANAP PAḶḶU.

Foll. 16 to 23; Extent, 200 granthas.

Begins on fol. 16 (a) of the manuscript described Under R. No. 2400.

Complete.

One or two leaves are missing at the end, otherwise a complete work. The style is fine.

Beginning :—

கனமெய்த்துரை மீனவனுர் செய்தவர் முத்திய தோணில்வாறவர்க்
கருணைக் கடலான அஞ்ஞானிறினில் வணிகேசர்
சுனைமெய்க்குடையீய்பவரேழு நகரப் பெரியோர்கள் முன்னே தேறி
சொறிமுத்த மிளமோ கனமான பள்ளிசைகூற
அனமெய்ப்படை பூவினி லாவிடு மனையில் திருமாது குலாவிய
அளகைப் பதியான் நல்வாசலில் மகமாயி
இனிநித்தில வாணிகையார் வளர்பத்து நற்குல சேகரமாபுரி
இளைசைக் கயிலாசரை நாள்தோறும் மறவேனே.

(இசைப் பாட்டு)

தினதிஞனத் தினதிஞனத் தினதிஞன தினதிஞ.
காரும் புனலு சேந்து நிதமுந் கனவரிடி மாய்ப் பொருந்திட
காசித் தலமுஞ் சேதுத் தலமுங் கலந்து சிறந்து வாழ்பவர்
ஏரும் சீரும் அன்ன சொர்ணமும் இடை விடாமல் விளங்கியே
இளைச மாதை யதனில் வளரும் ஏழு நகரத் தார்கள் மேல்
ஆரும் புகழும் மோகனப் பள்ளியின் பாடியாடவே
அவனி தனில்ஓ ரடியி லுலைந் தப்பெருமாள் பாதமும்
சேரும் பரமருமையவள் தனைச் சேர்ந்த மங்கள முகூர்த்தத்தில்
தேங்காயுகந்த பிள்ளை யார்பதம் தினந்தினம் தோறும் பணி
[வோர்

* * * * * * * *
* * * * * * * *

End :

இன்னிலத்தோர் கொண்டாடும்
ஏழுநகர் வணிகர்மேவும்
தென்னிளையும் நன்மாதை
சிறந்தகல் வாசல் நாட்டில்
நன்னய மிகுசிங்கார
நாட்டுக் குளுவ னேன்
பன்னுசெந் தமிழோர்சொல் மெய்ப்
பான் சித்தறிவே னய்யே.

* * * * *
* * * * *

(கு-பு.)—

இந்நூல், ஏழுநகர் வணிகர் பேரில் மோகனப்பள்ளு என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது. இறுதியில் ஒன்றிரண்டு ஏடுகள் காணப்பெற வில்லை. இருப்பினும் இசை நடை நன்றாகவுளது. இதுவும் வணிக மரபினரைச் சிறப்பித்துக் கூறுகிறது.

R. No. 2401.

ஆழ்வார் அந்தாதி.

ĀḺVĀR ANTĀDI.

Foll. 24—32. Extent, 192 granthas.

Begins on fol 24(a) of the manuscript described under R. No. 2400
Incomplete.—Printed.
Author — Kampar
Same work as that described under R. No. 418.

(கு-பு.)—

இந்நூல் மூவருடக் காட்டலாக்கு 418-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஆழ்வார் அந்தாதி என்பதுடன் சடகோபரந்தாதி என்ற வேறு பெயருமுளது. முற்றுமில்லை. அதன் குறிப்புங் காண்க. இந்நூல் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து வந்த பிரதியைப் பார்த்து எழுதி வைக்கப்பட்டதாகும்.

R. No. 2402.

புரூரவ சக்கரவர்த்தி கதை.

PŪRŪRAVA CAKKARAVARTTI KATAI.

Foll. 33—86 Extent, 1308 granthas.

Begins on fol. 38(a) of the manuscript described under R. No. 2400.

Complete.

Restored in 1950–51 from a manuscript described under D. No. 452.

(கு-பு.)—

இந் நூல் டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு 452-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதனைப் பார்த்து, பிரதி செய்யப்பட்டது. மற்றும் அதன் குறிப்பையும் காண்க. இதில் முற்றும் இருக்கிறது.

R. Nos. 2403–2106 (one volume).

Paper. 12¼ × 10 inches. Foll. 22. Lines 24 on a page. Tamil. Good. New. Extent. 1080 granthas.

Transcribd in 1950–51 from a manuscript belonging to the Annamalai University.

R. No. 2403.

நுண் பொருள் மாலை.

NUṆPORUḶ MĀLAI.

Foll. 1—40. Extent, 1,440 granthas.

Complete.—

By: Irattinak Kavirāyar.

This is a criticism and Commentary to the Commentary of a parimellakar to Thirukkuraḷ. It is said this has been printed. The author Rattinakkavirāyar is a versatile and profound scholar and here makes a great contribution to the criticism of Thirukkuraḷ.

Beginning :

ஹரி—நன்றாக

தேனருவி மகிழ்த் தொடையலு மவுலியுந் திருக்கிளர் குழைக்காதுங்
கானருமலர்த்திருமுகச் சோதியுங்கயிரவத்துவர் வாயுந்
மோனமாகியவடிவமும் . . . . . முத்திரைத் திருக்கையும்
ஞான தேசிகன் சரணதாமரைமென் னயனம்விட் டகலாதே,

அறத்துப்பால்—கடவுள் வாழ்த்து

அகரமுதலவெழுத்தெல்லாம்—என அவை போலவென்றது ஒருமை யாயது போல வென்றது. வாளாவெடுத்துக் காட்டுவமை யென்றது தலைமை பற்றி வந்த தென்றதனுலும் முதற்றேயுலகு என உலகின் மேல் வைத் துக் கூறினுரேனும், உலகிற்கு முதலாதி பகவனென்பது கருத்தாகக் கொள்க வென்பதனுனும், எழுத்திற்கெல்லாம் முதலகரமது போலுலகிற்கு முதல் ஆதிபகவனென்க.

ஆதிபகவனிருபெயரொட்டுப் பண்புத் தொகை. பகரவொற்று மிகா மையால் வட நூல் முடிவு என்ற றென்க. தமிழ் முடிபாகி வரை பறை கண்ணுர் கருத்துரைத்தாங்குரைப்பர். எடுத்துக் காட்டுவமையாவது உவம வுருவு பெருதது. போலவெனப் பெய்துரைப்பக்கிடப்பது. இதனை யிசை யெச்ச மென்று எச்சவியலில் எழுதினுர் சேனைவரையர். அது, காகத் திருகண்ணிற் கொன்றே மணியென்னுங் கோவையாருரையிற் காண்க. காணப்பட்ட வுலகுயிர் மேனின்றுற் காணப்படு லெவ்வாறெனின் முன் னருலகம் வழங்கி வருதலால் என்பதற்கு உயிருடம் பொடு காணப் பட்டுவருதலால் என்ற வுரையானும் உயிரீறும் வாளதுணர்வார்ப் பெறின் என்பதனுனுங் காணப்படும்.

End :

நட்பு குடிப்பிறந்து என்பதில், கொளல் வேண்டும் என்பது கோடல் சிறந்தது என்றுர். அதன் பொருள் வேறு கொளல் வேண்டும் மென்பது. ஒரு சொன்னீர்மைத்தென்றெடுத்து எழுதினது விசாரிக்க.

கூடா நட்பு சீரிடங்காணில் என்பதில், பட்டடை நேராமென் .

. . . .

. . . .

(கு.பு.)—

இந்நூல், நுண்பொருள்மாலை என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது. இரத்தினக் கவிராயர் என்பவரால் இயற்றப்பட்டது. திருக்குறள் பரிமேலழகர் உரை விசேடத்தை யொட்டி, இது ஓர் ஆய்வுரையாக, அவர்தம் உரைக்கு உரையாக அமைந்துள்ளது. அச்சிடப்பட்டதாகக் கூறப்படுகிறது. மிக நுண்ணிய பொருள்களுக்கு உரை காணப்படுகிறது. நன்றுகவுளது. இதனைப் படித்துணரில், திருக்குறள் நுண்பொருள் உரை விளக்கமாகும். தொடர்ச்சியாக இயற்றப்பட்டதன் காரணமாக மாலை என்று பெயர் புனைந்து விளங்குகிறது. இப்புலவர் நன்கு இலக்கண இலக்கியங்கள் கற்றுத் தேர்ந்து சங்கப் புலவர் மரபில் வந்தவர் ஆவர். திருமேனிக்கவிராயர் என்ற குடும்பத்தைச் சேந்தவர். மாறன் திருவவதாரச் சரிதை, மாறனலங்கார வுரை முதலாயின இவர் செய்த நூல்களாகும்.

R. No. 2404.

மாறன் வருக்கக்கோவை.

MĀRAN VAṞUKKAK KŌVAI.

Foll. 61—76, Fol. 76 is blank. Extent, 360 granthas.

Begins on foll. 61(a) of the manuscript described under R. No. 2403. Complete.

By:—Irattinak Kavirāyar.

This prabandha of kovai eulogises Māran the celebrated Vaiṣṇavaite scholar of Kurukūr. The style is fine.

Beginning :

காவைப் புனத்திற் பின்னைக்கு முன்வைத்த கண்ணன் பேரருள்
பூவைப் புனையுந் திருமகிழ் மாறன் புகழ்வருக்கக்
கோவைக்குக் காப்பென் பூதூர் முனிவன் குரைகழலென்
நாவைத் துரைத்த ஞற்பெரி யோர்கொள்வர் நன்கெனவே.

. . . .
. . . .

காட்சி

ஆயுந் தமிழ்குரு கூர்மகிழ் மாற னணிவரை மேற்
றேயுந் தெரிவை பயில்வதற் கேசுரர் நாடுகொல்லோ
பாயுந் திரைத்திருப் பாற்கட லோபது மாசனமோ
வேயுந் தவம்செய்ததோ வறிஇல னீங்கிடமே.

End :

மருவெம் பலபல சென்மங்க டோறு மருவியுள்ளம்
வெருவெம் கூற்று_வரின்நெஞ்ச மேவிரை நூறுமென்பூந்
தருவெங் குவால்வளைக் கீய்ந்தானைப் போற்றுந் தமிழ்க்குருகூர்த்
திருவெங்க டாரியன் சீபாதம் புந்தியிற் சிந்திக்கவே.

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், மாறன் வருக்கக் கோவை என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது. நடை நன்றாக உள்ளது. இதுவும் இரத்தினக் கவிராயராலேயே இயற்றப்பட்டிருக்க வேண்டும். இதுவரை அச்சிடப்பட்டதாகத் தெரியவில்லை.

R. No. 2405.

ஹரி திரிபு வெண்பா.

HARI TIRIPU VENPĀ.

Foll. 77—85. Foll. 85 is blank. Extent, 180 granthas. New good.

Complete.

Begins on fol 77 (a) of the manuscript described under R. No. 2403.

There are only 48 beautiful venbas in this manuscript sung in praise of Kurukai-p-pirān in Akapporul turai.

Beginning :

கோங்கரும்பு காவிகுமுதங் குளிமிழ் துளவங்
கோங்கரும்போர் பொறகொடிமேற் கொண்டதே—தேங்கமழும்
வண்டுளவத் தானை மகிழ்மாறன் வண்குருகை
வண்டுளவத் தண்டலையின் வாய்.

காட்சி

அம்பரமோ நாகாணி நகரோ வம்பரவ்
வம்பரமோ மாரனணி வரையோ—செம்பதுமக்
கோயிலோ வாசக் குழலாள் பயில்வதற்கெங்
கோயிலோ நெஞ்சே குறி.

ஐயம்

ஒன்றுங் கவலையொழி மன்னே காரக்கற்
கொன்றும் புவிபுரந்த ஓரறத்தான்—நின்றிருந்த
கண்காட்டுந் தென்குருகைக் காட்டுரிமா றன்வரையார்
கண்காட்டுங் கால்காட்டுங் காண்.

End :

முருகூர் முளரிமுகை விண்ட தேனிற்
குருகூர் குருகூர் எங்கோவே—கருகூல
மென்றும் பாடுமென்று மென்றுவாழ் தம்பிறனி
பொன்றும் பொன்றுவே புகழ்.

பின்னைமுலைப் பாலருத்தி பெற்றனுக் கன்பாகி
யன்னைமுலைப் பாலே யருந்தாதான்—பொன்னடியைப்
போற்றுவீர் என்று புகழ்வார் நமதுசென்மம்
மாற்றுவார் நெஞ்சே மதி.

(கு-பு.)—

இந்நூல், ஹரிதிரிபு வெண்பா என்னும் பெயர்த்து. 48 பாடல்களே உள்ளன. வெண்பாவினால், அகப்பொருட் துறையில் பாடப்பட்டுள்ளது. குருகைப்பிரான் மீது பாடப்பட்டுள்ளது. நன்றாகவுளது. படித்துணரநன்று. இதுவும் இரத்தினக்கவிராயர் இயற்றியிருக்கலாமோவென ஐயுற இடமுண் டாகிறது.

R. No. 2406.

அரிசித்திரக் கவி.

HARI CITTIRAK KAVI.

Foll. 86—92, Extent, 84 granthas.

Begins on fol. 86 (a) of the manuscript described under R. No.2403.

Incomplete.

These minor verses are read more as pastime than for intellectual enlightenment for these are playing with words alone. But the author must have been quick-witted and well-versed in the art of composing verses:

Beginning :

வல்லின மெல்லின மிடையினப் பாட்டே
நிரோட்டிய கொட்டிய மொட்டிய நிரோட்டிய
மக்கர சுதக மதன்விருத் தனேயே
வக்கிரவுத்தி வினுவுத் தரமே
சக்கர பெந்தம் பதும பெந்தம்
முரச பெந்தம் நாக பெந்தம்
அமிர்த பெந்தம் மாலே மாற்றே
கரந்துறைச் செய்யுள் காதை கரப்பே
பிரிந்தெதிர் செய்யுட் பிறிதுபடு பாட்டே
சருப்பதோ பத்திரம் கூட சதுக்கம்
கோமுத் திரியே சுழிகுளந் திரிபங்கி
யெழுகூற் றிருக்கையோ டிருபா னுறும்
வழிநீர் மடக்குடைச் சித்திரப் பாவே.

End •

ஆளநம்பிரான் கவி

புளிக்கீழ் மகிழாசைப் பூதத்தா லத்தி
யளிக் கெதிகை மணக்கும் மம்மர்க்—களிக்கு
மெண்துவஞ்சிச் சைனத்தி லேயந்த வேய்முத்தங்
களமெழிவேங் கைத்தாயர் கை.

(கு-பு.)—

இந்நூல் ஹரிசித்திரக்கவி என்னும் பெயருடையது. இதில் பந்தக் கவிகள், சிலேடைக்கவிகள், திரிபங்கி, மாலைமாற்று, கோமுத்திரி, ஏகாட் சரக்கவிகள் முதலாய கவிகள் உள்ளடங்கியுள்ளன. நன்றாகவுள்ளது. படித்துணர்ந்து கொள்ள நன்று. பாடியவர் மிகச் சாதுரிய முடையவர் எனக் கொள்ளல்வேண்டும்.

R. No. 2407.

சாத்வீக பிரம்ம வித்யா விலாசம்.

SĀTVĪKA PIRAMMA VIDYĀ VILĀSAM.

Palm leaf, 16 × 1¼ inches. Foll. 1—85. Lines, 8 on a page. Tamil. Much injured, old, Extent, 3,400 granthas.

Complete ;

Same work as that described under D. No. 2536

(கு-பு).—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2536-ஆம் எண்ணின் கீழ் வருணிக் கப்பட்டிருக்கின்றது. அதன் குறிப்பையுங் காண்க. மிகவும் சிதிலமாயது. முற்றுப்பெற்றதாகத் தோற்றுகிறது.

R. Nos. 2408 to 2411.

Palm leaf 16¾ × 1½ inches. Foll. 1—57 inches. Lines 7 on a page. Tamil. and grantha. Much injured. Old. Extent, 798 granthas.

Presented in 1950–51 by Sri Alwar Aiyangār, Watrap, Ramnad district.

R. No. 2408.

ஸ்ரீ வசன பூஷணம்.

SRĪ VACANA BHŪṢAṆAM.

Foll, 1 to 36, Extent, 504 granthas.

Complete

Same work as that described under R. No, 49.

(கு-பு.)—

இந்நூல், மூவருடக் காட்லாக்கு 49–ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. முற்றுமுளது, அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 2409.

திரு முடியடைவு.

TIRUMUDI YAḌAIVU.

Foll. 37—40. Extent, 112 granthas.

Complete.

Begins on fol. 37(a) of the manuscript described under R. No. 2408.

Same work as that described under R. No. 848.

(கு-பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 848-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 2410.

அஷ்டாக்ஷரீ.

AṢṬĀKṢARĪ.

Foll. 41—46 Extent, 84 granthas.

Begins on fol. 41 (a) of the manuscript described under R. No. 2408.

Complete.

Same work as that described under R. No. 91.

(கு-பு.)—

இந்நூல், மூவருடக் காட்லாக்கு 91-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 2411.

ஆசார்ய பரம்பரை.

ĀCĀRYA PARAMPARAI.

Foll. 47—57. Extent, 140 granthas.

Begins on fol. 47(a) of the manuscript described under R. No. 2408.

Incomplete.

Same work as that described urder R. No. 850

(கு-பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 850-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க.

R. No. 2412.

நைடதம் உரையுடன்.
NAIṬATĀM WITH COMMENTARY.

Palm leaf, 16⅝ × 13⅛ inches, Foll. 1 to 170 Lines, 8 on a Page, Tamil, much injured old Extent, 5,440 granthas.

Incomplete.

Only two Paṭalams Svayamvaram and Araśāṭci

Presented in 1950–51 by Sri Alwār Aiyangar Watrap, Ramnad district.

Same work as that described under D. No. 111.

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு, 111-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டுள்ளது, அதன் குறிப்பையும் காண்க.

R. No. 2413.

கன்னிவாடி நரசிங்கப்பநாயக்கன் வளமடல்.
KANNIVĀḌI NARASINGAPPANĀYAKKAN VALAMAḌAL.

Palm leaf, 9⅝ × 3½, inches, Foll, 1—18, Lines 10, on a page. Tamil injured, old, Extent 340 granthas.

Complete.

Purchased in 1950—51 from Sri M.P. Periyasami Tooran Tamil Vaḷarcci Kaḷagam, Madras.

Same work as that described under D. No. 2418.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு, 2418-ஆம் எண்ணில் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்புக் காண்க. இதில் முற்றும் உள்ளது.

R. No. 2414.

எட்டப்ப நாயக்கன் பேரில் மடல்.
EṬṬAPPA NĀYAKKAN PĒRIL MAḌAL.

Palm leaf, 5/8 × 1/16 inches, Foll. 1-21 Lines, 10 on a page, Tamil, injured, Old. Extent, 360 granthas.

Complete—Print:d.

Purchased in 1550—51 from Sri M. P. Periyasami Toor n, Chief Editor, Tamil Encyclopedia.

There is reason to believe that this manuscript was transcribed from another one as there are no verses on The Protective Deities in the beginning.

Beginning :

காப்பு

ஏருலவு கீர்த்திவெங்க டேசுரெட்ட மேந்திரன்மேற்
சீருலவு லாமடலைச் செப்பவே—பாரதனி
லெவ்வா ரண முகத்து மின்பமுட னின்றிலங்குந்
கைவா ரணமுகத்தோன் காப்பு.

நூல்

பார்பூத்த வுந்திப் பதுமமலர் பூத்த
சீர்பூத் துதித்த திசைமுகனு—மோர்பூத்த
வெள்ளை மடமாதை வீறடக்கி நாவகத்துக்
குள்ளடங்கி னுனென்று முன்னிநைந்து—விள்ளுந்
திருமா லெண்ணுமற் சிவத்த மடமாதை
பெயருமார் புக்குள்ளே யொடுக்கி—மருவினு

* * * *
* * * *

End :

வேளினெக் காளம் விசும்பிற் பறந்தோட
நீளும் பணைமா நிறுத்தியே—யாளிநிகர்
நகுலனு நண்ணியரே பந்தனுமே நாண
மகிமையுட னூர்வேன் மடல்.

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், வேங்கடேசுர எட்டப்ப நாயக்கன்மீது உலாமடல் என்னும் பெயர்த்து. முற்றும் உளது. முதலில் காப்புச் செய்யுள் காணப்பெற வில்லையாதலால் பிறநூலில் இருந்து எழுதப்பட்டது, எனத் தெரிகிறது. அச்சிடப்பட்டுள்ளது. கண்டு கொள்க.

R. No. 2415.

நல்ல பிள்ளை சித்திரமடல்.

NALLA PIḶḶAI CITTIRA MAḌAL.

Palm leaf $9\frac{5}{8}$ X $\frac{1}{16}$ Inches. Foll 1—15, Lines, 9 on a page. Tamil. Injured Old. Extent, 350 granthas.

Complete.

Presented in 1950-51 by Sri M. P.P. Thooran of Tamil encyclopedia.

This is in praise one Nallapiḷḷai of Karanthai town Tanjore District. He is pepicted as a muniticent given to Poets and cloqent Speaker and scholar in Tamil. The author is not Known. This is a beautiful and work.

Beginning :

காப்பு

பூப்பாவை மேவும் புயத்துநல்ல பிள்ளைக்கு
வாய்ப்பான சித்திரமடல் சொல்லக்—காப்பாகத்
தந்தமோடித் தந்தவரைத் தத்தமுறத் தந்தெழுதுந்
தந்திமுகத் தந்திநிறத் தாள்.

நூல்

சீர்த்தபூ பங்கயப் பூங்கோயிற் றிருமடந்தை
வார்பூத்த கொங்கை மணந்தோனும்—பார்பூத்த
வுந்திக் கமலத் துதித்தோனும் வெள்ளைநிறத்
தந்திப் பிடரிற் றரித்தோனும்—வந்தெவருஞ்
சித்தர் முனிவ ரியக்கர் தெளிந்ததவ
முத்தர் களுநின்று முறைபரவ—மத்தியிலோர்

* * * *

* * * *

End :

பேயேறி னுரெனவே பித்தேறி யப்பதியிற்
போயேறித் தாலப் புரவியின்மேன்—மாயமாய்
நின்றேறி யாசைதந்த நீலிவந்து முன்னேற
மன்றேறி யூர்வேன் மடல்,

முற்றும்.

(கு-பு.) —

இந்நூல், நல்லபிள்ளை சித்திரை மடல் என்னும் பெயர்த்து, முற்றும் உள்ளது. பாண்டி நாட்டைச் சேர்ந்த கரந்தை நகரையுடைய நல்லபிள்ளை என்பார் மீது பாடப்பட்டிருக்கிறது. இந்நூல் வளமடல்போல் உள்ளது. கற்பனை வளமும் சொல்வளமும் பொருந்தித் திகழ்கின்றது. இதனைப் பாடியவர் இன்னுரென்று ஊகிக்க முடியவில்லை. ஆராய்ந்தறிவார்க்குப் புலனும். நல்லபிள்ளை என்பார் கொடைவளமிக்கவரென்றும், சொல் வன்மை மிக்க புலவர் என்றும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

R. No. 2416.

சமத்தூர் மாவாண ராய சுப்பேந்திரன் பள்ளு.

SAMATTŪR MĀVĀṆA RĀYA SUPPENDIRAN PAḶḶU.

Palm leaf, 12 5/8 × 1 inches, F H. 1—68, Lines, 7 or 8 on a page. Tamil. Fair. Old. Extent, 1,400 granthas.

Foll· 62 and 67 are blank.

Incomplete.

Purchased in 1950–51 from Sri M. P. Periyasami Tooran, Chief Editor, Tamil Encyclopedia, Madras.

As it was the custom of the poets of the past few centuries, the unknown author of this prabanda, too has praised lavishly his patron. Many particulars about him are found in the course of the verses in this Pallu Colloquial dramatic Piece.

Beginning :

கணபதிதுணை.

காப்பு.

பூவாணன் மாதிலங்கு புகழ்சமுத்து மாநகரின்
மாவாண ராயசுப்ப ராயேந்திர மன்னவன்மே
னுவாணம் புந்திதனி நாட்டுகின்ற பள்ளிசைக்கே
கோவாண ரீன்றிடுநற் குஞ்சரமுங் காப்பாமே.

உழத்திப் பாடடென்கிற பள்ளு நாடகம்

புகழ்பொருந்திய மன்னவன் தென்னவன்
 புயபெலந்தனிற் பூதரன் சீதரன்
பொருதுவன்சிலை பார்த்திபன் கீர்த்திபன்
 பொற்பினிற் காமன்
சுகமிலங்கிய புரந்தரன் துரந்தரன்
 சொல்லினி லரிச்சந்திரன் சுந்தரன்
சுப்பராய வாணவராய துரைமேற்
 சூட்டும் பள்ளிசைக்கே.
மகபதி தொழுந் தரத்தினர் திறத்தினர்
 மதகயமுகச் சிரத்தினர் கரத்தினர்
வனைப வளத்தி னிறத்தினர்
 அறத்தினர் வாரிச பாதர்
மிகவிலங்கிய துத்தியர் நித்தியர்
 விதுவணிசடை ருத்திரர் புத்திரர்
வேண்டி னர்க்கருள் சித்தியர் முத்தியர்
 விநயகர் துணையே.

*   *   *   *

*   *   *   *

மூத்தபள்ளி—வரவு

சந்தமணைக் குவளைமலர் தாங்கு சுப்புராயேந்திரன்
நந்தனஞ்சூழ் நல்லூக்க நாட்டின்வளங் கூறுதற்கே
இந்திரையோ வர்ணைச்சிலையோ வென்றுட வரமருள்
மூந்துவளஞ் சேர்சமுத்தூர் மூத்தபள்ளி தோன்றினனே.

End :

நாட்டின் சிறப்பு

தனதனுக்குங் கடன் கொடுப்பார்கள்
சரஸ்வதிக்கும் படிப்புரைப்பார்கள்
கனவிலும் பாவம் செய்ய வொண்ணார்கள்
கருதலாக்கு முனிவு பண்ணார்கள்
சனகனுக்கு நல்ஞானஞ் சொல்வார்கள்
தழைக்குமிப பெரியோர்க ளூரையும்
ஐந்தருவெ னும்சப்ப ராயேந்திர
அரசன்வாழ் சதுர ரெங்களூரே,

(முற்றுப் பெறவில்லை).

(குறிப்பு).—

இந்நூல் சமத்தூர் மாவாணராய் சுப்பேந்திரன்பள்ளு என்னும் பெயர்த்து. முற்றுப் பெறவில்லை. நன்றாகவுள்ளது. பாடியவர் இன்னா ரென்று அறியக்கூடவில்லை. சின்னத்தம்பி வாத்தியாரே இதனையும் பாடியிருக்கலாமோ என ஐயுறக்கிடக்கின்றது. சுப்பராயேந்திரன் என்பவ னும் ஓர் சிறந்த கொடை வள்ளல் எனத் தெரிகிறது. ஆதலினாற் போலும் இவன்மீது பள்ளு நாடகம் பாடப்பட்டிருக்கிறது. இதனால் கொடைத் தன்மையின் சிறப்பு, நாடு, ஊர் முதலாயின விளங்கும்.

R. No. 2417.

கஞ்சமி செட்டியார் பள்ளு.

KAÑCAMI CEṬṬIYĀR PAḶḶU.

Palm leaf, 15½ × 1½ inches. Foll. 1—28. Lines 4 or 6 on a page. Tamil. Injured. Old. Extent, 100 granthas.

Complete.

By—Cinnattambi Vāttiyar.

Purchased in 1950—51 from Sri. M. P. Periasami Tooran, Chief Editor, Tamil Encyclopedia.

The author is known to be Cinnattambi Vāttiyār. The patron of this poet has been praised in this prabandha through the mouth of a Paḷḷan

Beginning :

ஆங்கில வருஷமதில் மகரமாசம்
அஞ்சுபத தான தேதிதனில் பொருந்திய வாரம்
திங்கள்நாள் கஞ்சம ணேந்திரன் மீதில
தண்ணளித்த தமிழ்ப்பள்ளே சகல சதுராய்ச் சொன்னேன்

சிதங்கமுகு சீராகத் தான் மாலை மார்பன்
தெய்வமது பொன்மாலைத் தருள்குமாரன்
மாங்குமிகு ரணமிகுத்த சின்னத் தம்பி
வாத்தியார் பாடியரங் கேற்றினரே. (1)

கலித்துறை

கச்சிநகர்க் கதிபன் கஞ்சம நரேந்திரன் மேல்
பட்சமுடன் பள்ளேசல் புனைதம்பிக்கு—வள்ளி மணம்
தந்தந் தருளுவந்துதவும் .. .. ..
தும்பிக்கை யானை துணை .. .... (2)

விருத்தம்

பார்கொண்ட சீதரன் கோதண்டபாணி பாதம் புயத்தை
பேர்கொண்டு போற்றி செய்கஞ்ச மராசன் பெறும்புகழை
சீர்கொண்ட செந்தமிழ் பள்ளிசையெல்லாம் சொல்லத தேவர்
தொழும்
கார்கொண்ட கண்டத் தருள்முருக வந்தென்னைக்
காத்தருளே. (3)

End :

கயிலாச வாசனுக்கு மங்களம்
காமாட்சி யம்மனுக்கு மங்களம்
கருணைபெறு நாயகிக்கு மங்களம்
கஞ்சம நரேந்திரனுக்கு மங்களம்
செயமங்களம் நித்திய மங்களம்
செயமங்களம் செயமங்களம்.

முற்றும்.

(கு-பு).—

இந்நூல் கஞ்சமி செட்டியார் பள்ளு நாடகம் என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது. சின்னத்தம்பி வாத்தியார் பாடியதாக முன் வந்துள்ள பாட்டினால் அறியப்படுகிறது. நன்றாகவுள்ளது. இவர் ஓர் வள்ளல் மரபில் வந்தவர் என்றும், புலவர்களைப் புரப்பதில் வல்லவர் என்றும் தெரிகிறது.

R. Nos. 2418 to 2420 (one volume)

Paper $12\frac{1}{8} \times 9\frac{5}{8}$ inches. Foll. 1—141. Lines, 24 on a page. Tamil. Good. New. Extent, 2,116 granthas.

Transcribed in 1950-51 from a manuscript belonging to the Annamalai University.

R. No. 2418.

நாலடியார்—உரையுடன்
NĀLAḌIYĀR WITH COMMENTARY.

Foll. 1 to 110 Foll. 111 is left blank. Extent 2,616 granthas.

Complete.—Printed.

By.—Dēvarurai.

In the beginning the logical harmony between the succeeding chapters is considered. Then only the actual commentary begins. The commentary is clear and good.

Beginning :

செல்வ நிலையாமை, யாக்கை நிலையாமை என்னுமதிகார வடைவுகளுக்கு மலைவா மகுதியா தென்னின், முன்பு யாக்கை யுளதாயதி னிலையாமையை யுணர்த்தியது. நின்றபின் இளமைநிலையாமையை யுணர்த்திப் பின் பந்த விளமைப் பருவத்திலே, முயன்றுண்டான செல்வ நிலையாமையை யுணர்த்த வேண்டாவோ வென்னில்

* * * * * * * *
* * * * * * * *

கடவுள் வாழ்த்து

தண்ணார் மழுவுடையோன்றந் தமுத வாரணமே
கண்ணார முதக் கணபதி—யெண்ணார்ந்த
நாலடி நானூறு நன்கினிதா யென்மனத்தே
நிலமுட னிற்கவே செப்பு.

* * * * *
* * * * * * * *

செல்வ நிலையாமை

* * * * * * * *

அறுசுவை உண்டி யமர்ந்தில்லா ளூட்ட
மறுசிகை நீக்கி யுண்டாரும்—வறிஞராய்ச்
சென்றிரப்ப ரோரிடத்துக் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று.

என்பது

அறுசுவை உண்டி—அறுசுவையாகிய உண்டியை, அமர்ந்தில்லாளூட்ட—விரும்பி மனையாளூட்ட, மறுசிகை நீக்கியுண்டாரும்—கறிதொரு முற்சிகை நீக்கிப் பிற்சிகையுண்டாரும், வறிஞராய்ச் சென்றிரப்பரோரிடத்துக் கூழெனிற்—வறிஞராய்ச் சென்றோரிடத்துக் கூழினை யிரப்பாராகில், செல்வமொன்றுண்டாக வைக்கற் பாற்றன்று-செல்வத்தை யொன்றுண்டாக வைக்கும் பகுதியுடைத்தல்லவென்றவாறு ஓரிடத்தென்றது வாழ்ந்த விடந்தன்னிலே பார்த்தல். (1)

Colophone :

காமத்துப்பா லதிகாரம் முற்றும். ஆக வதிகாரம் 40 ; வெண்பா—400. நாலடியார் பரிமேலழகியாருரை எழுதி நிறைவேறியது. பிரபவ வருஷம் மார்கழி மாதம் 28-ஆந் தேதி சோமவாரமு மஷ்டமி விசாகமுங் கூடிய சுபதினத்தில் முத்துக்குமரண்ணன் கையா லெழுதி நிறைவேறியது.

(கு-பு).—

இந்நூல், நாலடியார் என்னும் பெயர்த்து. தேவர் உரையுடன் கூடியது. நன்றாக வுளது. முற்றுமுளது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து வந்த ஓலைச் சுவடியைப் பார்த்து எழுதிவைக்கப்பட்டது. ஆனால் அச் சுவடியின் இறுதியில், "பரிமேலழகர் உரை எழுதி நிறைவேறியது." என்று எழுதப்பட்டிருப்பது அறிஞர் கண்டு சிந்திப்பார்களாக. முதலில் அதிகார வடைவுப் பொருந்தத்தைப்பற்றி விளக்கப்பட்டுப் பின்னால் நூல் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. விளக்கம் நன்றாகவும் தெளிவாகவும் உளது.

R. No. 2419.

திருப்புகலூர்-அந்தாதி.

TIRUPPUKALŪR ANTĀDI

Foll. 112 to 123. Extent, 2.0 granthas.

Begins on foll. 112 (a) of the manuscript described under R. No 2418.

Incomplete

Transcribed in 1950-51 from a manuscript belonging to the Annamalai University.

There are only 92 verses in this prabandha.

The author is not known.

Beginning :

திருப்புகலூரந்தாதி.

காப்பு.

உரைசெய் மறைக்குந் தலைதெரியா தொருகொம்பி னென்றே
பரைசுமவர்க்குப் பெருநிழலாகும் பழனமெல்லாந்
திரைசெய் கடற்றுரைச் சங்க முலாவுந் திருப்புகலூ
ரரைசி னிடத்தினை மகிழ்வஞ்சி யீன்ற தோரத்தி நின்றே.

நூல்.

பூக்க மலத்து விழிவளர் வானென்றும் போத்தியலூர்
மாக்க மலத்து மகிழ்கின்ற வூர்மது வாணிறைந்து
தேக்க மலத்து வழியே பாக்குந் திருப்புகலூர்
நோக்க மலத்துயர் சோதிநெஞ் சேநம்மை நோக்குதற்கே. (1)

நோக்க மருக்கும் விழிச்செல்வர் பாற்கவி நூறுரைத்துந்
 தாக்கமருக்கு முருகா வருளென்பர்தன் செருந்தி
மாக்க மருக்குலவும் புகலூரரைப் போற்றிபுய்யார்
 பாக்கமருக்குத் தன்கொல் சொல்வாணர் பரிவிதுவே. (2)

End :

மலர்ப்பணையிலுழை விழிநீரு மிவ்வல்லிரவம்
 புலர்ப்பணையிலுழை மணமாரிடப் பூங்கை மள்ளா
மலர்ப்பணையிலுழை யெழுசேருட மாதுலைத்து
 பலர்ப்பணையிலுழை புகலூர் கண்பார்த்தருளே. (92)

(முற்றுப் பெறவில்லை.)

(கு-பு.—

இந்நூல், திருப்புகலூர் அந்தாதி என்னும் பெயர்த்து. முற்றுப் பெறவில்லை. 92 பாடல்களேயுள்ளன. பாடிய ஆசிரியர் பெயர் தெரிய வில்லை. இந்நூலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து வந்துள்ள ஓலைச்சுவடியைப் பார்த்து எழுதப்பட்ட பிரதியேயாகும். நன்றாகவுளது.

R. No. 2420.

சடகோபன் சரித்திரம்—பதிகம்.

ŚAṬAGŌPAN CARITTIRAM—PATHIKAM.

Foll. 124 to 141. Extent, 300 granthas.

Begins on foll. 124(a) of the manuscript described under R. No 2418.

Complete.

Transcribed in 1950-51 from a manuscript of Annamalai University.

Similar work as that described under R. No. 427 (b).

There are 100 verses on the whole with 10 divisions descripting the life history of Śaṭakōpa the famous vaiṣṇavaite saint.

Beginning :

இந்த சடகோபன் சரித்திரம் சதகமாயும் அந்தாதியாகவும், பத்து விருத்தத்துக்கு ஒரு பிரவாகியும் இருக்கிறது.

பாயிரம்.

திருமகிழ் மார்பன் போற்றி
 தென்குரு கூரார் போற்றி
வரைநிகர் புயத்தாய் போற்றி
 மறைத்தமிழ் பகர்ந்தாய் போற்றி
குரவர்கட் கரசே போற்றி
 குமரியந் துறையாய் போற்றி
பரிபுரப் பதனே போற்றி
 பராங்குசா போற்றி போற்றி. (1)

. . . .

. . . .

கடவுள் வாழ்த்துப் பதிகம்

திருவழுதி வளநாடன் மகிழ்மாறன்
காரிம......ன் சிறக்க முன்ன
ரருள் புதல்வன் றமிழ்வேதச் சடகோபன்
சரித்திரத்தை யடியேன் பாட
மருவலருந் துளவோனே வாரணத்துக்கிடர்
தலைத்த மாயோனே நன்
This contains prayers on Lord Annāmalai. The style is flowing with select and beautiful phrases. Author is unknown.

Beginning :

ஒருதின மூன்று கிரிதலை வலம்வந்
துன்னடி வணங்கவும் மறியேன்
உனதிரு வருளா லஞ்செழுத் ததனை
யுன்னியே சேவிக்கவு மறியேன்
கருதிநின் மலங்கொண் டர்ச்சனை புரியேன்
கண்டபொழு துனைத்துதித் தறியேன்
கனவிலு முனையே நினைந்திடாக் கொடிய
கட்டளை யாளவே யருள்வாய்
சுருதியே முழங்குங் கருணைமா கடலே
சோதியே சுடரொளி விளக்கே
தும்பையின் மலரை யின்பமா யணியும்
சுத்தனே பத்தருக் கெளியாய்
அரியொடு பிரமா அடிமுடி தேட
அனல்வடி வாகிய நமலர்
அருணையி லுண்ணா முலையுமை பாகர்
அடியவர்க் கெளியநா யகனே. (1)

End :

பாடிய மூவர் தமிழ்தனைக் கிரங்கிப்
பரிவொடு ஞானமுங் கொடுத்துப்
பாவையில் கல்லு மிதிந்துற வெண்ணி
பசும்பொன்னு யிரங்கொடுத் ததனை
தேடியா ரூரில் பிறக்கவம் பலத்தை
தெரிசினை செய்திடக் காட்சி
சேர்ந்திட நினைக்க திகழ்பத மளித்திடும் பரனே

* * * * *

வாடிய பயிர்க்கு முகிலுத நீதி
யெடுத்தது போல வணங்கிடும்
அடியார்க் குதவிய பதம்போல்
வந்தெனை யாளவே யருள்வாய்

ஆடிய பாதந் தன்னேயே நாடி
அரவொடு புலியும்வந் திறைஞ்சும்
அருணையி லுண்ணு முலையுமை பாகர்
அடியவர்க் கெளியனு யகனே. (10)
(முற்றும்).

(கு-பு,)—
இந்நூல், அண்ணுமலையார் பேரில் தோத்திரம் என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது. சிதிலமாயது. பாடிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை. நன்ருகப் பாடப்பட்டுள்ளது. நடையழகு உடையது. அச்சிடப்பட்டதெனத் தோற்றுகிறது.

R. No. 2922.

சிவபூசை தோத்திரம்.

ŚIVAPŪJAI TŌTTIRAM.

Foll. 10—16. Extent, 30 granthas.

Begins on fol. 10 (a) of the manuscript described under R. No. 2921.

Incomplete.

This work, Śiva Pūjai Tōttiram contains 14 songs. The style of this poem is simple. This poem brings out the grace of God Śiva. Certain folios numbering from 14—16 in the middle bear the songs of Tēvaram of Sundarar.

Beginning :

காயா மரத்தின் கனியாகி
கனியிற் கொட்டை யுண்டாகி
தாயா யீரே ழுலகுந்
தந்தையு மான தயாபரனே
ஆயா மறைநூல் தனைவகுத்த
அரனே யுந்தன் அடைக்கலங்காண்
பேயா யெங்கள் பெருமானே
பித்தா என்னை ஆளாயோ. (1)

End :

சமைத்த சடலத்தை மெய்யென்று
சாகர் பாய்ந்து தடுமாறி
சமைத்து விழித்து இருப்பானேன்
அன்னம் இடவங் கலுத்தேனோ
சுமத்தெண் டிரைக்குள் அரன்கலித்து
சூலா யுதனே வாலமுண்டார்
அமைத்த தாயங் கமலக்கண்
ணுந்தன் அடைக்கலங் காண்.

(ஈசா என்னை யாளாயோ). (14)

(கு-பு)—

இந்நூல், சிவபூசை தோத்திரம் என்னும் பெயர்த்து. இறைவனின் அருட்டிறங்களை, ஒவ்வொரு செய்யுளிலும் எடுத்தியம்புகிறது. பதினொன்று பாடல்களே உள்ளன. நடை சாதாரணமானது. 14 முதல் 15 வரையிலான ஏடுகளில் சுந்தரர் பாடிய தேவாரம் எழுதப்பட்டுள்ளது.

R. No. 2923.

வேல் விருத்தம்.

VĒL VIRUTTAM.

Foll. 17—23. Extent, 50 granthas.

Begins on fol. 17 (a) of the manuscript described under R. No. 2921.

Complete.

This is the poem about the spear, the weapon of God Murukar. In praise of the spear, the heroism and gallantry of God Muruka played in the war between Dēvar and Asurar, is described. This is sung in the Āśiriya-Vṛuttam metre and thus consists of ten Āśiriya Vṛutta songs. The line "Śatru Saṅkāra Vēlē" comes at the end of each poem.

Beginning :

அப்பமொடு அதிரசம் பொரிகடலை துவரைவடை
யமுது சேபவ முகனும்
ஆதிகே சவன்லட்சுமி திங்கள்தின கரன்வெள்ளை
அயிராபதம் வாழ்கவே
முப்பத்து முக்கோடி வானவர்கள் இடைதீர
முழுதுபொன் னவரும் வாழ்க
மூவாத கெருடகந் துருவருகிம் புருடரும்
முழுதுமறைக் கிறைவன் வாழ்
செப்பரிய ரத்தின தேவியயி ராணியணி
திருமங்கலம் வாழ்கவே
சித்திய வித்தியாதனர் கின்னரர்கள் அசுவனி
தேவதைகள் முழுதும் வாழ்க
சத்தகலை வித்திக்கம் ஆதியா திருவாசர்
வன்னைநம் பினவர் மேல்
தர்க்கமிட நாடினரை குத்திஎதி ராடிவரும்
சத்ருசங் கார வேலே. (1)

End :

மச்சம் குதித்துமணி மழுதடவி வந்தந்தி
வையயா புரிபொய்கையு
மதியமுத் தஞ்செயும் போர்க்கோ புரஜாளியு
மானமேவும் கோவிலழகும்
அச்சுதக் கிருபாக ஆனைமுறை செய்யவே
ஆழியை விடுத்தானையை
அன்புடன் ரட்சித்த திருமாது மணிமார்பன்
அரிகிருஷ்ண ராமர் மருகா
உச்சித அலங்கார உணமந்தி லீங்கார
ஒய்யார சமர்ப்பிர சண்டன்
ஒய்யார் குழல்வள்ளி தெய்வானை நாயகன்
ஓங்கார பஞ்சாட்சரன்
சச்சுதா னந்தபர ஞானந்த சுடர்தந்த
சரவணனை நம்பினவர் மேல்
தர்க்கமிட நாடினரை குத்திஎதி ராடிவரும்
சத்ரு சங்கார வேலே. (10)

(முற்றும்).

(கு-பு.)—

இந்நூல், சத்துருவைச் சங்கரிக்க வேலனை வேண்டிக்கொள்ளும் முகமாக அமைந்ததொரு நூலாகும். பத்து ஆசிரிய விருத்தங்கள் கொண்டது. முற்றுமுள்ளது. " தர்க்கமிட நாடினரை . . . . சங்கார வேலே " என்ற ஈற்றடியை மகுடமாகக் கொண்டு பாடப்பட்டுள்ளது.

R. No. 2924.

மாரியம்மன் விருத்தம்.

MĀRIYAMMAN VIRUTTAM.

Foll. 24—30. Extent, 70 granthas.

Begins on fol. 24 (a) of the manuscript described under R. No. 2921.

Complete.

This poem, in Viruttam metre, is in praise of Goddess of Anger Kāḷi or Māri whose temple is in South Kannanūr. Māḷi, Kāḷi, etc., are the names of Umaiyāḷ or Pārvati, the consort of Śiva Perumān. There are some mistakes here. Besides, the grammar of Viruttam is not applicable in certain songs. The folios numbering from 31 to 38 are not found and the composer of this poem is also not known. This is complete.

Beginning :

விருத்தம்

அவனிமுதல் ஈரேழு பதினாலு லோகமும்
 அதிசெயம் என்ன வேதான்
அன்பான திருநாளும் தீர்த்தமும் . . .
 அனேவோர்கள் கொண் டாடவும்
நவநீத மாகவே கேட்டவர மேதும்
 ரட்சிக்கு மென்னம்மையே
நலமான வேப்பிலை கரகநீர் கொண்டிந்த
 நாடெலாம் விளையாடுவாய்
தவமான முனிவரும் தேவரும் அனைவரும்
 சரணமென் றுன்னடி வணங்குவார்
சத்திமக மாயிநீ திரிசூலி சாமுண்டி
 சாமளி கோம ளாங்கி
சிவஞான தேசிகர் மைத்துனி என்னவே
 தென்கன்ன னூர்அ மர்ந்த
செங்கண்மால் தங்கைஎனும் மாரிமுத் தேவுனது
 திருவுளமே தங்கு வாயே. (1)

End:

சந்தத முன்னையே நினைப்பதுந் துதிப்பதும்
 தானே அறிந்து நீதான்
தமியேனின் மனதி லெண்ணம் அறிந்துநீ
 சும்மா இருப்பதும் தர்மமோ
சொல்லு மம்மாஎனதன்பான துயரமும்
 யாருடன் சொல்லுவேன் எல்லாம்
அறிந்துநீ தான்இப்படி செய்வதும் வஞ்சனை
 யல்லவோ ஏழைக் கிரங்குவாயோ
செந்தமிழ்க் காகிலும் இரங்கிநீ ஒருவசனம்
 செப்பவே வேணு மம்மா
செப்பரிய தமிழ்மாலை பத்துமே சாற்றினேன்
 உன்திரு வுளம்மகிமை யாலே
வந்திடும் கவிதன்னுல் பிழையிருந் தாலும்நீ
 மனம்பொறுத் தருள வேணும்
மன்னுபுகழ் கன்னநகர் எந்நாளும் விளையாடும்
 மன்னுமக மாயி மாதே
உன்னையே நம்பினேன் மன்னுமக மாயிமாதே. (10)

(முற்றும்).

(கு-பு)—

இந்நூல், தென் கன்னனூர் முத்துமாரிமீது பாடப்பட்ட விருத்தப் பாடல்களாகும். ஆனால், பிழைகள் உள்ளன. விருத்த விலக்கணமும் சிதைந்து காணப்படுகின்றது. முற்றுமுள்ளது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. 31—38 ஏடுகள் காணப்பெறவில்லை

R. No. 2925.

அருணகிரிநாதர் மீது விருத்தம்.

ARUṆAGIRI NĀTARMĪTU VIRUTTAM.

Foll 39—45 Extent, 70 granthas.

Begins on fol. 39 (a) of the manuscript described under R. No. 2921.

Complete.

This work is in praise of Aruṇagiri Nāthar and composed in viruttam metre. There are some colloquial words used in this poem.

Beginning :

விருத்தம்

குளிர்பசி ரந்திபுனை யும்வேணி புறநின்று
　　கும்பிடுநல் லருணகிரிநீ .
கூறரிய வானவர்கள் அடியவர்கள் நித்தலும்
　　கொண்டாடும் அருணகிரிநீ
ஒளிவுடைய செம்பொன் னுடதென்கை லாசகிரி
　　ஓங்குமுயர் அருணகிரிநீ
உச்சிரத் திடவுநான் பஞ்சாட்சரம் அடியேற்கு
　　உண்மையில் அருணகிரிநீ
தெளிவுடைய ஞானமும் கல்வியு மிகவறிவும்
　　சிந்தைதரும் அருணகிரிநீ
சிவசிவா அருணகிரிஎன் றுரைப் போர்கள் வினை எல்லாம்
　　தீர்க்கின்ற அருணகிரிநீ
நளினமட உந்தனிரு பாதார விந்தமே
　　நம்பினேன் அருணகிரிநீ
நன்மையாய் எந்தனை ரட்சித்திடு மய்யா
　　நம்பினேன் அருணகிரியே. (1)

End :

தும்புரு நாரதர் தேவாதி தேவர்கள்
　　துதிக்கின்ற அருணகிரிநீ
சோதிபிர காசமாய் சுந்தரா எந்தனுட
　　துயர்நீக்கும் அருணகிரிநீ

தயமென்றே போகமும் அடியார்க் கிரங்கி
    தயவுதரும் அருணகிரி நீ
சாற்றிய இவ்வுரை பத்தும் பதிகமும்தான்
    சொல்வார்கள் அருணகிரி நீ
அம்புவியில் அரசுநெறி செங்கோல் செலுத்திவே
    ஆண்மைகொண்ட அருணகிரிநீ
அன்பாகவே பரமுத்தி அரசனுக் களித்திடும்
    அய்யனே அருணகிரி நீ
நம்பினேன் எந்நாளும் உந்தனிரு பாதமே
    நம்பினேன் அருணகிரி நீ
நன்மையாய் எந்தனை ரட்சித் திடுமையா
    நம்பினேன் அருணகிரியே. (10)

முற்றும்

(கு-பு)—

இந்நூல், அருணகிரி நாதரைப் பற்றி மற்றொருவரால் பக்தியுடன் புகழ்ந்து பாடப் பெற்ற பதிகமாகும். முற்றும் உள்ளது. பல விடங்களில் கொச்சைச் சொற்கள் விரவப் பாடப்பட்டுள்ளது.

R. Nos. 2926—2929 (one bundle).

Palm leaf. 11¾ × 1¼ inches. Foll 1—44. Lines. 9—11 on a page. Tamil. Injured. Old. Extent, 440 granthas.

Presented in 1951-52 by Sri K. Shunmugam, Kumarakkuppam, South Arcot Dt.

R. No. 2926.

தேவாரப் பாடல்கள்.
TĒVĀRAP PĀḌALKAḶ.

Foll. 1—33. Extent, 330 granthas.

Incomplete—Printed.

Same work as that described under D. No. 1144.

(கு-பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு 1144-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்புங் காண்க. இதில் சம்பந்தர், சுந்தரர் பாடிய சில பதிகங்கள் உள்ளன. இவையனைத்தும் அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளன.

R. No. 2927.

விநாயகர் அகவல்.
VINĀYAKAR AKAVAL.

Foll. 34—36 (a). Extent, 25 granthas.

Begins on fol. 34 (a) of the manuscript described under R. No. 2926.

Complete—Printed.

Same work as that described under D. No. 1624.

(கு-பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு 1624-ஆம், எண்ணில் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்புங் காண்க. இது ஔவையார் பாடியது. அச்சிடப்பட்டுள்ளது.

R. No. 2928.

சுப்பிரமணியர் அகவல்.

SUBRAMAṆIYAR AKAVAL.

Foll. 36 (b)—39 (a). Extent, 25 granthas.

Begins on fol. 36 (a) of the manuscript described under R. No. 2928

Complete.

This poem is in praise of God Subramaṇiar worshipped at Tiruccengōḍu. It gives the information about Śaiva Siddhānta, stating that God Muruka is the embodiment of "Pancākṣara" or "The Five Letters". The name of the author is unknown. There are some mistakes in the poem. At the end of the poem there is some information about Vaḷḷuvar, Avvai etc.

Beginning :

அகவற்பா.

சிந்தையி லெழுந்த செழுஞ்சுடர் வெள்ளம்
செங்க மலத்தின் செம்பொற் பதியே
உந்தியி லுதித்த வோங்கா ரந்தணி
லந்தமி லாத அகார முதலாய்
உகாரத் உயிரி லோரஞ் செழுத்தில்
அகாரத்தி னுள்ளே யாட்சிய தாகி
மகாரத் தினுள்ளே வண்மை பரந்து
அகாரந் தானு மெல்லாந் தானாய்

End :

நீயாய் நானாய் நின்றாய் சரணம்
நின்கழல் தன்னை நினைப்பவர் தங்கள்
நீண்ட பிறப்பை அறுப்பாய் சரணம்
நிலவு லாவிய நீண்மணி மாடத்

துலவி நின்ற வொருவர் பெருமை
அலகில் சோதியோ டந்தமு மாகி
திலதமயில் தன்னைத் தித்தியென் றேத்திய
திருச்செங் கோட்டுறைச் செல்வனென் சிந்தையே.

முற்றும்

(கு-பு.)—

இந்நூல் திருச்செங்கோடு என்ற தலமமர்ந்திலங்கும் முருகக் கடவுளின் மீது பாடப்பட்ட அகவற்பாவாகும். முற்றும் உள்ளது. பஞ்சாட்சரவடிவாகியவன் முருகன் என்ற கருத்து விவரிக்கப்பட்டிருக்கிறது. பாடியவர் பெயர் தெரியவில்லை. இறுதியில், வள்ளுவர், ஔவை முதலானோரைப் பற்றிய குறிப்புக்களும் காணப்படுகின்றன. பிழையுளது.

R. No. 2929.

திருமுருகாற்றுப்படை.

TIRUMURUKĀṞṞUPPAḌAI.

Foll. 40—44, Extent, 60 granthas.

Begins on fol. 40 (a) of the manuscript described under R. No. 2926.

Complete—Printed.

by—Nakkīrar.

Same work as that described under D. No. 1195.

(கு-பு.) —

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1195-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்புங் காண்க. இதில் முற்றும் உள்ளது.

R. Nos, 2930 and 2931 (one bundle).

Palm leaf, 16 × 1 inches. Foll. 1—28. Lines, 4 on a page. Tamil. Injured. Old. Extent, 300 granthas.

Presented in 1951-52 by Sri K. Shanmugam, Kumarakkuppam, South Arcot Dt.

R. No. 2930.

கடவுளர் தோத்திரங்கள்.

KAḌAVUḶAR TŌTTIRAṄKAḶ.

Foll. 1—20. Extent, 75 granthas.

Complete.

Same work as that described under R. Nos. 2033—37 and R. Nos. 156—162.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காட்டலாக்கு 156—162-ஆம் எண்களிலும் 2033—2037-ஆம் எண்களிலும் வருணிக்கப்பட்டுள்ளன. அவைகளைக்கண்டு கொள்க. சிதிலமாயது. பிழையுள்ளன.

R. No. 2931.

பழனியாண்டவர் பேரில் விருத்தம்.

PALANIYĀNḌAVAR PĒRIL VIRUTTAM.

Foll. 21—26, Extent, 25 granthas.

Begins on fol. 21 (a) of the manuscript described under R. No. 2930.

Complete.

Same work as that described under D. No. 1639.

(கு-பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு 1639-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்புக் காண்க.

R. No. 2932.

பலசந்தப் பாடல்கள்

PALA CANDAP PĀḌALKAḶ

Palm leaf. 16¼ × 1 inches. Foll. 1—28. Lines, 5 on a page. Tamil. Injured. Old. Extent, 140 granthas.

Presented in 1951—52, by Sri K. Shanmugam, Kumarakkuppam, South Arcot District.

Complete.

Similar work as that described under R. Nos. 582 and 855.

(கு-பு)—

இதில், பாரதத்தில் கன்ன பருவத்தில் சில பாடல்களும், சிங்கை எல்லம்மை மீது பாடிய பாடல்களும், பாரத நாடகத்தில், விதுரன் அருச்சுனன் வாயிலாக வரும் திபிதைகளும், காளமேகப் புலவர் பாடல் இரண்டும், ஸ்ரீ ரங்கப்பாடல்களும், நந்திக்கலம்பகத்தில் இரண்டொரு பாடல்களும் ஆக, அனைத்தும் தொகுத்து எழுதப் பட்டுள்ளன. இந்நூல், தனக்கு வேண்டிய பாடல்கள் மட்டும் எழுதி வைக்கப்பட்டதே யொழிய, ஒரு நூலாகவோ, பல நூல்களின் பாடல்களின் தொகுப்பாகவோ அமைய வில்லை, இவையனைத்தும், தனிப்பாடற்றிரட்டில் காணப்படுகின்றன. ஓலைகள் தொடர்ச்சியாக இல்லை.

R. Nos. 2933—2935 (one bundle)

Palm-leaf, 12 × 1 inches. Foll. 1—20. Lines 5, on a page. Tamil. Injured. Old. Extent, 120 granthas.

Presented in 1951-52 by Sri K Shanmugam, Kumarakkuppam, Valavanūr, South Arcot District.

R. No. 2933.

விநாயகர் விருத்தம்.
VINĀYAKAR VIRUTTAM

Fol¹. 1—9. Extent, 30 granthas.

Complete.

Similar work as that described under D. No. 1621.

Beginning :

விருத்தம்.

ஓங்கார ரூபனே ஓநமசி வாயனே
ஓநமோ நாராயணு
ஓவென்ற வட்சரம் நாவென்ற வட்சரம்
ஒருமாசி வாயட்சரம்
பாங்கான ரூபனே பலகார முக்கனி
பயர்வலு கடலைதுவரை
பட்சிக்கும் குட்சியாய் பேழைவயி றானைமுகப்
பதினொரு கரத்தலைவனே. (1)

தேங்காயும் வாழையுங் கமுகும் கரும்புநற்
செந்நெல் தினைக்கதிர்களும்
செந்தாழை வாசமும் வாவியும் சோலைசூழ்
திவனூர் எல்லைவளரும்
தாங்கா கரத்துடன் பொய்யாத கணபதி
சடிதிச்கு வந்துதவுவாய்
சகடகுட கடவிகடம் குடமுடி நடனபத்
தாந்தோ ணிப் பிள்ளையாரே. (2)

End :

கும்பிடும் பேருக்கு தோத்ரஞ் செய்வருக்கும்
கூடிடும் தீவினையெலாம்
கூடுவிட் டோடவரு னளகைநிகர் திவனூர்
குடியிருக் கின்றமுதலே
சம்புமா பதிபெற்ற பொய்யாத கணபதி
சடுதிக்கு வந்துதவுவாய்
சகடகுட கடவிகடம் குடமுடி நடனபத்
தாந்தோணிப் பிள்ளையாரே. (11)

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், திவனூர் தாந்தோணிப் பிள்ளையார் மீது பாடப்பட்ட பதினொரு பாடல்கள் கொண்டதாகும். முற்றும் உள்ளது. தோத்திர வடிவாயது.

R. No. 2934.

உமையம்மை பதிகம்
UMAIYAMMAI PATIKAM

Foll. 10—14. Extent, 25 granthas.

Begins on fol. 10(a) of the manuscript described under R. No. 2933.

Complete.

This poem is in praise of Umaiyammai, the consort of God Śiva. Some poems describe, Nature. The author is not known. The style is ordinary and there are many mistakes in the poem.

Beginning :

விருத்தம்.

வன்னிமா மரங்களும் மகுடமரச் சாலையும்
வாழைகள் மிகுந்த வனமும்
வரிசைபெரு தேக்குகள் சரிசரி யதாகவே
மாதளைக் கோங்கு புனமும்
உன்னிதம தாகவே எட்டியுங்கோங்குமே
உயர் மலர்கள் கமுகுவீசும்
உம்பர்கள் போலவே தம்பினூர் வானரம்
ஓடியே பாய்ந்து தாவும்
இன்னரி முழங்கிட புளியமரந் தோப்புகள்
கீதங்கள் பாடு நாகல்
இளிமொழியும் மன்னரும் வாழ்கின்ற மேடைதான்
இடுகிடென விருள்கோம்பையும்
சன்னதியில் முன்பாக குன்றுபோ லெழுமுனிவர்
சாம்பவித் தவம்பு ரிந்தாய்
சந்தனங் கஸ்தூரி குங்குமம் ஈசானியம்
வளர்தவ பச்சைநாதி உமையே. (1)

End :

கந்தனு ரணியுமே கனகசபை மண்டபம்
காட்சியாய் இடப்பாகமும்
கருமேக வர்ணமும் ஆதிசேஷ விந்திரன்மேல்
கருணைகொண்ட பாதாரமும்
முத்தணியு மேடைமே லல்குலும் சலரபி
மும்மூர்த்தி தான்வாழ்கவே
முக்கண்ணன் அருள்பாலன் ஐங்கரன் அருமுகன்
முடிமன்னர் குலம்வாழ்கவே.

பத்துமே பதியுடன் பாடினே னுன்மீதில்
பரமருட கிருபையாலே
பார்தனில் உனதுசெங் கோல்சிலம் பெருக்கவேவுன்
பாலகன் குலம் வாழ்கவே
சத்துரு சஙகாரியே சத்திராதி வம்மிசம் பிடி
சாம்பல்மண் ணுக்கிவிடுவாய்
சந்தனங் கத்தூரி குங்குமம் ஈசானியம் வளர்
தவபச்சை நாதி உமையே. (10)

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், பச்சைநாதி உமையைப் பற்றிப் பாடப்பட்டுள்ளது. முற்று முளது. இயற்கை எழிலையும் வர்ணித்துப் பாடப்பட்டு இருக்கிறது. பாடியவர் பெயர் தெரியவில்லை. இடைக்காலத்தைச் சார்ந்தது. சிதிலமாகவுளது. நடை சாதாரணமானது. பிழைகள் உள்ளன.

R. No. 2935.

விநாயகர் விருத்தம்.

VINĀYAKAR VIRUTTAM.

Foll. 15—20. Extent, 58 granthas.

Begins on fol. 15 of the manuscript described under D. No. 2933. Complete.

Similar to the work described under R. No. 2933.

(கு-பு.)—

இந்நூல், மேல் வந்துள்ள மூவருடக் காட்டலாக்கு 2933–ஆம், எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது. முற்றும் உள்ளது. அதன் குறிப்புக் காண்க.

R. Nos. 2936 to 2947 (one codex).

Palm-leaf 6 × 15 inches. Foll. 1—119. Lines, 6 on a page Tamil. Injured. old. Extent, 600 granthas.

Presented in 1951-52 by Sri K. Shanmugam, Kumarakkuppam, South Arcot District.

R. No. 2936

குமாரபுரிச் சிவபெருமான் மீதுபாடல்கள்.

KUMĀRAPURIC CIVAPERUMĀN MĪTU PAḌALKAḶ.

Foll. 1—34. Extent, 200 granthas.

Complete.

Tri. Cat.—23

This poem is in praise of God Śiva of Kumārapuri. It is composed in, 'Śandam' metre but very often the metre changes in the middle. It is complete and the style is fine. The composer of this poem is Appāsāmip Pulavar who is also called Vēṇuvanap Pulavar. He has produced many other works also.

Beginning :

காப்பு.

வெண்பா.

கொல்லா விரதர் குமாரபுரி.........
வல்லார் விரும்பு மடாலயத்தி—லெல்லாதிக்
கண்முகத்தா னைத்துதிக்கக் கைக்களிற்று மாமுகனுஞ்
சண்முகனுங் காக்கத் தகும்.

பற்றகன்ற மாதவத்தோ ரனைவர்களுங் கூடிப்
பலகோடி விளையாட்டிப் படியிடத்திற் செய்து
கற்றவருக் கானந்தக் கடலமுத நல்கிக்
கருணையிலார் நெறியழிக்குங் காலம்வரச் செய்வாய்
பொற்றடங் குன்றாய் சிலைவளைத்த கரத்தானே
புரமொரு மூன்றுட னவுணர்பொடிய நகைத்தானே
கொற்றமலி சண்முகப்பேர் முனிவன் மனம்போலுங்
குமாரபுரி மடாலயத்திற் கூத்தாடுஞ் சிவனே. (1)

End :

ஆறுவகைச் சமய நெறியினுக்கு முறவாகி
யவைகடந்த பொதுநெறியி லமைந்துகளி கூர்ந்தும்
கூறுதமிழ்ச் சுவைக்குருகுஞ் சண்முகமகா முனிவன்
குமாரபுரி மடாலயத்திற் கூத்தாடுஞ் சிவனைத்
தேறுதிருப் புகழ்க்காரன் றுதிக்குமிவை கற்றுத்
தினங்கருதிக் களிகூறுஞ் சீரியர்க ளெல்லா
மாறுபடாத் திருவருட்பே ரானந்தக் கடலின்
மகிழ்வெய்திப் பிறவாத வாழ்வுமடை வாரே. (11)

முற்றும்.

(இதுவுமது).

நேரிசை வெண்பா.

குருக்கூட்டம் போற்றுங் குமார புரியிற்
றிருக்கூத்துச் செய்வானைச் செப்ப—நருக்கூரோர்
சின்னத் துரும்பினுக்குஞ் செய்யாத சீரியர்தஞ்
சொன்னப் பதப்பூத் துணை.

(பதிகம்.)

ஒருபொரு ளேயென வேதத்தின் முடிவி
லுரைக்கின்ற பொருட்கிலக குள்வடி வானான்
மருவோர்ப் பொகுட்டுறு மிருமட வாநும்
வந்தெனை யீங்குறும் வாழ்வுறப் புரிவாய்

திருமகள் கேள்வர் பற்பலர் தொழநின்றாய்
சிகையுடைப் பிரமர்தஞ் சிரமபல பூண்டாய்
குருமணிக் குன்றுறழ் திருவரு வுடையாய்
குமாரபுரி யிற்றிருக் கூத்துச்செய் வானே. (1)

End :

பதினொரு சமையமுஞ் சிவசம யத்தின்
பாருங்கிளை யாகுமெய்ப் பணபுணர்ந் ததனுற்
குதிகொளு மவரறி சண்முக முனிக்காக
குமாரபுரி யிற்றிருக் கூததுசசெய் வானை

விதிமறை நூல்வழி செயுமகக் கொலையும்
விலக்கிடத் தவஞ்செயும் வியன்றிருப் புகழோ
னதியுரத் தார்பகர் பதிகமது ரைப்பார்க்
கானந்த வாரியி னமுதமெய் திடுமே. (11

முற்றும்.

இதுவுமது.

Beginning :

வெண்பா.

வண்மைமலி சண்முகட்பேர் மாதவன்கு மாரபுரி
திண்மையுறச் செய்யுந் திருமடத்திற்—பெண்மையொரு
பாகத்தா னுடல்பயில வந்தான் பார்த்ததுண்டு
நாகத்தார் சாட்சி நமக்கு.

பண்மூல மறைமுழுதுந் துதித்துந் தேடிப்
பரிவுடைய வடியர்மனப் பதுமப் பூவி
லுண்மூல ராகியைவ ராகி யப்பா
லொருகுருவாய்த் திருநடனமு ஏற்றும் பெம்மான்
கண்மூன்று போலுமனு பவத்தாற் சீர்த்த
கருணையன்பர் காட்ட முற்றுங களிக்கச் செய்வான்
கொண்மூவந் தளவின்மழை பொழியுஞ் சோலைக்
குமாரபுரி மடத்தில் வந்து குலாவினனே. (1)

End :

பாண்டி னெல்லைப் பதியினிற் கற்கிணறு தொட்டும்
பரசமயத்தோர் பலரைப் பகைப்போ னன்பர்க்
கூண்டிறைஞ்சுந் தில்லை நடராசன் குருனே
குமாரபுரி மடத்தில்வந்து குலவு மாற்றை

வேண்டியவா நனவிலெனக் கனவி னூடும்
விளங்குகின்ற சண்முகப்பேர் விமலன் மெச்ச
வீண்டியம்பும் பதிகமிவை கற்க வல்லார்க்
கெழுபிறவிக் கடல்கடக்கு மியல்புண் டாமே. (11)

முற்றும்.

Beginning :

(நேரிசை வெண்பா.)

குந்தப் படைச்சேய் குமாரபுரிக் கூத்தனுக்கோர்
சந்தத் தமிழ்ப்பதிகஞ் சாற்றுகினறேன்—முந்தவுமை
பால்குடித்த வாயான்சொல் பண்வழியே யன்னவன்றன்
கால்குறிப்ப தாமென் கருத்து.

(பதிகம்.)

தான தனத்தனனு தான தனத்தனனு
தான தனத்தனனு தனதன தனதன
தனுதனத் தத்தனனு.

போதவிளக் கறியே னுமைநாடி வழுத்தியதோர்
புகழ்விழை வுறுகவி பொல்லாத தெனப்பகரா
தேதமில் பொற்பினதா மலர்தாத கியிற்புனைமா
லிகைநிக ரெனவேறு விராவி னுதித்தவரார்

பாத மெடுத்தொரு நாளெதிர் காளியை வெற்றிகொள்சீர்
பகர்பவ ரிசைமிகை பராவுமவர்க் கெளியீர்
கோதறு கற்பினளா முமையாளை யிடத்திலுளீர்
குளிர்பொழின் மலிதரு குமாரபுரிச் சிவனே.

End :

கோரணி மிக்குளதா மத வாத மயக்கறுசீர்
குலவுகண் முகமுனி குமார புரிக்கழகா
வாரண முற்பகர்மூ விருதூய நெறிக்குறியா
ரகமகிழ் திருமடம தாடு நடிப்பவர் மேல்
வாரண மொப்பவர் வாழ்வுறும் வேணுவனப் புலவோன்
வனைதரு கவியிவை மனோரத முற்றியதா
னாரணன் மெச்சிடும் வீறது சேரவளிப்பனவே
நவில்பவர் சிலர்பலர் நாளது வெறுப்பவரே.

முற்றிற்று.

(கு-பு.)—

இந்நூல், குமாரபுரிச் சிவன்மீது பாடப்பட்ட, பதிகங்களும், சந்தப் பாடல்களும் அடங்கியதொரு நூலாகும். முற்றும் உள்ளது. நடை நன்றாகவுள்ளது. இறுதிப் பதிகம் சந்தப்பாடல்களால் ஆனது. அப்பாசாமிப் புலவரால் பாடப்பட்டதாகும். இவருக்கு வேணுவனப் புலவன் என்றும் ஒரு பெயர் உண்டு. இவர் இன்னும் பல நூல்கள் அருளியுள்ளார்.

R. No. 2937.

சிலேடைப் பதிகம்.

ŚILĒḌAIPPATIKAM.

Foll. 35—57. Extent, 150 granthas.

Begins on fol. 35 of the manuscript described under R. No. 2936.

Complete.

By—Ṣaṇmuka svāmikaḷ.

The author of this work is Appāsvāmip Pulavar of Tinneveli. He is also known as Tiruppugaḷsvāmi. He is the author of some of the works stated above and below. This is a Poem of puns, one of the figures of speech. He has also mentioned about the mutt of Ṣaṇmukasvāmi at kumārapuri. This work is not yet published.

Beginning :

வெண்பா.

ஐந்துமுகச் சிவனு மாறுமுகச் சிவனு
வந்துகளி கூற வண்டமிழா—லுந்துசுவைப்
பாடற் சிலேடை பகர்கின்றேன் பத்தர்பதஞ்
சூடற் கொல்கார்தா டுணை.
கற்றபுல வோர்வியப்பக் கழகமடைந் தானுங்
கண்மூன்று னனந்தோறுங் கவின்ற பெருமானு
மற்றடந்தோ ளவுணர்களைப் பார்த்தெடுத் திட்டானும்
வாரணமொன் றிணையுலகோர் வாழ்வுறக்கொண் ருனுஞ்
செற்றமலி விடைமுதுேற் சேணின் மிளிர்வானுஞ்
இமயமக ளுரிமைமிகச் செறிதரு காதலனு
மற்றமறிந் தடியவருக் கருள்புரிகின் ருனு
மைந்துமுகச் சிவன்றனே வாறுமுகச் சிவனே. (1)

End :

சாறுமலி தருபெருமைக் குமாரபுரி மேவுஞ்
சண்முகமா முனியருட் சீர்தழைக்கு மடாலயத்தி
லாறுமுகச் சிவனு மைந்துமுகச் சிவனுமொன்றென்
றறைகெனத்தூண் டருட்செயலை யாதவனுற்றேறி
நீறுடன்முற் றணிந்துலவு நெல்லைநகர்ப் புலவோ
னிகழ்த்திடுமிப் பதிகமொன்றே நித்தமும் போற்றிடுவர்
நீறுமுத னடுவறிதற் கரியபரா னந்தத்
திடைமூழ்கிப் பிறப்பிறப்பற் றென்றுமிருப் பாரே. (12)

முற்றும்.

இதுவுமது.

Beginning :

வெண்பா.

குவலயத்தோர் போற்றுங் குமார புரியிற்
சிவபெருமா னின்றுதிருச் சேவைப்—பவனிவந்த
காரணத்தைப் போற்றிக் களிகூரக் கன்னிபெற்ற
வாரணத்தின் பூங்கழல்கா வல்.

காவலராகி விண்ணுலகாள்வார் காருடல் சழியென்பின்
றூவடமாலே தோளிடைட்டுத் தொந்தோ மெனநிற்போ
ணுவல்நீழற் றீவிடைவைகு நரரெல்லாம் வாழப்
பாவலர் போற்றுங் குமாரபுரியிற் பவனி வந்தானே. (1)

End :

சால வணங்குநர்க் கருள்வீடு தரத்தகு சண்முகவேள்
பாலன் மேவிய குமார புரியிற் பவனி வந்தசிவன்
மேலருமைக் கவுமார ரனேகர் விரும்பு திருப்புகழோன்
சீலமுறைப்புகல் பாடல்கள் பத்திவை செப்புநர் சீரியரே. (11)

முற்றும்.

இதுவுமது.

Beginning :

வெண்பா.

கல்லுப் பெருமாட்குங் காட்டுப் பெருமாட்குஞ்
சொல்லுஞ் சிலேடைத் தொடைத்தமிழுக்—கல்லும்
பகலும் கடந்த பதத்தோர் பதப்பூந்
துகளன்பே நல்ல துணை

நாகத்தலையேறி நடனம் புரிவானு
நளிர்வானக முற்றூர் நலமே விழைவானு
வேகத்தகுவர்க்கோ செமனு மிளிர்வானும்
வெள்ளைத்திரை தள்ள மீதே மிளிர்வானும்

யாகத் தமிழாசை சிறிதுந் தவிரானும்
பறவைப் பரிமீதே பரிவுற் றிவர்வானும்
காகக் கொடியாள்வந் தணுகா தருள்வானுங்
கல்லுப் பெருமாளோ காட்டுப் பெருமாளோ. (1)

End :

உரிமைப் பரமொன்றே யெனநன் குணர்பண்பா
லுயர்சண் முகமுனிவாழ் வுறுசீர் கொள்குமார
புரியிற்றிரு மடமேவிய நாளே யிலங்கு
புள்ளிச் சிகியானும் பேராழியினானும்

வரிலிப்படி நெல்லைப் புலவன் பகர்பதிகம்
வம்பென்றென நம்பி வாழ்த்தத் துணிவார்கள்
காயிற் பொருமிகவோர் குலநீ ரெழுவென்று
கனிவாரியின் மூழ்கிக் கதிதோய் பவர்தாமே. (12

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், திருநெல்வேலி அப்பாசாமிப் புலவரால் பாடப்பட்டதாகும். இவருக்குத் திருப்புகழ்சாமி என்றும் பெயர். இதற்கு முன்னுள்ள சில நூல்களும், பின்னால் வருவனவற்றில் சிலவும் இவரே பாடியுள்ளார். இவர் தகப்பனார் நல்ல வித்துவத் தன்மை பெற்ற புலவராவர். திருநெல்வேலி குமாரபுரியில் மேவிய சண்முகசுவாமி மடத்தைப்பற்றியும் இறுதிப்பாட்டுகளில் குறிப்பிட்டுள்ளார். இவர் இடைக்காலப் புலவர் மரபினரைச் சார்ந்தவராவர். அச்சிடப்படவில்லை.

R. No. 2938.

கண்ணபிரான் பதிகம்.

KANNAPIRĀN PATIKAM.

Foll. 58—63. Extent, 35 granthas.

Begins on fol. 58 of the manuscript described under R. No. 2936.

Complete.—Not Printed.

By—Dandapāṇi

This work is in praise of Kannan, Lord Kṛṣṇa or Viṣṇu. This is also composed by Appāsvami Pulavar who is called Daṇḍapāṇi and Tiruppugalsvāmi. This is a complete work and describes the ten incarnations of Viṣṇu.

Beginning :

கவினுர் குமாரபுரிக் கண்மேவுங் கண்ணன்
செவியார்வ மாந்தமிழ்ப்பாச் செப்பப்—புவிபாரந்
தீர்க்குமடற் போர்க்களத்திற் றேவதத்தன் கேட்டசெஞ்சொ
லார்க்குமனத் தார்பதங்காப் பாம்.

வணின் வேட்கைமிக் குற்றவாறென்
துன்னின் வந்தினி தோதவு
நாணினாய்கடல் சூழ்வதாம்பெரு ஞாலமுண்டது பொய்கொலோ
வாணிகேள்வனைப் பெற்றுளாய்திரு வாழுமார்பினை
[மாமணிப்
பூணினுய்புகழ் சேர்குமார புரிக்கண் மேவிய கண்ணனே. (1)

End :

மணிதரியா வருமுய்வுறச் செயவந்த சண்முக மாமுனி
புனிதமார் புரத்திற் குமாரபுரிக்கண் மேவிய கண்ணனை
தொனிதருந் தமிழ்த் தண்டபாணிதுதித்த பாடல்கள் சொல்லுவார்
பணிதருந்துணர்க் கற்பகத்துறை பன்ன வர்க்குயர் பண்பரே. (11)

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், கண்ணபிரான்மேல் பாடப்பட்டதாகும். இதுவும், தண்டபாணி என்னும் திருப்புகழ்சாமி என்றும் கூறப்படும் அப்பாசாமிப் புலவரா லேயே பாடப்பட்டதாகும். திருமாலின் திருவவதாரக் கதைகளை வைத்துப் புனையப்பட்டிருக்கிறது. முற்றுமுளது.

R. No. 2939.

குமாரபுரி திருவருள் விநாயகர் பதிகம்.
KUMĀRAPURI TIRUVARUḶ VINĀYAKAR PATIKAM.

Foll. 64—68. Extent, 35 granthas.

Begins on fol. 64 of the manuscript described under R. No. 2936.

Complete—Not Printed.

By—Daṇḍapāṇi.

This is sung in praise of Gaṇapati or Vināyakar of Kumārapuri. The same author namely Daṇḍapāṇi has composed this poem.

Beginning :

வெண்பா.

கூவுகொடிச் சேவற் குமாரபுரி மடத்தின்
மேவுந் திருவருள்வி நாயகனே—பாவுரைக்கு
நாவலரு மாதவரு நன்தமிழ் முப்புரிந்து
பாவமுற்றுந் தீர்தரக்கண் பார்.

(பதிகம்.)

ஆனைவடி வாய்க்கனவி லடிக்கடிவந் தருள்செயுநீ
யேனைநன வூடொருக்கா லிலங்குவதற் கிசைவாயோ
மேனைமக்கட ரும்பாலா வினையொழிக்கு மேலவர்தஞ்
சேனைமலி குமாரபுரித் திருவருள்வி நாயகனே.

End :

சந்தமலி குமாரபுரிச் சண்முகமா முனிநாடுஞ்
சிந்தனையா லுருக்கொண்ட திருவருள் விநாயகனைப்
பைந்தகைய தமிழ்த்தண்ட பாணிநுவல் பாடலிவை
வந்தமலர் வாயினர்பான் மனக்குறைவு வாராதே. (11)

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் குமாரபுரித் திருவருள் விநாயகர் மீது பாடப்பட்ட பதிக மாகும். தண்டபாணி என்பவரால் பாடப்பட்டதேயாகும். முற்றும் உள்ளது.

R. No. 2940.

நடராஜர் வகுப்பு.

NAṬARĀJAR VAKUPPU.

Foll. 69—71. Extent, 25 granthas.

Begins on fol. 69 of the manuscript described under R. No. 2936.

Complete—Not Printed.

By—Appāsvāmi Nāvalar.

This work is on God Naṭarājar otherwise called Śiva. It is a complete and fine work. This is also sung by the same author. It described the various characteristics of God Śiva.

Beginning :

ஓம்

அளவில மையாத வுயிர் முழுமையு மநாதியினி
லருளுமுறை யாளுரிமை மலியுமணை வாளனே
வமரருட னீறிவிழு பொடியணியு மேன்மையினை
யறியுமடி யாருலிருள் பொழிதரு குணாளனே

* * * * * * * *

End :

பணிமொழிமினுர் மயலின் முழுகுறு மெனுடமிரு
பதமறிய மால்விடையில் வருகணை யீசனே
பழுதறு குமாரபுரி மடமதனின் மாதவர்கள்
பயமொழியு மாறுநட நவிலுநட ராஜனே

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், நடராசர் வகுப்பு என்னும் பெயர்த்து, முற்றுமுளது. இறைவனின் குணகுணங்களை விசேடித்துரைக்கின்றது. நன்றாகவுள்ளது. இதுவும் அப்பாசாமி நாவலராலேயே பாடப்பட்டதாகும்.

R. No 2941.

திருப்புகழ்.

TIRUPPUKAḺ.

Foll. 72—75. Extent, 25 granthas.

Begins on fol. 72 of the manuscript described under R. No. 2936.

Complete.—Not Printed.

This work called, Tiruppukaḻ, consist of a four poems, out of which two are in Śandam metre while the other two, in some other metre. This is a complete and fine work.

Beginning :

இருக்கு நூன்முதலி லொலிக்கு மோர்பொறி—யதனுலே
எவர்க்கு ஞான மருளினைச் சதா நினை—தருநாயேன்
முருக்கி நாண்மலரை நிகர்த்த வாயிதழ்—மடமாதர்
முலைக்கண் மால்விளையு மிரட்டில் வாடலு—முறைதாளே
வெருக்கி ளேடுமலர் கடுக்கை சூடினர்—தருபாலா
விமைப்பி லாளயா மறத்தி தாடொழு—மிளையோனே
யருக்கர் நாணமுற வெறிக்கும் வேல்புனை—புயவேளே
யருட்கு மாரபுரி மடத்தின் மேவிய பெருமாளே.

*　　*　　*　　*　　*

*　　*　　*　　*　　*

End :

தனிப்பாடல்.

சீரார் தண்சோலைத் திருத்துறையூர் வாழ்சிவன்றான்
வாரார் மலைப்பார் வதியொடுவந்—தேரார்
குமாரபுரி மடத்திற் கூப்பிட் டன்றுலே
மாதுகுலம் வாழ மினி.

(கு-பு.)—

இந்நூல், திருப்புகழ் என்னும் பெயர்த்து. இரண்டு திருப்புகழ்ச் சந்தப் பாடல்களும் இரண்டு தனிப்பாடல்களும் உள்ளன. முற்றும் உள்ளது. நன்றாகவுளது.

R. No. 2942.

சிவகாமியம்மை தோத்திரம்.

ŚIVAKĀMIYAMMAI TŌTTIRAM.

Foll. 76—80. Extent, 25 granthas.

Begins on fol. 76 of the manuscript described under D. No. 2936.

Complete.—Not printed.

This work is in praise of Śivakāmi Ammai of Kumārapuri. This is a complete and fine work. It is full of rich ideas and fine wordings and gives pleasure to the readers.

Beginning:

நேரிசை வெண்பா.

குவலயத்தின் மேலாங் குமார புரியிற்
சிவகாம சுந்தரியைச் சிந்தித்—தவலமறு
பத்தியினுற் போற்றப் பரிநதிவண்முன் னின்றவிரு
புத்திரர்தந் தான்களுங் காப்பு
இந்த நிலத்திலே னிச்சையெலா முடிவெய்த வியற்றிலேயே
லர்தரர் தாமுமெய்கா முதன்முத்தி யளிப்பது மெய்படுமோ
கொந்தளகம் பெறுகோகில மென்று குலாவிய கோமளமே
கந்தன விரும்பு குமாரபுரிச் சிவகாம சவுந்தரியே. (1)

End:

மண்டு புகழ்க்கடல் சூழ்தரு சண்முக மாமுனிவண் றினமுங்
கண்டு மகிழ்நத குமாரபுரிச் சிவகாம சவுந்தரியைத்
தொண்டு செய்வார் கமலக் கழலிற்றுகள் சூடிய நெல்லை
[யினுன்
விண்டுளை பாடல் விரும்பி வழுத்துனர் மெய்த்தவ மெய்துவரே. (11)

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், குமாரபுரி சவுந்தரியம்மையைத் தோத்தரிக்கும் தன்மையில் பாடிய பதிகமாகும், முற்றுமுளது. நன்றாகவுளது. கருத்தழகும் பொருட்செறிவும் சொல்லழகும் கொண்டு இனிமை பயப்பதாய் உள்ளது.

R. No. 2943.

சண்முகசற்குரு பதிகம்.

ṢAṆMUKA SAṞKURU PATIKAM.

Foll, 81—86. Extent, 25 granthas.

Begins on fol. 81 of the manuscript described under R. No. 2936.

Complete.

This work called " Ṣaṇmuka Sarguru Patikam " is composed in praise of God Muruka of Kumārapuri Mutt. It is sung by Tiruppukalōn otherwise known as Tiruppukal Svāmikal. The style is simple and fine.

Beginning:

நேரிசை வெண்பா.

விண்முகத்தோர் போற்ற விளங்குங் குமாரபுரிச்
சண்முகசற் குருவின் றுள்கநதிப்—பண்முகத்தாற்
பாடும் பதிகப் பசுந்தமிழ்க்கோர் காப்புரைக்கி
லாடுந் திருவருளே யாம்.

(கொச்சகக் கலிப்பா.)

என் மனதது ளொருவாறு மிருவிழிமுன் றொருவாறு
நின்மகிமை யொளிரும் வித்தை நீபுரிதன் முறைதானே
கன்மபர வாதமுள்ளார் காண்பரிய கருணையப்பா
தன்மமலி குமாரபுரிச் சண்முகசற் குருபரனே. (1)

End:

கொண்டல்வளங் குன்றாத குமாரபுரித் திருமடத்திற்
றண்டமிழோர் பலர்போற் றுஞ் சண் முகசற் குருபரனைத்
தெண்டனிட்டுச் சத்தியமாத் திருப்புகழோன் செப்புமிவை
விண்டறிய வல்லார்க்கு வினைப்பிணிவே றறுமன்றே. (12)

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், சண்முக சற்குரு பதிகம் என்னும் பெயர்த்து, குமாரபுரி மடத்திலமர்ந்திருந்த சந்நிதானத்தை நோக்கிப்பாடியது. முற்றுமுளது. திருப்புகழோன் என வழங்கும் திருப்புகழ் சுவாமிகளால் பாடப் பெற்றது போலும். நடை நன்றாகவுளது.

R. No, 2944.

நடராசன் திருப்புகழ்.

NAṬARĀJAN TIRUPPUKAḺ.

Foll. 86—87. Extent, 10 granthas.

Begins on fol. 86 of the manuscript described under R. No. 2936.

Complete.

This contains two Poems in praise of Naṭarājar or Lord Śiva.

Beginning:

திருப்புகழ்.

சைவத்தை யேசுமவர் குலத்தை வேரொடு களையேனோ
தள்ளப்படாத பரசுகத்தி னூடொறு முமிழேனோ
பொய்வைத்த சீல நெறி படைத்த நால்வரி லொளிரேனோ
வெள்ளிகிநேர் விடையிலெனக்கு நேர்நிதம் வருவாயே
தொய்வற்ற பூண்முலை கொள் ஒருத்தி பாலன்மிக மகிழ்வோனே
தொல்லைக் கால மலமரற் கவாவுறு குரவோனே
தெய்வச் சபாபதி யென்விருத்த வேதிய வடிவாகும்
செல்வக் குமாரபுரி மடத்தின் மேவிய பெருமானே,

(கு-பு.)—

இந் நூல், திருப்புகழ் என்னும் பெயர்த்தாய், நடராசர்மேல் பாடிய இரண்டு பாடல்களைக் கொண்டது.

R. No. 2945.

முருகக் கடவுள் பதிகம்.
MURUKAK KAḌAVUḶ PATIKAM.

Foll. 88—93. Extent, 25 granthas.

Begins on fol. 88 of the manuscript described under R. No. 2936.

Complete.

This work on Lord Muruka is a complete and fine work. From the line "முழு நீற்றுப் பரதேசி செப்பும் பாடல்" It is inferred that Muḻu Nīṟṟup Paradēśi is the author of this poem. The style is simple and flexible.

Beginning :

ஓம்

வெண்பா.

கொற்றக் குமாரபுரிக் கோமான் கவிகூர
நற்றமிழா லோர்பதிக நான்பாட—கற்றவர்கள்
போ லுலகிற் றேற்றுணரும் போற்றிசைக்கும் பொற்பமைந்த
வே லுமயி லுந்துணையாமே.

பதிகம்.

திசையாறு முகமாகிச் சமயங்க ளீராறுந் திருத்தோளாகி
வசைதீர்ந்த சமரசச் சீர்ப்பதங் காட்டு நினைகுருளை மறவேன்
[கண்டாய்
தசையார்வுற் றில்வளர்க்குங் கொடியவர்தங் குலமழிக்குந்
[தனிவேலானை
கசையேந்தித் தகர்நடத்து முருகோனை
[குமாரபுரிக் கடவுளானே. (1)

End :

கார் மேவும் பொழிலிடத்து மயிலாடுங் குமாரபுரிக்
[கடவுளானைச்
சீர்மேவு நெல்வேலி முழுநீற்றுப் பரதேசி
[செப்பும் பாட
ஞர்மேவு நெஞ்சமொடு துதிப்பார்க ளனைவருக்கும்
[ஞானநல்கி
வார்மேரு நிகர்முலையார் வயிற்றிலுரு துவக்குநலம்
[வகுக்கு மன்றே. (12)

(கு-பு.)—

இந் நூல், முருகக் கடவுளைப் பற்றிப் பாடிய பதிகமாகும். முற்று முள்ளது. பாடியவர் "முழுநீற்றுப் ப தேசி செப்பும் பாடல்" என்றதால், அவரால் ஆக்கப்பட்டிருக்குமென ஊகிக்க இடமுண்டு. நடை நன்றாக வுள்ளது.

R. No. 2946.

மும்மணிக் கோவை.

MUMMAṆI-K-KŌVAI.

Foll. 94—114. Extent, 100 granthas.

Begins in fol. 94 of the manuscript described under R. No. 2936.

Complete.

This work is one of the 96 Prabandhās, called Kōvai, composed in praise of Murukar worshipped at Kumārapuri. The style of this poem "Mummaṇik Kōvai" is fine and the work is complete. "Kumārapurik Kōn" is the author of this poem.

Beginning :

வெண்பா.

செம்மணிக் குன்றன்ன குகன்சேருங் குமாரபுரி
மும்மணிக் கோவை மொழிவதற்குக்—கைம்மணியொப்
பானமுலைப பார்ப்பதியா மங்கைவடி வேலுமன்ன
கானமயில் வாகனமுங் காப்பு.

அகவல்.

கார்முகில் பொதிந்து கரியமா லென்னச்
சீர்மிகத் தருபல இகரி தோறுங்
கொடிநடம் பயின்று குமார புரியி
னடியவர் வாழ்வா னவைமுழு தொல்க
வந்தினி தமர்ந்தென் மனங்கவர்ந் தொருமை
(1) தந்தியர் பனுவற் றருகென விரந்து
மிசைவுரு மாற்ற மியம்பச் செய்து

* * * * *
* * * * *
* * * * *

யொன்றும் வந்தென் னிடத்தொன்று
தின்றுதொட் டினனே யியற்றுதி யினிதே. (1)

வெண்பா.

இனிய கடலைபய றெள்ளுண்டை பற்பல
கனையனைய கொள்ளுங் களிறு—நனிவிரும்புங்
கோலத் துணைவா குமாரபுரிக் கோமானே
காலத்துக் கஞ்சமாற கா. (2)

End :

கட்டளைக் கலித்துறை.

பெறுவாருக் குண்மைப் பொருளோது ஞானப் பிரான்பிறங்கு
மறுமா முகத்தெந்தை யைங்கரத் தான்றுணை யான்றபுகழ்க்
குறுமா முனிககருள் கோமானென் னன்பர்கள் கொடியவகைக்
கறுவாண்மை யோங்குங் குமாரபுரி யன்ன காரணரே. (30)

வெண்பா.

கொய்ம்மலர்த் தண்சோலைக் குமாரபுரிக் கோன்புனையு
மும்மணிக் கோவை மொழிவார்க்கு—மைம்மருவு
வானகத்துத் தேவர் மருவாப் பெருவாழ்வு
மீனமற்ற வீடுமெய்து மே.

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், குமாரபுரி முருகன் மீது பாடப்பட்ட "மும்மணிக் கோவை" என்னும் பெயர்த்தது. முற்றும் உளது. நடை நன்றாகவுளது. "குமாரபுரிக் கோன்" என்று சிறப்புப்பெயர் வழங்கப் பெற்றோரால் பாடப்பட்டிருக்கிறது. இப்பெயர் தண்டபாணி சுவாமிகளையே குறிப்பதாகும்.

R. No. 2947.

குமாரபுரிச் சண்முகத் திருப்புகழ்.
KUMĀRAPURI ṢAṆMUKAT TIRUPPUKAḺ.

Foll. 115—119. Extent, 25 granthas.

Begins on fol. 115 of the manuscript described under R. No. 2936.

Complete.

Similar work as that described under R. No. 2941.

Beginning :

வெண்பா.

விண்முகி ற் றண்மாரி மிகுக்குங் குமாரபுரி
சண்முகன்மேற் சந்தத் தமிழ்பாட—வண்மைபலி
தோகைப் பரியுஞ் சுடர்வேலுங் குக்குடப்புண்
வாகைப்ப தாகையுங்கா வல்.

தத்த தானதன தனதத்த தான தனதன
தத்த தான தனதன—தனதான

சுத்தி வேலையனுதின மெச்சி வாழு மவரொடு
தக்க வாறு பழகிடு—முயர்வாளே

சத்த சாகரமுநிலை கெட்டு மோத முகிலெதிர்
சற்ப மீது நடமிடு—மயின் மீதே
யத்தி மாது மடமைமிகும் வெற்றி வேடர் சிறுமியு
மச்ச மாறி யருகுற—நினைவார்தா

* * * * * *

* * * * * *

* * * * * *

நத்தி டாத டலவன்முன் முட்டை யாகி யருள்செயு
நட்பை நாடி யுருகிட—விடுவோனே
நக்கண் மாயன் மலரவ னுைத்த தேவர் பலர்வரு
நற்குமார புரிவளர்—பெருமானே. 1

End:

* * * * * *

* * * * * *

தந்த தத்த தான தனத் திந்திமித் தெய்தாவெனநித்
தஞ்ச பைக்கு ளாடுமவர்க்—கினியோனே
சத்தி ரதிற்கு நாண்மிகத் துங்கமுத்து மீனுமணிச்
சங்கு டைக்கு மாரபுரிப்—பெருமானே. (3)

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், முருகக்கடவுள் மீது பாடப்பட்டத் திருப்புகழாகும்: மூன்று பாடல்களையுடை யது. இவை சந்தப்பாடல்களே. அருணகிரிநாதர் நடையினைப் பின்பற்றிப் பாடப்பட்டுள்ளது.

R. Nos. 2948 to 2951 (One bundle).

Palm-leaf. 7¼ × ¾ inches. **Foll.** 1—91. **Lines** 4, 6 **on a page. Tamil. Injured. Old. Extent,** 875 Granthas.

Presented in 1951-52 by Sri K. Shunmugam, Kumarakkuppam, Valavanur Post, South Arcot District.

R. No. 2948.

சிவ வாக்கியம்.

ŚIVA VĀKKIYAM.

Foll. 1—61. **Extent,** 100 granthas.

Incomplete.

This work deals with the nature of body, soul etc., and tells how they are valued by the people, and how they should be directed towards gaining the grace of God. The author is a Siddha capable of doing all Siddhis. The work is incomplete, having only 143 songs. The author desires that all the people in the world should get rid of the Darkness of Ignorance and attain Satcidānanda. The work is not without mistakes.

Beginning :

திருச்சிற்றம்பலம்

கருபபிறங்கு மின்னலாம்
காய நின்ற தெங்கனே
கருப்பிறங்கு மின்னலாம்
உயிர்ப்புநின்ற தெங்கனே
மருள் பொதிந்த சிந்தையில்
மயக்கம்நின்ற தெங்கனே
குறிப்பறிந்து கொண்டல்லோ
இருக்க னென்று கூறுவீர்!

கருப்பிறக்கு மின்னலாம்
காயம்நின்ற தப்புலே
உருப்பிறக்கு மின்னலாம்
உயிர்ப்புநின்ற வானிலே
மருள்பொதிந்த சிந்தையில்
மயக்கம்நின்ற நெஞ்சிலே
குறிப்பறிந்து கொள்ளுங் கோள்
இருக்கனென்ற மூடரே. (1)

தாதருன தாதரும்
தலத்திலுள்ள சைவரும்
வீதிபோற யீசனே
வெறிந்துகல் லெறிந்ததும்
பூதலில் புலத்திமக்கள
கூடிச்செய்த காரியம்
பாரிதங்க ளானதே
பலிச்சதேசி வாயமே. ( )

End :

புண்ட ரீக மத்திய லுற்றெழுந்த சோதியை
மன்றலங்க மூன்றிறேடு மணனிநின்ற நாதனே
அண்ட ரண்ட மூடருற் றறிந்துநின்ற ஞானிகள்
கண்ட தேவர் பாடுசென்று கையெடுப்ப தில்லையே. (143)

(முற்றுப் பெறவில்லை)

(கு-பு.)—

இந் நூல், சிவ வாக்கியம் என்னும் பெயர்த்து. இதனுள், உடல், உயிர் என்ற இவைகளின் இயல்புகளையும், அவை உலகத்தின்கண் மதிக்கப்படும் தன்மையினையும், அவை அங்ஙனம் மதிக்கப்படாது, இறைவனின்னருளை யடைய, வழி வகைகளையும் ஆக எல்லாத் தத்துவங்களும் விளக்கமாக எல்லாம் வல்ல சித்தர் ஒருவரால் பாடப்பட்டிருக்கின்றன. முற்றுப் பெறவில்லை. நூற்று நாற்பத்து மூன்று பாடல்களே உள்ளன. எத்துணைத் என்னும் அளவு தெரியக் கூடவில்லை. இதை இயற்றியவர், அனைத்

வகைகளிலும் சித்தி பெற்றவராய், உலக மக்கள் அந்தகார இருளி னின்றும் நீங்கிப் பேரின்ப நிலையை யடைய வேண்டும் என்னும் பரந்த நோக்கமுள்ளவராய் இருத்தல் வேண்டும் என்பது மட்டும் இந்நூலால் துணியக் கிடக்கின்றது. பிழைகளும் மலிந்துள்ளன.

R. No. 2949.

பல்வகை நூல்.

PALVAKAI NŪL.

Foll. 62—76. Extent, 45 granthas.

Begins on fol. 62 of the manuscript described under R. No. 2948.

Incomplete.

This work contains some new poems and some poems which have been printed already. This work talks of Tattvamārga, but the poems are full of slangs, colloqualisms and mistakes. The names of the authors are not known.

Beginning :

கண்ணாடி மிகத்தளந்து விழுந்துருளு முன்னே
கனகசபை திருநடனங் காண வேணும்
எண்ணாத விரலை எண்ணியிருந் தங்கேது
எட்டெழுத்தும் ஓரெழுத்தா யறிய வேணும்
நன்றாக மூலத்தீ மூட்டி மூட்டி
நடுக்கடந்து பதிதோறும் நயந்து பாரீர்
அண்ணாடம் செய்தவினை பிறவித் துன்பம்
அறுக்கலாம் ஞானமென்ற அரத்தி னாலே (1)

மண்ணுள் ஆடுவோம் வளர்முது குன்றினிலிருப்போம்
என்று கண்டவர் யாவரா னைந்தோ
அன்றவன் கையுள் அகப்படு முத்திகளனைத்தும்
நன்று நன்றிது சத்தியம் சத்தியமென நவின்றார். (2)

End :

மண்ணினிலே பிறந்த கல்லை வகைவகை தெரிந்தெடுத்து
என்றலால் இலிங்கமாக இயலுடன் கோவில் கட்டிப்
பண்ணியே வைத்துப் பின்னும் பலபல பூசை செய்தால்
விண்ணிலே சேர்வ தில்லை விரவினார் நரகில் வீழ்வார்
அன்றலார் அருளு மில்லை அற்பராய் போவர் தாமே.

(முற்றுப் பெறவில்லை.)

(கு-பு.)—

இந் நூல், பல்வகை நூல் என்னும் பெயர்த்து. இதில் சில பாடல்கள் புதியனவாக, தத்துவமார்க்கத்தைப் போதிப்பனவாகவும், சில அச்சில் வந்தனவாகவும் உள்ளன. கொச்சைச் சொற்களாலும் சில பாடல்கள் ஆக்கப் பட்டுள்ளன. ஆசிரியர் பெயர்கள் அறியக் கூடவில்லை.

R. No. 2950.

திருமந்திரம்.

TIRUMANDIRAM.

Foll. 77—84. Extent, 20 granthas.

Begins on fol. 77 of the manuscript described under R. No. 2948.

Incomplete.—Printed.

Same work as that described under D. Nos. 1184 to 1190.

(கு-பு.)—

இந்நூல், திருமந்திரம் என்னும் பெயரத்து. இதில் முற்றுமில்லை. இதில், திருமந்திரத்தில் உள்ள எல்லாத் தந்திரங்களினின்றும் தொகுத்து எழுதப்பட்ட, 27 செய்யுள்கள் உள்ளன. பிழையுள.

R. No. 2951.

எண் சுவடி.

EṆŚUVAḌI.

Foll. 86 to 91. Extent, 10 granthas.

Begins on fol. 86 of the manuscript described under R. No. 2948.

Incomplete.

(கு-பு.)—

இந்நூல், எண்சுவடி என்று பெயர் அமைந்திருப்பினும், இதில் முழுதும் அமைந்திராமல், ஓரேட்டில் மட்டும், " வெள்ளம்; சங்கம்; பற்பம்;" நெல்லெடை; பணவெடை; முதலிய அளவு முறைகள் மட்டும் எழுதப்பட்டு, மற்றவைகளில் நட்சத்திரம், சக்கரவர்த்திகள் இன்னவர் என்ற இவை எழுதப்பட்டுள்ளன. சிதிலமாயது.

R. No. 2952.

திருவூடல்.

TIRUVŪḌAL.

Palm leaf, 9 × 1¼ inches. Foll. 1—8. Lines 9 on a page. Tamil. injured. Old. Extent, 60 granthas.

Complete.

Presented in 1951–52, by Sri K. Shunmugam, Kumarakkuppam, Valavanur, South Arcot District.

This complete work named otherwise Tiruvādirai-t-tiruvūḍal, speaks of the Ūḍal (the temporary suspicion of true love by the new wife) of Pārvati with Lord Śiva, taking evidences for the cause of her Ūḍal from the Lord's sixty-four līlās or Tiruviḷaiyāḍals. Then she is convinced and rejoins Him. This work is full of mistakes both in Orthography and syntax.

Beginning :

* * *

* * *

வாருமையா சுவாமி! தேவரீர் தேவாதி
தேவன் தேவதை போற்றும் மனதேவ
தாசபருவ பூபன் பக்தவச்லன் பார்பதி
மனோகரன் *

* *

End :

அந்தணர் தொழுதில்
ஆனிலந் தழைக்க மாரி
சந்ததம் பொழிக சைவந்
தலையெடுத் தடுக வேந்தர்
இந்திர திருவி னோங்க
எம்பிரான் அன்பர் வாழ்க
சிந்துவேண் டிரைநீர் ஞாலந்
திருமகள் வாழ்க மன்னோ!

திருச்சிற்றம்பலம்.

(முற்றும்.)

(கு-பு.) —

இந்நூல், "திருவாதிரை திருவூடல்" என்னும் பெயர்த்து. எம்பெருமான் மீது உமையம்மை ஊடியதாகக் கூறப்பட்டுள்ளது. எம்பெருமானின் திருவிளையாடல்களில் ஒன்றி ண்டு காரணங்களுக்காக உமைப்பிராட்டி ஊடல் செய்து பின்பு கூடல் செய்தாள் என்னும் கருத்தினை எடுத்துக் கூறுகிறது. முற்றும் உள்ளது. திருவாதிரை நாளில், இதனைக் காலட்சேபமாக நடத்துவார்கள். எழுத்துப் பிழைகளும், சொற்பிழைகளும் மலிந்துள. முதலில் இரண்டு தேவாரப்பாடல்கள் உள்ளன. இடையிடையே சில நாடகக் கவிகளும் வருகின்றன.

R. Nos, 2953 and 2954 (one bundle).

Palm leaf, 4½ × 1½ inches. Foll. 1—14. Lines 5, 6 on a page. Tamil. Injured. Old. Extent, 29 granthas.

Presented in 1951–52 by Sri K. Shunmugam, Kumarakkuppam, Valavanur Post, South Arcot district.

R. No. 2953.

சிவபூசாவிதி.

SIVAPŪJĀVIDHI.

1—6. Extent, 10 granthas.

Incomplete—Printed.

Same work as that described under D. No. 1339.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு 1339-ஆம் எண்ணில் வருணிக்கப் பட்டிருக்கிறது. காண்க.

R. No. 2954.

அனுட்டானவிதி.

ANUṢṬĀNAVIDHI.

Foll. 7—14, Extent, 10 granthas.

Begins on fol. 7 of the manuscript described under R. No. 2753.

Incomplete.—Printed.

Same work as that described under D. No. 1340.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு 1340-ஆம் எண்ணில் வருணிக்கப்பட் டிருக்கிறது. காண்க.

R. Nos. 2955 to 2958 (one bundle)

Palm leaf, 13½ × 1 inches. Foll. 1—24. Lines 5 on a page. Tamil, injured. Old. Extent, 150 granthas.

Presented in 1951–52 from Sri K. Shanmugam, Kumarakkuppam, Vaḷavanūr, South Arcot district.

R. No. 2955.

வைத்தியம்.

VAITTIYAM.

Foll. 1—5. Extent, 35 granthas.

Incomplete.

Same work as that described under R. No. 508.

(கு-பு.)—

இந்நூல், வைத்தியம் என்னும் பெயர்த்து. குழந்தைகளின் தோஷத் துக்கான மருந்துகளைப்பற்றிக் கூறப்பட்டுளது. சுருக்கமாக உளது. எழுத்துப்பிழையுளது. இதுபோல், குழந்தைகளுக்கான மருந்து முறைகள் அடங்கிய ஓலைச் சுவடிகள் இந்நூல் நிலையத்தில் நிறைய உள்ளன.

R. No. 2956.

தென்பாலை கனகம்மை பேரில் கலித்துறை.
TENPĀLAI KANAKAMMAI PĒRIL KALITTUṞAI.

Foll. 8 (a) to 11 Extent, 25 granthas.

Begins on fol. 8 (a) of the manuscript described under R. No. 2955.

Incomplete.

This work in Kalitturai metre is in the name of Kanakammāḷ but contains only seven songs. The rest are either folk songs or on Ānandaraṅga Bhūpati. It is full of spelling and grammatical mistakes. The author is not known. It is also not known if the work is complete.

Beginning :

கலித்துறை.

குளிர்காற்று வீச கோபுர வாசல் கோடைவரையில்
வளமாக போர்க்கத் துணியுமில் லாமல் வருத்தமுடனத்
தலைகாலில் பூட்டிய மெய்வடிநொந்து தவிக்குதம்மா எங்கள்
குளிர்தீர்க்க ஓடி வருவாய்தென் பாலைவாழும் கனகம்மையே. (1)

எச்சலுமத் தீட்டும் முடியாதிங்கே வென்று லிருக்க
வுச்சிதமல்ல எந்தாயே அபயம் பயமுனக்
கச்சுதன் சோதரி திருநாகேசுர பங்கில் அமர்ந்தவளே
கச்சணி வாளமர் தென்பாலை வாழுங் கன்கம்மையே. (2)

End :

ஓரெழுத் தோர்மொழி யுணரக் கூறிய
சீரெழுத் தாளரை சிதையச் செப்பினோன்
அரூரச் சுணங்க ஞயிதிரிந்து மொருகம்
வாரிடைக் கிரிமியாய் மண்ணில் மாய்வரே. (21)

(முற்றுப் பெறவில்லை).

(கு-பு.)—

இந்நூல், தென்பாலை கனகம்மை பேரில் கலித்துறை என்னும் பெயர்த்தாய் விளங்கினும், இதில் அம்மையைப்பற்றி எழு பாடல்களே உள்ளன. மற்றும், எழுக்கு மேலுள்ளவைகள், ஆனந்தரங்க பூபதியைப் பற்றியும், நாடோடிப் பாடல்களாகவும், தனிப்பாடல்கள் போலவும் இருபத்தொரு எண்வரையிலும் காணப்படுகின்றன. எழுத்துப் பிழைகள், இலக்கணப் பிழைகள் நிறைந்தன. பாடியவர் பெயர் தெரியவில்லை. முற்றுப்பெற்றதாகவும் அறியக்கூடவில்லை.

R. No. 2957.

சுப்பிரமணியர் தோத்திரம்.
SUBRAMAṆIYAR TŌTTIRAM.

Foll. —17, Extent, 20 granthas.

Begins on fol. 12 of the manuscript described under R. No. 2955.

Complete.

This work is complete with 27 stanzas. The name of the author is not known. There are mistakes in this work.

Beginning :

சிந்துவித் திசைக ளெல்லாஞ் செப்புமீ காமன் போலும்
அந்தகா தனக்கு நல்லோர் நெறியது யுரைக்கை போலும்
வந்துமுன் நடந்தென் நாவில் வண்டமிழ் திருத்த வேணும்
கந்தனே யுனைத்து திப்பேன் கதைக்கொரு விருத்தந் தானே. (1)

ஏறுமயி லும்பன் னிரண்டுடைய தோளும்
சீறுமதி சூரனுடல் சிந்தியிடு வேலும்
மாறுருவ வள்ளியை மணர்ந்த வடிவமும்
ஆறுமுகமும் பதமும் அன்பில் மறவேனே. (2)

End :

வெயில்மஞ்சள் தோணு மிவ்வுடல் மெய்யோ வணவைய்யோ
தெயில்மேல் துயர்களை வாரெவர் சொலில்நீ யலதிலையே
யியல்வேழ் கடல்கிரி மீத்துக ளெழுவே சுரர்தொழுவே
மயில்மேல் வருகுக னேசிவன் மகனே யறுமுகனே. (27)

(முற்றும்).

(கு-பு.)—

இந்நூல். சுப்பிரமணியர் தோத்திரம் என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது. 27 பாட்டுக்கள் கொண்டது. பாடியவர் பெயர் தெரியவில்லை. பிழைகள் உள்ளன. 17 முதல 18 வரையிலான ஏடுகள் விநாயகர் தோத்திரமாக உள்ளன.

R. No. 2958.

ஸ்ரீ ராமர் அகவல்.

ŚRĪ RĀMAR AKAVAL.

Foll. 19—23. Extent, 35 granthas.

Begins on fol. 19 of the manuscript described under R. No. 2955.

Complete.

This work of an unknown author helps to worship Śrī Rāmā by doing Japa over His names. It is not without mistakes. There is a separate verse at the end.

Beginning:

ஸ்ரீ ராம ராமா திரண்ராம ராமா
செயராம ராமா சிவன்ராம ராமா
அரிராம ராமா தனன்ராம ராமா
அரன்ராம ராமா கயன்ராம ராமா
பரன்ராம ராமா அகில்புவன லோகா
* * * * * *
* * * * *

End:

ஓதும் கிருபைடாளனே என்னும் ஸ்ரீஅரி நமோ
நாராயணு ஸ்ரீமதே
ராமா நீச ஐயா
நாமராமநாமதாரகம்
அகவல் சம் பூரணம்.
(முற்றும்).

(கு-பு.)—

இந்நூல், ஸ்ரீராம நாம தாரக அகவல் என்னும் பெயர்த்து. நாமங்களை உச்சரித்து ஸ்ரீராமனை வழிபட உதவுகிற ஓர் சிறிய நூலாகும். நன்ருக வுளது. ஆசிரியர் தெரியவில்லை. பிழைகள் உள. இறுதியில் ஓர் தனிப் பாடல் எழுதப்பட்டுள்ளது.

R. Nos. 2959 to 2965 (one bundle).

Palm leaf. 16½ × 1 inches. Foll. 1—34. Lines, 5, 6 on a page. Tamil. Old Extent, 150 granthas.

Presented in 1951–52, by K. Shanmugam, Vaḷavanūr, South Arcot district.

R. No. 2959.

திருவையாற்று அம்மன் பதிகம்.

TIRUVAIYĀṞṞU AMMAN PATIKAM.

Foll. 1—6. Extent, 40 granthas.

Completed.

This work contains only eleven verses, the last one having only three lines. The author's name, life, etc., are not known.

Beginning:

விருத்தம்

கொத்து முத்துக் குச்சல்லாயு மொருகொண்டையுங்
கொண்டைச் சுருங்கும் ரத்தினக்
கொப்பிட்ட காதுமயி லொப்பிட்டப் பாவையுங்
குயில்வார்த்தை கண்டு இன்னே

மூத்தமிட்டுக் கொண்ட கனிவாயு
முல்லையிள மூரலும் முகச்சேர்வையும்
மூக்குத்தி முத்துமாலைக் கிடைமுளைத்
தெழுகுரும்பை முலையும்
பத்து மாத்துத் தங்கவளை யிட்டதையுமொரு
பச்சைப் பசுங்கிள்ளையும்
பட்டாடை யொருபிரத்தன் யுத்தரீகமும்
பாடகக் காற்சிலம்பும்
அத்தனையு மெனதுகண் தெரிசிக்க வரவேணும்
ஐயாற்றில் வீற்றிருக்கும்
அரிவையர் துரைப்பெண் மலையரைய னருமைப்பெண்
எனுமழகரம் வளர்த்த உமையே. (1)

End :

மேகங் கறுத்தமென் கூந்தலிற் பைங்குவளை
எண்ணாது சிந்தினது
வெண்பிறைக் கீத்திலிடு மரகதச் சுட்டியொலி
மெய்யெங்கு மாய்விட்டதோ
பாகங் கறுத்ததொரு பாகஞ் சிவந்ததென்பன்
பளப்பாகு மென்றோ
பச்சைமயில் சாயலுக் குவமைக்கி லெண்ணாது
பவளவுடல் பச்சென்றதோ
தேகங் கருத்தவன் றங்கையென வந்ததோ
திருநுதல் கத்தூரி யின்றில்
அத்தை யிட்டகை மெய்யெங்குந் தொட்டதோ
திருவடிவில் ஒருவடிவமோ
ஆகங் கருத்தங்கை யெந்தவித மம்மாசொல்
ஐய்யாற்றில் வீற்றிருக்கும்
அரிவையர் துரைப்பெண் மலையரைய னருமைப்பெண்
எனுமழகரம் வளர்த்த உமையே. (10)

(கு-பு.)

இந்நூல், திருவையாற்று அம்மன் பேரில் விருத்தம் என்னும் பெயர்த்து. பதினொரு பாடல்களால் ஆகியது. ஆனல், பதினோராம் பாடலில் மூன்றடிகளே உள. ஆசிரியர், பெயர் முதலியன அறியக்கூடவில்லை. பிழை உளது.

R. No. 2960.

சிவகாமி அம்மை தோத்திரம்.

ŚIVAKĀMIYAMMAI TŌTTIRAM.

Foll. 7—11 Extent, 60 granthas.

Begins on fol. 7 of the manuscript described under R. No. 2959.

Complete.

This work on Tillai-Śivakāmiyammai is complete with some spelling mistakes. The author is not known.

Beginning :

முருக்கும் பனிச் செங்கனிவாயு
முருவெண் நகையும் திருத்தோடும்
முத்துங் கருணைத் துணைவிழியு முகபங்கயமும்
* * * * * *
* * * * * *
புலியூர் சிவகாமவல்லி
தில்லைவனத் தாயே (1)

End :

* * * * * *
* * * * * *
வரிசைப் படியேநின் மலர்ப்பாதம்
மறவா தடியார் மனத்திருந்து
வண்மை பொருந்தி அனுதினமும்
வாழ்வித் தருளும் மலைமருந்தே
தரிசேர்ப் பணையில் அமர்ந்த கும்பத்
தனத்தாய் தில்லை வனத்தாயே
தழைக்கும் புலியூர் சிவகாமித் தாயே. (10.

(கு-பு.)—

இந்நூல், தில்லை-சிவகாமியம்மை பேரில் தோத்திரமாகும். முற்று முள்ளது. பிழையுளது. ஆசிரியர் பெயர் முதலியன அறியக்கூடவில்லை.

R. No. 2961.

மயில் விருத்தம்.
MAIYIL VIRUTTAM.

Foll. 12—16. Extent, 24 granthas.

Begins on fol. 12 of the manuscript described under R. 2959.

Same work as that described under D. No. 1666.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 1666-ஆம், எண்ணில் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதனைக் காண்க.

R. No. 2962.

சிவகாமி தோத்திரம்.
ŚIVAKĀMI TŌTTIRAM.

Foll. 17—21. Extent, 60 granthas.

Begins on fol. 17 of the manuscript described under D. No. 2959.

Complete

Same work as that described under R. No. 2960.

(கு-பு.)—

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு 2960–ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டுள்ளது. அதன் குறிப்புக் காண்க. இதில் முற்றுமுள்ளது.

R. No. 2963.

ஆனந்தவல்லித் தாயார் பதிகம்.

ĀNANDAVALLIT TĀYĀR PATIKAM.

Foll. 22—24. Extent, 40 granthas.

Begins on fol. 22 of the manuscript described under R. No. 2959.

Complete

This work in praise of Tanjore goddess Ānandavallittāyār is complete. The letters in the manuscript are not legible. The author is not known.

Beginning :

சமையுங் கோபுரந் தாங்கிய பாவை பொற்றூரஞ்
சுத்தந் தனையரைத் தாங்குவெற்
கிமையு நிண்ணயங் காணேன் வகுத்த்நின்
னிந்திர சாலமெவர்க்குந் தெரியுமோ
சுமையும் வெந்திளைப்பாற
வொட்டாய் பெருந்துக்க மண்ணிச் சுகமறியேனெனக்
கமையு மிந்தக் குடில்வாழ்க்கை
யென்னம்மே அன்னமே தஞ்சை
ஆனந்த வல்லியே. (1)

End :

குன்றுபோல் கொடும்பாவம் செட்யினும்
சுத்தன வந்து கொடும்பாசம் வீசினும்
என்றுமேழையடி யார்க்கிரங்கி
மீடேற்றுவா யடியேற்கு மிரங்குவாய்
மண்ணில் மாணிக்கஞ் சேர்பிறைஞ்சியே
வஞ்சியே சதுர்மாமறை கொஞ்சியே
அணைனுவாணி புகழ்ந்திடுமென் னம்மே
அன்னமே தஞ்சையானந்த வல்லியே.

(கு-பு.)—

இந்நூல், தஞ்சை–ஆனந்தவல்லித் தாயார் பேரில் பாடிய பதிகமாகும். முற்றுமுள்ளது. எழுத்துக்கள் இறுக்கலாகவும் சரியாகவும் புரியாத நிலையில் உள்ளன. முற்றுமுளது. ஆசிரியர் பெயர் அறியக்கூடவில்லை,

No. 2964.

இடைக்காட்டுத் தேவர் பாடல்.

IḌAIK KAṬṬUT TĒVAR PĀḌAL.

Foll. 25—28. Extent, 40 granthas.

Begins on fol. 25 of the manuscript described under R. No, 2959. Complete.

Same work as that described under D. No. 1835.

(கு-பு)—

இத்நூல் டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு 1835–ஆம், எண்ணில் வருணித் திருப்பதைப் போலுள்ளது. அதன் குறிப்புங் காண்க.

R. No. 2965.

புதுக்கோட்டை சுப்ரமணியர் பதிகம்.

PUDUKKŌṬṬAI SUBRAMAṆIYAR PATIKAM.

Foll. 29—34. Extent, 40 granthas.

Begins on fol. 29 of the manuscript described under R. No. 2959.

Complete

This is a fine work in the Lord Subramaṇiar of Pudukkōṭṭai praising Him. The manuscript is in a bad condition and is with mistakes.

Beginning :

உலகெங்கணும் பரவு மிந்திர
நீலப் பொருப்புள்
படிவ மொடு படி யிடந்தோங்கு
சேஷன் பணுமுடியை வருடரு மெல்லை
யுற்றமணி நற்கனியெனச்
சுலவிமுழை வாயினுற் கவ்வியீர்த்திடு
முரண்டொக்க மூடிக மதுராந்த
துங்கக் கடங்கலுழ கவுட்டுலைப் புகர்முகச்
சுதனை யன்பொடு துதிப்பாம்
நிலவுமிழ் வளைக்குல முயிர்த்த நித்தில
வெயிலி னேர்ந்தவிந்தீ விரங்க
னைட்டிதழ் விரித்தலரி லஞ்சியில் கும்புது
நெடுங்கோட்டை மாநகரில்வாழ்
கலவமயில் வாகனன் வெற்றிவேற் படைபெற்றக்
காளைநூ புரவடியின்மேற்
காழ்மனத் தடியனேன் பாமாலை சேர்த்திக்
களித்திருமை யும்பெருகவே. (1)

End :

*   *   *   *
*   *   *   *

புதுககோட்டை நகர்வந்த
* * * மூன்றின் னமைந்த கோட்டை
மாறுள கந்தனே. (11)

(முற்றும்.)

(கு-பு.)—

இந்நூல், புதுக்கோட்டை நகரில் இருக்கும் கந்தனைப் பற்றியத்தோத்திரமாகும். முற்றுமுளது, நன்ருகவுளது. சிதிலமாகவுளது. பிழையும் உள்ளது.

R. Nos. 2966—2982 (one bundle.)

Palm leaf, 10 × 1 inches. Foll. 90. Lines, 6; 8, on a page, Tamil, injured Old. Extent, 2655 granthas.

Presented by Sri K. Shanmugam, Kumarakkuppam, Valavanūr, Post, South Arcot District.

R. No. 2966.

பலவகை மந்திரங்கள்.

PALAVAKAI MADIRAṄKAḶ.

Foll. 1—12, Extent, 75 granthas.

Complete.

Same work as that described under R. 2327 and D. 2065. ante.

(கு-பு.)—

இந்நூல், பலவகை மந்திரங்கள் என்னும் பெயர்த்து, மூவருடக்காட்டலாக்கு 2327–ஆம், எண்ணிலும், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 2065–ஆம் எண்ணிலும் வருணிக்கப்பட்டிருக்கிறது. இதில், பிள்ளை பெறமாட்டாதவருக்கு எண்ணெய் ஓத மந்திரமும், சுளுக்கு மந்திரமும், சுப்பிரமணியர் அகவல், சுப்பிரமணியர் திருநீற்று மந்திரம், வீரபத்திரன் மந்திரம், அனுமந்தராயன மந்திரம், பிள்ளையார் மந்திரம், காட்டேரி மந்திரம், காளி மந்திரம், சுப்பிரமணியர் தியானம், பத்திரகாளி மந்திரம், தேங்காய் குண்ணி மந்திரம், சாமுண்டி மந்திரம், முதலானவைகளும் உள்ளன. பிழையும் உளது. இது போன்ற மந்திர ஓலைச்சுவடிகள் இந்நூல் நிலையத்தில் பல காணலாம்.

R. No. 2967.

குமாரசுவாமி யகவல்,

KUMĀRASVĀMI AKAVAL.

Foll. 13—15 (a). Extent, 18 granthas.

Begins on fol. 13 of the manuscript described under R. 2966.

Complete.

This work deals with various mantras which, it is said that on proper application will bring out the desired result.

Beginning :

ஓம் அரிதிருமருகா முக்கணன் மகனே
ஆனைக் கிளைய அயில்வே லரசே
அடியேன் வல்வினை அகற்றிடு மொருகை
திரிபுர மெரியச் சிரிப்பவன் மகனே
* * * *
* * * *

End :

* * * *
* * * *

மறிமறி மறித்து இடியிடி யிடித்து
மடிமடி மடித்து அறுஅறு அறுத்து
துணிதுணி துணித்து படுபடுபட்டு
கெடுகெடு கெட்டுப் பறபறபறந்து
போக சுவாகா.

(கு-பு.)—

இந்நூல், குமாரசுவாமி அகவல் என்னும் பெயர்த்து. இது மந்திர சம்பந்தமானது. இதனை முறைப்படிப் பாராயணம் செய்தால் சித்திகள் கைவரப்பெறலாம் என சொல்லப்படுகிறது. பிழையுளது. முற்றுமுள்து.

R. No. 2968.

கல்லாடஞ் சுப்பிரமணியரகவல்.

KALLĀḌAM SUBRAMAṆIYAR AKAVAL.

Foll. 15 (b) to 17 (a). Extent, 15 granthas.

Begins on fol. 15(*b*) of the manuscript described under R. 2966.

Complete.

This work deals in brief, with the glories of Lord Muruka's birth. It is not, however, devoid of orthographical mistakes.

Beginning :

பாய்திரை யுடுத்த வடவைநெடு நாக்கின்
ஞாலமுடிவென்ன கிளைகள் விரிந்தென்ன
முடங்குளை முகத்து செந்துகிற் படருந்
பஃறெருள வுண்ணெடு திரைகடற் புக்கு
மிடையுடு வுதிர கிடந்தெரி வடவையிற்
* * * *
* * * *

End :

சனனப் பீழையுந் தள்ளாக் காமமும்

*   *   *

*   *   *

நீளா திம்பரின் முடித்து
மீளாக் காட்சிதருதியின் றெனவே.

முற்றும்

(கு-பு.)—

இந் நூல், கல்லாடஞ் சுப்பிரமணியர் அகவல் என்னும் பெயர்த்து, முற்றுமுளது முருகன் தோற்றச் சிறப்புக்களையும், புகழினையும் சுருங்கிய முறையில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. முற்று முள்ளது. சில எழுத்துப் பிழைகளும் காணப்படுகின்றன.

R. No. 2969.

புவனேசுவரி அகவல் முதலியன

BHUVANĒSUVARI AKAVAL MUTALIYANA

Foll. 17 (b) to 25 Extent, 20 granthas.

Begins on fol. 17 (b) of the manuscript described under R.No .2966.

Complete.

Same work as that described under R. No. 280 (H).

Beginning :

அகவல்

ஓம்மூலத் தெழுந்த மூர்த்தி யாளே
ஞானம் படைத்த ஞானக் கொழுந்தே
நான்முகன் வடிவாய் ஞாலத் தெழுந்து
வானுல கெங்கும் வகைவகை யானாய்
கரியமா லென்னுங் காட்சியானாய்

*   *

*   *   *

End :

*   *   *

*   *   *

காத்தெனை யாளக் கடனுனக் கேபரம்
ஆட்சி யான அம்பிகை யுந்தன்
காட்சி கொடுக்கும் கருணை நமஸ்தே.

நமஸ்த்து.

(கு-பு.)—

இந்நூல், புவனேசுவரி அகவல் என்னும் பெயர்த்து. மூவருடக் காட்டலாக்கு 280-ல் வருணிக்கப்பட்டு முற்றுமுளது. அதற்கடுத்தாப்போல், புவனேசுவரி தியானம், அஞ்சனாதேவி மந்திரம், அனுமார் மந்திரம், வீரபத்திரன் மந்திரம் முதலானவைகள் காணப்படுகின்றன. அவை நன்றாக உள்ளன. இவைகளை இயற்றினோர் இன்னார் என்று விளங்கவில்லை.

R. No. 2970.

திருமுருகாற்றுப் படை.
TIRUMURUKĀṞṞUP PAḌAI.

Foll 26 to 40 (a) 9 Extent, 150 granthas.

Begins on fol. 26 of the manuscript described under R. No. 2966.

Complete :—Printed.

by Nakkīrar.

Same work as that described under D. No. 1195.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 1195-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்பும் காண்க.

R, No. 2971.

வாலசவுந்தரி அம்மன் உலா.
VĀLA SAUNDARIYAMMAN ULĀ.

Foll 40 (a) to 41 (b). Extent, 20 granthas.

Begins on fol. 40 of the manuscript described under R. No. 2969.

Complete.

This beautiful work is in praise of Saundariyamman.

Beginning :

ஆடகமா மன்றிலுறை யம்மையே உன்னுடைய
பாடகமுஞ் சீரடியும் பற்றினேன்—தேடரிய
அற்புதமே தேனே யணங்கே யமிர்த மொழிக்
கற்பகமே நீயிதற்குக் காப்பு.

வேதபுரந் தழைக்க வீற்றிருக்கும் வேடிச்சி
ஆதலரை யீடேற்று மாண்டிச்சி ஓதரிய
சத்திபுரக் களத்தி சாமவேத பரச்சி
மற்றுநிகரோ

* * * * * *

End :

* * * * * *

* * * * * *

வாதைப் படுத்தாதே வான்கமலம் போற்றுதே
கோதையே யெனையாண்டு கொள்.

(கு-பு.)—

இந்நூல், வாலசுந்தரி அம்மன் உலா என்னும் பெயர்த்து. முற்று மூளது. நன்றாகவும் உளது. அம்மனைப் பற்றிய தோத்திர சம்பந்த மாகும்.

R. No. 2972.

வாலைபுவனேசுவரி அகவல் முதலியன.

VĀLAI BHUVANĒŚVARI AKAVAL, etc.

Foll. 41 (b) to 48 (a). Extent, 6 granthas.

Begins on fol. 41 (b) of the manuscript described under R. 2966.

Complete.

This work contains prayer songs on Bhuvanēśvari Amman.

There are also some mantras and Tēvāra songs of Sambandar.

Beginning :

ஓம் அரகர சிவசிவ ஆதி பராபரை
பரம்பரம் பரியே பரம்பர முனக்கே
அரியோ மென்னு மக்ஷரத் தாதியே
தெரியோ மென்னுஞ் சிற் பரத் தாளே
உருவெளி யான உத்தமக் கொழுந்தே
அருவெளி யான யாதி யனுதி
ஓம்பிரணவ மான ஓங்கார ரீங்கிரியே

* * * * * *

* * * * * *

End :

* * * * * *

* * * * * *

தெய்வ குருவான தேவி நமஸ்தே
புவன சவுந்தரி போற்றி நமஸ்தே
பூதப் பிரேத பிசாசு பலவிஷம்
வாதபி த்தஞ் சேத்துமம் நீக்கியே

எந்தன் மனத்தால் எதுவேண் டினதும்
தந்து ரட்சிக்க சவுந்தரித் தாயே
குருவடி வாயுப தேசங் கொடுத்து
திருவடி தந்தாள் சிவசிவ சரணம்.

திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

இந்நூல், வாலைபுவனேசுவரி அகவல் என்னும் பெயர்த்து. முற்றுமுளது. நன்றாகவுளது. அம்மை தோத்திர சம்பந்தமானது. இதற்கடுத்தாற்போல், பாம்பு மந்திரம், விபூதி மந்திரம், சம்பந்தமூர்த்தி தேவாரப் பாடல்கள் சிலவும், சிதம்பரச் சக்கரம், வீரபத்திர கவசம் முதலானவைகள் காணப்படுகின்றன. படித்துணரத்தக்கன.

R. No. 2973.

சுப்பிரமணியர் கவசம்.

SUBRAMANIYAR KAVACAM.

Foll. 48 (b) to 50 (a). Extent, 35 granthas.

Begins on fol. 48 (b) of the manuscript described under R. 2966.

Complete.

This contains 12 verses as prayer to Lord Subramaniyar.

Beginning :

கவசம்.

ஓங்கிய ஓங்காரத்தி னுள்ளொளிக்
 கொளியாய் நின்று
தீங்கிலா வண்ணல் தம்மை
 திருநடு இருந்து வாழ்வோன்
பாங்குறு கருணை யாலே
 பற்பல துயரந் தீர்க்கும்
காங்கய னெம்மைக் காக்க
 கவசமு மியற்ற லுற்றும்.

பாவங்கள் அனைத்துந் தீர்க்கும்
 பற்பல துயரம் போக்கும்
தேவர்தம் முலகு காக்கும்
 தெய்வவே தியர்கள் செய்யும்
சேவனங் காக்கும் நோக்கும்
 சோதிபோல் என்முன் காக்கத்
தூவவெண் ணலங்கள் மாலை
 சுப்பிர மண்ணியந் தானே.

End :

இக்கவ சத்தை நாளு
    மின்புறச் சேவிப் பார்க்கு
மக்கண மவரே தோன்றி
    பாக்கிய மனைத்தும் நல்கும்
மிக்குவந் துதித்தல் கந்தர்
    பதந்தனில் மேவி வாழ்வார்
மக்கள் தேவர்க்கு மற்ற
    வனைவர்க்கும் வாழி தானே. (12)

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், சுப்பிரமணியர் கவசம் என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது. 12 பாட்டுக்கள் உள்ளன. தோத்திர சம்பந்தமானது.

R. No. 2974.

வச்சிர பஞ்ச கவசம்.

VACCIRA PAÑCA KAVACAM.

Foll. 50 (a) to 52. Extent, 50 granthas.

Begins on fol. 50 (a) of the manuscript described under R. 2966.

Complete.

The peculiarity of this work of an unknown author is that it prays for the well-being of each and every part of the human body.

Beginning:

அங்கையிற் கரகந் தாங்கும்
    பிராமணி யருளி னோடும்
துங்கமென் சென்னி காக்க
    வயிஷ்ணவி துகளி லாக
மெங்கணு காக்க மிக்க
    வந்தெழி லுருத்தி ராணி
தங்குமெண் டிசையு மன்பு
    தழைத்திட வினிது காக்க. (1)

கொன்னுனிச் சூலிச் சென்னி
    மயிரினைக் குறித்துக் காக்க
மன்னுவெண் பிறைதாழ் சென்னி
    வயங்கொளி நெற்றி காக்கப்
பன்மயிற் புருவ னுளும்
    பரிவொடு முமையாள் காக்க
என்னையாள் முக்க ணீசன்
    இறைவிகண் ணிணைகள் காக்க. (2)

End :

இன்ன நற்கதை கேட்போர்
    பயின்றுளோர் எழுதி வைப்போர்
துன்னருந் துன்ப நீங்கி
    அளப்பரும் போகத் துய்த்துக்
கன்னலிற் கனிந்த தீஞ்சொல்
    லரம்பையர் கவரி நீழற்
பொன்னுல இனிது காக்கும்
    புரந்தரன் போல வாழ்வார். (21)

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், வச்சிர பஞ்ச கவசம் என்னும் பெயர்த்து. தமது அவையவங்களனைத்தும் காக்க, காக்கவென்று கூறிக் கொண்டு செல்கிறது. இந்திரன் முதலினோரை வஞ்சிர பஞ்சகவசம் எப்படி எழுப்பியதோ அஃதே போன்று என்னையும் காக்கவென்று தோத்தரிக்கப் பட்டுள்ளது. பிழையுளது. ஆசிரியர் பெயர் முதலாயின அறியக்கூடவில்லை.

R. No. 2975.

சனீசுவரன் கவசம்.

ŚANĪŚVARAN KAVACAM.

Foll. 53 only. Extent, 10 granthas.

Begins on fol. 53 of the manuscript described under D. No. 2966. Complete.

There are mistakes in this complete but small work. The details about the author are not known.

Beginning :

மூசுவண் டரற்றுஞ் செங்கேழ்
    முளரிமுன் முகனிகந்தக்
காசிப முனிப னென்னுங்
    கலைகடல் அனுஷ்டுப் பொங்கும்
வீசிய விசையிற் றெய்வ
    விரைசனி பகவான் அன்னோன்
மாசிலாக் கருணைபூத்த
    மந்திரக் கவசஞ் சொல்வாம். (1)
திரிதரு திரகற் கூட்டங்
    களின்மிகச் சிறந்தோ னாகி
கரியமென் றுகில்பு னைந்து
    கதித்தெழு யிணைத்தோள் காட்டி
விரிசிறைக் காக மேற்கொண்
    டன்பர்வெம் பீடை யாவும்
பரிகரித் தருட்கொ ழிக்கும்
    பருதிமைந் தனைநி னைத்தே. (2)

End :

என்றிசைத் தனின்மென் சாயை
யெனுங்கரும் பீன்ற நீலக்
குன்றினிக் கினிய தாய
கோமளைக் கவசங் கூறு
முன்றிசைத் தகலும் பீடை
முழுதும்வெவ் வினைகள் யாவும்
பொன்றிடும் பொன்று வாழ்வு
நினைந்தவும் பொருந்து மன்றே. (7)

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், சனீசுவரன் கவசம் என்னும் பெயர்த்து. முற்றுப்பெற்றுள்ளது. பிழைகள் உள. பிற அறியக்கூடவில்லை.

R. No. 2976.

விநாயகர் கவசம்.

VINĀYAKAR KAVACAM.

Foll. 54 and 55, Extent. 20 granthas.

Begins on fol. 54 of the manuscript described under R. No. 2966.

Complete.

This work is meant for prayer and meditation.

Beginning :

திங்களஞ் சடையோன் குஞ்சி
செறிந்திடுஞ் சென்னி காக்க
பொங்கிய தூம கேதுப்
புரைதவிர் நெற்றி காக்கப்
பங்கமில் வெள்ளை நேமிப்
பரஞ்சுடர் விழிகள் காக்க
வெங்களைத் தாங்கு முக்கண்
ஈசனு சியினைக் காக்க. (1)

பெருகிய சூர்ப்ப கன்னன்
பேசிய செவிகள் காக்க
பரவுமே ரம்பன் வாக்கு
நாக்குமென் பல்லுங் காக்க
பொருவரு மேக தந்தன்
பொருந்திய கபோலங் காக்க
மருவிய குறுந்தாட் செம்மல்
வனப்புறு வதனங் காக்க, (2)

End :

தந்தியிற் கவசந் தன்னை
தரித்துளோர் படிப்போர் கேட்போர்
முந்தவே யெழுதி வைப்போர்
ஒருவழி மோனத் தோடுஞ்
சிந்தைசெய் திருப்பார் நாளும்
செல்வராய் இருந்து பார்மேல்
இந்திர னுவர் பின்னும்
எய்துவர் சிவலோ கத்தே. (14)

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், விநாயகர் கவசம் என்னும் பெயர்த்து. முற்றுமுள்ளது. தோத்திர சம்பந்தமானது. பாராயணம் பண்ண நல்லது.

R. No. 2977.

அணிமுருகாற்றுப்படை

AṆIMURUKĀṞṞUP PAḌAI.

Foll. 56 (b) to 64 (a). Extent, 20 granthas.

Begins on fol. 5(b) of the manuscript described under R. No. 2966.

Complete.

At the end of this work is found a phrase " The end of Edirmuru-kāṟṟuppaḍai ", which may be another name of this work. It speaks briefly the glories of Lord Muruka only.

Beginning :

பொன்னிற மேனியும் பொற்பிற முடியும்
மூன்றாறு முகமும் பன்னிரு விழியும்
நீறணி நெற்றியும் நீண்டகயி லாரியுங்
குறேணை வடிவுங் கூரிய மூக்கும்
ஆரஞ் சேர்ந்த வணிதிருக் கழுத்துங்
குண்டலம் பதித்த குழைகளீ ராறும்
முன்னூல் மார்பும் முழுமணி வயிரமும்
பன்னிரு கரத்திற் பதிந்த வாயுதமும்
வெல்வாள் சக்கரம் வெயிறொளி வச்சிரம்
பால்நிறக் குக்குடம் பரிசைபொற் றண்டம்
வரதம் அபையம் இருதலைச் சூலஞ்
சரமொடு சாபந் தன்கரத் திலங்க
செச்சை மாலையுஞ் சீரா மருங்கினில்
* * * * *
* * * * * *

End:

எந்தா போற்றி விரகா போற்றி
செந்தா போற்றி செட்டி போற்றி
கந்தா போற்றி கடம்பா போற்றி
சிந்தா மணியே செயசெய போற்றி
போற்றி போற்றி யென்றுனைப் புகழ்ந்து
போற்றுவன் திருத்தாள் தந்தருள் வோனே.

எதிர் முருகாற்றுப்படை
முற்றிற்று.

(கு-பு.)—

இந்நூல், அணி முருகாற்றுப்படை என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது. இறுதியில் எதிர் முருகாற்றுப்படை முற்றும் என எழுதப் பட்டுள்ளது. ஆதலின், இதற்கு அப்படியொரு பெயர் உண்டு போலும். முருகன் திருப்புகழே கூறப்பட்டுள்ளது. சுருக்கமாகவுள்ளது.

R. No. 2978.

பராசத்தி நவரத்தினம்.

PARĀŚATTI NAVARATTINAM.

Foll. 64(b) to 65. Extent, 15 granthas.

Begins on fol. 64 (*b*) of the manuscript described under R. No. 2966.

Complete.

Contains nine verses in Virutta metre. Useful for the chanters of mantras since these verses are valuable as mantras. There is a Cakra at the end.

Beginning :

காப்பு.

அரவுக்கு மந்திரம் யன....லுக்கு யெந்திரமும்
இரவுக்கு நற்றுணை யாகுங் கண்டீர் ஏழுலகும்
பரவத் தவமுத்தி யுண்டாம் வராகு பராசத்திமேல்
நவரத்தின மென்றுங் கவிமாலையைத் தினம் நாட்டஞ்
[செய்யே.

ஐயுங் கிலியுஞ் சவ்வும் நமஸ்தே நமஸ்து
அரியபுகழ் பஞ்சமியென் பகைவர்கள்
[ஆருயிரைக்
குருதி நிறைந்தசை மீளையைப் பட்சணங் கொள்ளவுமே
மருவிய சாமளி கோலாகலத்தி வராகியுயர்
பரிபுர குண்கிணி யாட நடிக்கும் பயங்கரியே. (1)

End :

திடுக்கிடு மண்டந் திசைகள் அசைந்திடுஞ் சேடனுடல்
நடுக்கிடும் பாதாளந் தத்தளிக்கும் அண்டர் நகரமதின்
இடுக்கிடும் எழுகட லொன்றும் வராகி வியந்துதடி
யெடுக்கும் பொழுதினில் நின்புகழ் யாரு மியம்பரிதே. (9)

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், பராசத்தி நவரத்தினம் என்னும் பெயர்த்து. ஒன்பது பாடல்கள் உள்ளன. விருத்தப் பாக்களால் ஆகியது. மந்திரார்த்தம் பொருந்தியது. உச்சரித்துப் பயனடைய மந்திரம் ஓதுவர்க்கு நன்று. இறுதியில் ஒரு சக்கரம் உள்ளது. இதுபோன்ற வராகி மந்திரவேடுகள் பல, இந்நூல் நிலையத்தில் வேறு வேறு எண்களில் காணலாம்.

R. No. 2979.

பல்வகை மந்திரங்கள்.

PALVAKAI MANDIRAṄKAḶ.

Foll. 66 to 79. Extent, 70 granthas.

Begins on fol. 66 of the manuscript described under R. No. 2966.

Complete.

This is a compilation of various mantras.

Beginning :

சத்துரு சங்காரம்

ஓம் அரகர நமசிவாய
ஆனந்த ரூபனாய்
ஆதிகேசனாய்
அட்சரப் பிரதட்சனாய்
அதிரத கேசனாய்
அதிபுவனேசனாய்
அமரயடம்ராய்
டமடமதிரிசூலி
பரனந்தியானந்தி
ஆனந்த பயிரவி

* * * * * * * *
* * * * * * * *

End :

ஓம் நமோ நமசிவாய
தேவி சகாயம்

Beginning :

பஞ்சரத்தினம்

ஆயி ஆனந்த வல்லி அமிர்தகரத்
தாதிசத்தி பராயி மாயிமாயா சுரூபி
படிக மணிமயீ மாமதங்கீ விடங்கீ
ஞானி ஞானனந்த ரூபி நளினி
* * * * * *
* * * * * *

End :

சமஸ்ஸாரரூபி
சிருஷ்டி சத்தியந்த மூர்த்தி
புவனே வசகரேரீருவதாயை

நமஸ்தே.

(கு-பு.)—

இந்நூல், பல்வகை மந்திரங்கள் என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது. இதில், சத்துரு சங்கார மந்திரம், பஞ்சரத்தினம், எதிரியை பாயும் மந்திரம், வயிரவ மந்திரம், வயிரவ சக்கரம், வீரபத்திரன் மந்திரம், வீரபத்திரன் சக்கிரம், அநுமார் மந்திரம், வீரபத்திரன்துதி, சுப்பிரமணியர் அகவல், தேளு மந்திரம், பிள்ளைபெற மந்திரம், சுளுக்கு மந்திரம், கணபதி வசிய மந்திரம், கணபதி மந்திரம், முதலானவைகள் இதில் அடங்கியுள்ளன. முற்றுமுள்ளது. பிழைகளுள்ளன.

R. No. 2980.

நாராயண கவசம்.

NĀRĀYAṆA KAVACAM.

Foll. 80 to 85. Extent, 65 granthas.

Begins on fol. 80 of the manuscript described under R. No. 2966.

Complete.

Contains 32 verses speaking the stories of Lord Nārāyaṇa. The author is not known.

Beginning :

அரும்புனல் படிந்து புனிதமுத்தங்க
நியாசமாங் கடவுடனி யத்தித்
திருந்திய மறைசொல் கரநியா சமுந்தான்
செயமுறை யினிதினிற் புரிந்துலர்ந்
தருமாயன் மலர்ப்பதத் துணையை
மனத்தினின் மருவுற நினைந்து
புரந்தரன் றனக்கு விச்சுவரூ பன்னுகமு
மால்கவ சத்தைப் புகல்வான். (1)

End :

குரவனை வணங்கி விண்ணோர்
குழுவொடு குலிசத் தண்ணல்
உரைசெயுங் கவயந் தாங்கி
யுறுபகை கடந்து வானத்
தரசுசெய் திருந்தா னென்ன
வருந்தி வச்சுதனென் றேதும்
பொருவரும் புகழின் மிக்கான்
புகன்றனன் மீட்டுஞ் சொல்லும். (32)

நாராயண கவசம்

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல். ஸ்ரீமந் நாரயணர்தம் சிறப்புக்களைப்பற்றிய நூலாகும். 32 பாடல்கள் கொண்டதாகும். முற்றும் உள்ளது. சில எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன. ஆசிரியர் இன்னாரென்று கூறப்படவில்லை.

R. No. 2981

விநாயகர் பேரில் பீஜாட்சர அகவல்.
VINĀYAKAR PĒRIL BĪJĀṬCARA AKAVAL.

Foll. 86 to 88, Extent, 15 granthas.

Begins on fol. 86 of the manuscript described under R. No. 2966.

Complete.

This is an arcana Nāmavaḷi on God Vignēśvara written in the maṇippravāḷa style.

Beginning :

ஓம் அவுஸதும் கெங்கணபதியே நம :
விமவிக்கினேசவராய் நம;
ரீம் ஓம் லம்போதராய் நம ;
ஐயுங்கிலியும் பாசராரங்கு சதளய நம :
நவும் லவும் மூஷிக ரூபாய நம ;

* * * * * * *

* * * * * * *

End :

பஞ்சவதனர விந்தாய்
பாபநிக்கிற காய பத்மதூளிதாய்
அண்டகோள் சக்கிற வாளகம்பித கெமனும்
சாஸ்தி ரூபாய சருவசிவ தயாபராய
தானதர்ம தீன்ற க்ஷயகாய சகலலோக
சாத்தியாய சுவாமி மகா கெணபதிபதி

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், விக்கினேசுவரரின் அர்ச்சனை நாமாவளியான அகவற்பா வாகும். சமஸ்கிருத மொழியிலும் தமிழ் மொழியிலும் விரவி எழுதப் பட்டுள்ளது. முற்றுமுள்ளது. பிழைகள் உள்ளன. பிற அறியக்கூட வில்லை.

R. No. 2982

சத்துரு சங்காரம்.
ŚATTURU SAṄKĀRAM.

Foll. 89 to 90 (a), Extent, 30 granthas.

Begins on fol. 89 of the manuscript described under R. No. 2966.

Complete.

Same work as that described under R. No. 2979.

Useful for the chanters of Mantras.

Beginning :

ஹறி ஓம் அரகர நமசிவாயா
ஆனந்த ரூபனுயா ஆதிகோ சாதனுயா
அட்சரப் பிறதெட்சனுயா.
அதிரத மகேசனுயா
ஆதிபுவனேசனுயா
ஓம் அமராயா
ஓம் டமராயா
ஓம் டமடம திரிசூலி டமரானந்தி
ஆன்ந்த பைரவி நடனப்பயிரவி
கால பயிரவி, கபால வயிரவி
காளாபயிரவி, காளகண்ட வயிரவி
* * * * *
* * * * *

End :

ஓம் சரவண பவாய நமா
ஓம் நமோ குமராய நமா

திருச்சிற்றம்பலம்.

பராசத்தியே நமா.

(கு-பு.)—

இந்நூல், சத்துரு சங்காரம் என்னும் பெயர்த்து. முற்றுமுள்ளது. மூவருடக் காட்டலாக்கு 2979-ஆம் எண்ணைப்போன்றது. பைரவி, காளி முதலான தேவதைகளின் மந்திரங்களை உச்சாடணம் பண்ணி, சத்துருக்களை அடக்கி, யொடுக்க இந்நூல் உதவும். இது பழங்கால முதற்கொண்டு நம்

முன்னோர்கள் மந்திர சாத்திரங்களை அருட்டித்து வந்துள்ளனர். அவர் போன்ற ஒருவராலேயே எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆகவே இது மந்திரம் செபிக்கிறவர்கட்கு மிக நன்மை பயக்கும் என்பது உறுதி. பிழைகள் உள. இறுதியில், மந்திர சக்கரங்களும் எழுதப்பட்டிருக்கின்றன.

R. Nos. 2983 to 2986 (one bundle).

Palm-leaf. 6¼ × 1¼ inches, Foll. 1—55, Lines 6 on a page, Tamil, Injured, Old. Extent, 220 granthas.

Presented by K. Shanmugam, Kumarakuppam; Vaḷavanur, South Arcot district.

R. No. 2983.

சுப்பிரமணியர் கவசம்.

SUBRAMṆIYAR KAVACAM.

Foll. 1—5, Extent, 50 granthas.

Complete.

This work is described to one Called Akattiyamāmuni.

Beginning :

குறுமுனி யனுப்ப பங்கநியாசங் கரநியாசம்
மறுவறச் செய்து கோடி மதனவேள் நிகர்த்துவீரத்
திறலுறு மிகுத்துக் காமர் செய்ய கண்களும் பொலிந்தே
யுறுமன்பர்க் கின்ப நல்குங் குமரனை யுளத்துள் வைத்தே, (1)

தருமம தாகி யார்க்குந் நன்மையே தருவ தாகி
உருவுறச் செபித்த போதில் பாவங்கள் ஒழிப்ப தாகி
பருவமாஞ் சருவ காம பலத்தையும் அளிப்ப தாகுத்
தெரிதவற் குரித்தா மிந்தக் கவசத்தைச் செபிக்க வேண்டும். (2)

End :

வார்த்தவிக் கவசம் பாடி
வழுத்துவர் படிப்போர் கேட்போர்
கூர்த்தினி தெழுது வோர்கள்
குறையின்றி யிம்மை தன்னில்
சீர்த்தியுஞ் சகல பாக்கி
யங்களுஞ்சேர்ந்து வாழ்வார்
ஆர்த்தல சீர்மறுமை யோங்கு
கதியையும் அடைவர் மாதோ. (20)

அகத்திய மகாரிஷி
அருளிய
சுப்பிரமணிய கவசம் பூரணம்
முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், சுப்பிரமணியர் கவசம் என்னும் பெயர்த்து. முற்றுமுள்ளது. இறுதியில் உள்ள எட்டால், அகத்திய மாமுனி இயற்றினதாக அறியமுடிகிறது. பிழைகளும் உள்ளன.

R. No. 2984.

வகுப்புகள்.

VAKUPPUKAḶ.

Foll. 6 only. Extent, 10 granthas

Begins on fol. 6 of the manuscript described under R. No. 2983.

Complete.

The author is not known.

Beginning :

சேவக வகுப்பு

இருபிறை யெயிறு நிலாவழ வுடல்
இருள்கொடு சொருக விடத்தா ருடையா
ரிறுகிய கயறு படவென முடுகிய
மயர்பிடரி பிடித்தே கொடுபோய்
அருவினை முறையில் முறைமுறை கருதி
அதனென விதன மொறுத்தால்
வகையென் அறிவேன் வசன மொழிவது
குளறி அலம்வரு பொழுதில் அழைத்தால்
வருவாய் ஒருபது சிரமும் இருபது
கரமும் விழவொரு பகழி தொடுத்தோன்

* * * *

* * * *

End :

கணவர் வினைகடல் கரைநிசி
சரர் மடியமலே கொடுபொருது
முழுச்சேவகனே.

(கு-பு.)—

இந்நூல், சேவக வகுப்பு என்னும் பெயர்த்து. முற்றுமுள்ளது. சிதிலமாயது.

R. No. 2984 (a)

வேல்வகுப்பு.

VĒLVAKUPPU.

Foll. 7 and 8. Extent, 15 granthas.

Complete.

This is a beautiful work on Lord Muruka full of internal rhymes.

Beginning :

பருத்தமுலை சிறுத்தயிடை வெளுத்தநகை
கருத்தகுழல் சித்தவிதழ் மறச்சிறுமி விழிக்கு—நிகராகும்
பணைக்கை முக படைக்கரட
மதத் தவள கெசக் கடவுள்
பதைத்திட நிகழ்த்து முரை தெரிக்க—வரமாகும்

* * * * * *
* * * * *

End :

திருத்தணியி லுதித்தருளு மொருத்தன் மலை
விருத்தரு ளத்திலுறை
கருத்தன் மயில்நடத்து—குகன்வேலே.

திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

இந்நூல், வேல்வகுப்பு என்னும் பெயர்த்து. இயற்றியது இன்னு ரென்று அறியக்கூடவில்லை. முற்றுமுள்ளது.

R. No. 2984 (b)

வசனவகுப்பு.

VACANAVAKUPPU.

Foll. 9 and 10. Extent, 15 granthas.

Complete.

Author is not known.

Beginning :

அருக்கனுலவிய சிகத்திரையமு
மிகையதற் குளருவென வளைத்து
நிரைவது மறுத்த பலவையும் அடக்கி
யகிலமும் விடசி பிறவினி திருக்கும்
மவுனமும் அசட்டு வெறுவழி

* * * * * *
* * * *

End :

நணிதழை யுடுத்த குறமகள் மளகத
வறுமுக னொருத்தன் அருளிய
பெருத்த வசனமே.

(கு-பு.)—

இந்நூல், வசன வகுப்பு என்னும் பெயர்த்து. முற்றுமுள்ளது. இயற்றி வர் இன்னாரென்று விளங்கவில்லை.

R. No. 2984 (c)

தேவேந்திரன் சங்கவகுப்பு.

DĒVĒNDIRAN SAṄKA VAKUPPU.

Foll. 11 and 21. Extent, 10 granthas.

Complete.

This is in praise of both Lord Muruka and Dēvēndira

Beginning :

தரணியி லாணிய முரளி ணியனுடல்
தளைநக நுதிகொடு சாடொங்கு நெடுங்
கிரியே டேந்து பயங்கிரி தமருக
பரியுர வொலிகொடு நடனவில் சாணிய
சதுர்மறை தாதாம் புய மந்திர வேதாந்த
பரம்பரை சரிவளை விரிசடை
யெரிபுரை வடிவினள்

* * * * * *
* * * * * *

End :

செந்தியி னதிபதி யெனவரு பொருநிலே
முருகனை யதுபட மொழிபவ ராய்ந்து
வணங்குவ தேவேந்திர சங்கமே.

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், தேவேந்திர சங்க வகுப்பு என்னும் பெயர்த்தாய், முற்று முள்ளது. அவனது சிறப்போடு முருகர் சிறப்பையும் பொருத்திப் பாடப் பட்டுள்ளது.

R. No. 2984 (d)

வேடிச்சி காவலன் வகுப்பு.

VĒDICCI KĀVALAN VAKKUPPU.

Foll. 13—16. Extent, 20 granthas.

Complete.

It speaks the glories of Lord Mūruka.

Beginning :

உதரகம லத்தினிடை முதியபுவ னத்திரையமு
முகமுடிவில் வைக்கு—முறைமையாள்
பெற்றபாலகனும் உமிழ்திரை பரப்பில்
வருவெகு முக்குலப் பழையஉதக
மகள்பக்கல் வருசோதிக் கசடானனும்,
உவகையொடு கிறுதிகை யாறு வரு
* * * * * * * *
* * * * * * * *

End :

* * * * * * * *
வரிசிலே மலேக்குறவர் பரவிய
புனத்தி தனில்மயி லெனவிருக்
குமொரு வேடிச்சி காவலனே.

முற்றும்.

(கு-பு.)—
வேடிச்சி காவலன் என்னும் பெயர்த்து. முருகனைப்பற்றியதேயாகும். முற்றுமுள்ளது.

R. No. 2985.

தேவாரப் பாடல்கள்.
TĒVĀRAP PĀṬALKAḶ.

Foll. 18—44. Extent, 75 granthas.

Begins on fol. 18 of the manuscript described under R. No. 2983.

Incomplete.

Same work as that described under R. No. 1409 and 1418.

(கு-பு.)—

இந்நூல், தேவாரம் என்னும் பெயர்த்து, சம்பந்தர் தேவாரம் சிலவும், நாவுக்கரசு நாயனுர் திருத்தாண்டகமும் உள்ளன. முதல் இரண்டேடுகளில், திருவிளையாடல்புராண காப்புச் செய்யுள்கள் உள்ளன.

R. No. 2986.

வச்சிர பஞ்ச கவசம்.
VACCIRA PAÑCA KAVACAM.

Foll. 45—55. Extent, 25 granthas.

Begins on fol. 45 of the manuscript described under R. No. 2983.

Complete.

Same work as that described under R. No. 2779.

(கு-பு.)—

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு, 2779-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது. காண்க.

R. No. 2987.

சோதிட நூல்

SŌTIDA NŪL

Palm-leaf. 16¼ × 1 inches. Foll. 1—22. Lines, 5 on a page. Tamil. Injured. Old. Extent, 100 granthas.

Incomplete—Printed

Presented in 1951-52 by Sri K. Shanmugam, Kumarakkuppam, South Arcot District.

Same work as that described under R. No. 241 ante.

(கு-பு.)—

இந்நூல் மூவருடக் காட்டலாக்கு 241-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்புங் காண்க. இதில் பொதுவாகச் "சோதிடப் பாடல்" என்னும் பெயர் சூட்டப்பட்டிருப்பினும், இந்நூல் தசாபுத்திபலன் களைத் தெரிவிக்கின்றது. சிதிலமாயது. முற்றுப் பெறவில்லை. அச்சிடப் பட்டுள்ளது.

R. No. 2988.

நல்லாநங்கூர் சின்னண்ணன் பெரியண்ணன் பள்ளு

NALLĀNĀNKŪR-CINNAṆṆAN PERIYAṆṆAN PALḶU

Palm-leaf. 13½ × 1 inches. Foll. 1—10. Lines, 4 on a page. Tamil. Injured. Old. Extent, 25 granthas.

Presented in 1951-52 by Sri K. Shanmugam, Kumarakkuppam, South Arcot District.

This is a Paḷḷu on Cinnaṇṇan and Periyaṇṇan. Paḷḷu is a literary form of one of the 96 Prabandas in Tamil. Some folios are missing.

Beginning :

திருச்சிற்றம்பலம்

திருமருவு விடவருட மாடிமாதந் தன்னில்
தேதி யொன்பது நாளினில்
திரமான நட்சத்திர சோமவாரந் தன்னிற்
றெய்வ நாயகன் முருகனை

மருமருவு மலர்கொண் டருச்சனைகள்
புரியவும் வந்தனைகள் மிகச்செயவுவந்
தன்னன் இரவுதனில் யானைமீ தேறியே
வன்னிதெய் வானை யுடனே

End;

பொய்கை பாய்கை வீசுரர்
இருபை புரிய வாழ்வு பெருகியே
பூவிலாயிரம் பிறைகண் டேவளம்
பொருந்தி வாழி வாழியே. (14)

(கு-பு.)—

இந்நூல் சின்னண்ணன் நல்லண்ணன் பேரில் பாடப்பட்டுள்ள பள்ளு நூலாகும். முற்று முள்ளது. இடையிடையே ஏடுகள் இல்லை.

R. No. 2989.

உள்ளமுடையான்
ULLAMUDYĀN.

Palm-leaf. 17¼ × 1½ inches. Foll. 1—14. Lines, 8 on a page. Tamil. Injured Old. Extent, 150 granthas.

Incomplete.

Presented in 1951–52 by Sri K. Shanmugam, Kumarakkuppam, South Arcot District.

Same work as that described under D. No. 1892.

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு 1892-ஆம் எண்ணில் வந்துள்ளது, அதனைக் காண்க. இதில் விஷசயோகம் வரையில் உள்ளது.

R. Nos. 2990—2991.

Palm-leaf. 18½ × 1¾ inches. Foll. 25. Lines, 14 or 4 on a page. Tamil. V. M. Injured. Old. Extent, 400 granthas.

Presented in 1951–52 by Sri K. Shanmugam, Kumarakkuppam, South Arcot District.

R. No. 2990.

விநாயகர் பதிகம்
VINĀYAKAR PATIKAM

Foll. 1—6. Extent, 20 granthas.

Complete.

The author is not known.

Beginning :

கனக பதாம்புய வைங்கரனே
சங்கர னருளும் புதல்வா
கயமுக சுந்தர யெந்துணையா
யெக்கா லமுமே வருவார்
தனகன வஸ்திரா பரணமு
ராசசன யோக்கிய மிகவே
தந்துந் தன்னடி தொண்டுகள் செய்யச்
சதிருடனே கொள்வாய்
சனகனு முதலிய ரிஷிபூ சுரருந்
தானிதமே துதிசெய
தன்ம தயாபர வல்லபை பாகா
சண்முக சோதரனே
தினகரனும் விபுதரும் மகிழ்வெய்தத்
திருவளர் சொர்ணபுரி செழிக்கவு
மன்பர் தழைக்கவு னருள்புரி
செல்வ விநாயகனே. (1)

End :

நெஞ்சந் தனிலொரு பொழுதா யினுயான்
நீதி நினைக்கறியேன்
நேரிழை யார்மயல் இடர்கடல் வீழும்
நினைவொழி யாவறியேன்
கொஞ்சப் புத்தி யீன ரிடத்தில்
கூடிடுதற் புரியேன்
குஞ்சர முகசெக நாதா நின்பத
கோகனகங் குறியேன்
சஞ்சல முற்றும் வினைமே லிடுமது
தனைபட வோயறியேன்
சற்குண பரிபூ ரணசுந் தரவெனை
தற்காத் தருள்சிறியேன்
செஞ்சர ணந்துதி செய்சுக வாழ்வருள்
செய்வாய் சொர்ணபுரி
செழிக்கவு மன்பர் தழைக்கவு னருள்புரி (10)
செல்வ விநாயகனே.

முற்றும்

(கு-பு.)—

இந்நூல் சொர்ணபுரி விநாயகர் மீது பாடப்பட்ட பதிகமாகும். முற்று முளது. பிழைகள் உள. பாடியவர் யாரென்று தெரியவில்லை.

Tri. Cat.—26A

R. No. 2991.

கம்பராமாயணம்
KAMBA RĀMĀYAṆAM

Foll. 7—25 Extent, 380 granthas.

Incomplete—Printed.

Begins on fol. 7 (a) of the manuscript described under R. No. 2990.

Same work as that described under R. No. 431.

(கு-பு.)—

இந்நூல்,மூவருடக் காட்டலாக்கு 431-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது. இந்நூல், கம்பராமயணம் என்னும் பெயர்த்து. இதனுள், ஆரணிய காண்டத்தில் சில படலங்களும், கிட்கிந்தாகாண்டத்தில் சில படலங்களும் இருக்கின்றன. பிழையுடன் உள்ளன. இவ்வேடுகள் பெரும் நூலொன்றினின்று எடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

R. Nos. 2992—2998 (one bundle).

Palm leaf. 16¾ × 1¼ inches. Foll. 1—24. Lines, 6, 7 on a page. Tamil. injured. Old. Extent, 220 granthas.

Presented by Sri K. Shanmugam, Kumarakkuppam, Vaḷavanur Post, South Arcot District.

R. No. 2992.

பழனியாண்டவர் விருத்தம்
PAḺAṆIYĀṆḌAVAR VIRUTTAM

Foll. 1—3, Extent, 30 granthas.

Complete.

This work makes a list of various Kāvaḍis on the Holy Paḷni Hill. Appāsāmi-p-pulavar is the author's name. He has also composed some minor prayer-verses.

Beginning :

(ஆசிரிய விருத்தம்)

மலர்மகுட மோராறும் மலர்வது மோராறும்
　　மலர்சூடி கையோராறுமோர்
மலர்மதிய மோராறும் மலர்முடி யோராறும்
　　மலர்பவள வாய்களாறும்
இலகுசெவி யீராறும் இலகுகுழை யீராறும்,
　　இலகுவிழி யீராறும் நீள்
இலகுகர மீராறும் இலகுபடை யீராறும்
　　இலகுபுய மீராறு மேல்

அலர்மருவு புரிநூலு மறைநூலு மயின்மேலும்
    அன்னையர் இரண்டுபாலும்
அணிநூ புரக்காலும் வடிவேலு மாகவந்
    தடியேனை யஞ்சலென்பாய்
பலவமரர் பலமுனிவர் பலசுருதி பலமிருதி
    பலகலைகள் பகர்முதல்வனே
பழமறைசொல் வியசீல தொழுமவர்க ளனுகூல
    பழனிமலை வடிவேலனே. (1)

End :

வடிமதுக் காவடிகள் சர்க்கரைக் காவடிகள்
    மாங்கனிக் காவடிகள்நெய்
வார்த்தகா வடிகள்பல தீர்த்தகா வடிகள் பால்
    வைத்தக் கரவடிகள் நீற்று
முடிவைத்தக் காவடிகள் சந்தனக் காவடிகள்
    முழுமறைக் காவடிகள்
கற்பூர காவடிகள் சாம்பிராணியின் காவடிகள்
    நற்புழுகு காவடிகள் வருவோர்
முடியெலாங் காவடிகள் தோளெலாங் காவடிகள்
    முதுகெலாந் காவடிகள்முக்
காதவழி யகலமேள் போட யிடனின்றி
    முக்கியமயில் மீதிலேறும்
படியெலாங் காவடிகள் காவடிக ளாகவிப்
    பாரெலாம் பூசைகொண்டாய்
பழமறைசொல் வியசீல தொழுமவர்க ளனுகூல
    பழனிமலை வடிவேலனே. (10)

(கு-பு.)—

இந்நூல், பழனியாண்டவர்பேரில் ஆசிரிய விருத்தம் என்னும் பெயர்த்து. முற்று முள்ளது. இறுதிப்பாட்டில் இரண்டடிகளும், முதல் ஏடுகளில் நந்திக்கலம்பகப்பாட்டு என்று எழுதப்பட்டப் பாடல்களும், இதில் காணப்படுகின்றன. இந்த நூல், பழனி மாமலையின் மேல் ஆடும் காவடிகளின் வரிசைகளை ஆராய்ந்து தெளியப் பயன்படும். நன்றாக உள்ளது. இதனைப் பாடியவர் அப்பாசாமிப் புலவர் ஆவர். இவரைப்பற்றி பிற விடயங்கள் அறியக்கூடவில்லை யாயினும் இவர், இன்னும் சில சிறு தோத்திர நூல்களை யாத்துளார் என இந்நூல்நிலைய பிறநூல்களிலிருந்து அறிய முடிகிறது.

R. No. 2993.

வைத்தீசுவரர் பேரில் விருத்தம்

VAITTĪSVARAR PĒRIL VIRUTTAM

Foll. 4—5 to 123. Extent, 40 granthas.

Begins on fol. 4 (a) of the manuscript described under R. No. 2992.

Complete.

This is also composed by Appāsāmi-p-pulavar. Many mistakes have crept in due to the oversight of the transcribers. At the end there are two verses on Ṡeṅgaḻunīrppiḷḷaiyār.

Beginning :

கங்கைநகுத் தும்பை கூவிளை கடுக்கைபணி
கலைமதி யிலங்கு சடையும்
கனல்விளங்குங் குளக்கறுமன் பரிவீறு
கருணை சமுத்திர விழியும்
பொங்கிளமு மீன்கண்ணும் ஆடையின் கவசமும்
பொரிவில்வா புன்னங்கமும்
புகல்வளர்க் கோம்பும் மணிபூணு நாகரி
பொற்றோ லுடுத்த விடையும்

தங்குமான் மழுகபா லஞ்சூலம் பையவர்
தங்கொண்ட செங்கையு மலாற்
றவசிலுறை மாதாபங் கலனைலு நஞ்சிடாத்
தன்மைபெற நஞ்சு வைத்த
மங்கல மளக்நின் பதம்வரும் யான்கண்டு
வாழ்வுபெற வந்தருளுவாள்
வனப்பிலுறை மாகந்த புரிக்குளித மாரெந்தை
வைத்திய மகாலிங்கமே. (1

End :

தாயுதர் மதனினுறு போதுதுன் பந்தனை
தள்ளிவரல் அதிக துன்பம்
தரணிபாற் சேயென்று வளர்தல் துன்பமதிற்
சமுசார மதிகத் துன்பம்
நோயுறு துன்பந் தனந்தேடல் துன்பமாம்
நோக்கியர்க ளாசை துன்பம்
நுல்லுந்நரை திரைதுன்பம் முற்றுமதி துன்பமதில்
நுழையாத சுகமருள் செய்வாய்

தூயஞ ரானந்த் வாரியிற் சென்னந்
துவக்கா விருக்கு மன்பர்
சுயசுரூப மாய்க்கண்ட சொகசுரூப மேசுகஞ்
சொல்லறிய பேரின்பமே
மாயன்ப னறியாத வடியனே முடியனே
மாதர்படு பருவல்லனே
வனப்பிலுறை மாகந்த புரிக்குநித மாரெந்தை
வைத்திய மகாலிங்கமே (6)

முற்றிற்று.

(கு-பு.)—

இந்நூல், வைத்தீஸ்வரன் கோயிலில் குடி கொண்டிருக்கும் மகாலிங்கத்தின் மீது பாடிய விருத்தப்பாடல்கள் கொண்டதாகும். முற்று முள்ளது. நடை நன்றுகவுள்ளது. எழுத்துப் பிழைகளும், சொற்பிழைகளும் எழுதி வைத்தோரால் செய்யப்பட்டிருக்கின்றன. இதுவும் அப்பாசாமிக் கவிராயரால் இயற்றப்பட்டதாகும். இறுதியில் செங்கழு நீர்ப்பிள்ளையார்மீது பாடப்பட்ட இரு விருத்தப்பாக்கள் காணப்படுகின்றன். இவையும் நன்றுகவுள.

R. No. 2994.

இருசொல் அலங்காரம்

IRUCOL ALAṄKĀRAM

Foll 6—8 Extent, 20 granthas.

Begins on fol. 6 (a) of the manuscript described under **R. No. 2992.** Incomplete.

This is a sort of riddles, each riddle containing two phrases which require only one answer. The answer words are more or less puns or having shades of meaning. Contains some unlegar riddles.

Beginning :

ஆடு கறப்பதேன் அரண்மனை யேறுவதேன்
மடியைப் பிடித்து.
ஆடு கறப்பதேன் தர்மர் பிறப்பதேன்
குந்தி யிருந்து.
சிறிக்கி லவுக்கை போடுவதேன்
செட்டியார் பல்லக்கு ஏறுவதேன்
தனம் பெருத்து.
வரி பிரழ்வதேன் எச்சிச்சுருட்டு பொறுக்குவதேன்
போக்கத்து.
வெற்றிலை கிள்ளுவதேன் விஜயபுரம் அழிவதேன்
யேணியிட்டு.

End :

முக்காப்பணம் முழுப்பண மாவதேன்
முடவன் தண்ணிக்குப் போவதேன்
கால்கூடி
மோட்டுவளை போடுவதேன் முத்தியிட்டுக் கொள்ளுவதேன்
நல்லவளைப் பார்த்து.
யானைகுலை தள்ளுவதேன் மாதர்கொன்றை முடிப்பதேன்
சீப்பிட்டு.

முற்றுப் பெறவில்லை.

(கு-பு.)—

இந்நூல், இருசொல் அலங்காரம் என்னும் பெயர்த்து. மூன்றே ஏடுகள் உள்ளன. முற்றுப்பெறவில்லை. தொடக்கமும் இறுதியும் கிடைக்கப்பெற வில்லை. இரண்டு தொடர்களுக்குப் பொருள் ஒன்றாகக் கூறும் விடுகவிதை போன்றதொரு நூலாகும். நன்றாக உள்ளது. ஆசிரியர் பெயர் முதலியன அறியக்கூடவில்லை.

R. No. 2995.

குமாரபுரி-முத்தாலம்மன் பதிகம்.
KUMĀRAPURI-MUTTĀLAMMAN PATIKAM.

Foll. 9—14. Extent, 500 granthas.

Begins on fol. 9 (a) of the manuscript described under R. No. 2992

Complete.

By—P. C. Appāsāmi Upāttiyāyar.

The author was composed some other works. The style of the work is fine and contains beautiful imagines.

Beginning :

இந்நூலுக்கு, குமாரபுரி அரங்கை வைத்தியநாத உபாத்தியாயர் கூறிய சாத்துக்கவி.

விருத்தம்

மறைபரவுங் குமரபுரி வாழ்சலத்து
வாழியெனு மாரிக் கண்பால்
நிறைகமழுஞ் சோலைவளர் பொய்கைதனிற்
சின்னைய நாவலன்சேய் நன்காய்
நிறைமதியப் பாசாமி நாவலன்செய்
பதிக மூஞ்சல் நிகழ்த்திப் பின்னும்
அறையுமெச் சரிக்கையைக் கண்டனந்தன்
பர்தலம் புகுந்தா லறைவ தென்னே.

காப்பு

தாழ்வகன்றோர் வாழுந் தகைசேர் குமாரபுரி
வாழ்சலத்து வாழியம்மன் மாபதத்தில் சூழ்வோர்
துதிபதிக மூஞ்சல் சொல்லெச் சரிக்கைசொல
மதகுஞ்ச ரத்தினடி வாழ்த்து.

பதிகம்.

திங்களை நிகர்த்த வதனத்தின் அழகுங்
கருணை செய்யு நயனத்தி னழகுந்
திகழ்கருங் குழலிலணி யிருசுடர்ப் பிறையினொடு
திருநுதற் றிலக வழகும்

துங்கமிகு மணிமகுட மீதில்பஞ் சானனத்
துளேயெயிற் றரவின்படந்
துன்னுசுடி கையிலொளி செய்மணியி னழகுங்
குழைதுலங் கும்வள்ளைச் செவியொடுஞ்
சங்கநிகர் களமுமெழில் பவளவாயு முபைய
சைலநிகர் தனமு நளினத்
தாளமுயர் தோளுமடி யேனனு தினங்கண்டு
தரிசிக்க வந்தருள் செய்வாய்
மங்கள மிகுத்துவளர் சங்குக ளுதித்தகய
மருவுங் குமார புரியில்
வாழ்வளித் திடுசத்தி தாழ்வகற்று சலத்து
வாழிமுத் தாலம்மையே. (1)

End :

சீரோங்கு குமரபுரி வாழ்கவெந் நாளுஞ்
சிறப்புறு சலத்து வாழி
தேவிமுத் தாலம்மை வாழிகாத் தவராய
தேவனும் வாழி வாழி
பாரோங்கு விஜையமுறு மழுவா யுதங்கொண்ட
பலபரசு ராமன் வாழி
பப்பரர்க ளொட்டியர்க ளென்னுநின் சேனையும்
படைத்தலைவன் வீரன் வாழி
தாரோங்கு போத்தரசன் வாழ்வுயர் திருவிழாச்
சந்ததஞ் செய்த பேர்கள்
சந்ததி தழைத்தோங்கி வாழிநன் மழைபெய்து
தரணியெங் கெங்கும் வாழி
நீரோங்கு புலவர்களு வாழியவர் பாக்கொடு
நிறைந்த மரியாதை புரியும்
நிபுணர்கள் குபேரசம் பத்தோடு சதாயுசும்
நிலைபெற்று மிகவாழியே. (11)

முற்றிற்று.

(கு-பு.)—

இந்நூல், குமாரபுரி முத்தாலம்மை பதிகம் என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது. குமாரபுரி அப்பாசாமி உபாத்தியாயர் என்பவரால் பாடப்பட்டிருக்கிறது. நன்றாகவுளது. இவர் தம் தந்தை பெயர், சின்னைய நாவலன் என்று, அரங்கை வைத்தியநாத உபாத்தியாயரால் இந்நூலுக்குக் கூறப்பட்ட சாத்துக்கவி மூலம் அறிய முடிகிறது. இவர் மேலும், குமாரபுரி முத்தாலம்மை ஊஞ்சல், எச்சரிக்கை முதலிய நூல்களும் இயற்றியதாக அறிய முடிகிறது. அவற்றைப் பின்வரும் எண்களில் காண்க.

R. No. 2996.

குமாரபுரி முத்தாலம்மை ஊஞ்சல்

KUMĀRAPURI MUTTĀLAMMAI UÑCAL

Foll. 15–16, Extent, 20 granthas.

Begins on fol. 15 (a) of the manuscript described under R. No. 2992.

Complete.

By—P. C. Appāsvāmi Upāttiyāyar.

Uñjal is one of the 96 prabhandas in Tamil. This work contains rhythmic verses.

Beginning :

ஊஞ்சல்

உலகதனி லுயர்ந்தமணி யிழைத்துப் பொன்னு
லோங்குமெழிற் கால்நாட்டி மரகதத்தால்
இலகிய உத்தரம் நீட்டி நீல ரத்தினத்
தியற்றிய சங்கிலி பூட்டி புட்பராகப்
பலகைதனி லெழுந்தருள வடந்தொட்டீர்ப்ப
பாவையர்க ளிருபுரமுங் கவரிவீச
மலர்மகள்வாழ் குமாரபுரி தனிற்சலத்து வாழி
முத்தாலம்மையே யாடீரூசல். (1)

திங்கள்நிகர் வதனமதில் சுட்டி யாட
செறிகுழலிற் பருதிமதி வட்ட மாட
தங்கத்தி ேனுலையொடு சரியு மாட
தனமதனில் புரள்சந்திர ஹார மாட
செங்கைதனில் சங்குவளை கலீரென் றுடத்
திகழ்மேக லாபரணஞ் சிலம்பு மாட
மங்களஞ்சேர் குமாரபுரி தனிற்சலத்து வாழி
முத்தா லம்மையே யாடீரூசல். (2)

வாழி

End :

எழுதரிய மறைவாழி மறையோர் வாழி
எழிலரசர் செங்கோல்க ளென்றும் வாழி
பழுதகன்ற பூவாசிரியர் வாழ்க ஏவல்
பண்ணுகின்ற சூத்திரரும் பைங்கூழ் வாழ்க
மழைபொழிந்தே குமாரபுரி வாழ்க வென்றும்
மங்களமாய் விழாநடத்தும் மகிபர் வாழி
வழித்துணையாய் வந்தருளுஞ் சலத்து வாழி
மாரிமுத் தாலம்மையே யாடீரூசல் (11)

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், மாரியம்மன் முத்தாலம்மை ஊஞ்சல் என்னும் பெயர்த்து. முற்றுமுள்ளது. பாடியவர், அப்பாசாமி நாவலர் ஆவர். அவரைப்பற்றி மேற்கண்ட குறிப்பில் காண்க.

R. No. 2997.

குமாரபுரி மாரியம்மன் எச்சரிக்கை.

KUMĀRAPURI-MĀRĪYAMMAN ECCARIKKAI.

Foll. 17 only. Extent, 10 granthas.

Begins on fol. 17 (a) of the manuscript described under R. No. 2992.

Complete.

By—P. C. Appāsami Nāvalar.

Every complete of this work ends with the word 'Eccarikkai'. Be careful (to save me). Hence the name.

Beginning :

எச்சரிக்கை.

உலகம்புகழ் குமாரபுரி யெனவோங்கி நல்லொளிசேர்
தலமேவிய முத்தாலம்மை தாயே எச்சரிக்கை (1)

அமராபுரி நகராகிய குமாரபுரி வாழ்வோர்
தமையாண்டருள் முத்தாலம்மை தாயே எச்சரிக்கை. (2)

End :

கவினுருநற் குமராபுரி காக்குங் கௌமாரி
தவியாதருண் மழையேபொழி தாயே எச்சரிக்கை, (9)

குமராபுரித் தாயே யெந்தன் குறைதீர்த்தருள் வாயே
எமவாதனை தவிர்த்தாள்சலத் திறைவி எச்சரிக்கை. (10)

மைப்படியுஞ் சோலை மருவுங் குமாரபுரி
அப்பின்பேர் முத்தா லம்மைமேற்—செப்பரிய
முப்பான் பதிக மொழியு மடியவர்க்கே
இப்பாரிற் றுன்ப மிலை.

முற்றும்

(கு-பு.)—

இந்நூல், குமாரபுரித் தலத்துவாழும் அம்மன் எச்சரிக்கை என்னும் பெயர்த்து. முற்றுமுள்ளது. இதுவும், அப்பாசாமி நாவலரால் பாடப்பட்டதாகும். இவரைப்பற்றி மேலே எழுதிய குறிப்பில் காண்க.

R. No. 2998.

காரைப்பட்டு முத்தாலம்மை பதிகம்.

KĀRAIPPAṬṬU MUTTĀLAMMAI PATIKAM

Foll. 18—23. Extent, 50 granthas.

Begins on fol. 18 (a) of the manuscript described under R. No. 2992.

Complete.

It is doubtful whether the author is Appāsami Nāvalar or not.

Beginning :

காப்பு

சீர்வளருங் காரைநகர் தேவியெனு முத்தமமன்
ஏர்வளரு மெல்லம்ம னிவர்மீது—பார்வளரும்
பதிகம் புகலப் பரமசுத னைந்துகர
மதகுஞ் சரத்தினடி வாழ்த்து.

பதிகம்

திங்களை நிகர்த்த வதனத்தி னழகும்
கருணைசெய்யு நயனத்தி னழகும்
திகழ்கருங் குழலிலணி யிருசுடர்ப் பிறையினொடு
திருநுதற் சுட்டி யழகும்
துங்கமிகு மணிமகுட மீதில் பஞ்சாணனத்
துளையெயிற் றரவின்படந்
துன்னுசுடி கையிலொளி செய்மணி யினழகுங்
குழைதுலங்கும் வள்ளைச் செவியொடு
சங்கநிகர் களமும் எழில்பவள வாயும்
அணிசைல நிகர்தனமு நளினத்
தாளுமுயர் தோளு மடியே னனுதினங்
கண்டுதரி சிக்கவந் தருள்செய்வாய்
மங்கள மிகுத்த பணிலங்கள் தாளங்களொடு
பிணுகியின் வாமமரர்
மருமலர்ச் சோலைதிகழ் திருமருவு காரைநக
மருவுமுத் தாலம்மையே. (1)

End :

ஆதியிற் செமதக்கினி முனிவர் செய்வேள்
காய்மணற் குடமமைத் துவிகட்
வதிற்சல மொண்டுவரு நாளி லொருநாள்
வருதடிபட் டதைமுனிவர் கண்டு
ஓதிநின் புத்திரன் பரசுராமன் அன்னை
யொருநொடியி லறியென்னவே
ஓடிவந்துன் சிரங்கைக் கொண்ட தாலுலகில்
உண்மையுளதோ..............

நீதிமொழி யெண்சா ணுடம்பினிற் பிரதான
நிலைபெற்ற சிரமென்னவே
நின்றிடும் மூவருந் தேவரும் விந்திக்க
நேயமொடு காத்தருள் செய்தாய்
மாதிரமெலாம் புகழ வெனையாள வருகின்ற
மாதங்கு கருணைகரி
மருமலர்ச் சோலைதிகழ் திருமருவு காரைநகர்
மருவுமுத் தாலம்மையே
அம்மணம் பாகைதனில் செம்மனத்தவர் பரவும்
அம்மைபோ லாட்சி யுமையே.

முற்றும்.

சீருயர் வேத புராண மெண்கலையும்
செப்பிய பெரியவர் வாழி
தாருவின் வேந்தன்முதல் இருடியர்கள்
சகலமும் புகழுடன் வாழி
ஏருயர் சைவர்க்கருளு முத்தம்மை
எல்லம்மை தாள்பதம் வாழி
காரிருட் சோலை காரைமா நகருங்
கவின்மழை பொழிந்து வாழியவே.

(கு-பு.)—

இந்நூல், காரைப்பட்டு முத்தாலம்மை பதிகம் என்னும் பெயர்த்து. முற்றுமுளது. இதுவும் அப்பாசாமி நாவலரால் பாடப்பட்டதாவென்பது அறியக்கூடவில்லை. பிழைகள் உள.

R. No. 2999.

மருதூர் அந்தாதி.
MARUDŪR ANTĀDI

Palm-leaf; 16 × 1 inches. Foll. 1—26. Lines, 4 on a page. Tamil. Injured, Old. Extent, 200 granthas.

Incomplete—Printed.

Wants some Foll. in the middle.

Presented in 1951-52 by Sri K. Shanmugam, Valavanur Post, South Arcot district.

Same work as that described under D. No. 264.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 264-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்பையுங் காண்க. இதில், இடையே இருபத்திரண்டு பாடல்கள் காணப்பெறவில்லை. அவை எழுதிய ஓலைகளும் இல்லை. அச்சாகியுள்ளது.

R. No. 3000.

வைகுண்டநாதன் பிள்ளைத்தமிழ்.

VAIKUṆḌANĀTAN PIḶḶAI-T-TAMIḺ.

Palm-leaf. 18¼×1 inches. Foll. 1—51. Lines, 4 on a page. Tamil. Fair. Old. Extent, 400 granthas.

Complete—Printed.

By Tirumēnik Kāvirāyar.

Presented in 1951-52 by Sri K. Shanmugam, Kummarakkuppam, South Arcot district.

This is in praise of the god at Tiruveṇṇainallūr. The style is pleasant and good.

Beginning :

இருமைக்கு நன்மை யியம்புகேன் செய்ய
ஒருமைக் கிசைநீ யுளமே—பெருமைமுகில்
வண்ணக் கருமணியே வைகுந்த நாதனையே
எண்ணக் கருதி யிரு.

காப்புப் பருவம்

(திருமால்)

பொன்பூத்த பங்கயப் பஞ்சரப் பூங்கிளி
புனத்துழாய் மலர்வனத்துப்
போந்துவிளை யாடச் செழும்பற்ப ராகம்
புனைந்தவிள வெய்யில் காட்ட
மின்பூத்த முத்தாரம் வெண்ணில வெறிப்பமணி
மெய்யிந்திர நீல மேய்ப்ப
வெண்ணெய்ப் பதிக்குள்வாழ் வைகுந்த நாதனை
விருப்பமொடு வந்து காக்க
கொன்பூத்த சங்காழி சிலைதண்டு வாள்செங்கை
கொண்டமை குறிப்புணர்த்தக்
கோகநக நாண்மலர்ச் சேயரிக் கட்கடைக்
கூர்க்கருணை கொண்டு கொப்பூழ்
முன்பூத்த அகிலாண்ட முற்றுந் தழைப்பவாண்
முதிர்பரந் தாம மேவி
முத்திக்கு வித்தாகி யத்திக்கு முன்தோன்று
முழுமுதற் பச்சை முகிலே.

End :

(வேறு)

நல்வருண நான்கினும் மானிடவர் தந்தொழில்
நடாத்தி யுயர்புகழ் தழைப்ப
நன்மைபெறு திருமுனைப் பாடிநா டெங்கனே
நாளும்விளை செந்நெ லோங்கப்

பல்வகைய மணிகளும் சாந்துமகி லும்மலர்ப்
    பந்தியும் சிந்தி யலையில்
பாவையர்க ளுந்திவரு பெண்ணைமா நதிபுனல்
    பாந்துகுறை யாது பெருகக்
கல்விநிறை மாந்தரும் கற்புநிறை மங்கையர்
    கணங்களும் வயமைந் தர்களும்
கனகமணி மேடையும் தேவர்மங் கலவிழாக்
    கட்சி மீது நணிசிறந்து
செல்வம் வளர்வெண்ணையம் பதிதழைய மருவுமூகில்
    சிறுதேர் நடாத்தி யருளே
தேவாதி தேவை குந்தநாய கர்வாழி
    சிறுதேர் நடாத்தி யருளே. (10)

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், திருவெண்ணெய் நல்லூர் வைகுந்தநாதனைப் பற்றிய பிள்ளைத் தமிழாகும். முற்றுமுள்ளது. இதனைப் பாடியவர் திருமேனிக் கவிராயர் ஆவர். இவருடைய மற்றச் சிறப்புக்கள் அறியக்கூடவில்லை. ஆனால், இந்நூலிலிருந்து இவர் சொல்வளம், பொருள்வளம் மிக்கவர் என்று தெரிகிறது.

இந்த ஊர் தென்னாற்காடு மாவட்டத்தில் திருக்கோவிலூர் வட்டத்தில் தென்பெண்ணையாற்றங் கரையில் உள்ளது.

R. Nos. 3001-3009 (one codex).

Paper, 10×13 inches. Foll. 1—156. Lines, 24 on a page. Tamil. Good. New. Extent, 3,800 granthas.

Transcribed in 1951-52 from the manuscripts of Annamalai University, Annamalainagar, South Arcot district.

R. No. 3001.

அனுபவ வைத்தியம்

ANUBHAVA VAIDDIYAM.

Foll. 1—10. Extent, 280 granthas.

Similar to the work described under R. Nos. 566 and 573.

This work gives the names of many diseases and their remedies Methods of preparation of medicines and their intake are also dealt with herein.

Incomplete.

Beginning :

வீரம் விராகனெடை—க, சோத்துப்பு விராகனெடை—க, பொட்டலுப்பு விராகனெடை—க, படிகாரம் விராகனெடை—க, மயில் துத்தம் விராக னெடை—க, கல் சுண்ணும்பு விராகனெடை—க, போட்டு அரைத்து பில்லை தட்டிக் காயவைத்து ஒரு குடுவையில் பில்லையைப் போட்டு மேல் ஒரு மூடி மண் சிலே செய்து சமி நாள் பொறுத்து அடுப்புக்குள்ளே குழிதோண்டி மணல்போட்டு அதன் மேல் குடுவையை வைத்து மணல் போட்டு எறிவிட

* * * * * * *

End :

மாந்தத்துக்கு எண்ணை.

. . . . . மௌளவருணை சாறுபடி—வ, விளக்கெண்ணை படி—வ, வெள்ளைக்கு.—விளக்கெண்ணை படி—வ, மயிர்மாணிக்கம் சாறுபடி—வ, நிச் சுட்டி சாறுபடி—வ, பூரம் விராகனெடை, லேஹியம், வெல்லம் . . . சுக்கு, சன்ருஷ்டிரம் கண்டு பீரங்கி .. கீல் வாய்வுக்கு இயாழம் . . . சக்கை மல்லி . . . சன்ருஷ்டிரம் கண்டு பீரங்கி

(கு-பு.)—

இது நோய்கள் பல தீர்வதற்கு, அனுபவ வாயிலாகக் கண்டுணர்ந்த மருந்து வகைகளையும் அவற்றைச் செய்யும் முறைகளையும் கூறுகின்றது. உரைநடையாலாயது. முற்றுப் பெறவில்லை.

R. No. 3002.

அனுபவ வைத்தியம்.
ANUBHAVA VAIDDIYAM.

Foll. 11—20. Extent, 250 granthas.

Begins on fol 11. (a) of the manuscript described under R. No. 3001.

This work is similar to the above and deals with the medicines and their methods of production. This work seems to be Complete.

Seems to be Complete.

Beginning :

அகஸ்திய முறை.

பஞ்ச சூதக மொழுக்கு.

லிங்கம் விராகனெடை 29, பூரம் விராகனெடை 27, வீரம் விராகனெடை கவ, சுக்கு, மிளகு, திப்பிலி, சூர்ணம் விராகனிடை நேர் வாளம் விராக னெடைசா, உத்தாமணி வேர்ப் பட்டை விராகனிடைசா, மூன்று சரக்கையும், ஒரு சாமம் அரைத்து பிறகு திரிகடுகு கொட்டி, தேன்விட்டு நன்றாய் அரைத்து அதற்கு மேல் மருந்து . . . . . .

* * * * * * * *

பிறகு வாளத்தைக் கொட்டி அரைக்கவும்

* * * * * * *

End :

மேகத் தெண்ணெய்

விளக்கெண்ணெய் வீசை, பரங்கிச் சக்கை பலம், கடுகு ரோகிணி பலம், சுக்கு பலம், வாய் விளங்கம் பலமு, பூரம் விராகனெடை க—, இதைச் சூரணித்து கடுக்காய்ப் பொடியும் கத்தாழைச் சோறும், பிசைந்து அடுப்பில் வைத்துக் கொள்ளவும். சுண்டக் காய்ச்சி எண்ணெயில் கலந்து கொண்டு 3வேளைக்கு பலம், ரு நாள் சா நாள் எ நாள் கொடுக்கவும். இச்சாபத்தியம்.

(கு-பு)—

இது, மூவருடக் காட்டலாக்கு 3001-ஆம் எண்ணிலுள்ள பிரதி போன்றது. வியாதிகளின் பெர்கள், சிலமருந்துவகை, தயாரிக்கும் முறை, உட்கொள்ளும் முறை முதலான பலவும் இந்நூலுள் விளக்கமாகக் கூறப் பெற்றுள்ளன. முற்றுப்பெற்றதெனத் தோன்றுகின்றது.

R. No. 3003.

அனுபவ வைத்தியம்

ANUBHAVA VAIDDIYAM.

Foll. 21—51. Extent, 1,148 granthas.

Begins on fol 21 (a) of the manuscript described under R. No. 3001. Complete.

This work in prose deals with the human diseases and suggests practical remedies through "lambatves" and "sendūrams".

Beginning :

அகஸ்திய முறை

சுரம் மாத்திரை—லவுங்கம் விராகனெடை—க, வெங்காரம் விராகனெடை, இந்துப்பு விராகனெடை—க, விராகனெடை—க, திப்பிலி விராகனெடை—க, சீமை நெல்லிக்காய் விராகனெடை—க, மிளகு தானிக்காய் விராகனெடை—க, வசம்பு விராகனெடை—க, கோரக்கிழங்கு விராகனெடை—க, பெருங்காயம் விராகனெடை—க, குரோசனி ஓமம் விராகனெடை—க. வாய் விளங்கம் விராகனெடை—க, நேர்வாளம் சுத்தி செய்தது விராகனெடை—க, எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைக்கவும். மிளகு பிரமாணம் உருட்டவும் அனுபானம். தேனில் கொள்ளவும். ஒரு சாமம் அரைக்கவும்.

* * * * * * * *

End :

இதுக்கு தீரும்

வியாதி.—தாது விருத்தி பூரணமாய் உண்டாகும். பெருத்த உடல் சிறுக்கும் இளைத்த உடல் பெருக்கும். க்ஷயரோகம், சுவாசகாசம், நீரிழிவு, அக்கினி மாந்தம் தீரும், ஒரு நாள் ஒண்ணுக்கு ஆறு குன்றி வேணும் இது சூது கை கண்டது.

Colophon:

குருவேதுணை ; தொப்பை துணை.

(கு.பு.)—

இது, மக்களுக்கு ஏற்படும் வியாதிகள் அவை தீருவதற்கு மருந்துகள், லேகியங்கள், செந்தூரங்கள் முதலானவற்றை அனுபவ முறையில் எடுத்தியம்புகின்றது. உரைநடையாலாயது. முற்றுமுளது.

R. No. 3004.

அனுபவ வைத்தியம்.

ANUBHAVA VAIDDIYAM.

Foll. 62—59. Extent, 196 granthas.

Begins on fol. 62 (a) of the m nuscript descibed under No. 3001.

Incomplete.

This is similar to the work described above R. No. 3003.

Beginning:

வீக்கம் விஷபாண்டு கட்டி காமாலைக்கு கையாந்தகரைக் குழம்பு

கையாந்தகரைக் குழம்பு: மிளகு பலம் க, கடுக்காய்தோல் பலம் 2, திப்பிலி பலம் க, சுக்கு பலம் க, சடாமஞ்சில் பலம் க, (யி) [இ]ந்துப்பு பலம் க, கோஷ்டம் பலம் க, அக்காரம் பலம் க, * *

* * * * * *

கையாந்தரைச் சாற்றில் வெல்லங் கரைத்து அடுப்பில் வைத்து பாகு பக்குவமாக வரச்சே சூர்ணத்தைப் போட்டு துழாவி வெயி . . . . . . பெ ரிசி பொடிபண்ணிப் போட்டு கொட்டைப்பாக்கு பிரமாணம் ஒரு வேளை சாப்பிட தீரும் வியாதி ; பாண்டு, சோகை, காமாலை, விஷப்பரு, சகலமான ரோகம் தீரும்.

* * * * * * * *

End :

. . . . .இந்துப்பு, வெங்காரம், மிளகு, வாளம் இவை வகைக்குப் பலம்—க, இவையெல்லாம் கலவத்தில் போட்டு . . . . சாறுவிட்டு அரைத்து தேங்காய் போலுருட்டி மேக நீர் பெண்டுகள் செகப்பு முலைப் பால் விட்டரைத்து கொட்டப்பாக்கு அளவு . . . . . .

(கு.பு.)—

இது மூவருடக் காட்டலாக்கு 3003-ஆம் எண்ணிலுள்ளப் பிரதி போன்றது. உரை நடையாலாயது. முற்றுப் பெறவில்லை.

R. No. 3005.

அநுபவ வைத்தியம்.

ANUBHAVA VAIDDIYAM.

Fol, 70—80, Extent, 166 granthas,

Begins on fol. 70 (*a*) of the manuscript described under R. No. 3001.

Incomplete.

This is similar to the work described above.

Beginning :

தெய்வ சகாயம் . . . . .

. . . . கணபதி துணை

காலையி . . . . கோதண்டமும் கண்ணு . . கண்ணை வைத்தியர் சொல்ல வேண்டியது.

(டிபார்ட்டுமெண்டு)

பெரண்டைச் சூரணம்

பெரண்டை பலம் ௰, கறுப்புக்கொள்ளு பலம் அ, கல்லுப்பு பலம் ௪, சாயனுழிகை மோர்படி, ஒரு சட்டியில் மோரை வார்த்து யிதுகளைக் கூடப் போட்டு வேகவைத்து மோரெல்லாம் சுண்டவிட்டு . . .

End:

*   *   *   *

*   *   *   *

புண்ணுக்குப்பூண்டுயிலை, செம்முள்ளியிலை, கருமுள்ளியிலை, வில்வ யிலைச்சாறு, பேய்ச்சுரையிலை, ஆடாதோடாயிலை, கத்தாழை மடல், பேரு முட்டி, வெள்ளைப் பூண்டு யிதுவெல்லாம் . . . * * *

*   *   *   *

(கு-பு.)—

இது, மூவருடக் காட்டலாக்கு 3004-ஆம் எண்ணிலுள்ளப் பிரதி போன்றது. முற்றுப் பெறவில்லை.

R. No. 3006.

அநுபவ வைத்தியம்.

ANUBHAVA VAIDDIYAM.

Foll. 81—133. Extent, 1,425 granthas.

Begins on fol. 81 (*a*) of the manuscript described under R. No. 3001.

Seems to be complete.

Similar to the work described above.

Beginning :

பிளாஸ்திரி செய்யும் முறை

க. காச்சுவது ரேடகம்பு பிளாஸ்த்திரி :—நல்லெண்ணெ பலம் 27, செந்தூரம் பலம் 27, மொழுக்கு பலம் ரு டாமாற கொஞ்சம், பிங்கிலிங்கம் டாமாற பலம் க.

எண்ணெய் பிளாஸ்த்திரி செய்கிறது :—மொழுக்கு பிளாஸ்திரி செய்கிறது. மொழுக்கு பலம் உ, சூக கால ரேட்டு பலம் ரு. தேங்காயெண்ணெய் பலம் ந.

மாத்திரை

* * * *

End :

ஆமணக்கெண்ணெ படி க, பச்சயிலைச்சாறு படிக, கடைச்செலவு வறுத்து வஸ்திரகாயம் பண்ணவும். வெந்தியம் ஒன்று இரண்டாய் உடைத்துப் போடவும். நேர்வாளம் பலம் க, சுத்திபண்ணி எண்ணெயில் போடவும்.

* * * * *

(கு-பு.)—

இது, அனுபவத்தில் கண்ட சில வைத்திய முறைகளைக் கூறுகின்றது. மூலருடக் காட்டலாக்கு 3005-ஆம் எண்ணிலுள்ளப் பிரதி போன்றது. முற்றுப்பெற்றதெனத் தோன்றுகின்றது.

R. No. 3007

அனுபவ வைத்தியம். (பாலரோக சிகிச்சை.)

ANUBHAVA VAIDDIYAM (Bālarōga cikitsai).

Foll. 134—136. Extent, 50 granthas.

Begins on fol. 134 (*a*) of the manuscript described under R. No. 3001.

Complete.

This is similar to the work described under Nos. R. 508 and D. 1583. Deals with the diseases of the children and their remedies.

Beginning :

விநாயகர் துணை.

திருவேங்கடம் பிள்ளை பஷக்கிணாற பாலசிரகம்

பிள்ளை பார் துணை.	வேதக்கண்பதி துணை.
விநாயகர் துணை.	தெய்வநாயகர் துணை.

பிள்ளை பிறந்த முதல் நாள் முதல் மாதம் முதல் வருஷம் (ஞ) [ஊ த்தாரி யென்னும் பேய் அணுகும். அதின் குணம் : திருட்டு முழி முழிக் கும், வயிறு கழியும், காயும், மேல் மூச்சு வாங்கும், கண் மூடிக் கொண்டு இருக்கும், பேசாது. இதற்குப் (பொ) [ப] லி வெண் சோறும் கடுகும் மோரும் பிசைந்து கோழிமுட்டை உ. கொழுக்கட்டையும் வேலைக் குக் கொண்டுபோய்

* * * * *

End :

எலுமிச்சங் காயளவு பள்ளமாக்கி நவாச்சாரம் நடுவே வைத்து மேல் மூடி மண்சிலை செய்து காயவைத்து மேல் மூடி மண் சிலை செய்து காயவைத்து அடுப்பிலேத்தி ஒரு சாமம் எரிக்க பதங்கமாம். எடுத்துச் சீசாவில் வைத் துக்கொள்ளவும். பக்க சூலைக்கு அரிசியெடை தேனிலே கொடுக்கவும். ரு நாள்; ஈ நாள், எ நாள், கொடுக்கவும். தீரும். இச்சா பத்தியம்.

(கு.பு.)—

இது, குழந்தைகட்கு வரும் நோய்களையும், அவை தீருவதற்கான முறைகளையும் விளக்குகின்றது. மூவருடக் காட்டலாக்கு 508, டிரிப்டிவ் காட்டலாக்கு 1983-ஆம் எண்கள் கொண்ட பிரதிகள் போன்றது. உரை நடையாலாயது. முற்றுமுளது.

R. No. 3008.

விஷ வைத்தியம்.

VIṢA VAIDDIYAM.

Foll. 137—145. Extent, 225 granthas.

Begins on fol. 137 (*a*) of the manuscript described under R. No. 3001.

This work deals with various urinary and venereal diseases and other dangerous diseases. Remedies for them are also suggested.

Incomplete.

Beginning :

அகஸ்தியர் முறை :—மஞ்சள் வெள்ளைக்கு பூமி சர்க்கரைக் கிழங்கு கொண்டு வந்து வேட்டத் தாரணைக் கொழுந்தும் யிது காய வைத்து யிடித்து வஸ்த்திர காயம் பண்ணிக் கொண்டு மூன்று புது மொந்தையில் வார்க் கவும். சன்னி போகும்.

* * * * *

* * * * *

End :

ஒத்த தலை நோவுக்கு வத்தி.

கண்டங் கத்திரி, இலுப்பைக் கட்டி, கஸ்த்தூரி மஞ்சள், பனிக்கு சாம்பிராணி.

சிவனார் வேம்பு தைலம், சூரணம் பண்ணிக்கொடுக்கவும். இத்தாளை வேர்ப்பட்டை, வெள்ளைக் காலிமுறுக்கன் பட்டை, சீமை ஆத்தியிலே.

பாம்பு வைத்தியம்

(கு-பு.)—

இது, பலவித மேக நோய்கள், விஷக்கடிகள் முதலியவை தீருவ தற்குரிய தைலங்கள், செந்தூரங்கள் ஆகியவற்றைச் செய்யும் முறை களைக் கூறுகின்றது. உரை நடையி லமைந்தது. முற்றுப் பெறவில்லை.

R. No. 3009.

அனுபவ வைத்தியம்.

ANUBHAVA VAIDDIAM.

Foll. 146—156. Extent, 110 granthas.

Begins on fol. 146 (*a*) of the manuscript described under R. No. 3001.

This work pertains to the system of Siddha medicines. Poisonous diseases are dealt with.

Complete.

Remedy through mantras and medicines are given.

Beginning :

சித்தனு யிருப்பதற்கு யின்னங் கேளுகொஞ்சம்
செப்புகிறேன் மாத்திரையின் பெயரைக் கேளு
அத்தனாரின் கருத்தைத்தான் சர்ப்ப ராசன்
அவனியிலே உனக்குரைத்தேன் மச்ச கேந்திரா
மந்தகசந் தனைப்பிளக்குஞ் சிங்கந் தன்னை
மாரணஞ்செய் பகையேதான் சர்ப்ப ராசன்
எத்திசையு மிவன்நாமம் கேட்ட நாமம்
ஏகுமடா சிங்கமுற்ற மோகந் தானே. (ச)

தானுன மாத்திரைதான் உலகி லுண்டோ
தாரணியில் நடப்பில்லை தந்தோர்க் கெய்தும்
தேனென்ற வடமொழியில் தெளிந்து பார்த்துச்
செப்பினேன் அன்பதிணு யிரத்தி லப்பா
கோனென்ற அரனெப்போ மாத்திரையுண் டானுல்
கொடியதொரு காலனுமே வுன்பெயர் சொன்னால்
வேனென்ற பொறிகலங்கி தூரஞ் செல்ல
விரைந்தோடி யவன்பதிக்குச் செல்லொ ணுதே. (உ)

End :

காணப்பா யெக்கால மரணம் போச்சு
கல்லாக திரேகமது யிருகிப் போச்சு
பூணப்பா உலகமதில் ரோகம் போச்சு
பேசாதே வசைசேர்ந்த வார்த்தை நீயும்
வீணப்பா யிப்போதே விருது கெட்டு
வித்தையிலே வைத்தியத்தில் மேன்மை யாவாய்
வேணப்பா சர்ப்பத்தின் பாச ஞன
மேன்மையுள்ள படியுரைத்தேன் முடிவு முற்றே. (சஅ)

(கு-பு.)—

இது, சித்த மருத்துவ முறையைச் சார்ந்ததாய் பலவகை நோய்கள் பாம்பின்விடம் முதலியவற்றைத் தீர்ப்பதற்குரிய மருந்து வகைகள், மந்திரங்கள் ஆகியன பற்றி விரிவாக எடுத்தியம்புகின்றது. செய்யுள் நடையிலாயது.

R. No. 3010.

சிற்றகராதி.

CIṞṞAKARĀDI.

Paper, 10 × 13 inches. Foll. 16. Lines, 24 on a page. Tamil. Good. New. Extent, 1,600 granthas.

Transcribed in 1951–52 from a manuscript of Annamalai university, Annamalainagar, South Arcot district.

Incomplete.

This small dictionary gives the meanings for the words beginning with alphabets from 'அ' to 'இ'.

Beginning :

அகரம் = நந்திமாத்திரை, இயல்பார்ந்த அகரம். அகரம் = ஊர் அகக்காழ் = உள்வயிரம்.

* * * * *

ஆ = அதியச் சொல், இரக்கச் சொல், பசுப்பொது, பெண்பசு.

* * * *

End :

இரந்தி = கழலை, ஓர்நோய். இரவுஞ்சம் = அன்றில், கோழி, பறவை தாரம், அளவு, ஓர்மலை.

இராகம் = நீர்வாழ் பறவை. இராடம் = ஓர் தேசம்.

இராணம்=சிறு வட்டில் பிடித்தல்.

(கு-பு.)—

இந்நூலில், தமிழிலுள்ள பல திசைச்சொற்களை அகர வரிசையிலமைத்துப் பொருள் கூறப்பெற்றுளது. உயிரெழுத்துக்களை முதலாகக் கொண்ட சொற்களுக்கும், உயிர்மெய்யெழுத்துக்களில் 'கி' வரையுள்ள எழுத்துக்களை முதலாகக் கொண்ட சொற்களுக்கும் பொருள்கள் கூறப்பட்டுள்ளன. முற்றுப்பெறவில்லை.

R. No. 3011.

(௩௬)

ஸப்தரிஷி நாடி—பாகம் ஆறு

(கன்னியா லக்கினம்.)

SAPTARIṢI NĀḌI—Vol. 6.

(Kanyālagnam)

சிலேடம் நாவாகு மீரமற்றே
ஆனமுட்போற் கறுக்கில் சன்னிரோக நாவாம்
அதம்தேர்ந்த நாநிறம் நால்விதமாய்த் தோன்றும்
ஆனவில் வகையெட்டு மறிந்த பேரை
அவனிதல் பண்டிதராய் அறியச் சொல்வார்
சனமிலாப் பொறியடக்கும் பெரியோ ரன்றி
எய்தாது யாவருக்கும் இயம்புங்காலே (36)

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், வைத்தியசாரம் என்னும் பெயர்த்து. அகத்தியர் இயற்றியது. முற்றுமுள்ளது. வைத்தியம் பார்க்கப்படார்தவர்கள் யார் யார் என்றும் வாதார்த்தசிலேட்டும முதலானவைகளின் குணங்களையும் முறையே கூறிச் செல்லுகின்றது. நன்றாகவுள்ளது. இதுவும் பயனுடையதாம்.

R. No. 3411.

திருமூலர் அருளிய பண்டவுற்பத்தி
TIRUMŪLAR ARUḶIYA PAṆḌAVUṞPATTI.

Foli. 25—44, Extent 250 granthas.

Begins on fol. 25 (a) of the manuscript described under R. No. 3409.

Complete.

By Thirumūlar.

Same work as that described under R. No. 940 (k).

Beginning :

கணபதி துதி.

அந்திநிறத்தனை யானை முகத்தனை
இந்து இளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞான விளக்கைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

தேவி துதி.

தாதாவைப் போலத் தண்ணருள் கொடுப்பவள்
வேதாக மத்தின் மெஞ்ஞான மெய்ப்பொருள்
ஆதார சத்தி நல்லரிய மனோன்மணி
மாதாவின் பாதம் வைத்தேனென் சென்னியில். (1)

கருவுற்பத்தி.

சென்னியில வைத்தேற்றி நந்தி தாளிணை
மன்னிய காயம் வந்த வகையாம்
கன்னி வகுத்த கருப்பத் திருமந்திரம்
உன்னி யுரைத்தே னொருநூற் றிருபதே (2)

End :

வியாதிகள் போக வெகுநாட் டசமுறப்
பயாதித் திரைநரை பாகாற் றவர்ந்திடக்
கயாதிக் கவனம் கலந்தெங்குஞ் சுற்றிட
அயாதியா ஞானமஞ் சாகுஞ் சித்தியே. (126)

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு 940 (k) ஆம் எண்ணில் வருணிக்கப் பட்டிருக்கிறது, அதன் குறிப்புக் காண்க. இதில் பல பாடபேதங்கள் காணப்படுகின்றன. காண்க.

R. No. 3412.

அகத்தியர் அருளிய அவிழ்த சாரம்.

AKATTIYAR ARUḶIYA AVIḺDA SĀRAM.

Foll, 45—57. Extent, 120 granthas.

Begins on fol. 45 (a) of the manuscript described under R. No. 3409.

Complete.

Same work as that described under D. No. 2320.

It speaks of the diseases and their uses. Useful for the local doctors.

Beginning :

கணபதி துதி.

விருத்தம்.

ஆதியாங் கணேசன் காப்பு
 அறுநூற்றுக் கருவை யெல்லாஞ்
சோதியாம் ஆயி பாதம்
 துணையெனவும் கொண்டேத்தி
நீதியாம் திரட்டுச் சூத்திரம்
 நிலைத்தவாக டமாய்ச் சொல்லி
வாதமாம பிணிகள் தீர
 மருநதொடு குணத்தைக் கேளே. (1)

வாதம் எண்பதும் தீர சூரணம்.

வாதந்தான் யெண்ப தாகும்
 வருகின்ற பக்க வாதம்
சீதமேய் நடுக்கு வாதம்
 சிறந்திடு முடக்கு வாதம்
சூதமேய் சந்து வாதம்
 தோன்றிய முகத்தின் வாதம்
பேதமாம் வாதந் தீரப்
 பொருத்திடு மருந்து கேளே. (2)

மருந்துதான் சித்திர மூலம்
 வளருமா விலங்கு கொன்றை
திருந்திய முருங்கை சங்கு
 சிறந்த வெள்ளை சுக்குவேம்பு
பொருந்திய பெயருக்கு சுக்கு
 புகழுந் திப்பிலி மரிசங்
கருந்திய லவண மஞ்சுங்
 கால்மண் டலந்தான் கொள்ளே. (3)

End :

கூட்டிய தனிற்குழம்பு அப்பிர கத்தை
தீட்டு ரவிமுகந் தினமூன் றுலர்ந்தபின்
நாட்டி வராகம் நல்ல புடத்திலே
வாட்டி யெடுக்க மாசற்ற பற்பமே. (60)

பற்ப மினிக்கேள் பறந்திடும் நோயெல்லாம்
அற்ப மீதென்று அசடரே யெண்ணுதீர்
கற்ப மீதாக்குங் காம வினையறும்
நுட்பம தெல்லாம் நுகர்ந்தனன் முற்றே. (61)

முற்றும்.

(கு-பு).—

இந்நூல், அகத்தியர் இயற்றியதாகவும், அவிழ்த சாரம் என்றும் தெரியவருகிறது. முற்றும் உள்ளது. சிதலமாக உள்ளது. நோய்களும் அதற்குரிய மருந்து முறைகளும் அழகாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இதுவும், நாட்டு வைத்தியருக்கு நல்லதொரு பயனளிக்கும் முறையில் உள்ளது. இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு 2320-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது—தாண்க.

R. No. 3413.

தேரையர் அருளிய நோயின் சாரம்

DĒRAIYAR ARUḶIYA NŌYIN SĀRAM

Foll. 58—90. Extent, 350 granthas.

Begins on fol. 58 (a) of the manuscript described under R. 3409

Complete.

Suggests the remedies for many diseases. At the end there are some profits on the methods of Anubhava Vaithya.

Beginning :

கணபதி துதி

வெண்பா

ஆரியமாம் வாகடத்தி னுட்பொருளை யாராய்ந்து
சீரியதாஞ் செந்தமிழிற் செப்பவே—மாரியென
வெள்ளமதம் பொழியும் வேழ முகமுடைய
வள்ளலே என்மனத்து வா. (1)

(அரத்தையை நாவிலிட இருமல்
ஆக்கிராணிக்க பீனிசம் சளி தீரும்.)

வாவெனவே சிலேட்டுமத்தால் வந்த இருமல்களும்
போவெனவே நாவிலிடிற் போகுமே—பாவனையாய்
வாக்கான பீனிசமு மமகத்தஞ் சளியும்போம்
ஆக்கிரணஞ் செய்யி லரத்தை. (2)

வாதசுரம் தீர கியாழம்

அரத்தை சதகுப்பி சுக்ககான நொச்சிச்சாற்றில்
அரைத்திழையக் காச்சி யருந்த—வருத்தத்
தலைவலி சுனரு மேற்றந் தன்னுடனே வாதசுரங்
குலைகுலைந்து போகுமெனக் கூறு. (3)

End :

பல்வலித் தீரக் கொப்பளிக்கும் யோழம்

பருக்காரை சுக்கு மந்தநதோல் வெள்வேல்
எருக்கா வரைபிரம்போ டேழும்—நறுக்கிட்டு
நாலி......க்காச்சி நாற்பதுநாள் கொப்பளிக்கப்
பாலன்பல் லாங்கிழவன் பல். (132)

கல்லடைப்புத் தீர மருந்து

கக்குஞ் சிறுபூளை காளெரிஞ்சி மாவிலங்கை
விக்கும் பெருமுட்டி வேர்தனி லொக்கவே
கூட்டிக்........ட்டுக் கொள்ளவே கல்லடைப்பு
காட்டிக் கழன்றோடுங் காண். (133)

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், தேரையர் அருளிய நோயின் சாரம் என்னும் பெயர்த்து முற்றும் உள்ளது. சிதலமாகி சில விடத்துக் காணப்படுகிறது. பற்பல நோய்கள் தீர்வதற்கு மருந்து வகைகளைக் கூறிச் செல்லுகின்றது. இதுவும் பயனளிக்கும் நூலாகும். ஆய்ந்து கொள்க. இதன் பின்னே, ஏழு ஏடுகளில் அனுபவ வைத்திய வசன முறைகள் காணப்படுகின்றன.

R. No. 3414.

பிரம்ம தர்க்க நிச்சயம்.

BIRAMMA TARKKA NICCAYAM.

Foll. 4 only. Extent, 100 granthas,

Complete.

Begins on fol. 43 (a) of the manuscript described under R. No. 3198 ante.—

Transcribed in 1951–52 from Ñāniyār mutt, Cuddalore, South Arcot district.

The author condemns the differentiations made on account of caste and religion saying that they are useless and helpless for attaining the mōkṣā. From this work his generous views are known.

Beginning :

காப்பு.

குரைகழற் குண்டைத்தாட் குகற்குமுன் தேவராய்
வரமுளத்தெண் ணுவர்க்கருளு மாமுக—காமுட
னோங்காரக் கணபதிதா ளுளங்கருதி டும்படியா
தங்கழல்கள் போற்று வாம். (1)

அரிபிர மனுமுன மடிமுடி காண்கவன்
றெரிதரும் பேரொளித்தே சத்தாகுமவ்—வொருபெருஞ்
சோதியை யுளத்தில் வைத்துயர் திரிபுர
வுமைகழற் சிந்தைசெய் வரம். (2)

வன்னியின் முன்றுண மாய்ந்தார்
வரவழைத் தவரை பின்று
ஞன்னருஞ் சோதிக் கம்பந்
தழுவியு முளங்க ளிப்பத்
தன்னிக ரில்லாக் காளி
தனைப்புணர்ந் தருணே வாழு
முன்னரு நமச்சி வாய
னுபையதாள் வணக்கஞ் சேர்ப்போம். (3)

* * * *
* * * *
* * * *
* * * *

பிரம கற்ப நிச்சயம்

சாற்றும் வருணம் பிராமண
ராதியா யோதுஞ் சாதிநான்கி
னேற்ற மறையோ ரென்ப தெவ்வாறு
வந்தணரே யியம்பு வீரே.
சாற்றும் வருணந் தேகஞ் சீவனுமோ
சாதியோ கருமமோ சாத்திரப் பண்டிதமோ
யேற்றமது ஞானமோ தான மாமோ
வேணவிதத்தி லிவைபிரம மியம்பு வீரே. (5)

End :

உருவாய வன்னமய மாதி பஞ்ச
கோசமொன் றென்றாய் நீங்கியதை யுணரறிவுதானு
இருவர்தனை கணீங்கி சகல கேவலமு
மிராப்பக லிலாத நிட்டையினிலி ராதிருந்தே
யொருவிலா நிரதிசயா னந்த மேவும்
புண்ணிய ரெச்சமய சாதிகளி லேனு
நிருபாதி கப்பிரம வாருதியின் மூழ்கு
நிலைமையரே பிரமகுல நிகழ்த்திடவுந் தகுமால். (22)

(கு-பு.)—

இந்நூல், பிரம்மதர்க்கநிச்சயம் என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது. சிவ சண்முக மெஞ்ஞான தேசிகரால் (ஞானியார்) இயற்றப்பட்டதுபோலும். சாதிசமய உயர் வெல்லாம் இம்மையுலகத் தோடன்றி, வீட்டின் "முததி நிலையடைவதற்குக் இடையாது" என்ற உட்பொருளை எடுத்து உவமை

கொண்டு, உலகினர்க்கு உணர்த்துவதாக அமைந்து பாடப்பட்டுள்ளது. நன்றாக வுள்ளது. இதனால் இவ்வாசிரியரின் உள்ளக்கிடக்கையும் பொதுமை நோக்கமும் புலனாகும்.

R. No. 3415.

அருள் வர்மம்.

ARUḶVARMAM.

Foll. 8. Extent, 100 granthas.

Complete.

Begins on fol. 47 of the manuscript described under R. No. 3198.

Transcribed in 1951-52 from Sri Ñāniyar mutt, Cuddalore, South Arcot district.

Similar to the above work. It speaks of the benefits of varmapūja. The above work and this relate to Virasaivāgamā. This might have been written by Sivasaṇmuga Meiñānasvāmikaḷ.

Beginning :

அருள்வர்ம வுண்மையெனு மத்துவிதா னந்தமுற
யருள்வர்ம நீக்கியரு ளமர்குரவ னைப்பணிவாம்.

சிவலிங்கா காரத்திற் சிற்சத்தி பரையாதி
நவலிங்கா சத்தியொடு ஞானங் கிரிகையுமே. (1)

அர்த்தநா ரீசுர ரெறன்னைபிதா வொருவர்
யர்த்தஞ் சொலுப்போ லும்மாக விளங்கியதே. (2)

பொன்னிழையு மணியொளிபோற் புகல்சத்தி சிவமானுற்
பின்னமதென் றுன்னியதைப் பேச வறியேனே. (3)

End :

இவ்வா றருள்வர்மத் தொன்றுயப் பூசைசெய்வோ
ரொவ்வர்ம மருள்வாமத் தே ரைய னுகுவரே. (111)

கலி வெண்பா.

மருள்வாமி நேச மருவா தொழித்தற்கே
திருநூறு மெண்ணிருபத் தென்று—மருள்செய்யக்
கோவிலில்வாழ் ஞானகுரு வாறுமா தேவர்தன்
சேவடியைச் சிந்தனைசெய் வோரே.

அருள்வர்ம உண்மை விளக்கம்

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், அருள்வர்ம வுண்மை விளக்கம் என்னும் பெயர்த்து. இதுவும் மேல்வந்த நூலோடொத்ததே. இதில் வர்ம பூசை செய்யும் பயன் கூறப்பட்டுள்ளது. மேல்வந்த நூலும் இதுவும், வீரசைவ சமத்தைப் பற்றியன. சிவசண்முக மெஞ்ஞான தேசிக சுவாமிகள் இயற்றியது போலும். ஆய்ந்து கொள்க.

R. Nos. 3416–3419 (one volume).

Paper, 12¾ × 10 inches, Pages, 24, Lines 24 on a page. Tamil, good, old Extent, 500 granthas.

Transcribed in 1951–52 from Sri Ñāniyār mutt, Cuddalore South Arcot district and Tamil Saṅgam, Madurai.

R. No. 3416.

பராக்கிரம மாலை.

PARĀKKIRAMA MĀLAI.

Pages, 1—12, Extent, 130 granthas.

Complete.

The 6 titles of Lord Sundaresvarar of Madurai are spoken of, in the prayerful attitude, in 64 virutta songs. The style and diction are good.

Beginning :

பற்றுசை யாகப் பணிவார் தமக்கன்று பாக்கியமும்
முற்று முகிழ்முலை மங்கையர் போகமும் முற்றமிழைக்
கற்று றுறவுங் கதியுங் கொடுக்குங் கவின்மதுரைப்
பொற்று மரைக்கரைச் சித்தி விநாயகன் பொற்பாதமே. (1)

குடக்குஞ் சிறுபிறை கொன்றை மந்தாகினி கொங் நவன்னி
விடக்குஞ் சரவொடு வெண்டலை மாலைவெண் கொக்கிறகுங்
இடக்குஞ் சடைச்சொந்த ரெண்ணெண் பராக்கிரம கீர்த்திகொள்
கடக்குஞ் சரமுகச் சித்தி விநாயகன் காப்பெமக்கே. (2)

[2, 3 ஆகிய இரண்டேடுகள் இல்லை].

விசுவசேனன் நிக்கிரக விசயம்

தாமரை யான்றலை யோட்டி லிரக்கப் பிச்சாடனராய்
பூமகள் மார்ப னிடத்தினி லேசொல்லப் போழ்பொழுதில்
யேமம தாம்விசுவ சேனனைச் சூலத்தி லேயெடுத்தாய்
பாமகள் போற்றும் தமிழ்க்கூடல் வாழும் பராக்கிரமனே. (13)

End :

அம்பிகை வில் விசையம்

தேனூர் குழலுமையாள் எதிர்யோரிற் சினத்தெழுந்த
யாளுத வாளிக ளெய்து வென்றும் அளவாரி யுண்ட
கோளுருங் கோதண்ட டீசர் குருவன்று கும்பிடவே
பாளுறு வாய்ப்பிள்ளை பாடிய கூடற்பராக் கிரமனே (64)

விராட்புருடன் சிரமேல் வாழுங் கூடல் விமலனெங்கோன்
அராப்பணி வேணியனெண் ணெண்டிரு விளையாடல் செய்தோன்
சராசர மெங்கு நிறையுஞ் சருவ தயாபரன்மேற்
பராக்கி ரமமாலை படித்தால் வருங்கன பாக்கியமே. (65)

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் பராக்கிரம மாலை என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது. மதுரை சுந்தரேசர் மீது பாடப்பட்டிருக்கிறது. தோத்திர வடிவில் மதுரைச் சொக்கநாதப் பெருமான் அறுபத்துநான்கு திருவிளையாடல்களும் அறுபத்து நான்கு விருத்தங்களாகப் பாடப்பட்டுள்ளன. நடை, சொல்லாட்சி நன்றாகவுள.

R. No. 3417.

ஞான வெண்பா.

ÑĀNA VEṆBĀ.

Pages, 13—39. Extent, 200 granthas.

Complete.

Begins on page 13 of the manuscript described under R. No. 3416 ante.

Speaks of the glory of pañjāṭcara and mentions the simple path to mōkṣa through the four-fold path of Sariya, Kriya, yōga, and ñana pities the gross ignorance of the mass who go astray.

Beginning :

வெட்டாத சக்கரம் பேசாத மந்திர மேலொருவற்
கெட்டாத புஷ்ப மிறையாத மஞ்சன மினியொருவர்
கட்டாத லிங்கங் கருதாத நேசங் கனவிலுமே
முட்டாத பூசை யென்றே குருநாதன் மொழிந்தனனே. (1)

குருவே துணை.

தன்னை யறிவித்தான் தானேதா னெனபிரான்
என்னை யறிவியல் பிற்றான்—பின்னையொரு
தேவாரங் கண்டிலேன் தென்னன் பெருந்துறையான்
வாவாவென் றாண்ட வழக்கு. (1)

மெய்க்குரு வைத்தேடு வெறித்த வெளிகாட்டும்
பொய்க்குருவைத் தேடிநீ போகாதே—நெக்குருகு
நாணுமல் நாடுங்கால் நடுவெளியி லேநிற்குங்
கோணுமற் கோணுங் குறி. (2)

End :

எட்டெழுத்தும் பத்தெழுத்தும் ஏழெழுத்து மஞ்செழுத்து
தொட்டெழுத்தி னூடே தொடர்பெழுத்தும்—இட்டரிய
பாதந் தனைத்தேடி பத்திசெய்ய மாட்டாமல்
வேதம் படிப்பதெல்லாம் வீண். (133)

(கு-பு.)—

இந்நூல், ஞான வெண்பா என்னும் பெயர்த்து. இதில் முற்றும் உள்ளது. பஞ்சாட்சரமகிமையினுலும், சரியை கிரியா யோகத்தினுலும் முத்தியடையும் வகையினையும், உலக மக்கள் வீணே உழல்வதன் காரணத்தையும் எடுத்துக் கூறிச் செல்லுகிறது. நன்றாக உளது. கடலூர் ஞானியார் மடத்திலிருந்து வந்த ஏட்டிலிருந்து பிரதி செய்தப் பிரதியாகும்.

R. No. 3418.

நாதாந்தத் திறவுகோல்.
NĀTĀNDA-T-TIṚAVUKŌL.

Pages, 40—62, Extent, 200 granthas.

Complete.

Begins on page 40 of the manuscript described under R. No. 3416.

Same work as that described under D. No. 1516.

End :

(கட்டளைக் கலித்துறை.)

செகடமாய் கைநீக்கிப் பின்சிற்பர மாய்கைச் செயலகத்தி
யகமாய் கையாகிய யாணவமும் மலமாவி தல்லாகு
சுகமான துக்கச் சுதந்தர மான சூடகற்றி
மகமான பேரொளி பாதார விந்தத்தை மன்னிநிலவே. (99)

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், நாதாந்தத் திறவுகோல் என்னும் பெயர்த்து: முற்றும் உள்ளது. டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 1561–ஆம் எண்ணில் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்பைக் காண்க. அதில் முதல் பாகமுள்ளது. இறுதிப்பாகம் அதில் இல்லை. ஆதலின் இதில், அது மட்டும் கொடுக்கப் பட்டுள்ளது. இந்நூல், முத்திநிலையடைய விருபுவோர் செயத்சகும் கருமங்களை விளக்கிச் சொல்லுகின்றது. ஆசிரியர் இன்னார் என்று அறியக் கூடவில்லை. செய்யுள் நடை நன்றாக வுள்ளது. படித்துணர்ந்து கொள்ளத் தக்கதொரு நூலாகும்.

R. No. 3419.

பேரைக் கலம்பகம்.

PĒRAIK KALAMBAKAM.

Pages 63—84, Extent, 300 granthas.

Complete.

Begins on page 63 of the manuscript described under R. No. 3416.

Transcribed in 1951-52 from a manuscript of Madurai Tamil Saṅgam, Madurai.

The style is beautiful and contains poetic hits and rhythms. Author is not known. Hitherto unpublished.

Beginning :

காப்பு.

செவிதொறுங் கனிந்த செந்தேன்
    றெளிந்தசொற் றவறுண் டென்னும்
புவியுகந் தெடுத்த பேரைப்
    புகழ்க் கலம் பகத்தைக் காக்கப்
பவவிலங் கறுத்த புள்ளின்
    பாகனைத் தொடர்ந்து பற்றிக்
கவிமதம் பொழியுஞ் ஞானப்
    பராங்குசக் களிறு தானே.

விருத்தம்.

மழைக்காவல் புரந்துலகந் தழைப்ப நீதி
    மன்னவர்செங் கோலளிபப மறைநூல் வாழக்
குழைக்காதர் கலம்பகமென் றொருபேர் நாட்டிக்
    கொழித்ததமிழ் சுழித்தெடுத்துக் கூறும் பாடல்

உழைக்காவ லடிதொடை சீர்தளை மாருடல்
　　ஒருபொருட்டு மொவ்வாத தெனினு மின்சொற்
பிழைக்காக விகழ்வரோ பெரியோர் ஞானப்
　　பெருமானறன் றிருநாமம் பயிற்றக் காலே.

தரவு.

பூமாது நலம்பெருக்கப் புவிமாது வளஞ்சுரப்பத்
தேமாலே புனைந்தேத்தித் தேவர்களுந் தலைகுனிப்ப
நீதியரும் பியகருணை நின்றபுனலா நூற்றெட்டு
வேதியருந் திருப்பேரை வியனகருந் தழைததோங்க

* * * *

* * * *

* * * *

இது சுரிதகம்.

வெண்பா

மாகவலைப் பட்டழிந்து மங்கைமார் தங்களனு
போகவலைப் பட்டமனம் போதாதோ—நாகவணைக்
கோன்புரக்கு நேமிக் குழைக்காத தேயடியேற்
கான்புரக்கு மோவொருகா லம். (1)

End :

விருத்தம்

பதித்த நவரத்தின மணிவாழி
　　பங்கயபபூந் திருமுகஞ் செம்பவள வாய்கள்
கதித்தசீர் வாணுதல் வெண்டிரு மண்காப்புக்
　　கத்தூரித் திலதமிகு கண்கள் வாழி
துதித்தநறும் பசுந்துளவத தோள்கள் வாழி
　　கரிமுகச்சங் காழிகதை வில்வாள் வாழி
மதித்த பீதாம் பரஞ்சே ரரைனூர் வாழி
　　சரணங்குழைக் காதர்மால் வாழிதானே. 100

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், பேரைக் கலம்பகம் என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது. நடை நன்ருகவுள்ளது. இது வரையில் அச்சிடப்படாதது. பாடியவர் பெயர் முதலாயின அறியக்கூடவில்லை. செய்யுள் நயமும், சொல்லின்பமும் உண்டாகுமாறு பாடப்பட்டிருப்பது போற்றத்தக்கது.

R. No. 3420.

சிவானந்தயோகி சரித்திரம்
SIVĀNANDA YŌHI CARITTIRAM

Paper, 10 × 12¼ inches. Pages 1—82 Lines, 24 on a page. Tamil, good, new. Extent, 2,000 granthas.

Incomplete.

Only 2 addhiyāyas.

Transcribed in 1951-52 from a manuscript of Ñāniyār muṭṭ, Cuddalore, South Arcot district.

This is otherwise known as Sivānanda Ganēsar Purānam Aṇṇāmalaik Kavirāyar is the author. The later part of this work is missing.

Beginning :

சிவானந்த கணேசர் புராணம்.

காப்பு.

தேவர்க டேவன் மூன்று செஞ்சுடற் கண்ண நீதி
மூவரு மிறைஞ்சுஞ் சோதி முழுமுதன் மாது பாகன்
மேவரு முயிர்க டோறு மிருப்பினும் விளங்கித் தோன்றாக்
காவலன் யாவ னன்றேன் கழலிணை வணக்கஞ் செய்வாம். (1)

பராபரை யிமைய வல்லி பரசிவ னிடத்து வைகும்
புராதனி தெருளாக் கன்னி புவனகோ டிகளை யீன்றுஞ்
சராசர மனைத்துங் காக்குந் தருமத்தின் தலைவி மாதர்
சுராதிபர் பரவுந் தெய்வத் துணையடி வணக்கஞ் செய்வாம். (2)

* * * * *

* * * * *

நிருமலனுஞ் சிவானந்த யோகி
யிமபுரம் புக்கு நிரையத் தூடு
மருவினரைப் பிரணவ பஞ்சக் கரத்தாற்
சிவகதியில் வைத்த காதை
யிருகுலத்திற் கேட்டோருங் கதியடையச்
செந்தமிழா லியம்பல் செய்தான்
கருதரிய பல்வளங்கூர் பேரையண்ணா
மலைக்கவிஞன் கவிஞர் வேந்தே. (4)

பாயிரம் முற்றும்.

முதலாவது

புண்ணிய பாவவிய லுரைத்த அத்தியாயம்.

பொன்னெடுஞ் சடில மணியொளி விரப்ப
புண்டர மதிக்கதிர் பிறப்ப
வன்னருத் திராக்க மாலிகை புயமேல்
வயங்கமற் றெதிர்வரக் கண்டோர்
இன்னலும் வினையும் திசைதிசை யிரிய
விறைவினஞ் செழுத்தொரு வடிவாஞ்
சென்னெறித் தவத்துச் சூதமா முனிவ
னைமிசா ரணியத்தைச் சேர்ந்தான். (1)

End :

மைவரை யென்னவு மலிந்த பேரிருள்
வெய்யொரு வடிவமாய் முதிர்ந்த தென்னவு
மைவரை விழுங்கிடத் தோன்று மாலத்தின்
வைவடி வேயென மருவுங் கோபுரம். (187)

மட்டற வோங்கு கோபுரத்து வாயிலிற்
கட்........ளதுயரொ... ....திறக் கேட்கவே
நிட்டையி லுயிர்ந்தவ னின்று ளோனெனச்
சிட்டமா தவரொடுஞ் சூதன் செப்பினன். (188)

இரண்டாவது இமபுரம் புகுந்த அத்தியாயம்.

முற்றும்.

ஆகத் திருவிருத்தம் 446.

திருச்சிற்றம்பலம்.

மூன்றாவது தென்புலத்தார் சிவகதியடைந்த வத்தியாயம்.

(கு-பு.)—

இது சிவானந்தயோகி சரித்திரம் என்னும் பெயர்த்து. நூலினுள் தலைப்பிலே சிவானந்த கணேசர் புராணம் என்று காணப்படுகிறது. முதலாவது, புண்ணியபாவ வியல் புரைத்த அத்தியாயம், இரண்டாவது இமபுரம் புகுந்த வத்தியாயம் ஆக இரண்டு பகுதிகளே இதில் உள்ளன மூன்றாவது தென் புலத்தார் சிவகதியடைந்த வத்தியாயம் என்று எழுதப்பட்டுள்ள தலைப்பைத் தவிர வேறு காணப்படவில்லை. இதனை இயற்றிய வாசிரியர் அண்ணாமலைக் கவிராயர் என்று பாயிர இறுதிச் செய்யுளால் அறிய முடிகிறது. பிற பகுதிகள் எங்குள்ளனவோ, அறிதற்கரிதாகவுளது. இந்நூல், கடலூர் ஞானியார் மடத்திலிருந்த ஓலையைப் பார்த்து எழுதப்பட்டப் பிரதியாகும்.

R. Nos. 3421—3422 (one bundle)

Palm leaf, 17 × 1¼ inches. Foll. 1—67. Lines, 7 on a page. Tamil and Telugu, injured, old. Extent, 4,400 granthas.

Presented in 1951–52 by Sri Rampicerala Bhattaru, Srinivasachariyalu, Ákulamanadu, Gudur Post, Krishna district.

R. No. 3421.

திருமந்திரார்த்தம்.
TIRUMANDIRĀRTTAM.

Foll. 1—56. Extent, 4,100 granthas.

Incomplete—Printed.

Same work as that described under R. No. 54 ante.

(கு-பு.)—

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு, 54-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்புக் காணக. அச்சிடப்பட்டுள்ளது.

R. No. 3422.

திருமந்திர ப்ரகரணம்.
TIRUMANDIRA PRAKARAṆAM.

Foll. 57—67. Extent, 300 granthas.

Begins on fol. 57 (a) of the manuscript described under R. No. 3421.

Complete—Printed.

Wants beginning and end.

Same work as that described under D. No. 815 ante.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 815-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்புக் காண்க. மணிப்பிரவாள நடையிலமைந்தது. அச்சிடப்பட்டுள்ளது.

R. No. 3423

வில்லி பாரதம் (பொழிப்புரையுடன்)

VILLI-BĀRATAM (POḺIPPURAIYUḌAN)

Palm leaf, 15 × 1¼ inches. Foll. 381. Lines, 8 on a page. Tamil, injured, old. Extent, 7,500 granthas.

Incomplete—Printed.

Presented in 1952-53 by Sri P. M. R. Nathan. Negamam, Pollachi.

Same work as that described under R. No. 558 ante.

(கு-பு.)—

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு, 558-ஆம் எண்ணில் வந்துள்ளதைப் போன்றதே. அதன் குறிப்புக் காண்க. இதில், களப்பலிச் சருக்க முதல் கொண்டு, 16-ஆம் போர்ச் சருக்கம் வரையில் உள்ளது. பொழிப்புரையுடன் கூடியது. முற்றுப் பெறவில்லை. சிதலமாகியது.

R. Nos. 3424—3430 (one bundle).

Palm leaf, 12 × 1 inches. Foll. 1—83. Lines, 4 on a page. Tamil, injured, old. Extent, 400 granthas.

Presented in 1952-53 by Sri V. K. Desikapillai, Ramāniyakūḍam High Road, Sriperumpudūr, Chingleput district.

R. No. 3424.

பலவகைப் பாடல்கள்.

PALAVAKAIP PĀḌALKAḶ.

Foll. 1—20. Extent, 50 granthas.

Complete.

Contains many occasional verses of various poets. Some of them have been include in the previous works of the same name and there are many poems hitherto unpublished. They are provoking fine thoughts and contain beautiful rhythms.

Beginning :

திருப்புகழும் நல்வாக்கும் செய்யதன் வாழ்வும்
அருள்புனித வித்தையும் அன்பாய்—பெருத்துணர்
எந்நாளு மேதருவாய் எந்தை சரஸ்வதி
பொன்னுளை என்னறிவில் பூண்டு.
வாடிப் பசித்து வாரியொழுக வாலாட்டி
மேடத்தை பார்த்துநிற்கும் வேங்கிடமே—கூடத்து
கம்பவள மாவன்றுன் காசினிக்கும் வெண்ணெக்கும்
செம்பவள மாவன்றுன் சேர்.

End :

பேரத்தி லேற்றிமதன் வாணர்க் கஞ்சிப்
புகழ்ந்த என்னை
காரத்தி லேற்றிநீலக் கருங்கட லேற்றி
கதிற்ற கொங்கை
ஆரத்தி லூந்தி சுழியாத்தி லேற்றி
விரக வல்குல்
தேரத்தி லேற்றி வாழ்விற்ற மானை
எப்போ கண்டு சேருவனே.

(கு-பு.)—

இந்நூல் பலவகைப்பாடல்கள் என்னும் பெயர்த்து. தனிப்பாடல் திரட்டில் வந்துள்ள பாடல்களில் சிலவும் இதில் காணப்படுவதால், பழையனவும், இதுவரையில் அச்சில் வாராதனவுமாகவுள்ள தனிப்பாடல்கள் இதில் நிரம்பியுள்ளன. அவைபடிக்கப்படிக்க இன்பந்தரவல்லன. ஆய்ந்து கொள்ள நல்லன். இவை போன்று தனிப்பாடல்கள் என்ற பெயரினும் பல வகைத் தனிப்பாடல்கள் இந்நூல் நிலேயத்தில் உள்ளன. ஆதலின், அவை தேர்ந்தெடுத்துக் கொள்ள, வெளிப்படுத்த நன்று.

R. No. 3425

திருமூலர் தத்துவக் கட்டளை.

TIRUMŪLAR TATTUVAK KAṬṬAḶAI.

Foll. 21—31. Extent, 45 granthas.

Begins on fol. 21 (a) of the manuscript described under R. No. 3424.

May be Complete.

Same work as that described under D. Nos. 1374—1378 ante.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 1374—1378 ஆகிய எண்களில் வருணிக்கப்பட்டிருக்கின்றது. அவற்றின் குறிப்புக்களைக் காண்க.

R. No. 3426.

சுந்தரானந்தர் ஆயிரத்தில் கேசரிவித்தை ஐம்பத்தாறு.

SUNDARĀNANDAR ĀYIRATTIL KĒSARIVIDDAI IMPATTĀṞU.

Foll. 32—48. Extent, 175 granthas.

Begins on fol. 32 (a) of the manuscript described under R. No. 3424.

Complete.

Same work as that described under D. No. 2643 ante.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 2643-ஆம் எண்ணில் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்பைக் காண்க. இதில் முற்றும் உள்ளது.

R. No. 3427.

சுந்தரானந்தர் பர மூலிகைப் பாடல் (அல்லது) விநோத சூத்திரம் முப்பத்தாறு.

SUNDARĀNANDAR PARA MŪLIKAIP PĀḌAL (OR) VINŌTA SŪTTIRAM MUPPATTĀṞU.

Foll. 49 — 64. Extent, 200 granthas.

Begins on fol. 49 (a) of the manuscript, described under R. No. 3424.

Complete.

Same work as that described under R. Nos, 168 (a) and 2441 ante.

(கு-பு.)—

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு, 168 (a), 2441 ஆகிய எண்களில் வருணிக்கப்பட்டிருக்கிறது. அவற்றின் குறிப்புக்களைக் காண்க. இதில் முற்றும் உள்ளது. ஆனால், பெயர் மட்டும், "பர மூலிகைப் பாடல்" என்று எழுதப்பட்டுள்ளது. காரணம் தெரியவில்லை. இறுதியில் மூன்று ஏடுகளில் அன்றில் வித்தையும் எழுதப்பட்டுள்ளது.

R. No. 3428.

ரோம ரிஷி சாத்திரம் இருபத்தைந்து.

RŌMA RIṢI SĀTTIRAM—25.

Foll. 65 — 71. Extent, 75 granthas.

Begins on fol. 65 (a) of the manuscript, described under R. No. 3424.

Complete.

Same work as that described under R. No. 280 (y) ante.

(கு-பு.)—

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு, 280 (y)-ஆம் எண்ணில் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிபபுக் காண்க. இதில் முற்றும் உள்ளது.

R. No. 3429.

மச்சமுனியார் பாடல்.

MACCAMUNIYĀR PĀḌAL.

Foll. 72—74. Extent, 25 granthas.

Begins on fol. 72 (a) of the manuscript described under R. No. 3424.

Incomplete.

Same work as that described under D. No. 1967 ante.

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 1967-ஆம் எண்ணில் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்பினைக் காண்க. இதில் வெறுமனே, "மச்ச முனி பாடல்" என்று காணப்படுகிறது. ஆனல், உள்ளேயிருக்கும் பாடல்கள், "மச்சமுனியார் பெருநூல் எண்ணூறு", என்னும் நூலில் கண்ட பாயிரச் செய்யுள்களாக உள்ளன. பத்துப் பாடல்களே யுள்ளன. முற்றுப்பெறவில்லை.

R. No. 3430.

திருவரங்கக் கலம்பகம்.

TIRUVARAṄKAK KALAMBAKAM.

Foll. 75—83. Extent, 65 granthas.

Begins on fol. 75 (a) of the manuscript described under R. No. 3424.

Incomplete—Printed.

Same work as that described under D. No. 291.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 291-ஆம் எண்ணில் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதனை குறிப்புக் கண்டுகொள்க. இதில் ஆறு பாடல்களே உள்ளன. அவற்றிற்கு உரையும் காணப்படுகிறது.

R. Nos. 3431—3434 (one volume).

Paper 12¾ × 10 inches. Pages, 1—70. Lines, 24 on a page. Tamil, good new. Extent, 800 granthas.

R. No. 3431.

அரிகவசம்.

ARI KAVASAM.

Pages, 1—8. Extent, 80 granthas.

Complete.

Restored in 1952-53 from a manuscript described under D No. 800.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 800-ஆம் எண்ணிலிருந்து பிரதி செய்து வைக்கப்பட்டதாகும். அதன் குறிப்புக் காண்க.

R. No. 3432.

அறிவிளக்கம்.

ARIVIḶAKKAM.

Pages, 9—22. Extent, 170 granthas.

Begins on page 9 of the manuscript described under R. No. 3431.

Complete.

Restored in 1952-53 from a manuscript described under D. No. 801.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 801-ஆம் எண்ணிலிருந்து எடுத்துப் பிரதி செய்து வைக்கப்பட்டதாகும். அதன் குறிப்புக் காண்க.

R. No. 3433.

பெரிய புராண சாரம்.

PERIYA PURĀṆA SĀRAM.

Pages, 23—52. Extent, 250 granthas.

Begins on page 23 of the manuscript described under R. No. 3431.

Complete.

Restored in 1952-53 from a manuscript described under D. No. 623.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 623-ஆம் எண்ணிலிருந்து எடுத்துப் பிரதி செய்து வைத்ததாகும். அதன் குறிப்புக் காண்க.

R. No. 3434.

எக்காலக் கண்ணி.

EKKĀLAK KAṆṆI.

Pages, 53—70. Extent, 300 granthas.

Begins on page 53 of the manuscript described under R. No. 3431.

Complete.

Restored in 1952-53 from a manuscript described under R. No. 912 (b).

(கு-பு.)—

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு, 912 (b)-ஆம் எண்ணிலிருந்து எடுத்துப் பிரதி செய்து வைத்ததாகும். அதன் குறிப்புக் காண்க. இந்நூல், இந் நூல்நிலைய ஆண்டு சஞ்சிகையில் (Bulletin) வெளிவந்துள்ளது காண்க.

R. No. 3435.

கூர்ம புராணம்.

KŪRMA PURĀṆAM.

Paper, 10 × 12¼ inches, Foll. 1—804. Lines, 24 on a page Tamil, good, new. Extent, 8,000 granthas.

Complete—Printed.

Restored in 1952-53 from a manuscript described under D. No. 2470.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 2470-ஆம் எண்ணிலிருந்து எடுத்துப் பிரதி செய்து வைத்ததாகும். அதன் குறிப்புக் காண்க.

R. No. 3436.

சிவகங்கைச் சரித்திர அம்மானை.

SIVAKAṄKAI-C-CARITTIRA AMMĀNAI.

Paper, 12¼ × 10 inches, Pages. 1—310. Lines, 24 on a page, Tamil, good, new. Extent, 3,100 granthas.

Complete—Printed.

By Muthuswāmi, son of Mutthuveerappan.

Transcribed in 1952-53 from a manuscript of Madurai Tamil Sangam, Madurai.

This has been printed by this library deals with the strife between the two persons nam d Cinnamarudu and periamarudu and the East India Company and the death of the former two.

Beginning :

காப்பு

சீருயர் சீமை தன்னில்
சிறப்புடன் தேவர் வாழும்
தீர்க்கும் பினியார் முன்னர்
சென்னைமா நகர மேவி
ஓரது குடைக்கீழ் சூழ்ந்த
உலகம்ஆள் நீதி தன்னை
காருமென் னம்மா னைக்குக்
குஞ்சர முகத்தோன் காப்பாம். (1)

வாந்தமாய் சீமை மீதில்
வளரும்கும் பினியார் தாமும்
சிந்தியின் கரையில் வந்தே
விலங்கிய சென்னை மீதில்
பாந்தமாய் குடிகொண்டிப் பாரில்
பதிமுழு தடைவே ஆளும்
வேந்தர்கள சிறபபை நன்ருய்
விரித்துரை பகர்வேன் பூவில். (2)

பாயிரம்

சென்னைமா நகர்மீ துற்றுச்
செனித்துவாழ் துரைகள் தாமும்
நன்னக ரடஙகச் செங்கோல்
நடத்திவாழ் மகிழ்ச்சி தன்னைத்
தென்னவர் புகழ்ந்தே வாழ்த்தி
தேசமேல் விளஙக வென்றே
வின்ன பேதஙக ளின்றி
விரித்து வம்மானை சொல்வேன். (3)

End :

சீர்சிறந்த சித்திரபானு வருடம் சிறந்த
சிஙகமாச மாறனுசோ ராந்தேதி
போர்புகழுங் குருவார மத்தநட் சத்திரம்
துதியைதிதி தனுசுலக் கினத்தில்
பார்புகழும் பாஞ்சைநகர் மூதது வீரப்பன்மகன்
முத்துச் சாமி பண்புடைய
போர்புகழுங் கும்பினியார் அம்மானைக்குப்
பிரதியொன் றெழுதி முடிந்ததுவே. (120)

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், சிவகங்கைச் சரித்திர அம்மானை என்னும் பெயர்த்து. முற்று முள்ளது. முத்துச்சாமி என்னும் புலவரால் இயற்றப்பட்டது. இவருக்கு, "செல்முருகு" என்னும் பெயரும் வழங்கும்போலும். சின்னமருது, பெரியமருது என்னும் இருவர், கும்பினியாரிடம் சண்டை விளைத்து மாண்டதைப்பற்றி விளக்கிக் கூறுவது. இது இந்நூல்நிலையத்தில் அச்சிடப் பட்டுள்ளது. இதுபோன்ற, வேறு கும்மிமெட்டில் ஒன்றும் உள்ளது. அந் நூலும் அச்சிடப்பட்டுளளது. கண்டுகொள்க.

R. No. 3437

சிவகங்கைச் சரித்திரக் கும்மி.

SIVAKAṄKAI-C-CARITTIRAK KUMMI.

Paper, 12¼ × 10 inches Pages, 1—182. Lines, 24 on a page. Tamil, good. new. Extent, 3,000 granthas.

Complete—Printed.

By Muttu-c-cāmip Pulavar. Transcribed in 1952–53 from a manuscript of Madurai Tamil̲ Saṅgam, Madurai.

This helps one to know the history of palayakkars to some extent. This is similar to the above work both in contents and metre.

Beginning :

சீர்புகழுஞ் சேதுநகர் அரசரைச் சேர்ந்த
  சிவகங்கை நகரை முன்னாள்
பேர்புகழும் கௌரிவல்ல வேந்திர ராசன்
  பிரபலன் அரசாட்சி செய்ததுவும்
போர்புகழும் கும்பினி யார்கள் வந்து
  பொல்லாத மருதிருவரைச் செயித்ததுவும்
பாருலகில் கும்மிப்பாட் டுரைக்கப்
  பார்வதி மைந்தன் பதம்போற்றி.

* * * *
* * * *
* * * *

தஞ்சமென் றனுதினம் போற்றி செய்யும்
  தாசன் முத்துச்சாமி சொன்ன கும்மி

* * * *
* * * *

End :

சீராகப் பாடிய கும்மித் தமிழைச்
செந்தமி ழோர்கள் கிருபைசெய்து
பேரு விளங்கிட மனது வைத்து
பிழைகள் திருத்தி யருள்புரிவீர்.

* * *

* * *

ஆதிமக மேருமுதல் வரைகள் வாழி
அம்புவியி லுதித்தவுயிர் அதுவும் வாழி
மேதினியில் சிவகங்கை நகரரசு வாழி
மேன்மேலும் அவரரசு விளங்க வாழி.

(கு-பு.)—

இந்நூல், சிவகங்கைச் சரித்திரக் கும்மி என்னும் பெயர்த்து. முற்றுமுள்ளது. பாடியவர், மேல்வந்த நூலைப் பாடிய முத்துச்சாமி என்பவரே. மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து வந்த ஏட்டினைப் பெயாத்து எழுதப்பட்ட பிரதியாகும் இது. அச்சிடப்பட்டுள்ளது. சின்னமருது, பெரியமருது என்று இருவரும் கும்பினியாரிடம் சண்டைபோட்டு இறந்த செய்தியினை விளக்கிக் கூறுகிறது. நன்றாகவுள்ளது. இதனால், பாளையக்காரர் வரலாறு ஒருவாறு அறிந்துகொள்ள இடமுண்டாகும்.

R. No. 3438

பழனிக்கோவை (இரண்டு பகுதிகள்)

PALANIK KŌVAI (TWO VOLUMES)

Paper. 12¼ × 10 inches. Pages, 1—220. Lines, 24 on a page. Tamil, good, new. Extent, 1,200 granthas.

Complete.

Transcribed in 1952-53 from a manuscript of Madurai Tamil Saṅgam, Madurai.

Contains 400 verses as other Kōvais, depicting the beautiful dramatic scenes of making and living in love. It follows the famous first Kōvai of Mānikkavācagar. The author is not known. Not yet published.

Beginning :

இறையனார் அகப்பொருள் விளக்கம்

இயற்கைப் பாங்க னிடந்தலை மதியுட
னிருவரு முள்வழி யவன்வர வுணர்தல்
முன்னுற வுணர்தல் குறையுற வுணர்தல்
நன்னிலை நாண நடுங்கல் நாட்ட
மடற்குறை நயப்பு வழிசேட் படுத்தல்
இடமிகு பகற்குறி யிரவுக்குறி யேயாங்

* * * *

* * * *

காட்சி

நீர்தாங்கு சைவலஞ் செவ்வல்லி தாமரை நீலமுத்த
மேர்தாங்கு சங்குமிழ் உந்திபொன் கொண்டொ........ல் வல்லி
சீர்தாங்கு கந்தா திருவாவி னன்குடிச் செஞ்சுனைபொற்
கார்தாங்கு கூர்மம் வா.........ண்டார் வோடும் கண்ணுற்றதே.

மதிவாணுதல் வளர்வஞ்சியைக்
கதிர்வேலவன் கண்ணுற்றது.

மெய்ப்பாடு—உவகை, பயன்—மகிழ்தல். (1)

கழறியுரைத்தல்

புடவியுண் டாலற் றுயில்வோன் மருகா மெழிற்பழனி
மடவிமென் கொங்கையைக் கூந்தலைக் கண்ணை மயங்கிவெற்பு
மடவியும் வேலையு மாக்கிநின் சிந்தையை யாற்றல்செல்லா
முடவனு மாக்குதற் கோவள்ளல்நீ கற்ற மூதறிவே. (22)

அருமை கேட்டறிதல்

வானிட்ட வில்லைப் பசுங்கரும் பாமென்று மத்தகயந்
தானெட்ட மட்டுங்கை நீட்டுதல் போலத் தளர்திகண்டாய்
யானிட்ட வன்புக் கருள்வேள் பழனியன் றுளிதழ்ச்செந்
தேனிட்ட கொங்கைப் போகமுந் தேர்ந்தெண்ணித் தேம்புநெஞ்சே. (198)

End :

(இரண்டாம் பாகத்தில் உள்ளது.)

ஊதியமெடுத்துரைத்து ஊடல் தீர்த்தல்

திருமகள் சீர்மைக்குங் கல்விக்கு மாலயன்... டெண்புலவோர்க்
கருணமிகு மிந்திரன் பாணர்க்குக் கூடலா னீரவொருக்
கிருணிதி வையாபுரிக்க......தாதாட் கிருவான போதியத்
தொருமுனி சுற்ற மைந் திற்கு மைந் தாருநம் மூரனுமே,

வாயி லுள்ளவர் தாமன்னனைப் புகழ்ந்து
சேயிழை யூடறீர்த்து வழ்த்தியது.

மெய்ப்பாடு—உவகை, பயன்—தலைவனையும் தலைவியையும் மகிழ்வித்தல். (400)

பழனிக்கோவை

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், பழனிக்கோவை என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது. 400 பாடல்களும் உள்ளன. பாடியவர் இன்னார் என்று அறியக்கூடவில்லை. நடை நன்றாகவுள்ளது. இரண்டாம் பகுதியின் இறுதியில் காணும் பாட்டால், மாணிக்கவாசகர் பாடிய திருக்கோவையாரைப் பின்பற்றிப் பாடப்பட்டதாகவும், இறையனாரகப் பொருளுரையில் காணும் பழனிக் கோவை எனவும் ஆகிய செய்திகள் காணக்கிடைக்கின்றன. மூலச்சுவடி

சிதலமுற்றிருந்ததால், பாடல்களில் அங்கங்கே புள்ளிகள் வைக்கப்பட்டு எழுதப்பட்டுள்ளன. இந்நூல், மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து வந்த ஓலைச்சுவடியைப் பிரதி செய்து வைத்ததாகும். இதுவரையில் அச்சிடப் பட்டதாகத் தெரியவில்லை. ஆதலின், ஆய்ந்துணர்ந்து அச்சியற்ற நல்ல தொன்றாகும்.

R. Nos. 3439—3442 (one volume)

Paper. 12½ × 10 inches. Pages, 1—62 Lines, 24 on a page. Tamil, good. new. Extent, 300 granthas.

Transcribed in 1952–53 from a manuscript of Ñāniyār mutt, Cuddalore, South Arcot district.

R. No. 3439

திருவிளக்குத் தோத்திரம்.

TIRUVIḶAKKUT TŌTTIRAM.

Pages 1—16. Extent, 150 granthas.

Co nplete.

This work and Akarādi Viḷakkam found herewith have been written by the transcriber in a hap hazardous manner so that close end vigilant reading is required while studying them.

Beginning :

திருநாவுக் கவிராயர் முதனு கோவற் குயர்கடவுள்
பெரியானைக் கணபதியி னிந்நூ மணப்பணிகள் கூறிய
சுரர்முனி களும்பெரி தெனுமுயர் கதியினைத் தாரேமென்
னருளுருவ மாமாறு முகனடி பணிகுவாம்.

திருமல்லி கார்ச்சுனத் தேவர்பெய ரணிஇன்ற
சென்ன சந்ததி தேசிகர் செப்புய வலயதேவர்
பெரிது மாயோ ரோடுதெக் கணதேச ரேமணம்
வருபோது கொங்கு தளிரெலாங்.... ாங்கயவதிபாயண்ணுடி
முதன்மூவரும்.

* * *

* * * *

End :

கோவல்லி சட்டகுரு வருளாலே விளங்குந்
தேவரெனு மாறுமுக தேசிகர்தம்—மாவாலயத்
செய்தவத்தை யீன்றசிவ சண்முக வாசகனை
செய்குவ தென்றே தெளி.

* * * *

* * * *

ஆகத் துதிப்பாடல் 21.

திருவவதார மாதியான திருவருள் விளக்க தோத்திரம்.

திருச்சிற்றம்பலம்.

அகராதி விவேக விளக்கம்.

* * * *

* * * *

(கு-பு.)—

இந்நூல், திருவிளக்குத் தோத்திரம் என்னும் பெயர்த்து. நன்றாக இருக்குமெனத் தோற்றுகிறது. ஆனால், எழுதினோர் முன்பின்னாக, விருத்தப்பாக்களை எடுத்து எழுதியுள்ளமையால், எந்தப் பாடலும் திருத்தமாகப் படிக்க முடியா நிலையில் உள்ளன. இதன்பின்பு, அகராதி விளக்கம் என்ற நூலும் காணப்படுகிறது. அதுவும் அந்நிலையை யுடையது. ஆதலின், ஆய்ந்துணர்ந்துகொள்ள நன்று. இறுதியில் வெற்றேடு மூன்று காணப்படுகின்றன.

R. No. 3440

பரமாட்சி என்கின்ற ஆகமம்.

PARAMAṬCI ENKINṞA ĀKAMAM.

Pages, 17—22. Extent, 30 granthas.

Begins on page 18 of the manuscript described under R. No. 3439.

Complete.

This prose work deals with a part of Āgama. Mistakes abound in it.

Beginning :

பிரசாத பரமாட்சி என்கின்ற வாகமத்துக்குத் தமிழுட்டவணை. பிரசாதமென்கின்ற சொல்லுக்குப் பொருள்—பிறவென்ற சத்தம் சிவஞானம். சதாவென்ற சத்தம் வீட்டைச் சொல்லு மதாவென்ற சத்தம் சிவரூபம. இந்த மூன்று பதத்தினுலு முடிந்த பொருள் சிவஞானத்திலே சாயுச்சியத்தைக் கொடுக்குமென்றறிக. இதற்குப் பிரமாணம் சித்தாந்த சேகரமென்னு மாகமத்திறகண்டுகொள்க.

இனி, இந்தப் பிரசாதமென்கின்ற மந்திரோட்சாரணத்துக்கு சுழிமுனை நாடி பிரமாணமாகையால் நாடிச் சக்கரத்தை சருக்கததிலே சொல்லு.

* * * *

* * * *

* * * *

End :

இனி, நாலு பிரகிருதத்துக்கும் வடிவு, வியாபினிக்கும் சமனைக்கும் நடுவிலே, விரோமரூபினியணை—தையணுதை யனுகிருதை ஆகிய நாலுக்கும் இவ்விரண்டாக, இவ்வொன்றுக்கொன்று புள்ளி வடிவமாக இருக்கும். இனி இருதயந் தொடுத்துப் பிரமந்திரமட்டாக அஞ்சுதானத்திலுங்களை முதலாகிப் பத்து ஆரணத்து வரவுநிற்கு நிலையருளிச் செய்கின்றார்.

(கு-பு.)—

இந்நூல், பரமாட்சி என்கின்ற வாகமம் என்னும் பெயர்த்து. உரைநடையாலாயது. ஆகமத்தின் ஒரு சிறு பகுதியை எடுத்து விளக்கிக் கூறுகிறது. எழுத்துப் பிழைகள் மலிந்துள.

R. No. 3441.

பதிபசு பாச அட்டவணை.

PATI PASU PĀSA AṬṬAVAṆAI

Pages, 22—50. Extent, 300 granthas.

Begins on page 22 of the manuscript described under R. No. 3439.

Comp'ete.

Useful for those whc do Tattva Vichāra. This contains anotations from such Saiva works as Sivadharumōttiram. The author is not known.

Beginning :

வணக்கம்.

சிவதருமோத்திரம்.

இந்திரன் புயத்துற வாத மீடினன்
சந்திரன் சயோறகந் தரித்துச் சாம்பினன்
மைந்தனு முடவனென மற்றை யோரெவர்
மெந்த வாறுட லெடுத்திரப் படாதவர்
காலையு மலத்திறுற் கடையது துன்பமே
சாவவும் பசியினுற் றளர்வ ருச்சியின்
மாலையிற் காம மீதூர வாடுவர்
வேலைக டோறுந்துயர் விளையும் விஞ்சியே.
—என்று வருவனவற்றுக் காண்க.

இனி ஆத்மாவானது எக்கால மிந்தத் துன்பங்களை நீங்குங் காலமென்னில், ஆசிரியர் அனுக்கிரகத்தினாலே தேகாதி பிரபஞ்சங்களை அநித்திய மெனக் கண்டு, ஆணவ கன்மங்களையும் அறிந்து நீங்கிச் சிவனது ஞானத்தாலே தன்னையும் கண்டு தனக்குத் தலைவனாகிய சிவனையும் தெரிசித்து சிவனது சீர்பாதங்களை யடைந்தக்காலம், ஆத்மாவுக்குப் பிறவித் துன்பமும் மனக்கவலையும் நீங்குமென்றறிக.

End :

தானந்த மில்லான் றனையடைந்த நாயேனை
யானந்த வெள்ளத் தழுத்தி வைத்தான்
காணேடி யானந்த வெள்ளத் தழுத்துவித்து
வானுந்து தேவர்கட்கே திருவடிகள்வான்பொருள்காண் சாழலோ.

—என்றுவருவனவற்றுற்காண்க.

(கு-பு.)—

இந்நூல், பதிபசு பாச அட்டவணை என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது. சிவதருமோத்திரம் முதலாய பிற சைவ சித்தாந்த நூல்களி லிருந்து பிரமாணம் எடுத்துக் கூறி விளக்கிச் செல்லுகிறது. தத்துவ விசாரணை நடத்துபவர்கட்கு இந்நூல் மிகப் பயன்படத்தக்கதாகும். இதை இயற்றினூர் இன்னுரென்று அறியக்கூடவில்லை. ஞானியார் மடத்தி லிருந்து வந்த பிரதியைப் பார்த்தே இதுவும் எழுதிவைக்கப்பட்டுள்ளது. காண்க. பிழைகள் உள்ளன.

R. No. 3442

சுகசனக சம்வாதம்.

SUGAJANAKA SAMVATAM

Pages, 51—62. Extent, 50 granthas.

Begins on page 51 of the manuscript described under R. No. 3430.

Complete.

Translated into Tamil.

Transcribed in 1952-53 from a manuscript of Ñāniyār mutt Cuddalore, New Town.

This is a translation from the Sanskrit work Ehandōgya Upanished As the most translated works this has also been written in an inehastent simple language. The translator's name, place, etc. are not known.

Beginning :

ஸ்ரீ சுகசனகாதியாளுடைய சம்வசத்தை நிரூபித்து......சுகரைச் சனகர் நீர் யாரய்யா வென்று கேட்டார். சுகரான சொரூபம் என்று உத்தாரம் சொன்னூர். சொரூபம் எப்படியென்று ராசா சுகர் வாருமிராசாவே! கேளும்! அகண்ட சச்சிதானந்த பரிபூர்ணமாய் வாங்க மனசு கோசரமுமாய் சகலப் பிரபஞ்சாதார திட்டான மூலமாய்* * * * * * * * * * * * * * * *

End :

இந்தச் சுக சனக சம்வாதம் சாந்தொக்கிய வுபநிடத்திற் சொல்லப்பட்ட அந்தக் கதை பிரகிருதபாண்டியனூலே சவுபாக்கியம் சொன்னூர். இந்த சாஸ்திரம் சகலமான பேரும் படித்து இறுதாரத்தாரகம். திருச்சிற்றம் பலம் சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகன் திருவடி வாழ்க.

(கு.பு.)—

இந்நூல், சுகசனகசம்வாதம் என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது. வடமொழி நூலான சாந்தோபாக்கிய வுபநிடதத்திலிருந்து இந்நூல் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. மொழி பெயர்ப்பு ஆசிரியர் இன்னாரென்று தெரியவில்லை. நன்றாக உளது.

R. No. 3443.

வேதாந்தசாரத் திரட்டு.

VĒDĀNTA SĀRAT TIRAṬṬU.

Paper, 12½ × 10 inches. Foll. 1—102, Lines, 24 on a page. Tamil, good, new, Extent, 2,500 granthas.

Complete.

Transcribed in 1952-53, from a manuscript of Ñāniyār mutt, Cuddalore, South Arcot district.

This is a compilation of very important verses called out from various Vēdāgama books by Śivashaṇmuga Meiñāna dēsika Svāmikaḷ The list of such books is given in the beginning verse. The verses have been wrirtten by the transcriber in the prose form.

Beginning :

வேதாந்தசாரத் திரட்டு.

குறிகுணங்கள் கடந்தனிக் கூத்தனுரு
வெழுத்தஞ்சின் கொடுவா ளோச்சிப்
பொறிகரணக் காடெறிந்து வீசிமனப்
புலந்திருத்திப் புனிதஞ் செய்து
நிறைசிவமாம் விதைவிதைத்துப் பசுபோதங்
களைந்தருணன் நீர்கால் பாய
வறிவுருவாய் விளைந்ததனிப் பரானந்த
வமுதருந்தா தருந்தி நின்றார். (1)

சூக்க மாகுமஞ் செழுத்திற் சுற்றிய பாசம்
வீக்கி நீக்கிமெய் யானந்தம் விளைநிலத் துய்த்துப்
போக்கு மீட்சியுட் புறம்பிலாப் பூரண வடிவ
மாக்கி ஞானொரு தீப கம்போல்வரு மண்ணல். (2)

அத்தி முகனடி
சித்தி திருவொடு
நித்த நினைபவர்
முத்தி பெறுவரே.

பராபரமா யறிவரிதா யகண்டா காரப்
பரஞ்சுடராய் முதலடுவீ றளவொப் பிலராய்
நிராமயமாய் சசிதா னந்த சுத்த நித்தபரி பூரணமாய்
நிலநீ ராதி சராசரமாய் தத்துவா தீதமாகிச்
சம்புவா யேதிருத்த மின்று யொன்றாய்
புராதனமா யனைத்து மாயன்றாய் நின்றோன்
பொற்பாத மெப்போதும் போற்றல் செய்வாம்.

சத்திபரை யாதியிச் சாசத்தி ஞானசத்தி
கிரியா சத்தி சமனையுமுன் மனைபல
சத்தியாய்ச் சின்னிரோ தவத்திய ராணியாய்ச்
சார்ந்தநாதன் ஞானந் தவத்து மயமாய்
நித்தநிராதரா நிருவிகார ரருட்களமா நிரந்தர
நிற்குண நிராலம்ப நிர்வய வாமா
யத்தனரு ளதிசெயு மக்கிராதியம ப்ரவஞ்சம்
சிந்துலமா மறுதியா மன்னையடி பணிவாம். (2)

திருவளர் சருவாதீத மாயுயர்சற்
சிற்சுக நித்த பூரணமாய்
விரியுமெய் பொருளுமா யலவாய்
மெய்வினை சிவத்தொனி யருளுருவாய்க்
கருதொரு நலமிலா துழலெனையுங்
கருணையா லாண்டரு ளித்த
பொருவினற் கோவலாறு மாமுகன்றன்
பொற்பாதம் வணங்கி வாழ்த்திடுவாம். (3)

இவை இறையருள் குருவணக்கங்கூறியது

மீருதி புராண மாதிநூன் மதநூல்
விளங்கருசாத் திரரங்க மகாயத்
திரிவில வாக்கிய மெண்ணுன் குபனிடதமுஞ்
சிரமதாம் வேதமு ளுயர்ந்த
விருடிகள் மார்விரித்த தாதலி னுலினிய
தாய்வேத மெக்க லேக்குஞ்
சுருதி யைவிரித் தாகம மிறையே
துணியிவை யிரண்டுமெய் யென்றே. (4)

இவை வேதாகமச் சிறப்புரைத்தது.

End :

திருமிகு மெவற்றி னுயர்வதாய்ச் சற்சிற்
சுகசீவப் பேரொளி யருளே
யரியவை ராக மாதியோ ருருவா
மாறுமா முகஷடி வாழ்க
பொருவில் வேதாந்த சாரநற் றிரட்டைப்
புகன்றநற் பிரமவா ருதியாம்
பெரியவம் பலவா ணய்யர்தன் பதமும்
பெரியர்தன் னடிகளும் வாழ்க.

வேதாந்த சாரத் திரட்டு நிறைந்து முற்றும்.

பாசிவாற்பணமஸ்து.

திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

இந்நூல், வேதாந்த சாரத் திரட்டு என்னும் பெயர்த்து. முற்று முள்ளது. நன்றாகவுள்ளது. பலப்பல வேதாகமங்களை விரித்துக்கூறும் நூல் களிலிருந்து எடுத்துப் பொறுக்குமணி யெனத்திகழும் பாடல்களைத்தொகுத் தது. தொகுத்தவர், சிவசண்முக மெஞ்ஞான தேசிக சுவாமிகளாவர். இந் நூலின் முதலில் என்னென்ன நூல்களில் இருந்து எடுத்துக் கோவைப் படுத்தப்பட்டனவென்பதற்குரியதாகிய நூல்களின் அட்டவணையொன்று எழுதப்பட்டிருக்கிறது. பாடல்களை முறைப்படி எழுதாமல், வசனநடை போன்று எழுதப்பட்டிருக்கிறது. இது எழுதினோரால் ஏற்பட்ட பிழை யெனக் காண்கிறது.

R. No. 3444.

வீரட்டேசுரர் புராணம்.

VĒRAṬṬĒSURAR PURĀṆAM

Paper, 10× 12½ inches, Foll, 1—79. Lines, 24 on a page. Tamil, good, new Extent 2,000 granthas.

Complete.

Transcribed in 1952-53 from a manuscript of Ñāniyār mutt, Cuddalore, South Arcot district.

Contains nine Sarkās and 354 viruttams. The author is not known. Vīraṭṭānam is one of the eight places where Lord Siva performed the most heric deeds. It is on the banks of Keḍila river. Tirunavukkarasar got his realization there and lived there for a long time. The style is good.

Beginning :

சிவமயம்.

முதலாவது கயிலாயச் சருக்கம்

காப்பு.

எண்ணிலா உயிர்கடந்த நான்முகனு
மேழிரண் டுலக முடையவனும்
விண்ணிலா யிரங்கண் வேந்த னுதியரு
விரும்பிய பொருளெலா மளிக்கும்
எண்ணிலா மகட்பூ உந்தியந் தடத்தி
லுதித்தவெண் மரைமல ரொக்குந்
தெண்ணிலா வெறிக்குஞ் செஞ்சடை யண்ணல்
திருக்கயி லாயருள் சிலம்பு.

என்பது. கயிலாயத்தினுடைய மகிமையைச் சொல்லுமிடத்தில் பூலோகத்திலே அளவில்லாத சிவகோடிகளைப் படைத்த பிரம்மதேவனும் ஈரேழு பதினாலு லோகங்களையும் எடுத்துண்ட மகாவிஷ்ணும் அமராவதி பட்டணத்தையாளும் ஆயிரங்கண்களையுடைய தேவேந்திரன் முதலாகிய முப்பத்திமுக்கோடி தேவர்களு மனத்தினாலே விரும்பி வேண்டிய பொருள்களை யெல்லாங் கொடுக்கும் பின்னையு மந்த கயிலாசமலையெப் படியிருந்ததென்றால், பிரகாசமான பூமாதேவியினிட அழகிய நாபிஸ்தான்மான தடாகத்திலுண்டாகிப் பூத்த வெள்ளைத்தாமரைப் புஷ்பம் போல் விளங்கியிருக்குங் குளிர்ந்த சந்திரன் பிரகாசிக்குஞ் சிவந்த சடாதரத்தையுடைய பரமசிவம் வாழ்ந்திருக்கும் நீண்ட திருக்கைலாயமலை என்றவாறு.

வேறு

புண்ணி யக்குவை பொடிகளை முழுமையும் புனைந்து
நண்ணி யக்கமா மணிபல வணிந்துயர் நாட்ட
மெண்ணி யக்கணி யீசர்நம் மேலிருந் தருளப்
பண்ணி யக்கண தவமெனக் கயிலையாம் பதலை. (2)

வேறு

மடல்வீழ் குமுத வெண்மதி யுதித்தலால்
உடல்பசை யாமை சங்கரியு மோங்கலால்
அடலர வணைதலால் அமுத மோர்பாற்
கடலென விளங்கிய கயிலை மால்வரை. (3)

End :

வரத்தினை தங்கட் கீய்ந்த
வானவன் மகிழ்ந்து வைகுஞ்
சிரத்தல மதிகைத் தெய்வத்
திருநகர் விடுத்து மற்றப்
புரத்தமுப் புரத்தான் மோதிப்
புடைத்திடித் தழித்து நாளுஞ்
சரத்திநின விசையா யெங்குஞ்
சஞ்சரித் தார்க ளன்றே.

என்பது, திரிபுராதிய ரிப்படிப்பட்ட வக்கிரமங்களைச் செய்து வாகாசத் திலே பறந்து திரியப்பட்ட மூன்று கோட்டைகளுடனே திடீரென்று வீழ்ந்து, உலகத்திலே உண்டாயிருக்கப்பட்ட கோட்டை கொத்தளங் களையும் நாடு நகரங்கள் நொறுங்கிப்போக அழித்துக்கொண்டு வரும் போது இந்த திருவதிகாபுரி பட்டணத்தை மாத்திரம் அழிக்கவில்லையாம் அது, எதனாலே யென்றால், முன்னாலே தபசு பண்ணின தலமானபடி யினாலேயும் வரங்கொடுத்தவதிகாபுரி வீரட்டேசுரரெழுந்தருளியிருக்கிறபடி யினாலேயும் இந்தத் திருவதிகாபுரிப் பட்டணம் நீங்கலாக, மற்றப் பட்டணங்களை யெல்லாம், முப்புரங்களான மூன்று கோட்டைகளைக் கொண்டு மோதியிடித்துப் பொடியாய்ப் போகவழித்துக்கொண்டு நாள் தோறும் அம்பினுடைய விசைபோலே பொங்குஞ் சஞ்சாரம் பண்ணிக் கொண்டு இருந்தார்கள் திரிபுராதிகளென்றவாறு. (31)

திரிபுராளுயுத்தச் சருக்கம் முற்றும்.

ஆகச் சருக்கம் 9-க்கு பாயிரம் உள்பட செய்யுள் திருவிருத்தம் 354.

முற்றும்.

(கு·பு.)—

இந்நூல், வீரட்டேசுரர் புராணம் என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது. கயிலாயச் சருக்கம், அதிகைமான்மியச் சருக்கம், வீரட்ட லிங்கோற்பவச் சருக்கம், கெடிலமான்மியச் சருக்கம், திருவிழாச் சருக்கம், பிரம்ம தேவர் பொய் சொன்ன தோஷம் நீங்கினச் சருக்கம், திரிபுராளுற்பவச் சருக்கம், திரிபுராள் தவஞ் செய்த சருக்கம், திரிபுராளு யுத்தச் சருக்கம் முதலான ஒன்பது சருக்கங்களைக் கொண்ட, 354 திருவிருத் தங்களை உடையது. பாடியவர் பெயர் முதலாயின அறியக்கூடவில்லை. அட்ட வீரட்டங்களில் திருவதிகைவீரட்டமும் ஒன்று. இது கெடிலநதிக் கரையில் உள்ளது. சிவபெருமான் முப்புராதிகளை இவ்விடத்தில் வென்றதாகச் சரித்திரம் கூறுகிறது. இங்கே ஆண்டாண்டுதோறும் இந்த விசேடத்தை முன்னிட்டுத் திருவிழாச் சிறப்பாக நடந்து வருகின்றது. இறைவனின் பலவிதத் திருவிளையாடல்களில் இதுவும் ஒன்று. செய்யுள்நடை நன்றாகவுள்ளது. இது ஞானியார் மடத்திலிருந்த ஏட்டுப்பிரதியைப் பிரதி செய்துவைத்ததாகும்.

R. Nos. 3445—3448 (one volume)

Paper, 12¼ × 10 inches. Foll. 1—32. Lines 24 on a page. Tamil, good, new. Extent, 630 granthas.

R. No. 3445.

அத்வைதானுபவம்.

ATVAIDĀNUBAVAM.

Foll. 1—22. Extent, 430 granthas.

Complete.

Restored in 1952–53, from a manuscript described under D. No. 1428.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 1428-ஆம் எண்ணிலிருந்து பிரதிசெய்துவைத்ததாகும். அதன் குறிப்பைக் காண்க.

R. No. 3446.

அர்ச்சாவதார வாத்சல்யசாரம்.

ARCCĀVADĀRAVĀTCALYASĀRAM.

Foll. 23—28. Extent, 110 granthas.

Begins on fol. 23 of the manuscript described under R. No. 3445.

Complete.

Restored in 1952–53 of the manuscript described under D. No. 803.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 803-ஆம் எண்ணிலிருந்து பிரதி செய்து வைத்ததாகும். அதன் குறிப்பைக் காண்க.

R. No. 3447.

ரகஸ்ய த்ரய வ்யாக்யானம்.

RAHAŚYA TRAYA VYĀKYĀNAM.

Foll. 29—32. Extent, 96 granthas.

Begins on fol. 29 of the manuscript described under R. No. 3445 ante.

Incomplete.

Restored in 1952–53, from a manuscript described under D. No. 979.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 979-ஆம் எண்ணிலிருந்து பிரதி செய்துவைத்ததாகும். அதன் குறிப்பினைக் காண்க.

R. No. 3448.

மயில் ராவணன் நாடகம்.

MAYIL RĀVAṆAN NĀḌAKAM.

Paper, 10 × 12½ inches. Foll. 1—54. Lines, 24 on a page. Tamil, good, new. Extent, 1,000 granthas.

Complete.

Restored in 1952–53 of the manuscript described under D. No. 499 ante.

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 499-ஆம் எண்ணிலிருந்து பிரதிசெய்து வைத்ததாகும். அதன் குறிப்பைக் காண்க.

R. No. 3449.

நீதிக் கீர்த்தனைகள்.

NĪTIK KĪRTTANAIKAḶ

Paper, 12½ × 10 inches, Foll. 1—182. Lines, 24 on a page. Tamil, good, new. Extent, 3,500 granthas.

Complete—(2 volumes)

Restored in 1952–53 from a injured paper manuscript bearing R. No. 2426 ante.

(கு-பு.)—

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு, 2426-ஆம் எண்ணிலிருந்து எடுத்துப் பிரதிசெய்து வைத்ததாகும். அதன் குறிப்பைக் காண்க. இது இரண்டு பகுதிகளாக உள்ளது.

R. No. 3450.

தாமிரபரணி மாகாத்மியம்.

TĀMIRA PARAṆI MĀHĀTMIYAM.

Paper, 10 × 12½ inches. Foll. 1—39. Lines, 24 on a page. Tamil, good, new. Extent, 1,000 granthas.

Complete.

Restored in 1952–53 from a manuscript described under R. No. 461.

(கு-பு.)—

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு, 461-ஆம் எண்ணிலிருந்து எடுத்துப் பிரதிசெய்து வைத்ததாகும். அதன் குறிப்பைக் காண்க.

R. Nos. 3451—3453.

Paper, 12½ × 10 inches. Foll. 1—51, Lines, 24 on a page. Tamil, good, new. Extent, 1,250 granthas.

R. No. 3451.

நித்திய நித்திய வித்தியாசத்தின் விவேகம்.

NITTIYA NITTIYA VITTIYĀCATTIN VIVĒKAM.

Foll. 1—43. Extent, 1,000 granthas.

Complete.

Restored in 1952-53 from a manuscript described under D. No. 2046.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 2046-ஆம் எண்ணிலிருந்து பிரதிசெய்து வைத்ததாகும். அதன் குறிப்பைக் காண்க. இதில் முற்றும் உள்ளது. இறுதியில் நான்கு ஏடுகள் வெறுமனே உள்ளன.

R. No. 3452.

நெல்லை மாநகர் புராணம்.

NELLAI MĀNAGAR PURĀṆAM.

Foll. 44—51, Extent, 250 granthas.

Begins on fol. 44. of the manuscript described under R. No. 3451.

Incomplete.

Restored in 1952-53 from a manuscript described under D. No. 612.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 612-ஆம் எண்ணிலிருந்து பிரதிசெய்து வைத்ததாகும். அதன் குறிப்பைக் காண்க. இதில் முற்றும் இல்லை.

R. No. 3453.

பாரதவம்மானை.

BĀRATAVAMMĀNAI.

Palm leaf, 17½ × 1 inches. Foll. 1—347. Lines, 7 on a page, Tamil, injured oid. Extent, 6,000 granthas.

Wants foll. middle and end.

Incomplete.

Presented by Sri Periyaswami, Village munsif, Anāṅgūr village, Nāmakkal taluk, Salem district.

Same work as that described under R. No. 562.

(கு-பு.)—

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு, 562-ஆம் எண்ணின்கீழ் வந்துள்ளது. அதன் குறிப்பைக் காண்க இடையிலேயும், இறுதியிலேயும் பல ஓலைகள் காணப்பெறவில்லை.

R. No. 3454.

பாரதவம்மானை.

BĀRATAVAMMĀNAI.

Palm-leaf, 16×1¼ inches. Foll. 1–348. Lines, 6 on a page. Tamil, fair, old. Extent, 6,000 granthas.

Complete.

Same work as the above.

Presented by Sri Periyaswami, Village Munsif, Anāṅgur village, Nāmakkal taluk, Salem district.

(கு-பு.)—

இந்நூல், மேல்வந்துள்ள நூலைப்போன்றதே. இதில் முற்றும் உள்ளது. அதன் குறிப்பைக் காண்க.

R. No. 3455.

வைகுந்த அம்மானை.

VAIKUNDA AMMĀNAI.

Palm-leaf, 14½×1¼ inches. Foll. 1—353. Lines, 24 on a page. Tamil, fair old. Extent, 6,000 granthas.

Presented in 1952–53 by Sri Periyaswami, Village Munsif, Anāṅgūr village, Nāmakkal taluk, Salem district.

Complete.

Same work as that described under R. No. 2233 ante.

(கு-பு.)—

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு 2233-ஆம் எண்ணில் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்புக் காண்க. இதில் முற்றும் உள்ளது.

R. No. 3456.

அருணாசலபுராணம்--உரையுடன்.

ARUṆĀCALAPURĀṆAM (WITH COMMENTARY)

Palm-leaf. 14×1¼ inches. Foll. 1—333. Lines, 6 on a page. Tamil, fair, old, Extent, 6,000 granthas.

Complete.

Presented in 1952–53 by Sri Periyaswamy, Village Munsif, Anāngūr village, Nāmakkal taluk, Salem district.

Same work as that described under D. No. 550 ante.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு 550-ஆம், எண்ணின்கீழ் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்பைக் காண்க. இதில் உரையுடன் இருக்கிறது. முற்றுமுளது.

R. No. 3457.

அல்லியரசாணிமாலை.

ALLIYARASĀṆIMĀLAI.

Palm-leaf, 16×1 inches. Foll. 1—174. Lines, 6 on a page, Tamil, injured, old, Extent, 3800 granthas.

Complete : Printed.

Presented in 1952–53 by Sri Periyaswamy, Anāngūr village, Nāmakkal, Salem district.

Same work as that described under D. No. 2099 ante.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 2099-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டுள்ளது. அதன் குறிப்பைக் காண்க. முற்றுமுளது. சிதலமாயது. அச்சிடப்பட்டுள்ளது.

R. No. 3458.

தனிப்பாடல்.

TANIPPĀḌAL.

Foll. 175 — 204. Extent, 200 granthas.

Begins on fol. 175 (a) of the manuscript described under R. No. 3457.

Complete.

Same work as that described under R. No. 141.

(கு-பு.)—

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு 141-ஆம் எண்ணில் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்புக் காண்க. இதில் சில பாடல்களே உளா. அச்சிடப்பட்டுள்ளது. மிகவும் சிதலமாயது.

R. No. 3459.

கட்டபொம்மன் கும்மி.

KAṬṬAPOMMAN KUMMI.

Palm-leaf, 12¾ × 1¼ inches. Foll. 1—150. Lines, 5 on a page. Tamil, very much injured, old, Extent, 1,000 granthas.

Incomplete.

Author is not known.

Similar work as that described under R. No. 1955.

Presented in 1952-53 by Sri Periyaswami, Anāṅgūr village, Nāmakkal taluk, Salem district.

Written in the Kaṇṇi metre as Dēsiṅgurājan Kathai. The story is up to Ūmaitturai's rule over the Pāḷayakkārs from this we can learn the tradition of the Pāḷayakkārs, the nature of Company's rule and the heroism of Kaṭṭabomman.

Beginning :

முந்திமுந்தி விநாயகனே முருகா் நல்ல சரசுபதியே
கந்தனுமுன் பிறந்த நல்ல கச்சிக் கணபதியே முன்நடவாய்
ஏடறி யேன்மகன் எழுத்தறி யேன்மகன்
ஏட்டில் வகைதுகை நானறியேன்
பாடவறியேன் படிக்கவறி யேன்மகன்
பாட்டில் வகைதுகை நானறியேன்
ஏடு தடுமாறி போகாம லின்னமெந்தன் குரலோசை மங்காமல்
நாவு தடுமாறிப் போகாம லின்னம்நல் குரலோசை மங்காமல்
கொண்டுமெனம் பொருத்தருள வேணும் யெங்கள் குளக்கரையில்வி னாயகனே
எந்தன் நாவில் அனுதினமும் குடியிருக்க வேணும் சரசுவதியே

* * * *

* * * *

* * * *

பாண்டியன்கட் டபொம்ம னுமையன் சண்டையை
பாட்டி லெழுதியோர் பாடினதும்
பாடி வைத்தா ரங்கங்கே கும்பினியார்
பாங்குடன் விலங்கும் போட்டதுவும்
மூன்று மாத விலங்குட னிருந்து
முடித்துவைத்தா ரந்தப் பாரதத்தை
* * * *
* * * *

End :

கரணம் வந்துதே யென்றதி னுலினி
தப்பாமல் பூமலர்................
பக்குவம் வந்துதான் பூமலர்ந்து
பாங்குட............
இருவரெண்டு பேருக்கின் றையதினம்
இட்சணம்............
என்றுசொல்லிப் போட்டு சக்க தேவியே
....
மேற்கட்டுத் தூக்கங்கள் தானுங்கட்
டின்னும்—..................

முற்றுப்பெறவில்லை.

(கு-பு.)—

இந்நூல், கட்டபொம்மன் கும்மி என்னும் பெயர்த்து. தேசிங்குராசன் கதையைப்போல, கண்ணிகளால் பாடப்பட்டிருக்கிறது. முற்றுப்பெறவில்லை. ஊமைத்துரை பாளையக்காரர்களை யடக்கி ஆளுந்திறமையைக் கூறும் வரையில் உள்ளது. இதனுல், பாளையக்காரர்களின் பரம்பரையும், கும்பினியார் ஆட்சியின் திறமும், கட்டபொம்மன் வீரமும் விளங்க எதுவாகும். இடையிடையே சிதலமுற்றுக் காணப்படுவதால், எழுத்துக் களும், கண்ணிகளும் சிதைந்து சிதைந்துக் காணப்படுகின்றன. கண்ணி களின் நடை நன்றாக உள்ளது.

R. No. 3460.

புலேந்திரன் களவு.

PULĒNDIRAN KAḶAVU.

Palm-leaf, 16 × 1¼ inches. Foll. 1—251. Lines, 6 on a page. Tamil, fair, old. Extent, 3,000 granthas.

Complete—Printed.

By—Pukaḷēndhippulavar.

Same work as that described under D. No. 2178 ante.

இந்நூல், சங்கர பகவத் பாதாசார்ய சரித்திர நாடகம் என்னும் பெயர்த்து முற்றும் உள்ளது. ஐந்து அங்கங்களாகப் பகுக்கப்பட்டு, எழுதப்பட்டுள்ளது. சங்கரருடைய வரலாற்றை நாடக வடிவில், S. K. பார்த்தசாரதி அய்யங்கார், B.A., B.L. என்பவர் இயற்றியுள்ளார். பலப்பல பழைய பாடல்களும் கீர்த்தனங்களும் இடையிடையே சேர்த்து எழுதியுள்ளார். ஓர் பக்த சரித்திர நாடகமாகும். படித்தின்புற நல்லது. காஞ்சி, காமகோடி பீடத்திலிருந்து வந்து தனிப்பிரதியைப்பார்த்து எழுதி வைக்கப்பட்டுள்ளது. காண்க. அச்சிடப்பட்டதாக முகப்புரையில் விளங்குகிறது.

R. No. 4118.

அனுபவ ஆத்ம ஞான விஷயங்கள்
ANUBHAVA ĀTMAÑĀNA VIṢAYAṄKAḶ

Paper $12\frac{1}{2} \times 10$ inches. Pages 1—37. Lines, 24 on a page Tamil. Good. New. Extent, 400 granthas

Complete.

Transcribed in 1952—53 from a manuscript of Kāñci kāmakōṭi piṭham mutt, Kumbakonam, Tanjore District.

The subject matter dealt with in this work is self-realisation The Spiritual teacher is preaching to his disciple. Essential portion from the Bhagavad Gīta are also included herein.

Beginning.—

ஓம் ஸ்ரீ குருவே நம:

ஸ்ரீகுரு நாதனையும் கணநாதனையும் நமஸ்கரித்து கடவுளை (தனது ஆன்மாவை) யறிய சாதனை செய்யும் மகான்களின் திருப்தியின் பொருட்டு சிற்றறிவிற்கெட்டியவாறு வரைவதை யாவரும் குறையை விடுத்து நிறைவை யேற்க தன்னுடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

பகவதாராதனை எதற்காக ?

உலகமும் உடலும் நித்யமாய் நிலையில்லாதிருப்பதினால் மனிதன் அனித்யத் தன்மையிலிருந்து நித்யத்வத்தை அடைவதற்காக பகவதாராதனத்தின் அவசியம், கடவுளை மூர்த்தமாயும் அமூர்த்தமாயும் அப்யாசிகளுடைய பரிபக்வத்திற்கேற்ப ஆராதிக்க வேண்டும். * *

End:

100–தாசனது சிற்றறிவிற் கெட்டியவாறு அனுபவமுறை நூறு என்று பெயரிட்ட இச் சிறுநூல் கடவுளையறிய சாதனை செய்யும் மகான்களுக்கு அர்ப் பணமாகட்டும். சுபமஸ்து.—

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி !

(கு-பு.)—

இந்நூல், ஆத்மஞான விஷயங்கள் என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது. குரு சிஷ்யனுக்கு ஞான விஷயத்தைப் பற்றிப் போதிப்பதாக அமைந்துள்ளது. இறுதிப் பகுதியில், பகவத் கீதையிலிருந்து நூறு அனுபவமுறை என்ற பெயரில், எடுத்து எழுதப்பட்டுள்ளன. இதை இயற் றியவர் இன்னாரென்று அறியக்கூடவில்லை. இந்நூலும், காஞ்சி காம கோடி பீடத்து மடத்திலிருந்து வந்த தாய்ப் பிரதியைப் பார்த்து எழுதப் பட்டதேயாகும். காண்க. பொறுக்குமணிகள் போல, பகவத் கீதையி லிருந்து எடுத்து எழுதியவை நன்றாகவுள்ளன. படித்துணர்ந்து கொள்ள நன்று. இந்நூல் ஞான விஷயங்கள் பலவற்றில் தெளிவடைய உதவும்.

R. No. 4114.

புலிப்பாணி சாலத்திரட்டு

PULIPPĀṆI JĀLATTIRAṬṬU

Paper. 12½ × 10 inches. Pages 1—77. Lines, 24 on a page. Tamil. Good. New. Extent, 600 granthas.

Complete.

Restored in 1952-53 from a manuscript described under R No. 942 (a).

(கு-பு.)—

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு, 942 (a)–ஆம், எண்ணிலிருந்து பிரதி செய்து வைக்கப்பெற்றதாகும். காண்க.

(R. Nos. 4115 — 4116 (one volume.)

Paper, 12½ × 10 inches. Pages, 1—68. Lines, 24 on a page. Tamil Good. New Extent 450 granthas.

Transcribed in 1952-53 from a manuscript of Madurai T-Tamil-c-Caṅkam, Madurai.

R. No. 4115.

சூரிய வாகட வெண்பா

SŪRIYA VĀKAṬA VEṆPĀ

Pages, 1—28 Extent 200 granthas.

Complete.

Same work as that described under D No. 2422 and R. No. 2496.

(கு-பு.)—

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு, 2496-ஆம் எண்ணிலும், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 2422-ஆம் எண்ணிலும் வருணிக்கப்பட்டிருக்கிறது. "அகத்தியர் வாகட வெண்பா" என்ற பெயரில் அவைகளில் இடம் பெற்றுள்ளது. இந் நூலால், "சூரிய வாகட வெண்பா" என்ற மாற்றுப் பெயரும் உண்டு இந்நூலுக்கு என ஊகிக்க வேண்டியுள்ளது. ஆய்ந்து கொள்க.

R. No. 4116.

அகத்தியர் உத்தரக்கிரியை
AKATTIYAR UTTARAK KIRIYAI

Pages 29—68 Extent 250 granthas.

Begins on page 29 of the manuscript described under R. No. 4115.

Incomplete.

Same work as that described under R. No. 149 (d) ante.

(கு-பு.)—

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு, 149(d) ஆம் எண்ணில் வருணிக்கப் பட்டிருக்கிறது. காண்க. இதில் முற்றும் இல்லை. எத்துணைத்தென்றும் அறியக்கூடவில்லை. காண்க.

R. No. 4117.

திருச்செந்தூர்ப் பரணி
TIRUCCENDŪR-P- PARAṆI

Paper $12\frac{1}{2} \times 10$ inches. Pages 1—172 Lines 24 on a page Tamil. Good. New, Extent 2000 granthas.

Complete.

Transcribed in 1952-53 from a manuscript of Madurai-t-tamiḻ caṅkam, Madurai.

This paraṇi one of the minor forms of literature, deals with the glory of Lord Muruga. The tyle is simple but pleasing. The author is unknown. Many leaves are missing in the middle of the Manuscript.

Beginning:—

கடைதிறப்பு

கலைமாதவர் நிலைபோயுடை கலைசோதனை செயவே
மலைபோல் வளர் முலையா..கடை திறமின்.]

இபமொத்தவர் மருமத்தல மிருபொற்சிமிழ் புதைய
வுபரித்தொழின் முடிவிற்றுயி லுறுவீர் கடைதிறமின். (32)

கங்குல் முழுதுங் கணவருடன் கலவி செயினும் வைகறையிற்
சங்க முழங்கம்.... கபாடந் திறமினோ. (42)

* * * * * * * *

* * * * * * * *

ஆகத்தாழிசை—91

End.

சூரன் பகைவனுஞ் சூரன்றனுந்
துஞ்சச் சுடர்வடிவே லெடுத்த
வீரன் திருச் செந்தில் பாடிப்பாடி
வெறுங்கையைக் கொட்டிநின் றாடினவே. (64)

செங்கள முற்றுங் கருங்களமாச்
சேறுபடுத்துவைத் தோடிப் பாடித்
தங்கள் பிராட்டியைத் தாழ்ந்து போற்றிச்
சயசய வென்றுநின் றாடினவே. (65)

கந்த கிரிதனை வாழ்த்தினவே
கடம்பமலர் மார்பனை வாழ்த்தினவே
செந்தி னகரினை வாழ்த்தினவே
சிவதே சிகன்றனை வாழ்த்தினவே. (66)

மூவர் மேலவ னேவு வேலவன்
முருகன்ப....க்கும் போதமே
தேவர் வாழ்கவே பாவ ராழ்கவே
சீர் பரக்கவே கார் சுரக்கவே. (67)

(முற்றும்)

ஆகத் தாழிசை....

(கு-பு.)—

இந்நூல், திருச் செந்தூர்ப்பரணி என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது. மிகச் சிதிலமாகத் தாய்ப் பிரதி இருந்ததால், இந்நூலின் பெரும் பகுதி புள்ளி வைத்து எழுதி வைக்கப்பட்டுள்ளது. இந்நூலை இன்னார் இயற்றி யருளினர் என ஊகிக்க முடியவில்லை. எத்துணைத்து எனவும் தெரிய வில்லை. இடையில் பல ஓலைகள் விடப்பட்டுள்ளன எனக் குறிப்பெழுதப்பட்டுள்ளது. காண்க. 1200-க்கு மேற்பட்ட தாழிசைகளைக் கொண்டதாயிருக்குமோ என ஊகிக்க வேண்டியுள்ளது. நடை சாதாரண மானது. முருகன் பிறப்பு முதற்கொண்டு நடந்த வரலாறுகளையே பொருளாகக் கொண்டுள்ளது. காண்க.

R. No. 4118.

அகத்தியர் நிகண்டு எண்ணூறு
AKATTIYAR NIGAṆṬU EṆṆŪṞU

Paper 12½ × 10 inches. Pages, 1—415. Lines, on a page, Tamil. Good New.
Extent 2,500 granthas.

Complete.

Transcribed in 1952–53 from a manuscript of Madurai-t-tamiḻc caṅkam, Madurai.

Same work as that deseribed under R. No. 2302.

There are eight Kāṇḍams in this work of medicine. The technical terms used in this work are interrible only to those who are in the field. This work is highly useful to such persons interested in the preparation of medicines.

Beginning.—

நிகண்டு—80

முதற் காண்டம்

சீரான சிவனுமையாள் பாதம் போற்றி
செங்கயன்பா ணிறைஞ்சிவோதுந் தேவர் போற்றி
காரான கணபதியின் காந்தன் போற்றி
கனவீர பயிரவத்தின் கமலம் போற்றி
வாரான நந்திமா மறையோர் போற்றி
மறைநான்கு வேதத்தின் கண்டம் போற்றி
ஆரான தன்மந்திரி அசுவனியே போற்றி
அண்ட சரா சரஞ்சூழ்ந்த அம்பாள் காப்பே. (1)

அண்டமெல்லா நிறைந்திருந்த பூரணத்தின் பாதம்
அதைச்சூச்ழ்ந்த பிண்டரவி மதியின் பாதஞ்
சண்டமாருதக் கமல விமலோர் பாதஞ்
சதுர்முகனுஞ் சரஸ்வதியின் சோதி பாதம்
விண்டமால் திருவுருவின் கருவின் பாதம்
விதித்தருத்திரன் மயேசுரத்தின் குருவின் பாத
மண்டலங்கள் மூன்றுமுறப வித்தோன் பாதம்
வாணிபத மயேசுவரியின் வல்லபை காப்பாமே. (2)

வாணி சதாசிவ பதத்தின் முன்னோர் காப்பு
மகத்தான முனியோர்கள் பாதங் காப்பு
வேணியென்றனுதி யந்தருள் சோதி காப்பு
மேவஞ் சூடச் சடாதார பீடங் காப்பு
யோனியென்ற ஞாலயோனி பிண்டங் காப்பு
உதித்த தத்துவ ஞான மவுனங் காப்பு
பாணியென்ற பிருதிவிசூ ழண்டங் காப்பு
பஞ்சகாப் பியங் காப்பு சவுமியங் காப்பாமே. (3)

சொன்னேமே ஞானகாவி யத்துக்காக
தொடுகுறிபோல் ஏழாங்காண் டஞ்சொன்னோம்.
எண்ணேமே ஒருகருவிக் கேட்டுப் பாரு
இயம்பினேம் பிராணயதத்துவத் தவத்தின்பாரு
ஒண்ணேமே லொருநூறு பாட லுக்குள்
ஒளித்திடு மெஞ்ஞான பாஷை யெல்லாம்
எண்ணேடே யெட்டுதிசை சித்தர்க் கெல்லாம்
எடுத்துரைத்தோ மிந்தவெண்ணூ றியம்பக் கேளே. (4)

End :

பாரும் பலகலை யறிவு மிந்நூலில் பாரு
பரிபாஷை மெஞ்ஞான பரகெதியைப் பாரு
ஆருமறு மறிந்திடினு முலகமது யேது
ஆரணியில் லொருவர்பர ஞானி யாவார்
தேருமணப் பத்தி அறிவாலே கேளிவாகும்
அதிரூப நாதவொளி வாழ்பதியைக் காண்பாய்
கோருமுதல் காண்டமிது குறைவராத ரய்ந்து
குருபரனப்பா கெதியில் தெளிந்து வாழ்முத்தே. (133)

முதல் காண்டம்—முற்றும்.

இரண்டாவது காண்டம்.

Beginning:

பரமகுரு பூரணத்தி னுதி பாதம்
பணிந்துஅவர் கமலபதம் பண்பாய்ப் போற்றி
பரம குரு பசுபதியின் பாதங் கண்டு
பரப்பிரம்ம சுடரொளியின் ரவியே போற்றி
பரமகுரு பிரமசரசு பதியின் பாதம்
பகலிரவாய் அவர்கமல பதமே போற்றி
பரமகுரு ஆதியந்த மெங்கு மெல்லாம்
பாதாள குண்டலித்தாய் பாதங் காப்பே. (1)

End:

பூரணமா முன்னோர்கள் சொன்ன மொழிக்கெல்லாம்
புதுமலரின் வாசம்போல் புகட்டினேம் நாமும்
வாரணமாம் பதினறு லட்சங் கவிபாடல்
வசனித்தோ மதில்மறைத்த சூபிட்சமெல்லாம் விண்டோம்
காரணமா மிந்த யெண்ணூர் கட்சிமுத லாய்ந்தால்
கருவாழி புலவனென்றுங் காய்வர் நாவார்
ஆரணமா மிந்தநூல் இரண்டாவது காண்ட
மாதிமுத லந்தத்தோ டருளினே முற்றே. (134)

Beginning :

மூன்றாவது காண்டம்.

ஆதியா முதல்வன் றாளந்தம் போற்றி
அம்பிகா சத்தியுட கமலம் போற்றி
சோதிநிறஞ் சனமானக் குண்டலியே போற்றி
சுழிமுனையில் கருவறிந்த பிரமன் போற்றி
சாதிபல வகைகுறித்தோன் பாதம் போற்றி
சருவாணி உமையாள் சரசுவதியே போற்றி
வாதியா மாமுனிவர் ஓதுமறை போற்றி
மகத்தான வாத காவியங் காப்பே. (1)

End :

பேரென்ற பேரெல்லாம் பொறுக்குமணிபோல்
பேசினேம் மூனுங்காண்டம் பெருமை மெத்த
நூறென்ற பாடல் நூற்றி முப்பதுக்குள்
நுண்மையதாய்ச் சொல்லிவிட்டோ மதீதப் பேர்கள்
ஆரென்ற மாமுனிவ னேதுமொழி யெண்ணூறு
அனைவருமே யிம்மொழியைக் கண்டுஅருள் தான்வாழி
தேரென்ற மூன்றுகாண்ட புலத்தியனே ஐயா
செப்பினேம் முழுதுமுற்றும் பூரணமாம் முற்றே. (127)

மூன்றும் காண்டம்—முற்றும்.

நாலாவது காண்டம்.

பூரணமாங் காவியநூல் நிகண்டே சொல்வோம்
புலத்தியனே மனமுகந்து புகலக் கேளு
வாரணமாம் பூமாது வாலை தேவி
வசனித்தா ளகத்தியர்க்கு மவுனஞ் சொன்னாள்
காரணமாங் குருக்களெல்லாங் கண்டு தேறி
கருக்குருவா யிந்தவெண்ணூறு கவியாய்ப் பாடி
சீரணமாய்ப் போகாமல் சித்த ருக்கு
செப்பினேம் நாலாங்காண்டந் திறமதாமே. (1)

திறமாகச் சொல்லுகிறேம் இரண்டு காண்டம்
செப்பியதோர் மூலியுட கூறெல் லாந்தான்
வளமாக வனமூலி பூண்டின் கூறு
மகத்தான விருட்சத்தின் மரத்தின் கூறு
புறமாக மான்மிருகங்கள் பட்சிகூறு
புகழ்பெற்ற ஜீவசெந்து சரக்கின் கூறு
கறமான கருக்கினுடைப் பாவைகூறு
கருணைபெறச் சொல்லுகிறேம் கருவாய்த்தானே. (2)

End :

பதனமதாய் வைத்துசிவ பூசையது செய்து
பண்புடைய வேதாந்த பரிபூரண வெண்ணூறு
பதனமதாய் வைத்துத் தெரிசிப்பாய் புலத்தியனே
பரிவான பஞ்ச காவியஞ் சவுமியமும்
பதனமதாய் வைத் எண்ணூறு பணிந்திடு வீசாஇல்
பராபரன் போலெண்ணூறு பாலித்து வாழ்வாய்
பதனம் நாலாவதுஇந்த காண்டமதைச் சென்னோம்
பாடினோம் வனமூலி பரிபூரண முற்றே. (131)

நாலாவது காண்டம்—முற்றும்.

அஞ்சாங் காண்டம்.

Beginning :

சூட்சமென்ற நூலக ளெல்லாம் ஆய்ந்து ஆய்ந்து
சுருதிமுடி வானதிந்த எண்ணூறு பாடி
தேசமென்ற திசையிலுள்ள சித்தர்க் கெல்லாம்
திரட்டியிந்தக் காவியமாம் நிகண்டெண் ணூறாய்
பாசமதாய்ச் சொல்லுகிறோம் பதினெண் பேர்கள்
பாடியதோர் நூல்களுக்கு குருநூ லாகும்
வாச முள்ள பூமலரின் ஒளியைப் போல
வசனிப்போ மஞ்சாங்காண்டம் வகுத்துப் பாரே. (2)

End:

தெரிசிப்பாய புலத்தியனே அஞ்சு காணடம்
தெளிவாகச் சொல்லிவிட்டோம் தேறு தேறு
பரிசிப்பாய் சுந்தரமே நிணெடெண் ணூறு
பார்த்தாக்கால் பரிபாஷை எல்லாம் தோற்றுங்
கரிசிப்பாய் சண்ட சரக்கின் கூறுக்
காட்டினேங் கவியாகக் கருணை கூர்ந்து
அரிசிப்பாய் தினந்தோறும் அஞ்சாங் காண்டம்
அருளினோம் பூரணம்போ லதீத முற்றே. (102)

முற்றும்.

Beginning :

ஆறுங் காண்டம்—மாந்தரீகம்

பூரணமாம் பராபரத்தின் பாதம் போற்றி
புகழுஞ்சுழி முனையாதி யந்தம் போற்றி
வாரணமாம் அண்டபிண்டம் நிறைந்த சோதி
மகத்தான குண்டலித்தாய் பாதம் போற்றி
ஆரணமாங் கணேசனரு ளாயி போற்றி
அனுக்கிக மென்றசிரவ அம்பாள் போற்றி
தாரணமா மெந்தன்குரு கந்தன் போற்றி
காளவயிரவன்போற்றிக் காப்புத் தானே, (1)

காப்பான பாடல் நூற்றி முப்பதுக்குள்
காண்ட மொன்றில் மாந்தரீக கூறுவெல்லாந்தான்
சிறப்பான பட்சியுட கருக் காவினுட
செயலான மிருகங்கள் பூச்சிக் கூறு
மறப்பான புழுகினுட மூலி கூறும்
கருதான பறவையுட வளப்பங் கூறுஞ்
சிறப்பாகச் சொல்லுகிறோம் ஆருங் காண்டஞ்
செவியுற்றுப் புலத்தியனே சீராய்க் கேளே. (2)

End :

காணப்பா புலத்தியனே ராஜா பேரு நீ
கருவான நிகண்டிதுதான் எவருங் காணார்
நாணப்பா பூரணமாம் எண்ணூார் பீடம்
நாதாக்கள் தேறு மகராதி சித்தந்
தோணப்பா காண்ட மெட்டு ஆயிரமாஞ் சோடசஞ்
சொல்லி விட்டோம் மாந்தரீகக் கருவை விண்டோம்
ஊணப்பா ஆருவது காண்டம் நாம் சொன்னோம்
ஒருநூத்தி முப்பதுபாடல் மொழி முற்றே. (162)

முற்றும்.

' eginning :

ஏழாங் காண்டம்

மூழயமெனுஞ் சுழிமுனை நடுவில்சுட ரொளியாய் நின்ற
மூலகுரு வாதியந்த முதல்வன் போற்றி
வழியமெனும் மூலகுரு குண்டலியின் பாதம்
வல்லபை கணேச கந்தன் வயினாந்தாள் போற்றி
ஊழியறவி மதிப்பிற காச வழியாகில்
விளங்கும் பரசபையாராகில் அனிபூத போற்றி
பொழியமயம் பூரணமாம் வேதாந்தம்
பொறியைந்தின் கமலபதம் மன்பூதங் காப்பே. (1)

பூதமெனும் பூரணமாஞ் ஞான பீடம்
போத வேதாந்த சிவசத்தி காப்பு
வாதமெனும் முப்பொருளின் கருவின் பீடம்
வாசிகுருவான சிதம்பரத்தின் காப்பு
வேதமெனுஞ் சர்வேதவம்பாள் பீடம்
விளங்குமுக்கோண வாலை கமலங் காப்பு
நாதமெனும் விந்துநாதம் பீடங்காப்பு
நாதாந்த அருபத்தின் ஞானங் காப்பே. (2)

End :

பூசையெனுஞ் சகலகரு வெளியதாக
புகட்டினே மேழாங் காண்டம் புதுமைபாரு
பாசையெனும் பாஷை யுறைய தாக்கு
விசனித்தோம் செந்தமிழால் சித்தர்க் கெல்லாம்
ஆசையெனும் மெஞ்ஞானக் கருவை விண்டோம்
மடவான பேர்களெல்லாம் வெளியாய் விண்டோம்
பாசையெனும் ஞானகாண்டம் ஏழாம் பீடம்
பாலித்தோம் முழுதும் ஆதியந்த முற்றே. (133)

முற்றும்

Beginning :

எட்டாங் காண்டம்

லட்சண காண்டம்.

ஆதிபரி பூரணத்தின் சோதி பாதம்
அகண்ட பரசிவ னுமையாள் அயனும் போற்றி
சோதியெனும் பூரணமாம் வாம சுரூபி
சுருதிமுடி வான சருவாணி போற்றி
வேதியெனும் விசுவனுட கமலம் போற்றி
விதியான நால்மறையோர் வேதம் போற்றி
பாதிபூரண வாமி சிவகாமி பாதம்
பண்புடைய முன்னோர்கள் பாதங் காப்பே. (1)

முன்னான கரிமுகவன் கந்தன் காப்பு
மொழிநாலு வேதமறை முன்னோர் காப்பு
அன்றான நவசிவத்தாள் ஐவர் காப்பு
அருளான பஞ்ச பூதந்தான் காப்பு
கன்றான சிதம்பரத்தின் கருவின் காப்பு
கயிலாச மூர்த்தியருள் கமலங் காப்பு
சன்றான பிரமசரசோதி மத்தாய் பாதங் காப்பு
சண்முக சடாதார கமலங் காப்பே. (2)

End :

சொன்ன மொழி வாக்கியங்காண் சித்தர்க் கெல்லாம்
சுருக்கி நிலையான யிந்நூலை வெளிவிடாதே
அன்னமொழி பஞ்சகாவியமு மிந்நூல்
அருளினதோர் சவுமியத்தோ டெழுநூலின்
பின்னமில்லாச் சூத்திரங்க ளனந்தஞ் சொன்னோம்
மதுகளிட கருவே சொன்னோம்
கன்னமொழி சிதம்பரமாம் வாலை பீடம்
கமலபதஞ் சரணமென்ற வெண்ணூர் முற்றே. (133)

முற்றும்.

(கு-பு)—இந்நூல், அகத்தியர் நிகண்டு எண்ணூறு அல்லது தட்சிணு மூர்த்தி நிகண்டெண்ணூறு என்னும் பெயர்த்து. முற்றும் எட்டுக் காண்டங்களாக்கப்பட்டுள்ளது. மூலிகைகளின் பரிபாஷைகள் இதில் இடம் பெற்றுள்ளன. இந்நூல் வைத்தியம் செய்வோர்களுக்கும் மருந்து முறை தேர்வோர்களுக்கும் மிகமிகப் பயன்படுவதொன்றாகும். இதனை ஆய்ந்து கொள்ளின் அல்லது அச்சிட்டு வெளிப்படுத்தின் நலம் பயக்கும்.

R. Nos. 4119—4130 (one volume.)

Paper, 12½×10 inches, Pages 1—132, Lines 24 on a page, Tamil, Good New, Extent 1,130 granthas.

Transcribed in 1952-53 from a manuscript of Tamil-c caṅkam Madurai.

R. No. 4119.

புலிப்பாணி முனிவர் பூசாவிதி முப்பத்தொன்று
PULIPPĀṆI MUNIVAR PŪJĀVIDI.—31

Pages 1—12, Extent 75 granthas.

Complete.—

By—Pulippāṇi Munivar.

This work professes to lead to the attainment of some siddhis by offering prayers etc. to the God.

Beginning :

ஆதியாஞ் சிவனுமையு மரையு
அரியயனுங் கோவீசனோடு கணேசன் காப்பு
ஜோதியாஞ் சண்முகத்தின் பூசை மார்க்கம்
விளம்புகிறேன் சக்கரத்தின் தியானந் தானும்
நீதியாந் திசைகளோடு மணிகள் வஸ்திரம்
நிச்சய மாய்ப்பலகையோடு தசடுதானும்
சாதியெழில் கர்மமெட்டுஞ் சரித்துவோர்க்கும்
சாற்றுகிறேன் போகருட பாதங்காப்பே. (1)

காப்பான அறுகோண மிட்டு நன்றாய்க்
களங்கமாச் சகாரமொடு ரகாரந் தானும்
வீப்பாகு அகாரம துணகாரங் கூட
விதமான பகாரமுடன் வகாரங் கட்டு
ஆப்பாகு முள்ளறையில் அச்சங்கென் றானு
அடுத்தவுடன் அகாரமுடன் உகாரம் போடு
கோப்பாகு மகாரமுடன் சிகாரந் தானும்
கொடுகுளிபோல் வகாரமுடன் ஓமென்றுகட்டே. (2)

End :

சித்தியாம் சோசியந்தான் முன்னூற் றுள்ளே
 செப்பினேன் வயித்தியந்தான் ஐந்நூ றுகும்
முத்தியாம் கொக்கோகத் திரட்டொன் றப்பா
 முன்றிமையாய் ஞானமது தொண்ணூற் றுறு
பத்தியாய் வாடைபதி ஞறுஞ் சொன்னேன்
 பண்பான சண்முகத்தின் பூசை மார்க்கம்
வெத்தியாய் முப்பதுக்குள் சொன்னேன் பாரு
 விதமான தெண்டாயுதத்தை பூசித் தானே. (30)

தானேநீ கிரேயுதா யுகத்தி லப்பா
 தயவான பிரம்மாவும் பூசை செய்தார்
மானேநீ திரேதா யுகத்தி லப்பா
 மைந்தனே யிந்திரன்தான் மகிழ்ந்து செய்யார்
பாரேநீ துவாபரையிற் போக நாதர்
 பண்பாகப் பூசைசெய்து பணிந்தார் பாரு
கோனேநீ கலியுகத்தி லிருநூற் றஞ்சில்
 கொற்றவனே புலிப்பாணி பணிந்தேன் முற்றே. (31)

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், புலிப்பாணிமுனிவர் பூசாவிதி—முப்பது என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது. சித்திகள் பெறுமாற்றை விளக்குவது இந்நூலாகும். உய்த்துணர்ந்து கொள்க. மதுரைத் தமிழ்ச் சங்கப் பிரதியிலிருந்து எழுதிவைக்கப்பட்டதாகும். காண்க.

R. No. 4120.

ஆதிமகா கணபதி மூலமந்திரம்

ĀDI MAHĀ GAṆAPATI MŪLA MANTIRAM

Pages 13—22, Extent 100 granthas.

Begins on page 13 of the manuscript described under R. No. 4119.

Complete.

Fol. 22 is left blank.

This seems to be a translation of "Mandira Ratnākaram otherwise known is Gīrvāṇa Śāstram". Useful to those who are interested in chanting matters of Mahāgaṇapati.

Beginning :

ஓம் ஸ்ரீயும் ரீயும் ஸ்ரீயும் கிலவும் கமக்கம் கணபதாவம் வர்தசர்வகனமே வசமானய சுவாஹா ! இதுவே ஆதியில் மகாகணபதியை பூசிக்கும் மூலமந்திரம். செபிக்கவேண்டியது.

உச்சிட்டகணபதி மூலமந்திரம்

ஓம்—ஆராம்—ஹரீம்—புரும்—படுபடு தி—தி—தி—நிரசனுலிக சுவாஹா. இந்த மூலமந்திரம் உச்சிட்டகணபதியை தியானிக்கும்—செபம்—இதுவே. அட்டகர்ம விதி செபத்துக்கும் இதுவே செபிக்கவேண்டியது.

End :

ஆதலால், அதுவும் கடவுளுக்கு யோசித்துப் பயந்து நடப்பது எத்தகையும் நன்மையுண்டாகும். அதாமீறி பிரயோகம் செய்வதிற் பிந்தி வருத்தம் முற்றும் தன்னையடையுங்காலம் தான் செய்த தவபலனும் செபமும் பிரதிக்குத் தோற்றம் செய்யவும். இவை மந்திர ரத்னுகர யென்னும் கீர்வாண சாத்திரம் சொல்லியிருந்ததிலெடுத்து எழுதியது.

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், மகாகணபதி மந்திரம் என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது. மந்திர ரத்னுகரம் என்னும் கீர்வாண சாத்திரத்தின் மொழி பெயர்ப்பு என ஊகிக்கவேண்டியுளது. மகாகணபதியின் மந்திரங்களைச் செபித்து அதன்மூலம் சித்தியடைய விரும்புபவர்கட்கு மிகவும் பயன் படக்கூடியது.

R. No. 4121.

தன்வந்தரி பகவான் ஓமக்கிரியை விதி

DANVANTIRI BAGAVĀN ŌMAKKIRIYAIVIDI .

Pages 23—28 ; Extent 50 granthas.

Begins on page 23 of the manuscript described under R. No. 4119.

Complete.

This deals with the telling of mantras and the diseases cured by it. There are four verses in the beginning. The rest of the work is in prose.

eginning :

சாத்திரனர் தன்மந்திரி முனிவ ரிந்த
தாரணியில் கிரிகைபதி னெட்டுந் தீர
நேர்த்தியாய் கிரிகை பதினெட் டுக்கும்
நேரான குணம் சாத்தி யந்தான்
ஏத்தோரும் மருந்துபு கைநசிய மஞ்சனம்
இயல்பான துவாலையொடு தன்ம குடோரி
ஊற்றிடவும் துகைவிபரம் மருந்து மாத்திரை
யுற்றதொரு தயிலங்க ளுரைக்கி றேனே. (1)

உரைக்கிறேன் பிசாசுபில்லி ஓட்டி யந்தான்
    உறவான மந்திரி யேவ லுக்கு
துரத்தியிவை யாவையுந்தான் நீக்க மைந்தா
    சொல்லுவேன் ஞமிப்பாய் மூன்று நாள்தான்
நிரைக்கிறேன் ஒருகொலுசம்சதார மாக
    நிரையாக குழிவெட்டி யதற்குள் ளாக
பரைக்குகந்த முக்கோண மதிலே கீறி
    பாங்காக சிலகெந்தபுஷ்ப தீபஞ் செய்து
கருத்துடனே செஞ்சாவ லதிலே யிட்டு
    கனமான பலகையிட்டு மண்தான் மூடே. (2)

End :

உடனே சிதம்பரத்தை யெழுதிக் கட்டவும். அல்லது கால பைரவ யெந்திரம் எழுதிக் கட்டவும். நோய்பிணி சகலமும் பஞ்ச பாவம் முதல் தீரும். பிராமணர்களுக்கு அன்னம் கொடுக்கவும். சிவனுக்கு அபிஷேகம் செய்யவும்.

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், தன்வந்தரி பகவான் ஈமக்கிரியை என்னும் பெயர்த்தாய், மந்திரஞ் செபிக்கு முறைகளும், அதனால் தீரும் நோய்களும் இதில் இடம் பெற்றுள்ளன. காண்க. பாடல்கள் முன்னே நான்கேயுள்ளன. பிற, உரைநடையில் அமைந்துள. ஆய்ந்துணர்ந்துகொள்ள நன்று,

---

R. No. 4122.

தன்வந்தரி வாதம் அறுவகைக்குணம்

DANVANTIRI VĀTAM AṞUVAKAIKKUṆAM

Pages 29—42; Extent 120 granthas.

Begins on page 29 of the manuscript described under R. No. 4119.

Complete.

This deals with the six characteristics of each of the three bad humours or fluids of the human body namely, vāta, pitta and Ślesman-prose is intermingted in this work. The best verses are found in disorder.

Beginning :

வாதத்தில் ஆறுவகை குணம்

தேவதை விரோதத்தாலும் சேர்ந்திடும் விசாரத்தாலும்
தாவிடு சுரங்களாலும் தங்கிய விஷங்களாலும்
மேவிடும் வாதத்தாலும் விளம்பிடு பித்தமய்யம்
காவல் முனிவன்தானும் கருதியே யுரைத்ததாமே. (1)

கூறும் வாத முதலாகும் குறிக்கும் கிரியை யிரண்டாகும்
தூறும் கிரிய மூன்ருகும் தோன்றவேத கிரியைநாலாம்
நாறும் எழுந்து குறியாலும் நவின்ருர் மாந்தர்க்கு துதியுடன்
ஆறுவாதப் பிறவிதனை யறைந்தார் முனிவர் அரிசிதாமே. (2)

பித்தத்திலாறுவகை-குணம்

பிச்செழுந்ததே கிரியமுடன் பிசாசு கிரியம் இவையாறும்
அச்சமத்தே பிரமனுடனுன் பிரம்ம ராட்சதனுங்
கிச்சகெந்த ரூபனுமே கெந்தரூப ராக்கிசனுந்
தச்ச..........ந்த பித்தம் தாவரு ணிவைகளாறு மென்றே. (3)

End :

* * * * * * * *
* * * * * * * *
* * * * * * * *

அனுபானந்தா னறிந்து பத்தியம் ரோக
 தேகத்தை நன்ருய்ப் பார்த்து
உப்புபுளிக் காரந் தள்ளுவாய்
 சித்தனும் கருவூரான் மெஞ்ஞானத்
 தெளிவினில் சிறந்து தெளிந்துமே செப்பினேனே.

(கு-பு.)—

இந்நூல், வாதம் அறுவகைக்குணம் என்னும் பெயர்த்து. வாத, பித்த, சிலேத்துமங்களின் குணு-குணங்களை எடுத்துக்கூறிச் செல்லுகிறது. 29 பாடல்கள் வரையிலும் எழுதப்பட்டு, பின்னே உரைநடையிலும் இறுதியில் பாடல்களும் எழுதப்பட்டுள்ளன. இறுதியில் பாடல்கள் முறைவைப்போடு எழுதப்படவில்லை. பிழைபடவும் எழுதப்பட்டுள்ளது.

R. No. 4123.

சுப்பிரமணியர் அகத்தியருக்கு அருளியவிஞ்சை
SUBRAMAṆIYAR AKATTIYARUKKU ARUḶIYA VIÑCAI.

Pages 43—46 : Extent 50 granthas:

Begins on page 43 of the manuscript described under R. No. 4119.

Complete.

This work belongs to the divine literature of mantras. Lord Subrah manya, it is said, has proclaimed this to the Saint Agasthya, having heard these things himself from his parents. Writing of cakras is also dealt with in detail here.

Beginning :

ஒரு வளையம் போட்டு வளையத்துள்ளே முக்கோண மிட்டு அதன் நடுவின் கீழ் முக்கோணமிட்டு மூன்று மூலையிலும் சூல மெழுதி நடுவில் அகாரம் உகாரம்—மகாரம்—ஓகாரம்—ஸ்ரீங்காரம் எழுதி வலத்தே முக்கோணத்தில் மகாரம் எழுதவும், இடத்தே முக்கோணத்தில் நகார மெழுதவும், மேல் முக்கோணத்தில் சிகார மெழுதவும், அதன் மேலே ஒரு வளையம் போட்டு வளையத்தினுள்ளே சிகாரமிருக்கிற முக்கோண முகடில் அறு கோணம் வரைந்து அதனடுவில் ஒரு வட்டம் இட்டு, வட்டத்தினுள்ளே ....

End :

சக்கர விதி

பரமசிவன் பரமேசுவரிக்கு உபதேசித்தது.

சக்கர வட்டால் கீறித் தனித்துரண்டரையாய்க் கோலி
அக்கர முக்கோண மிட்டு அதின் நடுவிலி கண்டு கீறி
உக்கிரம் வலது பாகம் உடன் மவ்வும் இடத்தில் நவ்வும்
பக்கரஞ் சிரத்தில் சிவ்வும் பரிவுடன் சூல மொட்டே.

ஒட்டியே முக்கோணத்தில்
அம் உம்மம் ஓம் ஸ்ரீ யென்று
கட்டியாம் பிரம்பு தன்னி
லக்கதி பேர் எழுதி வைத்து
முட்டாமல் தியானஞ் செய்து
முடியினில் பிரம்பால் தட்ட
மட்டிலா வாதம் சன்னி
விஷஞ் சுரம் நாஸ்தி யாமே.

(கு-பு.)—

இந்நூல், சுப்பிரமணியர் அகத்தியருக்கு அருளிய விஞ்சை என்னும் பெயர்த்தது. உரைநடையும் செய்யுளும் கலந்து எழுதப்பட்டுள்ளது. பார்வதி பரமேசுவரனைப் பார்த்துக் கேட்க, பரமேசுவரன் பார்வதிக்கு உபதேசம் செய்ததை, சுப்பிரமணியர் கேட்டு அகத்தியருக்கு உபதேசம் செய்த தாக அறியப்படுகின்றது. மந்திர சாத்திரங்களைச் சார்ந்தது. கண்டு கொள்க. சக்கரம் அமைக்கும் முறை விரிவாக இதில் எழுதப்பட்டுள்ளது.

R. No. 4124.

தாது புஷ்டிக் குளிகை

TĀTUPUṢTI-K-KUḶIKAI.

Pages 47—48 ; Extent, 10 granthas:

Begins on page 47 of the manuscript described under R. No. 4119.

Complete.

This work rendered into prose forms part of 'Vaidya Vākaṭa ascribed to Agasthya. A medicine is advocated for the vitalising of the human body.

Beginning:

தாது புஷ்டிக் குளிகை

பேரீச்சங்காய் ரூபாய் எடை 30. அதன் விதை நீக்கிவைம்த்தன் காய்களை திறந்து விதை நீக்கி மேலுள்ள பேரீச்சங் காய்களை அதற்குள்ளே செலுத்தி கெண்டை நூல் முப்பிரியிட்ட நூல்கொண்டு சுத்தி கட்ட கோதுமை மாவை பசுவின் பால் விட்டரைத்து அந்தக்]காய்களின் மேல் கவசம் செய்து

* * * * * * * *

* * * * * * * *

End:

கழற்சிக் காய்ப் பிரமாணம் பூவுங் காயும் எடுத்தெறிந்து விட்டு, முன் மருந்தில் விட்டரைத்து நான்கு சாமம் அரைத்து, பின்பு வளிமம் செய்து நிழலுலர்த்தி எடுத்து வைத்துக் கொள்ளவும்.

(கு-பு.)—

இந்நூல், தாது புஷ்டிக் குளிகை என்னும் பெயர்த்து. அகத்தியர் இயற்றிய வைத்திய வாகடத்தினிடையில் செய்யுள் வடிவில் உள்ளதை, உரைநடை வடிவில் எழுதி வைக்கப்பட்டுள்ளது. அதனையும் இதனையும் ஒப்பு நோக்கின் விட்டவை புலப்படும். இறுதியில் சரியாக எழுதி வைக்கப் படவில்லை.

R. No. 4125.

நந்தீசுவரரர் திறவுதாழ் சூத்திரம்

NANDĪŚUVARAR TIṞAVUTĀḺ SŪTTIRAM.

Pages 49—70 : Extent, 150 granthas.

Begins on page 49 of the manuscript described under R. No. 4119.

Complete.

Page 70 is left blank.

There are 101 verses in this work. Medicine and Rasavāda are the two subjects dealt with herein.

Beginning:

கமலமே வுரையும் கன்னியே போற்றி
விமலநீ டருளிய விநாயகா போற்றி
கமல ருத்திரானந்த சாம்பவி போற்றி
அமலன் நந்தி ஐங்கார போற்றி (1)

போற்றியா னுரைத்த பொருளது
சாற்றிய வடமொழி தன்னிலே தமிழாய்
வீற்றிய கலையே பன்னீரா யிரத்தில்
சூத்திர மாமித் தாளமேவிண்டேன். (2)

விண்டனன் அன்னூர் விரிவினை யடக்கி
கொண்டன சண்டீசர்க்குத் தென்
கண்டவார் பூட்டை அடைத்தவார் காண
தண்டனன் தாளக் காரமனம் விண்டேன். (3)

End :

தரித்திடும் சண்டீசர் சார்ந்திடந் தியில்
விரித்திடா தடக்கு வேதநூல் வளமே
குரித்திடுயாமே குருவெனச் சிந்தையே
சிரித்திடும் தாலிக் கிசையது நூறே. (100)

நூறு நூறுகும் நூலைய மாண்டாம்
பேறுகொள் சண்டீசர் தொவென்னுவில்
ஊருவட் யாமே வுணர்விடம் போறுய்தே
நூறு வாரிலச் சிவங் கொண்டு வாமே. (101)

முற்றும்

(கு-பு.)—

இந்நூல், நந்தீசுவரர் திறவு தாழ்] சூத்திரம் என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது. 101—பாடல்கள் கொண்டது. வைத்தியமும் ரசவாதமும் சம்பந்தமுடைத்து.

R. No. 4126.

நந்தீசுபரர் சூத்திரம்—ஐம்பது

NANDĪSUPARAR SŪTTIRAM—50.

Pages 71—90 ; Extent, 150 granthas;

Begins on page 71 of the manuscript described under R. No. 4119.

Complete.

This work deals with the preparation of 'Vallai' a kind of soap. The 51 verses contained in this work are the precis of the 300 verses of the original.

Beginning :

முந்நூற்றில் சொன்னது

அகண்ட பரிபூரணனந்த மான
அம்பர மேசச்சி தானந்த சோதி
திகண்ட கடவானந்த சிவசிவாய மூர்த்தி
சின்மயத்தின் உருவானக் கிரண சோதி

வகண்ட பரிபூரணானந்த வாழ்வே
வாமனையின் உருவான வெள்ளி வாழ்வே
மகண்ட இரகாண மெனவாதி மூலம்
மதம் பொழிந்த சிந்துரக் கண்ணே கண்ணே, (1

கண்ணான வேதத்துக்குரிய கண்ணே
கம்பகத்தின் ஒளிவான ஞானக் கண்ணே
உண்ணாத பாலூட்டுந் தாயார் கண்ணே
உனைவிடவோர்ப் பொருளில்லை உயர்ந்த கண்ணே
புண்ணுமென மேழி ருணணி யணி ந்தேன் நந்தில்
பூட்டி விட்டென்ன பதினி பைச்துட் சந்தன்றூ
பண்ணுபம் வாய்த்த விச கண்ட வாராய
வகுத்திட்டேன் வகாரத்தின் திறவு தானே. (2)

End:

போட்டெடுப்பாய் வழலை என்ற சுண்ணந்தன்னை
பேய் மகனே காட்டாதே புவியோர் சூதர்
ஓட்டெடுப்பாய் பரதேசி வேடமிட்டு
உயர்சிமிளில்அ டைத்த சுண்ண ஒளிவைக் கொண்டு
மீட்டெடுப்பாய் கமல நய சத்திக்காக
திமாக பத்க்கேசுார்க்கா பா
பூட்டெடுப்பாய் ம்ாம்பரத்தில் எட்டதாகும்
பொருளாசை கொண்டோாக்குத் தானே. (50)

போக்கான பல தொழிலு முனக்குரைத்தேன்
புத்தியுடன் மூலி கொண்டு பொறுக்கச்சாறு
வாக்கான சூடு நெருப்பை வெளி விடாதே
வாயாது வாயோது வாக்கு தப்ப
நாக்கான தாய் நாக்கு பொல்லா தென்று
நன்றிட்டேன் நூல் தோறும் நானும் சொன்னேன்
காக்கான அதின் சூட்ச மிருபத்தஞ்சும்
தப்பாது பார்த்தேறும் சண்டீசர் வாழ்வே. (51)

முற்றும்

(கு-பு)—

இந்நூல், நந்தீசுவரர் சூத்திரம் என்னும் பெயர்த்தது. 51 பாடல்கள் உள்ளன. வழலை மார்க்கத்தை விரித்துக் கூறுகிறது. 300—சூத்திரத்தில் சொன்னவற்றைத் தனியே எடுத்து இயம்புகிறது இந்நூல்.

R. No. 4127.

நந்தீசுபரர் சூத்திரம் முப்பத்தைந்து
NANDĪSUPARAR SŪTTIRAM—35.

Pages 91—102; Extent 100 granthas.

Begins on page 91 of the manuscript described under R. No. 4169.

Complete.

This work deals with Jñāramānga in 35 verses. The thirty-sixth verse is however incomplete.

Beginning :

(முப்பூ—50-ல் சொன்னது)

அம்புலியாடுங் கண்டன யானைக்குஞ் செந்தூர நெத்தி
லம்புலிமாது பெற்ற வள்ளலே வேழமான
கொம்புலி யெழுதுங் குன்றை குடங்கையா மோதகத்தின்
சம்புலீங்கீசன் தந்த தந்திமாமுகனே பணிகுவேனே. (1)

பிணிந்துமே நந்தி யென்போன்
பகர்ந்த முன்னூற்றைத் தள்ளி
கணிந்தனன் அன்ப துக்குள்
காட்டிய விரிவைத் தள்ளி
துணிந்தனன் வாயை விட்டுச்
சொல்லினேன் முப்பத் தஞ்சில்
மணிந்தநவ சதாசிவமும் சத்தி
மகிழ்ந்திடம் விண்டு பாரே. (2)

End :

போச்சு தென்றும் வாச்சுதென்றும் பொய்க்கவேண்டாம்
பொய்யுரையாய் ப்புகலாதே பத்திகட்டி
காச்சுதென்றுப் பூசணியின் கோடிபோல
தாங்கண் டறிநீநந்தி வாழ்வு
பரம்பொருளைப் பெற்றுமிகப் பலித்து வாழே.

முற்றும்.

(கு-பு:)—

இந்நூல், நந்தீசுவரர் பிரணவசூத்திரம் என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது. 35—பாடல்கள் கொண்டது. இறுதியில் அதிலிருந்து குறையாக 36-வது பாடல் உள்ளது. முந்நூறில் சொன்ன முப்பூ—ஐம்பதில், இந்நூல் எடுத்து எழுதிவைக்கப்பட்டதாகும். ஞானமார்க்கத்தை அடைய உதவும் இந்நூல்.

R. No. 4128.

நந்தீசுவரர் பிரணவசூத்திரம்—பதினைந்து

NANDĪSUVARAR PIRAṆAVA SŪTTIRAM—15

Pages 103—109 Extent 50 granthas.

Begins on page 103 of the manuscript described under R. No 4119.

Complete.

This work also deals with the wayes of attaining wisdom. This is however different from the above ways obtaining the grace of the God as also indicated.

Beginning :

அடியவர்க் கடிய ராகி
ஐம்புலன் நந்தி யொன்றாய்
படிமிசை யாவத் துக்கும்
பரம்பொரு ளொன்றென் றாகி
வடிவினில் வடிவ தாகி
வான்புவிக் கோர்வித் தாகி
கடகரி முகம தானக்
கற்பகக் களிறைப் போற்றுவாய் (1)

போற்றியென் நாவடங்கி
புசண்டதன தருளினாலே
சாற்றியென் வாகட சூட்சம்தான்
விள்ளுதற் காக விந்த
மாணிபோலும் மறையுள்ள நூலின் மூட்டை
வீற்றிடும் திறவு கோலாய்
விண்டிட்டேன் சண்டீசர் தாமும். (2)

End :

நெய்யான கலையுடுத்த மான மாகும்
நீக்கிவிட்டால் ஒன்றுமில்லை நிலைமைவேணும்
பொய்யாகா தென்னூலின் பெருமை கண்ட
புசண்டமுனிச் சாபமேத்தப் புகலவேண்டாம்
கைப்பாகம் காட்டிப்படிந்தால்
அக்கைமேன்ற மேருவுறக் கணுவாய்ப் போச்சு
அய்யய்யா சண்டீசர் நாவிழுந்து விண்டேன்
அரன்சத்தி யப்பா தந்தானடி வாழே. (15)

(கு-பு.)—

இந்நூல், நந்தீசுவரர் பிரணவசூத்திரம் பதினைந்து என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது. காண்க. இதில், இறையருளையடைய வழிமுறைகளாம் ஞானத்தை எடுத்துக்கூறுகிறது. நன்றாகக் கூறப்படுகின்றது. முன் வந்துள்ள நூலினும் இஃது வேறுபாடுடையது. உய்த்துணர்ந்து கொள்க.

R. No. 4129.

நந்தீசுவரர் ஓசை ஐம்பதில் சூத்திரம்

NANDIŚUVARAR ŌSAI AIMPATIL SŪTTIRAM—25.

Pages, 109—118. Extent 75 granthas.

Begins on page 109 of the manuscript described under R. No. 4119

Complete.

This work is on alchemy. There are 25 verses plus one. This is cont ed form of the original which contens but 50 verses.

Beginning :

வானவ ரிமையோர் போற்று
மம்பிகை சுதனு வந்தக்
கானகக் குறப்பெண் மங்கை
கண்டுமகிழ் வந்த தும்பி
யானவர் கொண்டு மெட்டில்
அருந்திட்டாய் வேத மொன்று
யானுனைத் துதித்துப் போற்றி
உன்னடிமிசை வணக்கஞ் செய்தேன். (1)

செய்யுமென் தீவினை யகற்றிச்
சிந்தையான் கொண்டான் தில்லை
அய்யரும் புனையனைந்த
ஆத்தியைச் சூடி மானைக்
கையினி லேந்தி காலனை
யுதைத்துக் காத்த
பையரவணிந்தோன் தானை
பணிந்தனன் நந்தி யாமே. (2)

End :

போற்றிடு கமலத் தாயை
பூரணியில் பிறப்பில் லானை
சாற்றிடு பிண்ட அண்ட
சட்கறப்ச் சாலத் தாயை
மாற்றிடு மோட்சங் காட்டு
மான்புவி மூடும் தாயை
வீற்றிடு எந்த நாளும்
வினையறும் தேறி வாழ்வே. (26)

முற்றும்,

(கு-பு) :—

இந்நூல், நந்தீசுவரர் ஓசை முப்பூ—50–க்குச் செய்த சூத்திரம் 25 என்று பெயர். இரசவாத சம்பந்தமானது. முப்பூ ஐம்பதுக்கு, சுருக்க மாகியது இந்நூல். காண்க. முற்றுமுள்ளது.

Tri. Cat.—61

R. No. 4130

காலாங்கி நாதர் தீட்சாவிதி

KĀLAṄKI NĀTAR DĪKṢĀVIDI.

Pages, 119 to 132. Extent, 100 granthas.

Begins on page 119 of the manuscript described under R. No. 4119.

Complete.

This work paves the way of at aiming widsom through the yogic Practices.

Beginning :

ஆதியந்தமே நிறைந்த பூரணமே காப்பு
அருள் பெருகும் சதாசிவன் மயேசன் காப்பு
நீதியுள்ள ருத்திரன் மாலுங் காப்பு
நிரஞ்சனமாய் நின்றதொரு பிரமன் காப்பு
ஓதியந்தோர் தீட்சைவிதி தன்னைக் காண
உகந்ததொரு ரவிமதியின் சுடரே காப்பு
சோதியென்ற ஆதார மூலந் தன்னில்
துலங்குகின்ற வல்லபையுங் கணேசன் காப்பே. (1)

காப்பேடும் கடையேடும் நன்றாய்ப் பார்த்து
கலந்துநின்ற அச்சரத்தைப் பார்க்கும்போது
மூப்பான அச்சரந்தான் ஒன்றே துட்சம்
முதலான ஆட்சமடா மூச்சே சத்தம்
வாய்ப்பான சத்தமடா ஆவி யந்தம்
வகையான அண்டமடா பிரமமாச்சு
தாப்பான பிரமமது நின்ற சூட்சம்
சாதகமாய் வாயிலே யேறிப் பாரே. (2)

End

இருந்துநிலை பெற்றவனே ராசயோகி
இல்லாததை காத்தவனே சீவன் முத்தன்
வறிந்தமனக் கனிவதனால் மௌனம் பெற்று
மந்திரமாய் அச்சரத்தை மனதில் கொண்டு
திருந்தியந்த வாசியிலே மனதுபூண்டு
சிவயோக சிந்தையிலே தினமுன் னேக்கி
அருந்தவமாய் குருவினுடைப் பாதந் தன்னை
அனுதினமும் மனதில்வைத்துப் பணிந்தேன் முற்றே. (36)

(முற்றும்)

(கு-பு).—

இந்நூல், காலாங்கி நாதர் தீட்சாவிதி என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது. 36 பாடல்கள் உள்ளன. யோகத்தின்மூலம் ஞானத்தையடையும் வழி முறைகளை எடுத்துக்கூறிச் செல்லுகிறது. காண்க. இதனைப் போல் பிற நூலாசிரியரும் பாடியுள்ளனர். ஆய்ந்து கொள்க.

R. Nos. **4131—4134** (one volume)

Paper, 12¼ × 10 inches. Pages, 1—47. Lines, 24 on a page. Tamil. Good. New. Extent, 350 granthas.

Transcribed in 1952-53 from a manuscript of Madurai Tamil̲ c-caṅkam, Madurai .

R. N.o **4131.**

அகத்தியர் சக்கரவிதி

AKATTIYAR CAKKRA VIDI

Pages, 1—18. Extent, 150 granthas.

Complete.

Medicine and alchemy are the combined subjects dealt with herein.

Beginning :

சொல்லாதே நாற்பத்து முக்கோ ணத்தைத்
துரியாதீதங் கடந்த சோதி யப்பா
சொல்லாதே யொருத்தருக்கும் வெளியாய்ச் சொல்வேன்
சொர்ணத்தின் தகடாறல் மெத்த நன்று
சொல்லாதே வெள்ளிசெம்பி லெழுதலாங்கேள்
சுத்தித்தா லட்டகர மெட்டு மாடும்
சொல்லாதே பிரமாண மெவ்வளவு மாகுஞ்
சூட்சமாய் நாற்பத்து முக்கோணஞ் செய்யே. (1)

செய்வதுதா னெப்படியென் றெண்ண வேண்டாம்
தீட்சைவிதி யிருநூற்றில் திறமாய்ப் பாரு
கொய்வதுதான் கடைக்காண்டங் கொங்க ணர்தன்
சூத்திரங் குலாவியதோ ரறுநூற்றில் கொட்டினார்பார்
இவர்புகழ் சட்டைமுனி யாயி ரத்தில்
ஆனந்த லகரிபூசை யழகாய்ச் சொன்னார்
தேவர்புகழ் திருமூலர் வேதை மூவாயிரத்தில்
திரமாக தேவிசக்கரம் தீட்டித் தாரே. (2)

End :

ஓதுநீதீபமொடு நெய்வேத்தியந் தீப
　　முத்தமனே மண்டலந்தான் செய்தா யானால்
கோதிவிடு மாவினெய்யும் அக்கினியும் போலக்
　　கொடுபூஜை மெத்தச் செய்யுமட்டங் கூறினேன் கேள்
பேதியா யென்மகனே என்றாள் தாயுஞ்
　　சோதித்துயராடினேன் கரண சூத்திர முற்றே. **(47)**

முற்றும்.

(கு.-பு)—

இந்நூல், அகத்தியர் சக்கரவிதி என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது, இரசவாதமும் மந்திரமும் சம்பந்தமுடைத்திந்நூல். ஆய்ந்து கொள்ள நன்று. மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்த தாய்ப்பிரதியைப் பார்த்து எழுதி வைக்கப்பட்டதாகும். காண்க.

R. No. 4132.

கொங்கணர் பூசாவிதி

KONKAṆAR PUJĀVIDHI

Pages—19—30, Extent 100 granthas.

Begins on page 19 of the manuscript described under R. No. 4131.

Complete.

Same work as that described uuder D. No. 2343 ante.

(கு.-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 2343-ஆம் எண்ணில், பூசா விதித்திரட்டு என்னும் பெயரில் உள்ளது. காண்க.

R. No. 4133.

போகர் நவரத்தின வைப்பு சூத்திரம்

BŌGAR NAVARATTINA VAIPPU SŪTTIRAM.

Pages, 31—42. Extent, 75 granthas.

Begins on page 31 of the manuscript described under R. No. 4131.

Complete.

This deals with both medicine and alchemy

Beginning :

பெரியோர்கள் பார்த்ததை போற்ற வேணும்
பேசரிய மெஞ்ஞானங் கற்க வேணும்
அரிதான மூன்றெழுத்தை யறிய வேணும்
அப்பனே முப்பூவை முடிக்க வேணும்
விரிவான சாத்திரத்தைப் பார்க்க வேணும்
வேதாந்த வடுகனுட பூசை வேணுங்
கரிமுகவன் றனைப்பணிந்து ஆத்தாள் தீட்சை
கற்றவர்க்கு வாதமுறை கைக்குள் ளாமே.

ஆமப்பா சுழிமுனையி லங்கி மூட்டி
அதீத முற்ற சிலம்பொலியைக் கேழ்க்க வேணும்
தாயப்பா தனையறிந்து இருக்க வேணுஞ்
சதாநித்தம் பூரணத்தில் வாழ வேணும்
காமப்பால் பானத்தைக் கொள்ள வேணும்
கருவாகி வரம்யிலே யேறவேணும்
ஓமப்பா யீதெல்லா மில்லாவிட்டா
லுரைசெய்த வாதவித்தை பொய்யாம் பாரே.

End ;—

பார்த்திடவே இந்நூலுக்கு குருசொல்ல வேண்டாம்
பராபரையைப் பூசித்தப் பண்புள் ளோர்கள்
பார்த்திடவே வாதமெல்லாஞ் சித்தி யாகும்
பாலகனே யினனமொரு பானங் கேளு
சூத்திரமாங் கடைக்காண்ட சூத்திரத்திற் சொல்லி
வைத்தேன் கருவையெலாஞ் சூட்டம் பெற்றோர்
பார்த்திடவே பொருள் வாழி காலாங்கி வாழி
பதம்பெற்ற நாயன்மார் வாழிமுற்றே (37)

முற்றும்

(கு-பு.)—

இந்நூல், போகர் நவரத்தினவைப்புச் சூத்திரம் என்னும் பெயர்த்து முற்றும் உள்ளது. இரசவாதம் வைத்தியம் சம்பந்தமுடைத்து. ஆய்ந்து பார்த்துக் கொள்க. மதுரைத் தமிழ்ச் சங்கத்துள்ள தாய்ப்பிரதியைப் பார்த்து எழுதிவைக்கப்பட்டதாகும்.

R. No. 4134.

வைத்தியநூல்

VAITTIYANŪL.

Pages. 43—47. Extent, 25 granthas.

Begins on page 43 of the manuscript described under R. No. 4131.

Complete.

Same work as that descrbied under D. No. 2424.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ்காட்டலாக்கு, 2424-, எண்ணில் அனுபவ வைத்தியம் என்னும் பெயரில் வருணிக்கப்பட்டுள்ளது.காண்க இடையிடையே பாடல்களும் உரை நடையுமாக எழுதப்பட்டுள்ளது.

R. No. 4135.

சிவதத்துவக் கட்டளை
SIVATATTUVAK KAṬṬAḶAI

Paper, 12½×1 inches. pages 1 to 22, Liness 24, on a page, Tamil, Good. New, Extent 20 granthas:

Incomplete.—

Transcribed in 1952—53 from a manuscript of Madurai-t- Tamil caṅkam. Madurai.

Same work as that described uuder D. No. 1286 ante.

(கு-பு)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 1286-ஆம், எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது. காண்க.

R. No. 4136.

போகர் வைத்தியம் எழுநூறு
BŌGAR VAITTYIAM-700

Paper, 12½×1o Inches, Pages, 2—180, Lines o4 n a page, Tamil, good New. Extent 2200 Granthas.

Complete.

Transcribed in 1952—53 from a manuscript of madurai t-Tamil eakṅam, Madurai.

Alchemy is death detail in this work. This is the simplified with in work from the three kantas of same author.

Beginning :

திருவளர் மூலாதார முன்றேன் பாதம்
செப்பு சுவாதிட்டா ன வேதன் பாதம்
மருவுமணி பூரகஞ்சேர்மாயன் பாதம்
மன்னுமனுகத வருத்திர வண்ணன் பாதம்

உருவளர் விசுத்தி மகேசுபரன் தன்பாதம்
 உண்மையோ டாக்கினையின் சதாசிவன்தன் பாதம்
குருவளரும் நாதாக்கள் பாதம் போற்றிக்
 கூறுகிறேன் வைத்தியச் சூத்திரந்தான் பாரே. (1)

பாரப்பா பெருநூல்தான் மூன்று காண்டம்
 பாடினேன் அதைக் குறுக்கி எழுநூறு
சேரப்பா வாதமொடு ஞான மார்க்கஞ்
 செப்பரிய வைத்தியமு மட்டகர்மம்
ஆரப்பா வகைவிபர மாகச் சொன்னார்
 அறியாத மாந்தரிதை யறிவீர் நன்றாய்
நேரப்பா கருக்குருவுந் திறந்து சொன்னேன்
 நிகழ்த்தறிய நூல்களுக்குத் திறவு கோலே. (2)

கருவென்ன பூமியுட நாதம் இட்டால்
 காண்பரிது வாதமொடு வைத்தியஞ் செய்யக்
கருவென பூமியுட நாதம் பூனீறுகானல் மிகும்
 உவர்க்காட்டில் குடிசை கட்டிக்
கருவென்ன தைமாசி பங்குனி யெல்லாங்
 காத்திருந்தே உவர்ப்பூவை வாரி வந்து
கருவென்ன பாண்டத்தி லிட்டு மைந்தா
 கனமாகச் சுத்தசலந் தன்னை வாரே. (5)

End :—

குக்கிலோடு சீனமுட னுருக்குத் தொட்டிக்
 குறையாதே வகைக்கொரு பலந்தா னென்று
செக்கவே கலசத்தில் அரக்கம் பாலுஞ்
 சிப்பிநீர் நாற்சாம மரைத்துக் கட்டி
உய்க்கவே வில்லைதட்டி யுலர்த்தி நன்றாய்
 ஓடிட்டு மேலோடு மூடிக் குக்குடம்
பைய்க்கவே மும்முறைதான் புடத்தைப் போடு
 பகரறிய உருக்கினத்துக் காதி யாமே. (718)

ஆதியாம் யான்சொன்ன விந்த நூலை
 அவனியுள்ள வாதிமகன் வைத்திய னென்றால்
சோதி . . . . கைபாகஞ் செய்பாகங்கள்
 குறையாமல் செய்துபிணி யனைத்துந் தீர்ப்பான்
தீதுற்ற கசடர் . . . . செய்யார்
 . . . . குண்மை யாக
சோதியெனும் பொக்கிஷ மகிழ்வு கூர்ந்து
 சொல்லிவைத்த யெழுநூறு கவியு முற்றே. (719)

முற்றும்.

(கு-பு).—

இந்நூல், போகர் வைத்தியம் எழுநூறு என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது. இரசவாதம் சம்பந்தமுடைத்து மதுரைத் தமிழ்ச் சங்கத்திலுள்ள தாயப் பிரதியைப் பார்த்து எழுதி வைக்கப்பட்டது.

R. No. 4137.

பாகவதம்—தமிழ் உரையுடன்

BHAGAVATAM—TAMIL COMMANTARY

Paper. 12½ × 10 inches, Pages 1 to 372, Lines 24 on a Page, Tamil, and grantha, Good, New, Extent 4,000 granthas.

Complete.

Restored in 1952—53 from a manuscript described under D. No. 2622-

(கு-பு)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு, 2622-ஆம் எண்ணிலிருந்து பிரதி செய்துவைக்கப்பட்டதாகும். காண்க.

R. No. 4138

வைத்திய நூல்

VAITTIYA NŪL.

Paper, 12½ × 10 inches, Pages, 1—123, Lines, 24. on a page, Tamil, Good, New, Extent, 1 250 granthas.

Incomplete.

Restored in 1952—53 from a manuscript described under No. R. 2242.

(கு-பு)—

இந்நூல், ரூவருட காட்டலாக்கு 2242-ஆம் எண்ணிலிருந்து பிரதி செய்து வைக்கப்பட்டதாகும். காண்க.

R. No. 4139.

(சட்டைமுனி) சடாட்சரக்கோவை

(ŚAṬṬAI MUNI) ŚAḌĀṬCARAK KŌVAI.

Paper, Size, 12½ × 10 inches. pages 1 to 42, Lines 24 on a page, Tamil, Good, New. Extent 4200 Granthas.

Complete.—

Restored in 1952-53 from a manuscript described under D. No. 254.

(கு-பு) —

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு 254-ஆம், எண்ணிலிருந்து பிரதி செய்து வைக்கப்பட்டதாகும். காண்க.

R. No. 4140.

தத்துவ நூல் (கொக்கோகம்)

TATTUVANŪL (KOKKŌKAM)

Paper. 12½ × 10 Inches, Pages 1—53, Lines 24 on a page, Tamil, Good, New, Extent 500 Granthas.

Complete.—

Restored in 1952–53 from a manuscript described under R. No. 2238.

(கு-பு.)—

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு 2238-ஆம் எண்ணிலிருந்து பிரதி செய்து வைக்கப்பட்டதாகும். காண்க.

R. No. 4141.

பிரம்மரிஷி வாகடம்

PIRAMMARIṢI VĀKAṬAM

Paper. 12½ × 10 inches. Pages 1—76, Lines 24 on a Page, Tamil, Good, New, Extent 2,000 granthas.

complete,

Restored in 1952–53 from a manuscript described under R. No. 2235.

(கு-பு)—

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு, 2235-ஆம் எண்ணிலிருந்து பிரதி செய்து வைக்கப்பட்டதாகும். காண்க.

R. No. 4142.

மாட்டு வைத்தியம்

MĀṬṬU VAITTIYAM

Paper, Size, 12½ × 10 inches, page 1—90 Lines 24 on a page, Tamil, Good, New, Extent 900 Granthas.

Complete:

Restored in 1952–53 from the manuscript described under R. No. 2249.

(கு-பு).—

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு, 2249-ஆம், எண்ணிலிருந்து பிரதி செய்து வைக்கப்பட்டதாகும். காண்க.

R. No. 4143

அனுபவ வைத்தியம்

ANUBHAVA VAITTIYAM

Paper, 12 × 10½ Inches, Papes 1—229, Lines 24, on a page Tamil., Good New, Extent 2500 Granthas,

Incomplete.

Restored in 1952—53 from a manuscript described under D. No. 2357

(கு-பு).—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 2357-ஆம், எண்ணிலிருந்து பிரதி செய்து வைக்கபபட்டாதாகும்.

R. No. 4144.

அனுபவ வைத்தியம்

ANUBHAVA VAITTIYAM

Palm-leaf. 9 × 1 Inches. Foll 1 to 120, Lines 6 or 4 on a page. Tami Injured. Old. Extent 1000 Granthas.

Incomplete.

Presented in 1952-53 by Sri Muhamad Kasim aleem Vidathil Tiru, Mannar, Ceylon.

Ssme work as that described under R. No. 566.

(கு-பு).—

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு 566-ஆம், எண்ணில் வருணிக்கப் பட்டிருக்கிறது. காண்க.

R. No. 4145.

அனுபவ வைத்தியம்

ANUBHAVA VAITTIYAM

palm-leaf. 8½ × 1 Inches, Foll 167, Lines on a page, Tamil. Injured, Old, Extent 1200 Granthas.

Presented in 1952-53- by Muhamad Kasim aleem, Nedatbil Tiru Mannar Ceylon.

Incomplete.

Same work as that described under R. No. 566 & 573.

(கு·பு·)—

இந்நூல், மூவருடக் காட்லாக்கு 566, 573-ஆகிய எண்களில் விளக்கப் பட்டது போன்றதே யாகும். இதனுடையஆசிரியர் பெயர் யாண்டும் காணப்பட வில்லை.

R. No. 4146-

வில்லிபுத்தூரார் பாரதம் (விராட பருவம்)

VILLIPUTTŪRĀR BHĀRATAM (VIRĀṬA PARUVAM)

Palm leaf, 6 × 1 inches, Foll 3oo. Lines 8 on a page, Tamil, Old Injured, Extent 6000 Granthas.

Presenctd in 1952-53, by Ellappan, Teacher B. E. School, Tirinandavar, Uttiiramerur, Chinglepet District.

Complete,

Same work at that descrtbed under D. No. 533.

(கு·பு·)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு 533-ஆம், எண்ணில் விளக்கப் பட்டது.

R. NO. 4147

நாடி நூல்

NĀḌINŪL

Palm-leaf. 9 × 1 inches. foll 9. Lines, 4 on a page Tamil injured. Old. Extent 150 Granthas.

Purchased in 1952-53 from Sri T. Tirumalai c/o V Muttukkrishnan Ayyanka North Sampantapuram, Rajapāḷayam, Ramanad District.

I ncomplete.—

same work as that described under R. Nos. 261 (a)

(கு-பு·)—

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு 26 (a) ஆம், எண்ணில் விளக்கப் பட்ட வைத்திய சம்பந்தமான நாடி பார்க்கும் நூல் ஆகும்

R. No. 4148

வைத்திய நூல்

VAITTIYANŪL

Palm-leaf. 9 × 1 inches. Foll 18. Lines, 7 on a page Tamil. Old. Injured, Extent. 900 granthas.

Presented in 1952–53, from Sri. T. Tirumalai c/o V. Muthukkrishna Ayyankar Sampantapuram Rajapalayam, Ramanad District.

Incomplete.

Same work as that described under R. No. 576.

(கு-பு.)—

இந்நூல், மூலருடைக் காட்லாக்கு 576 ஆம் எண்ணில் விளக்கப். பட்ட வைத்திய சம்பந்தமானதேயாகும்.

R. No. 4149

வைத்தியம்

VATTIYAM

Palm leaf. 8 × 1 inches. foll 37. Lines 7 on a page. Tamii. Injured. Extent 25 Granthas.

Presented in 1952–53from Sri. Tirumalai c/o V. Muthukkrishna Ayyankar North Sampantapuram. Rajapalayam, Ramanad District.

Incomplete.—

Same work as that described under D. No. 1978

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 1969-ஆம் எண்ணில் விளக்கப் பட்டது காண்க

R. No. 4150

அகத்தியர் சூத்திரம்

AKATTIYAR SŪTTIRAM

Palm-leaf. 6 × 1 inches. foll. 13. Lines, 6 on a page. Tamil. Injured. Old, Extent 70 Granthas.

Presented in 1952–53, from Sri. T. Tirumalai c/o V. Muthukkrishna Ayyankar North Sampantapuram Rajapalayam, Ramanad District.

Incomplete.—

Same work as that described under R. No. 2431.

(கு-பு.)—

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு 243-ஆம் எண்ணில் விளக்கப் பட்டது காண்க.

R. No. 4151

அநுபவ வைத்தியம்

ANUBHAVA VAITTIYAM

Palm-leaf 9×1 inches Foll. 18. Lines 5 on a page. Tamil Old Injured Extent 150 Granthaas.

Presented in 1952-53, from Sri. T. Tirumalai V. Muthukkrishna Ayyangar North Sampantapuram, Rajapalayam, c/o Ramanad District.

Incomplete.—

Same work as that described under R. No. 4143 and 4144.

(கு-பு.)—

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு 4143–4144 ஆகிய எண்களில் விளககப்பட்டது.

R. No. 4152

அகத்தியர் சுருக்கம்

AKATTIYAR ŚURKKAM

Palm-leaf. 10 × 1 inches. Foll, 24. Lines, 7 on a page. Tamil Old Injured. Extent. 500 Granthas.

Presented in 1952-53, by Sri. T. Tircunalai, c/o V. Muthu krishana Ayyangar, North Sampantapuram, Rajapalaiyam Ramnad District.

Complete

Some work as that described under D. No.182. (a)D. No.1875

(கு-பு.)—

இந்நூல்; மூவருடக் காட்டலாக்கு 182 (a) ஆம் எண்ணிலும் டிஸ் இருப்டிவ் காட்டலாக்கு 18–ஆம் எண்ணிலும் விளக்கப்பட்டுள்ளது. காண்க. இதனுள் பலவித லேகிய முறைகள் விளக்கப்பட்டுள்ளன, இதன் முதற் கண் இரு ஏடுகள் காணப்படவில்லை.

R. No. 4153

அகத்தியர் சௌமியசாகரம் ஆயிரத்திருநூறு

AKATTIYAR SAUMIYAŚĀGARAM—1200

Paper 12½ 10 incches. pagesl 464, lines 24 on a pages, Good New Exten. 3500 Granthams

Complete. by AKATTIYA

Transcribed in 1952-53, from a manuscript of madurait Tamil Caṅkm, Madurai District.

This deals in the aolchemy Jñna and the methods of yoga.

Beginning :

ஆதியெனும் பூரணமாய் ஒளியாய நின்ற
அகண்டசதா சிவத்தினுடை யருளே போற்றி
நாதியெனு சுழிமுனையாய் பறவை யான
ஞான சவுமிய சாகரத்தி னருளே போற்றி
வேதியெனும் பரவெளியாய் விளங்கு ஞான
வேதாந்த பரப்பிரம்ம சரஸ்வதியே போற்றி
வாதியெனும் உற்பவித்த நாத விந்தின்
அகண்டக ணபதியினிட பீடங் காப்பே. (1)

காப்பான வேதாந்த பரமன் ஞான
கருவிகர ணதியுட குருவே காப்பு
ஆப்பான மெய்ப் பொருளாய் அரூப மான
ஆப்பான தாபரதானே சறுவ மான
மூதண்ட பதிபாச உபடமே காப்பு
அந்தமென்றக் கருக்குருவி னருளே காப்பு
தாப்பல்லா சவுமியச் சாகரங் களான
சராசரங்கள் சூழ்ந்த குண்டலி காப்பாமே. (2)

குண்டலியே சுழியிமுனேலே கூர்ந்து ஒட்டி
குருவான பராபரத்தை பணிந்தென்னுளும்
கண்டமெல்லாம் பிண்டமதாய் மேவும் சத்தி
அருள்பெருகுஞ் சின்மயத்தையடி பணிந்து
மண்டலங்கள் மூன்றும் ரவி மதியால் கண்டு
மரட்டி திரோதாயியை நாம் பூசித்தப்பால்
பிண்டமென்ற கருக்குருவை அறிவால் கண்டு
பேரொளியே தெய்வமென்று பேசி னோமே, (3)

End :

தானுன மூலமெல்லாம் சொல்லி விடடோம்
சைதன்னியப் பொருளெல்லாம் வெளியாய்ச் சொன்னோம்
கோனுன குருஆசான் முறையுஞ் சொன்னோம்
கூறினோங் கைபாகங் குணமுஞ் சொன்னோம்
வானுன வாதமொடு வைப்புச் சொன்னோம்
மகத்தான குருகோடி சுன்னஞ் சொன்னோம்
ஆனுன் திரவியங்கள் செய்நீருஞ் சொன்னோம்
அதீத கோடாகோடி மெழுகருளி னோமே. (1206)

அருளினேஞ் சரக்குவைப்பில் பலசாரங்கள் சொன்னேம்
அருளான குளிகை சாரணைகள் சொன்னேம்
அருளினே மாதியென்ற பனிநீர் சொன்னேம்
மகத்தான கோடா கோடி தொழில்கள் சொன்னேம்
வெருளினேம் வேதையிலே அனந்தஞ் சொன் னும்
வேதாந்த தீட்சைகுரு பூசை சொன்னேம்
வருளினேம் ஆயிரத்திரு நூறு பீடம்
வசனித்தோம் சவுமிய சாகர முற்றே. (1207)

முற்றும்.

(கு-பு—)

இந்நூல், அகத்தியர் சவுமியசாகரம் ஆயிரத்திரு நூறு என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது. இரசவாதம், ஞானம், யோக மார்க்கங் களை எடுத்துக் கூறிச் செல்லுகின்றது. மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து வந்த பிரதியிலிருந்து வைக்கப்பட்டதாகும். காண்க.

R. No. 4154.

கௌசிக முனிக் குழம்பு.

KAUŠIKA MUNIK KULAMBU.

Paper 12+ 10 inches. pages. 1 linees 24 on a page good new Extent, 100 graathas.

Complete.

Transcribed in 1952–53 from a manuscript of Madurai Tamil Canaam Mādurai.

This work is composed inahaval metre deals with the methods of preparation of various medicines.

Beginning :

காப்பு

அருமறை மொழியாள் யாவரும் பிழைக்க
யிருவினை யதனால் எழும்பிடும் நோய்க்கு
குருநெறி யருளால் குழம்பு சூரணத்தை
பெருமையாய் கோசிகன் பேருவைப் பேனே.

அகவல்

கற்பித்த கடுக்காய் கடுகு யிந்துப்பு
நற்பெருங் காயம் நல்ல வெண்காரம்
மெய்ப்புள்ள சூதம் மேவும் மனோசிலை
திப்பிலி தாரம் சீரகத்துடனே
ஒப்புடன் கடுகு ரோகணி நாவி
அப்படி மருந்து அதுபன்னி ரண்டு

End:

எந்த வியாதிக்கும் இப்படி முறையாய்
சந்தேக மில்லை தான்தடுத் திடலாம்
மண்ணதில் வாழும் மனிதரெவ் வுயிர்க்கும்
உண்மையாய் சொன்னே னொரு குழம் பதனால்
குருவரு ளாலே கூறினே னகிழ்ந்து
வாரமிகு கவுசிக மாமுனி யேனோன்.

முற்றும்.

(கு-பு)

இந்நூல், கவுசிக முனிக்குழம்பு என்னும் பெயர்த்து. முற்றும் அகவற் பாவால் பாடப்பட்டுள்ளது. பல நோய்கட்கு மருந்து செய்யும் முறைகள் கூறப்படுகின்றன. காண்க. இதுவும் மதுரைத் தமிழ்ச் சங்கத்திலுள்ள தாய்ப்பிரதியைப் பார்த்து எழுதிவைக்கப்பட்டதாகும். அகத்தியர் பெரு நூல்களில் காணப்படுதலும் உண்டு.

R. No. 4155.

கருவூரார் பலதிரட்டு சூத்திரம்.

KARUVŪRĀR PALATIRAṬṬU SŪTTIRAM.

Paper 12 × 10 inches., page, 157. Lines, 94 on a page, Tamil good. new Extent, 2200 Granthas.

Complete.

Restored in 1952–53 from a manuscript described under R. No. 2288.

(கு-பு.) –

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு 2288-ஆம், எண்பிரதியிலிருந்து பிரதிசெய்து வைக்கப்பட்டது. காண்க.

R. Nos. 4156—4173. (one bundle),

Paper 13 × 10 inches, Pages, 1—386 Lines. on a pag,e Tamil. good, new Extent 3oo granthas

---

R. No. 4156.

அஞ்சன சோரன் கதை.

AÑCANA CŌRAN KATAI.

Pages 1—8. Extent, 80 granthas

Complete.

Restored in 1952–53 from a manuscript described under D. No. 375.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 375–ஆம், எண்பிரதியிலிருந்து பிரதி செய்து வைக்கப்பட்டதாகும். காண்க.

R. No. 4157.

அனந்தமதி நங்கை கதை.

ANANTAMATI NAṄKAI KATAI.

Pages 9—44 Extent. 350 granthas

Begins on page 9 of the manuscript described under R. No. 4156.

Complete.

Restored in 1952-53 from a manuscript described under D. No. 380.

(கு-பு)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 380–ஆம், எண்பிரதியிலிருந்து பிரதி செய்துவைக்கப்பட்டதாகும். காண்க.

R. No. 4158.

உத்தாயண மகாராசன் கதை.

UTTĀYAṆA MAHĀRĀJAN KATAI.

Pages 45—50 Extent, 50 granthas.

Begins on page 44 of the manuscript described underR. No. 4156.

Complete.

Restored in 1952-53 from a manuscript described under D. No. 386.

(கு-பு)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 386–ஆம் எண் பிரதியிலிருந்து பிரதி செய்யப்பெற்றதாகும். காண்க.

R. No. 4159.

தேவதையார் கதை.

DĒVATAIYĀR KATAI.

Pages 51—60, Extent, 100 granthas.

Begins on page 51 of the manuscript described under R. No. 4156.

Complete.

Restored in 1952-53 from a manuscript described under D. No. 416.

(கு-பு)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 416–ஆம், எண்ணிலிருந்து பிரதி செய்துவைக்கப்பட்டதாகும். காண்க.

R. No. 4160.

ஜினேந்திர பக்தர் சரிதம்.

JINĒNTIRA BAKTAR CARITAM.

Pages, 61—68, Extent, 7 granthas.

Begins on page 61 of the manuscript described under R. No. 4156.

Complete.

Restored in 1952-53 from a manuscript described under D. No. 405.

(கு-பு)

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 405–ஆம், எண்ணிலிருந்து பிரதி செய்து வைக்கப்பட்டதாகும். காண்க.

R. No. 4161.

பாரிஷேண குமாரர் கதை.

PĀRIṢĒṆA KUMĀRAR KATAI.

நேர்மை மகத்தான நயன மதின் சூட்ச மார்க்கம் வடிவான சுழிமுனை யிளவாசியாலே முதலான சிவமாலைக் கலையின மார்க்கப்படி வரநீயெழுத தறிந்து ஓதும் மார்க்கம் பக்குவமாய்ப் பார்த்தறிந்து பணிந்து நில்லேன். நயந்து பணிந்து நிலை பெற்றதினுல் யோகியராய்ப் பதியறிந்து, கதியறிந்து பானங் கொண்டால் தணிந்து மிகத்தன்னிலை யைத் தானே கண்டு தானவனுய நின்று மதிதன்னைப் பார் துணிந்து சிவசக்தி பதந் தொழுது நில். தொழுது நிலைதனை யறிந்து துலங்கு, எனக் கடைப் பிள்ளை அருளிய தண்டகம் முற்றுகின்றது.

(கு-பு.)—

இந்நூல் யோக நிலைபற்றுக் கூறுகின்றது.

R. No. 4233.

சுந்தரானந்தர் ஞானச் சுருக்கம்—மூன்று.

SUNDARĀNANDAR ÑĀNACCURUKKAM—3.

Foll. 152, one only. Extent, 10 granthas.

Begins on fol. 152 of the manuscript described under R. No. 4208.

Complete.

Beginning :

ஆவெனு உளவும் அடித்ததோர் பத்தாம்
நாவொன்று இசைந்ததோர் நாலாம்
பூவெனுக் கொண்டு பொருளறி வாளர்க்கு
சீயெனு வீசன் தெளிந்துரைத் தானே. (1)

End :

ஒக்குமே சூத்திரம் ஒருமூன்று பாட்டினில்
தக்குமே ஞானம் தாண்டவ மாடி
மொக்குமே திரேகம் பன்னிருகோடி போல்
சிக்குமே வாசி தெளிவிது முற்றே. (3)

முற்றும்

(கு-பு)—

இந்நூல், சுந்தரானந்தரர் ஞானச் சுருக்கம் என்னும் பெயர்த்து. மூன்று பாடல்கள், பிழைபட எழுதப்பட்டுள்ளன. காண்க.

R. No. 4233 (*a*)

கூர்மானந்தர் (சிவயோகம்)—ஐம்பது

KŪRMĀNANDAR (ŚIVAYŌGAM)—AIMPATU.

Foll. 153—165 Extent, 150 granthas.

Begins on fol 153 of the manuscript described under R. No. 4208

Complete.

Same work as that described under R. No. 944 (g).

(கு-பு)—

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு 944 (g)-ஆம், எண்ணில் விளக்கப் பட்டுள்ளது. காண்க. முற்றுமுள்ளது.

R. No. 4234.

வியாக்கிரபாதர் அதீத கல்பம்—எட்டு.

VIYĀKKIRA PĀDAR ATĪTHA KALPAM—EṬṬU.

Foll. 166—167. Extent 20 granthas

Begins on fol. 166 of the manuscript described under R. No. 4208.

Complete.

Beginning.

தாரணியில் வியாக்கிமர் நாலுக் குள்ளே
தயவுவைத்து சீடருக்கு அறிக்கை செய்வார்
வாரணியாகு சோதிமிகத் துலக்கமாக
வாசியெனும் முப்பொருளு முருவதாக
சீரணியுங் காயத்தில் நோய்கள் தீரத்
தெளிவாக நரைதிரைக ளற்றுப் போக
காரணமாய் மைந்தர்களே சொல்லக் கேளுங்
கற்பத்தின் வகையதனை உரைக்கி றேனே. (1)

உரைக்கிறேன் தண்ணீர்விட்டான் கிழங்குபலம் நாலு
உற்றதொரு நெருஞ்சிவித்துப் பலமோ மூணு
நிறைக்கிறேன் சீந்திவித்துப் பலமோ நாலு
நிலப்பனையின் கிழங்கதுதான் பலமோ மூணு
வறைக்கிறேன் சித்தரத்தின் மூலம் மூணு
வகையாகக் கார்போக வரிசி மூன்று
மறைக்கிறேன் கெந்தகத்தின் சுத்தி மூன்று
பருவமா யாறுவகைக் கூட்டிக் கொள்ளே. (2)

End:

என்றேதான் மைந்தர்களே உண்டு யாரும்
இயங்குமப்பா றுண்டில் பொன்போல் திரேகம்
சென்றேதான் வாசியது கட்டிக் கொள்ளுஞ்
சிறந்ததொரு......ராலாசத்தைக் கட்டு
முண்டேதான் காயமது அருண ணுகும்
ஊழியதோ காலமது இருக்குந் திரேகம்
நன்றேதான் எந்தனுடை சூத்திரத்தினுல்
நானுரைத்தக் கர்ப்பமது கொண்டு தேரே. (8)

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், வியாக்கிரபாதர் அதீத கல்பம் என்னும் பெயர்த்து. முற்றும் உள்ளது. எட்டுப் பாடல்கள் கொண்டது. ஞானத்தைக் கொள்ள அதற்குத் திரேகம் வலிமையுடையதாகும் மார்க்கங்களை எடுத்துக் கூறு கிறது. யோகிகளுக்கு மிக உகந்ததொரு சின்னூலாகும்.

R. No. 4235.

வியாக்கிரபாதர் சமாதி—எட்டு.

VIYAKKIRA PĀDAR SAMĀDHI—EṬṬU.

Fol. 168, one only, Extent, 10 granthas.

Begins on fol. 168(a) of the manuscript described under R. No. 4208 Complete.

Beginning.—

முயங்கிய கண்டம் மூவா றிதழுயிர்
தயங்கிய வீசன் றனது றுப்பாந்
தியங்கிய விந்தித் தெளிவதுந் தாரம்
பயங்கிய வாய்வு பதியது தானே. (1)

பதியதில் நின்று புதர்ந்திட மேறிச்
சகியெனும் ஆவிமதி சார்ந்தது காண
விதியெனு மூக்கம் வெளிப்படு முயிரது
மதியெனக் கண்டும் மறிப்பவர் சித்தரே. (2)

End :

பளிச்சென்று மின்னும் பதியமுர் துண்ணலாம்
வெளிச்சென காணும் வெட்ட வெளியாங்
களிச்செனப் போகாக் காயமது தானே
ஒளிச்செத் திரேகம் ஒருகோடி யுகமோ. (8)

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், வியாக்ரபாத முனிவர் அருளிய சமாதி சூத்திரம் எட்டு என்னும் பெயர்த்து. எட்டுப் பாடல்கள் கொண்டது. சமாதி முறைகளைப்பற்றிக் கூறுகின்றது. இதுவும் யோகம் செய்து சமாதியடைய விரும்புவர்கட்குப் பயன் படுவதாகும்.

R. No. 4236.

சுப்பிரமணியர் சுத்த ஞானம்—இருநூறு.

SUBRAMAṆIYAR ŚUDDHA ÑĀNAM—100.

Foll. 169—189. Extent, 250 granthas.

Begins on fol. 169 of the manuscript described under R. No. 4208.

Complete.

Same work as that decribed under R. No. 179 (b) ante ;—

(கு-பு.)—

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு, 170 (b)-ஆம், எண்ணில் விளக்கப் பட்டுள்ளது, காண்க.

R. No. 4237.

அகத்தியர் ஞானம் நூறு.

AKATTIYAR ÑĀNAM—100.

Foll. 190—205. Extent, 250 granthas.

Begins on fol. 190 of the manuscript described under R. No. 4208.

Complete.

Same work as that described under R. No. 254

(கு-பு)—

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு 254-ஆம் எண்ணில் விளக்கப் பட்டுள்ளது. காண்க.

R. No. 4238.

அகத்தியர் பூரண சூத்திரம்—நூறு.

AKATTIYAR PŪRAṆASŪTTIRAM—100.

Foll. 206—225. Extent, 500 granthas.

Begins on fol. 206 of the manuscript described under R. No. 4208.

Complete.

Same work as that described under D. No. 254.

(கு-பு)—

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு 254-ஆம் எண்ணின்கீழ் விளக்கப் பட்டுள்ளது. ஆங்குக் காண்க.

R. No. 4239.

இராமதேவர் பட்சிணி அஷ்டாங்க யோகச் சுருக்கம்.

IRĀMADĒVER PATCIṆI AṢṬĀṄKA YŌGACCURUKKAM.

Foll. 227—235. Extent 150 granthas.

Begins on fol. 227 of the manuscript described under R. No. 4208.

Complete.

Same work as that described under R. No. 201 (*b*).

(கு-பு)—

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு, 201 (b)-ஆம் எண்ணின்கீழ் விளக்கப் பட்டுள்ளது. காண்க.

R. No. 4239 (*a*).

திருவிளக்கச் செயல் விளக்கம்

TIRUVIḶAKKAC CEYAL VIḶAKKAM

Foll. 235—245. Extent 150 granthas.

Begins on fol. 239 of the manuscript described under R. No. 4208.

Incomplete ; only 97 stanzas.

Beginning :

சங்குத் தொனியுந் தாரைகளுந்
தானே முழங்கும் கற்றுள்
எங்கு நிறைந்த விஞயகனே
இதைமற் றிருத்தி வேல்முருகன்
செங்க மலத்தாள் பணிந்து
செகத்தில் திருவுளச் செயல்விளக்கம்
பொங்க முடனு னுரைத்தருளப்
புனிதர் யுமையே காப்பாயே. (1)

பவப்பெருங் கடலமுந்திப் பரதவித்
திடும்மாந் தர்க்கு
எவர்க்குநல் லறிவுஞானம் இயம்பிடு
மிலக்கணத்தான்

தவக்கண் ணன்னெறி யுள்ள சமைய
கோளரியில் நூலைத்
துவக்கியிங் குரைத்தான் மாலுந் துலங்கவே
நாமுங் காப்பாம்.

* * * * * (2)
* * * * * * *

End :

நீர்க்குமிழ் காயம் வாழ்வு
நித்திரைச் சொற்ப னம்போல்
நேர்க்குவந் தெய்யா மாய்கை
நிலைநில்லா தென்று ஞானத்
தீர்க்கமாய் அறிந்து பூசை
செய்திடா மாந்த ரெல்லாம்
ஏற்குமே கைகீ ழாக
யிரப்பவரிவ்வுலகிற் காணே. (96)

பிறவா நெறியுந் தான்புவியிற்
பிறந்து வாழ்வு பெறுநெறியுந்
திறவாக் குருவுங் குருவல்ல
திந்த குருவி னுரைப்படியே
மறவா நெறியும் வழிப்பாடு
மாகாச் சீடன் சீடனல்ல
இறவா யினக்குக் குறவன்றி
யெல்லா முரைத்தா யெனப்பணிந்தான். (97)

(முற்றுப் பெறவில்லை)

(கு.பு.)—

இந்நூல், திருவுளச்செயல் விளக்கம் என்னும் பெயர்த்து. முற்றுப் பெறவில்லை. ஊழின் விளையாட்டையும், அதனை மாற்ற வழி காணும் முறையினையும், நந்தவனத்தை வைத்தோம்பிய குண்டையன் என்பாரது வரலாற்றைக் கொண்டு எடுத்துக்கூறிச் செல்லுகின்றது. இதனை, திருக் கோவலூர், சிவசண்முக மெஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் என்பவர் இயற்றியிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. செய்யுள் நடை நன்றாகவுள்ளது. படித்தின்புற நல்லது. சிவசமயவாதிகட்குப் பயன்படவல்லது.

R. No. 4240.

கொங்கணர் ஆனந்தக் களிப்பு

KOṄKAṆAR ĀNANTAK KAḶIPPU.

Fol 246.—247. Extent 30 granthas.

Begins on fol. 246 (a) of the manuscript described under **R. No. 4208.**

R. No. 4240

கொங்கணர் ஆனந்தக் களிப்பு

KOṄKAṆAR ĀNANTAK KAḶIPPU

Fol. 246—247. Extent, 30 granthas.

Begins on fol. 246 of the manuscript described under R. No 4208 Complete.

Beginning :

தன தந்தனு தந்தனு தந்தனுனு தந்தனுதந்தனுந்தனு தந்தனுனு. அஞ்சுக் கரத்தையும் நீட்டியதின் மேலே அகார யுகாரத்தை ஞுட்டி, மிஞ்சக் காத்தையும் பூட்டி மத்து மேலான தொண்ணூற்று ஆரவரைக்குட்டி நெஞ்சக் காத்தையுந்நீட்டி நித்தஞ் சித்தம் புத்தி மனத் தாங்காரங்காட்டி பஞ்சக் கரத்தையும் ஓட்டி, சித்தம் பாடிப்பாடிப் பதம் ஆடிக் கொண்டாண்டி. அக்கரந்தன்னை யறிந்து அதுக்குள்ளே விளைந்த அறிவையறிந்து சக்கரந் தன்னையறிந்து, அதன் சவ்வுக்குள்ளே நின்ற சிவ்வையறிந்து சுக்கிலந் தன்னையறிந்து சுகமாயிருந்த சுகத்தையுங் கண்டு யெக்குலந் தன்னில் புரிந்து யெழுதாநிலத் தில்லை யில்யெல்லை கண்டோமே.

End :

நல்மான வாசல் நடனமுங்காட்டி, ஏணிக்குள்ளேணியுங்காட்டி, எழுதா தருடில் எழுத்தையுங் காட்டி, ஆணிக்குள்ளாணியுங்காட்டி ஆசவாணிக் கப்பாலாகும் அம்பரங்காட்டி உள்ளணிக்குள்ணிளுயுங் காட்டி உணர்வான உள்ளொளிக்குள்ளொளியெழுதா-வ-ஒண்ணுக்குளொண்ணையுங் காட்டியோ; உச்சியில் முடியில் உளரையுங் காட்டிக் கண்ணுக்குள் கண்ணையுங் காட்டி' கதிர்காலமுங் கலந்தெடங்காட்டி, விண்ணுக்குள் விண்ணையுங்காட்டி'. வெளியெியுத்த வெளியையுங்காட்டி, குண்ணுக்குள் குண்ணையுங்காட்டி யெங்கள் கொரக்கனுதா வந்தானடி தோழீ.

சற்குருவே துணை.

(கு-பு)—
இந்நூல் யோக தத்துவத்தை விளக்கிச்செல்லுகின்றது.

R, No. 4241.

ஞான வெண்பா

ÑĀNA VEṆPĀ

Fol, 248—255, Extent 112 granthas.

Begins on fol. 248 (a) of the manuscript described under R. No. 4208 Complete.

Begining;

1. *தன்னையறிய வென்றே சற்குருவை தெண்டனிடத் தன்னை யறியக் கிருபை சாத்துவார் பிள்ளையுமே வேதாந்த சாஸ்திரத்தை வேண்டுமிருமப் பாலப் போதாந்தமான பொருள்—க–தானே பரமாகுந்தானே. சிவ மாகுந் தானே சிகசால சித்தானுகுந்தானென அல்லும் பகலுமறிவாகத் தாங்கியே வல்லாரிருப்பார் மகிழ்ந்து.*

2. *விண்ணுடு திரியாதே வெறு வெளியா நீயிருந்து கண்டும் மகிழ்ந்துங் களியாகித் தொண்டருடன் சோம்பித்திருந்து துரிசரவே நித்த நித்தங் கூம்பியறிந்து வாய்கொள்.*

End ;

ஆண்டகுருவே யடியேன் விண்ணப்பமொன்று. மீளவும் பிறவாமல் விடுவிப்பாய். ஆண்டவனே பூணருமென்னின் திருதாள் பூணிக்கை யாயி ருத்தித் தோன்றுமலிருக்கச் சொல்ல.

பெரும் வெளியென்றும், வெளிமூன்றும், வெளியாகும் வெளியாம் மாந்தங்கே. தேருங்கா லெங்கும் பெருவெளியே ஏக வெளியாச்சு நீ தங்கும் வெளிவெளியேதான். சொல்லும், வெளிப்பொருளுஞ் சுகமும் வெளியசுக் கல்லாலவனும் பகலும் வெளியாச்சுதே, நல்ல சுத்தமும் பரமாயச் சுகத்திலமுந்தினுய் சிதம்பரனுய் நீயே (சிவம்).

சற்குரு பாதந்துணை.

(கு-பு)—.

இந்நூலின்கண், ஞானமுறைகள் விளக்கப் பெறுகின்றன.

R. No. 4242.

மாணிக்கவாசகர் ஞானக் கலித்துறை

MĀṆIKKA VĀCAKAR ÑĀNAKKALITTUṞAI

Foll. 255—263, Extent, 142 granthas.

Begins on fol. 256 of the manuscript described under R. No. 4208

Complete :—Printed.

Beginning ;

சங்கற்பமத்து விகற்பமத்தை விட்டுத்தனியிருந்தாலிங்கற்முகு மொன்று மில்லைக் கண்டாய். இது தாறியெங்குத் திருந்தனே யங்குத்திருந்து விருந்த படி யங்குத் திருமனமே சிலஞளில் மருவுவையே. கூடாத கூட்டமதில் போகாமல் என்றுங், குறித்துளத்தை நாடாமல் நாடி நடந்து வந்தாலுன்னை நாடுவையால் தேடாமல் தேட சிவமுந் திசையெங்குமா யூடாடி நின்று யுன்னுள்ளிருந்து ஒருப்படுமெல்லை, கர்மமுடித்து லோகமும் தது கருமை யத்து நேம முடித்து, மதங்களுமத்து நிறமலனுய்த் தர்மசமான சகத் தொழுங்கு எல்லாந் தவிர்ந்து நின்று சேமமுறுமுற்றி கூட்டுவையோ சின் மயானந்தனே. (எனத் தொடங்குகின்றது)

End :

அவங் கடந்தவ ஞதியிலே தங்கியெனே மறந்தவனு மில்லாமல் அத்தன் நித்தனனே. அவந்தனைச்செய்து வணங்கயிட மத் தென மனத் தினுள்ளே தேர்ந்தனையாக. துணிந்து நின்றவனைத் தொல்லை மாமறையால் சிந்தனை யற்ற திறத்தால் அனைத்துஞ் செறிந்ததைக் கண்டு அந்தணனுறு மவனு மெனக் குள்ளுரைந்திலேன். ஆரூரிலச் சென்று அனுதிக் கனியை அகத்தி னுள் யான் பேரூரில்லானைப் பெற்றனனுல் இந்த படுபறதனுல் பாரூர்ப் புவனஞ் சார்சா பூதப்பாபபனைத்தும் ஆரூரனுக. ஆரூரினுலனும் மர்ந்தனனே.

திருவாரூரில் சென்றுதியாகேசனைக் கண்டு, தெரிசித்த பின்
மருவாரூர் மெள்ள மாண்டனலால் மறைக்குமே.
யாவோருவாரூர் தோன்றி பதி பசுபாசமு மொன்றெனுமோர்
பெருவாரூரில் மூழ்கி நீரில் வண்ணம் போல் பெற்றனனே.

(சிவமயம் முற்றிற்று.)

(கு-பு.)—
மணிவாசகர் ஞானம் பெற்றதை இந்நூல் உணர்த்துகின்றது.

R. No. 4243.

பாம்பாட்டி சித்தர் பாடல்

PĀMPĀṬṬI SIDDAR PĀḌAL

Foll. 264—266 Extent, 56 granthas.

Begins on fol. 264 of the manuscript described under R. No. 4208.

Complete.

Beginning :

எள்ளுக்குள் எண்ணெய் போல் எங்கெங்கு முள்ளான இலங்கிய சோதியே, என்னகத்தில் உள்ளத் திவ்வளவு மாவெனும் உள்ளும் புறம்பு மாய் உணர்வெனும் மௌனக்கவலை யெழுப்பவெனும் மேலத் தெருவிலே உலாவ லெனுங் கள்ளப் புணலையே அவற்றல்லவோ கண்ணுக்கு மேலாய் நின்றுடாய் பாம்பெண கன அகாரமுதல் தொரா. பாம்பதாகி ஆனந்த அவ் விலே படம் விரித்து உகாரமது தனிலூத் தெடுத்து, ஞம வாசிகாரத்தில் நாக்கை நீட்டி, சிகார பிறப்பெல்லாம் வொறுத்து சித்தப் பிடாரனும் யோகஞ் செய்து, மகாரப் பிறப்பெல்லாம் வேரறுத்து, பந்தம் கடந்தோம் என்று ஆடாய் பாம்பே. (எனத் தொடங்குகின்றது.)

End :

சுருதி ருதி சொன்ன வேதம் சொல்லாமல் சொன்னவாறு பாதம் கண்டோம். சருதியும் நீரெல்லாம் மறுங் கற்ப பினை காணன சரணமென் றுடாய் பாம்பே. சாவித்திறம் வென்று சடங்கும் வென்று மதறப்பா பூசை சிவங்கள் வேண்டாம். மாத்திரை போது மறிப்பீராளுல் மனங் கோயிலாக எனும் மென்றுடாய் பாம்பே. உள்ளொளி பெற்றோம், ஒருத்தராளும் ஓங்காரந்தன்னில் உணர்ந்து கொண்டோம, கண்ணெனிதெனுர் பார்வை யாலே யவர்தானெறும் மாறோம் மென்றுய பாம்பே. ஓங்காரக் கும்பத் தின் உச்சி மீதில் உணர்வும் ஒடுக்கமும் ஆன பாம்பே ஆங்கார மானத்தை அறுத்துப் போட்டு ஆனந்தம் ஆனந்தம் என்றுடாய் பாம்பே. தாங்காமல் தாங்கி நின்று டாய் பாம்பே. தொந்தங் கடந்தோம் என்று ஆடாய் பாம்பே.

(முடிந்தது.)

(கு-பு.)—
இந்நூல் வேதாந்தக் கருத்துக்கள் பலவற்றை எடுத்து விளக்குகின்றது.

R. No. 4244.

புலிப்பாணி முனிவர் வைத்தியம்—ஐந்நூறு

PULIPPĀṆI MUNIVAR VAITTIYAM—500.

Palmleaf, 7½ × 1½ inches. Foll to 72. Lines 9 on a page. Tamil, injured, Old. Extent, 1200 granthas.

Presented in 1952-53 by Sri T. Tirumalai, C/o, Muttukrishna Ayyangar Sampandapuram, Rajapalayam Post, Ramanathapuram District.

Incomplete.—

only 445 stanzas.

Same work as that described under R. No. 927 (*a*).

(கு-பு,)—

இந்நூலின்கண் வைத்தியமுறை கூறப்படுகின்றது. இந்நூல், மூவருடக் காட்டலாக்கு, 927(a)–ஆம், எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்பைக் காண்க. இதில் 445–பாடல்களே உள்ளன; முற்றுப்பெறவில்லை. முன்னும் பின்னும் உள்ள ஏடுகளில் வைத்தியக் குறிப்புக்கள் எழுதப் பட்டுள்ளன.

R. No. 4245.

கந்தபுராணச் சுருக்கம்

KANTAPURĀṆAC CURUKKAM.

Paper. 12½ × 10 inches. Pages, 1 to 294. Lines 24 on a page, Tamil, good. New. Extent 3500 granthas.

Restored in 1952–53, from a manuscript described under D. No. 546.

Complete :—

(கு-பு)—

இந்நூலின்கண் திருமுருகப் பெருமானின் வரலாறு கூறப்படுகின்றது: இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு 546–ஆம் எண்பிரதியிலிருந்து பிரதி செய்து வைக்கப்பட்டுளது.

R. No. 4246.

நாவாய் சா்ஸ்திரம்

NĀVĀI ŚĀSTIRAM

Paper. 12½ × 10 inches. Pages 1 to 76, Lines 24 on a page, Tamil' good, New. Extent: 912 granthas.

Restored in 1952–53 from a manuscript described under D. No. 2016.

Incomplete.—

(கு-பு.)—

இந்நூலின்கண் நாவாய்க்குரிய இலக்கணம் கூறப்படுகின்றது. இந் நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 2016–ஆம் எண்பி ரதியிலிருந்து பிரதிசெய்து வைக்கப்பட்டுள்ளது.

R. No. 4247.

பூர்வ காண்டம்.

PŪRVA KĀṆḌAM

Paper, 12½ × 10 inches. Pages 1—446, Lines 24, on a page, Tamil, Good New. Extent, 53,52 granthas.

Restored in 1952-53, from a manuscript described under D. No 2142.

Incomplete.—

(கு-பு.)—

இந்நூலின்கண், சிவானுபவ விளக்கம் கூறப்படுகின்றது. இதன் விளக்கம் டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு 2142–ஆம் எண்ணிலிருந்து பிரதி செய்து வைக்கப்பட்டுள்ளது. காண்க.

R. No. 4248

பிரசங்க புத்தகம்.

PIRASAṄKA PUTTAKAM

Paper, 12½ × 10 inches. Pages 1—352. Lines, on a page, Tamil, Good, New Extent, 4224 granthas.

Restored in 1952-53, From a manuscript described under D. No. 2063.

Complete.—

(கு-பு.)—

இந்நூலின்கண், கிறித்துவத்தைப் பற்றிச் செய்த பிரசங்கம் விளக்கப் படுகின்றது. இதன் விரிவு டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு 2063–இல் விளக்கப்படு கின்றது, அதிலிருந்து இந்நூல் பிரதி செய்து வைக்கப்பட்டுள்ளதாகும்.

R. No. 4249

தோத்திரப் பாடல்கள்

TŌTTIRAP PĀḌALKAḶ

Paper, 12½ × 10 inches. Pages 1—264. Lines 24 on a page, Tamil, Good. New, Extent, 2,500 granthas.

Complete.—

Transcribed in 1952-53, from a manuscript of Siddhānantha Ashramam, Nochur village, Koduvayur.

This work contains innumerable prayer songs of exquisite beauty of rhytum and diction evoking the spirit of Bhakta in the minds of the reciters. The author Yogi Siddhānandar who is well versed in Śaiva Siddhānta doctrines expounds them here in the manner of Māṇikkavācakar. The appeal of this work to the hearts of the readers is no less than that of Tiruvācakam.

Beginning :

அமுதளித் தல்லல் தவிர்த்துப் புரப்பது மம்புதம்போல
சமுத நிறைப்பதுஞ் சச்சிதா னந்த தரங்கத்தமிழ்ந்
துமுத மதர்ப்பி லடியேன் களிக்கத் துணைசெய்வதுங்
குமுத மருப்பொன் றிருபத முக்கடக் குஞ்சரமே.

சீரா ரழுப்புகத் தமரரெல் லாருமிரு
செங்கை விரன் முடங்கிச்
சிரத்து மும்முறை யிடித்திருகரமு மாற்றியஞ்
செவி பிடித்துத் தாழ்ந்தெழக்
காராரு மாணை கடாவிய கடாசலக்
கயவனிற வொருவனையாற்
கட்டழித்தூர் தியாக்கித் தனக்கவ்வணைக்
கங் கொண்ட தேவை நினைவாம்

நீராரு தான் மறைமாகமமு மோங்கவும்
நிலைத் தறமி யங்கி வரவும்
நிகள நீங்கிடவு மெய்ஞ்ஞான சன்மார்க்க நெறி
நின்று யாவரு முய்யவுந்
தாரா ரலங்கி லண்ட நாயகி மருவு
சங்கரன் தாள் மலரிணை
தாங்கி வழிபடுபவர்க் கெஞ்ஞான்று நான்குநற்
றுமமுந் தழைய வெனறே.

ஆதியே காட்சர மகாமந் திரப் பொருளி
னதிகார னாதி பகவன்
ஆதிபுங் கவனாதி நாதனாதித்திய
னநாநகன பான நகன்
ஆதி பரனாதி னையனாதி மூலத் தான்
அனாதியங் கடவுளருணன்
ஆதியிடை யந்தமு மநந்தமு மநாதியு
மமைந்த வன நாகதசிவன்

* * * * * * *
* * * * * * †

எண்ணாத போதிலு மிரங்கிமுன் தோணறுவாய்
ஏகையே சிவகாமியே.

End :

கள்ள வினையாற் கலக்குண் டலமந்து
கொள்ள முடியாக் கொடுமைக் கிடமானேன்
அள்ள முடியா வழுக்கு நெஞ்சியமே
தள்ள முடியாதுன் தாள்மலரைச் சார்ந்தேனே (173)

தேனுருகுஞ் சொன்மயிலே திவ்யமாம் நின்துதியை
நானுருகிப் பாடுங்கால் நாவுருகும் என்னுடைய
ஊனுருகு முயிருகு முணர்வுருகு மூழ்வினையின்
கானுருகுங் கல்லுருகுங் காண்பவையு முருகிடுமே. (174)

செந்திலா னன்னை யம்பாள் தேவிதா னருள லானுள்
இந்தநா னவின்ற வாறே யிவனகங் கனிந்து செய்து
வந்திடி லலக்க ணீங்கி மங்களந் ததும்பு மென்றாள்
அந்தமெய்ம் மொழியைக் கேட்டா ரனைவரும் வணங்கி நின்றார் (175)

நிருவி கற்ப சமாதி மண்டல நிலவு நின்மலை யன்புடன்
தருதவர்க் கருடந்து தன்மய சைவ சோதிய னாகினுள்
அருமுனிக் குலமட யுயேகவும் மருண ஞழி யமிழ்ந்தனன்
உருவி வானமு தொழுக விண்பிலு தித்துயர் ஒத்தது திங்களே. (176)

(கு-பு.)—

இந்நூல், தோத்திரப்பாடல்கள் என்னும் பெயர்த்து. நிறையப் பாடல்கள் கொண்டது, அம்பிகையின் திருநாமங்கள் பலவற்றையும் அடிப்படையாகக் கொண்டு பலப்பல பாவினங்களால் பாடப்பட்டுள்ளது, திருவாசகத்தின் தன்மையைத் தழுவிய பாடல்களும் காணப்படுகின்றன. குயில், ஊசல், தெள்ளேணம், இனி முதலிய விளியாக அமையப் பாடப்பட்டும் உள்ளன. பாடியவர் யோகி சித்தாநந்தர் என்பவராவர். இவர் பலப்பல சித்தாந்த நூல்களையெல்லாம் பயின்று, அவைகளின் கருத்தினடிப்படையில் இந்நூலை யாத்துள்ளனர் என்பது, இந்நூலை முழுவதும் படித்துணர்வார்க்குப் புலனாகும், நடையும் கருத்துச் செறிவும், சொல்லழகும், சொற்பின்வருநிலையணிகளும் படிப் பார்க்கின்பந்தருவன. சுருங்கச் சொல்லின், திருவாசகம், படிப்போருளத் தையுருக்குவது போல், இந்நூலும் உருக்கவல்லது.

R. No. 4250

திருமூலர் வைத்திய முறை—வசனம்

TIRUMŪLAR VAITTIYA MUṚAI—VACANAM.

Paper. 12½ × 10 inches. Pages, 1—54. Lines 24 on a page, Tamil, Good. New, Extent, 548 granthas.

Restored in 1952-53, from a manuscript described under D. No. 1954.

Complete.

(கு-பு.)—

இந்நூலின்கண் பற்பல நோய் தீர்க்கும் மருந்து வகைகள் கூறப்படு கின்றன. இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 1954-ஆம், எண்பிரதியி லிருந்து பிரதி செய்து வைக்கப்பட்டுள்ளது.

R. No. 4251

ஆயுர்வேத வைத்தியம்

ĀYURVĒDA VAITTIYAM

Paper. 12½ × 10 inches. Pages 1—67. Lines 24 on a page, Tamil, Good New, Extent, 650 granthas.

Transcribed in 1952-53. From a manuscript of Madurai Tamilc-Caṅkam, Madurai.

This is a translation from a Sanskrit work of the same. This treatise on indigenous system of medicine deals with the diseases arising chiefly from the three principal humors or fluids of the body and their treatments. This work seems to be incomplete.

Beginning :

வாரண முகனைத் தொந்தி வயிறனைக்
காரணச் சிவனை ஐந்துகரத்தானைப் போற்றி செய்து
பாரினில் மானிடர்க்கு வந்த பதினெட்டுக் குட்டத்துக்கும்
பேர்குணம் வடநூல் கண்டு பிரித்து நான் அறிவித்தேனே. (1)

நிந்தித்த பிறத்தியார் சோம
நிலை கெடப் பறிக்கலானும்
வந்தித்த பூருவ சென்ம
சென்மாந்திர பாவத்தி னாலும்
சந்தித்த கற்பு மாதர்
தங்களைக் கருத லானுந்
தொந்தித்தக் குட்டரோகந்
தொடுக்கு மென்றுரைத்தார் முன்னோர். (3)

* * * * * * *

End :

மார்பின்கீழ் பக்கர் தன்னில்
மறுப்பட தென்று கோல்போல்
நேர்படாச் செம்மையாக
நிற்பதே வாயு நெஞ்சில்

காா் செறிகுழலி னாளே
கருவியால் கீறிக் காரம்
பேர்படக் கட்டப் பக்கப்
பிளவையும் விட்டுப் போமே. (29)

முதுகில் புத்துடைய போல
முள்ளந்தண் டதனைத் தப்பி
எதுவரில் மரண மில்லை
எங்கில் கண்ணடைபடு மென்
றதிலே பேணிகுளிர் சுரமுந்
தவனமுங் கழிச்சலுட
னிதுதான் பக்கப் பிளவை
யதுக்கினிதான் காரங் கீறியிடே. (30)

முற்றும்.

(கு-பு)—

இந்நூல், ஆயுர்வேத வைத்தியம் என்னும் பெயர்த்து. வட மொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. 57 பக்கங்கள் வரை உள்ளன. முற்றுள்பெற்றதாகத் தெரியவில்லை. 57 முதல் 67 வரையிலான பக்கங்களில் வான்மீகர் உறுப்புச் சூத்திரம், தீப சூத்திரம், மணிக்கடைச் சூத்திரம் முதலானவை உள்ளன. இவையனைத் தும் மூவருடக் காட்டலாக்கு, 940-ஆம், எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கின் றன. கண்டு கொள்க. வாத, பித்த, சிலேத்துமங்களால் ஏற்படும் நோய் களையும், அவை தீருவதற்கான மருந்து முறைகளையும் கூறிச் செல்கின்றன. மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து வந்த, பிரதியைப் பார்த்து, இந்நூல் எழுதி வைக்கப்பட்டதாகும், எழுதுவோரால் எழுத்துப் பிழைகள் ஏற்பட்டுள் ளன.

R. No. 4252

மகா விந்தம்

MAHĀ VINTAM

Paper. 12½ × 10 inches, Pages 1—298. Lines, 24 on a page. Tamil, Good, New, Extent, 3,444 granthas.

Complete.

Restored in 1952–53, from a manuscript described under D. No. 2537.

(கு-பு).—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 2531-ஆம் எண்ணிலிருந்து பிரதி செய்து வைக்கப்பட்டுள்ளது, அதன் குறிப்புக் காண்க.

R. No. 4253

வேதபுரித் தலபுராணம்

VĒTAPURIT-TALAPURĀṆAM

Paper. 12¼ × 10 inches., Pages 1—658, Lines, 24 on a page. Tamil, Good, New, Extent, 1,884 granthas.

Restored in 1952-53. from a manuscript described under D. No. 639.

Complete.

(கு-பு)—

இதன் விளக்கம் டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு 639-வது, எண்ணில் விளக்கப்பட்டுளது. அதிலிருந்து இந் நூல் பிரதிசெய்து வைக்கப்பட்டுள்ள தாகும். அதன் குறிப்புக்காண்க.

R. No. 4254

வீரதுரங்க ராஜன் கதை

VĪRATURAṄKARĀJAN KATAI

Paper. 12¼ × 10 inches, pages 1—96, Lines 24 on a page. Tamil, Good. New, Extent 1152 granthas.

Restored in 1952-53, from a manuscript described under D. No. 466.

Incomplete.

(கு-பு)—

இந்நூலின்கண் வரதுங்க ராஜனுடைய கதை கூறப்படுகின்றது. இதன் விளக்கம் டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 466-ஆம் எண்ணில் கூறப்படுகின்றது. விரிவு ஆங்குக் காண்க. அதிலிருந்து இந்நூல், பிரதி செய்து வைக்கப்பட்ட தாகும். இந்நூலுக்குத் "தமிழ்ச் சிந்தாமணி" என்னும் மற்றொரு பெயர் உண்டெனத் தெரிகின்றது.

R. No. 4255

பஞ்ச தந்திரம்

PAÑCA TANTIRAM

Palmleaf. 15 × 1 inches, Foll. 1—51, Lines, 6 on a page Tamil, Injured, Old, Extent, 1,200 granthas
Want, Foll. 7 to 16 & 28 to 39.

Presented in 1952-53, by A. M. Subramaniyam, Ambodhi, Puliyampatti P. O. (Via). Satyamankalam.

Incomplete—Printed.

Same work as that described under D. No. 427.

(கு-பு.)—

இதன் விளக்கம் டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 427-ஆம் எண்ணில் கூறப் பட்டுள்ளது. ஆங்குக் காண்க. முற்றுப் பெறவில்லை.

R. No. 4256

கோவிந்த மாலை

KŌVINTA MĀLAI

Palm-leaf. 14 × 1 inches. Foll 16 Lines 4 on a page Tamil, Injured, Old, Extent 45 granthas.

Presentedin 1952-53 by A. M. Subramaniyam, Ambodhi Puḷiyampaṭṭi P.O. (Via) Satyamaṅkalam.

Incomplete.

Wants stanzas 27—30.

Same work as that described under R. Nos. 1220 and 5221 ante.

(கு-பு.)—

இந்நூலின்கண் கோவிந்தனைப் பற்றி வணக்கம் கூறப்படுகின்றது. இந் நூல் மூவருடக் காட்டலாக்கு 1220, 5221 முதலிய எண்களில் வருணிக்கப் பட்டிருக்கின்றன. அதன் குறிப்புங் காண்க.

R. No. 4257

அம்பிகை மாலை

AMBIKAI MĀLAI

Palm-leaf. 14 × 1 inches, Foll. 1 — 15, Lines 4 on a page, Tamil. Injured, Old. Extent 36 Granthas.

Presented in 1952–53 by A. M. Subramaṇiyam, Ambodhi Puḷiyampaṭṭi P.O (Via) Sattiyamaṅkalam.

Foll. 1, 6, 9, 12, 14 and 15 are missing.

Incomplete—Printed.

Same work as that described under D, No. 334.

(கு-பு.)—

இந் நூலின்கண் மதுரை நாயகியைப் பற்றிய வாழ்த்துக்கள் விளக்கப் படுகின்றன. இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 334-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டுள்ளது. அதன் குறிப்புக் காண்க. இதில் முற்றும் இல்லை.

R. No. 4259

வாக்குண்டாம்

VĀKKUṆḌĀM

Palm-leaf. 10 × 1 inches. Foll. 1—5. Lines, 7 on a page. Tamil. Injured. Old Extent, 79 granthas.

Presented in 1952-53, by A. M. Subramaniyam, Ambodhi, Puliyam paṭṭi Post, (Via.) Sattiyamaṅkalam.

Complete—Printed.

Same work as that described under D. No. 198.

(கு-பு.)—

இந்நூலின் விளக்கம் டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 198-ஆம் எண்ணில் விளக்கப்பட்டுளது. ஆண்டுக் காண்க.

R. No. 4260

கொன்றை வேந்தன்

KONṞAI VĒNTAN

Palmleaf. 15 × 1 inches, Foll. 1—8, Lines, 4 on a page. Tamil. Old. Injured. Extent, 80 granthas.

Presented in 1952-53, by A. M. Śubramaṇiyam, Ambodhi, Puḷiya mpaṭṭi Post (Via). Sattiyamaṅkalam.

Complete—Printed.

Same work as that described under D. No. 198.

(கு-பு.)—

இந்நூலின் விளக்கம், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 198-ஆம் எண்ணில் விளக்கப்பட்டுளது. விளக்கம் ஆண்டுக் காண்க.

R. No. 4261

ஆத்திசூடி

ĀTTICŪḌI

Palm-leaf. 13 × 1 inches. Foll. 13. Lines 4 on a page; Tamil, Injured, Old, paṭṭi PostExtent 40 Grenthas.

Presented in 1952 53by A. M. Subramaṇiyam, Ambodhi, Puḷiyam Via, Sattiyamaṅkalam.

Complete—Printed.

Same work as that described under R. No. 542.

(கு-பு.)—

இந்நூலின் விளக்கம் மூவருடக் காட்டலாக்கில், 542-ஆம் எண்ணில் விளக்கப்பட்டுளது. ஆங்கு காண்க. இதன் இறுதி மூன்று ஏடுகளில் கொன்றை வேந்தன் எழுதப்பட்டு, முடிவு பெறாமல் விடப்பட்டுள்ளது. பிழைகள் உள்ளன.

R. No. 4262

எண்சுவடி

ENSUVADI

Palm-leaf. 14 × 1 inches. Foll. 52. Lines 4 on a page. Tamil. Old. Injured. Extent 208 granthas.

Presented in 1952–53, by A. M. Subramaniyam, Ambodhi' Puḷiyam paṭṭi Post, (Via). Sattiyamaṅkalam.

Complete—Printed.

Same work as that described under D. No. S2562, 2568 and 2569 ante.

(கு-பு.)—

இந்நூலின் விளக்கம் டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 2562, 2568, 2569 ஆகிய எண்களில் கூறப்பட்டுள்ளன. விளக்கம் ஆங்குக் காண்க.

R. No. 4263

அரிச்சந்திர புராணம்.

ARICCANDIRA PURĀṆAM.

Palm-leaf. 14 × 1 inches. Foll. 1—31. Lines 5 on a page. Tamil. Injured. Old. Extent, 400 granthas.

Presented in 1952–53,by A. M. Subramaṇiyam, Ambodhi, Puḷiyam paṭṭi Post, (Via). Sattiyamaṅkalam.

Incomplete—

Mayāna Kāṇḍam only.

Same work as that described under D. No. 376.

(கு-பு.)—

இந்நூலின் விளக்கம் டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 376-ஆம் எண்ணில் கூறப்பட்டுளது. ஆங்குக் காண்க.

R. No. 4264.

சித்திரலேகை கதை—நாடகம்.

CITTIRALĒKAI KATAI—NĀTAKAM.

Palm-leaf. 19 × 1 inches. Foll. 1—47 Lines, 5 on a page. Tamil. Injured. Old. Extent, 700 granthas.

Presented in 1952–53, by A. M. Subramaniyam, Ambothi, Puliyampatti post. (via) Sattiyamankalam.

Incomplete.

This folk drama deels with the story of Chitraleka the companion of Usha, the daughter of Vāṇāsura. She helps Usha to attain happiness, with her lover 'Aniruttan' who appeared first in her dreem Lord Viṣnu protected, Aniruttan while,

Beginning :

கட்டி யணைத்தனளே—வுடாங்கணை
கட்டி யணைத்தனளே
கட்டி யணைத்தனள் வட்டமுலை மீதில்
இஷ்ட சிங்காரனை மேட்டி மேட்டி மிக—(கட்டியணைத்தனளே).

அரசர் திலக சந்திரனே—ரம்பையர் புகழ்
அஷ்ட போக இந்திரனே
சுரத மதில் வசனே—எனக்கேற்கும்
சுரூபஞ் செய்திடுந்தந்திரனே—நல்ல
புருஷனே நீயென்று பூவை மனமகிழ்ந்து
இருகையா லுரத்தோடே யிருக்கி
இருக்கிச் சேர்த்துக் கட்டி
புரக் கணைகள் சொரிந்து அதினாலெந்தன்
திரேக விசிதங் கரைந்து.
அறிவு நினைவு மறந்து—நான் படுகின்ற
ஆயாசந் தனையறிந்து
அரனுக் கிடபாகம் அமர்ந்த அம்பிகை தந்த
வரங்க ளெனக்கிப்ப வந்து [ல்பித்ததென்று—(கட்டியணைத் தனளே).

காய்த்தத் தருவினங்களே—பாவையைத் தேடி
கனிகள் தந்தது போலவே—சிவனைத் தானே
மாய்த்தத் தடங்கலைத் தேடியே—சஞ்சீவிவான்
மலைகள் வந்தது போலவே—பொன் பொடிகளை
மேய்த்தத் திரேகத்து மேன்விந்தை குணத்துக்கும்
வாய்த்த மாப்பிள்ளை தானே வலியச் சிக்கினானென்று
கட்டியணைத்தனளே—வுடாங்கணைக்
கட்டியணைத்தனளே.

(விருத்தம்)

தோட்டமாய்க் கனவில் வந்து
சிந்தைதா னுருக்காம
கோட்டி யொத்தவனைக் கொங்கை
கூடங்கள் மீதணைத்து ரெண்டு

நாட்டமே தீர்ந்து பார்க்க
நாதனைக் காணு தாலே
தாஷ்ட்டகந் தேய்ந்து மாது
உடாங்கனைச் சாற்று வாளே.

End :

(வசனம்)

ஆ! ஆ! கேளும் பெண்ணே! சித்திரலேகா|| கனவிலே வந்து என்னைச் சேர்ந்து போன புண்ணிய புருஷனை நல்ல குணசாலி என்றும் என் ஸ்தனபாரங்களின் மீதிலே சேர்த்தணைத்துக்கொண்டு ஈசுவரி சொன்ன வார்த்தை பலிதமாச்சுதென்று என்னுடைய தவசு ஈடேறிச்சுதென்று எனக்கு இனிமேலொரு குறைச்சலும் இல்லை.

(முற்றுப் பெறவில்லை.)

(கு-பு.)—

இந்நூல், சித்திரலேகை கதை என்னும் பெயர்த்து. நாடக வடிவில் உள்ளது. முற்றுப் பெறவில்லை. சித்திரலேகை என்பவள் கபந்தன் என் பவனுடைய மகள். பாணாசூரனுடைய பெண் உஷை என்பவள் இவ ளுக்கு உயிர்ப் பாங்கியாக உள்ளவள். உஷை கனாக் கண்டு, கனவில் கண்ட புருஷனைத் தோழியாகிய சித்திரலேகைக்குத் தெரிவிக்க, அவள், அனிருத்தன் என்று அறிந்து அவன் உறங்குகையில் அவனைக் கட்டிலுடன் உஷையிடங் கொண்டுவந்து காட்டினாள். இந்தக் கதையை நாடகமாகத் தெரிவிப்பதுவே இந்த நூலாகும். சித்திரலேகை அதிகத் திறம்பொருந்திய மாயசாலக்காரி. “உஷை” என்ற பெயர்தான், இந்த நூலில் “உடாங்கனை” என்று அழைக்கப்படுகிறது. ஆசிரியர் பெயர் தெரிய வில்லை. பழங்காலத்துத் தெருக்கூத்து நடையில் (மெட்டில்) பாடப்பட் டுள்ளது. அக்காலத்தில் தெருக்களில் இது போன்ற சரித்திர நாடகங்கள், புராண நாடகங்கள் நடிக்கப்படுவது வழக்கம். அநிருத்தனும் உஷையும், கனவில் கூடி மகிழ்ந்த காலத்தில், பாணாசூரன் அநிருத்தனைச் சிறைப் படுத்த, அதுபோது, திருமால் அவனிடம் போர் செய்து, அவனது கரங் களையறுத்துத் தள்ளவே, அவனது தாய் வேண்டுதலின் பொருட்டு உயிர்ப் பிச்சைக் கொடுக்க, பின்னால், உஷையையும் அநிருத்தனையும் திருமாலிடம் ஒப்படைத்துக் கைலை சென்று இறைவனை வழிபட்டான் என்பது புராணக் கதை.

R. No. 4265.

திருவேங்கட சதகம்.

TIRUVEṄKAṬA SATAKAM.

Palm-leaf. 14 × 1 inches. Foll. 1—39. Lines, 5 on a page. Tamil. Old. Injured. Extent, 390 granthas.

Presented in 1952-53, by A. M. Subramaniyam, Ambodhi, Puliyam patti (post,) (via) Sattiyamankalam.

Incomplete.

only 37 stanzas.

Same work as that described under D. No. 2219.

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 2219-ஆம் எண்ணில் விளக்கப் பட்டுளது. அதன் குறிப்புக் காண்க. இதில் பல ஏடுகள் சிதைந்தும், முடிவு இன்றியும் காணப்படுகின்றன. 37 பாடல்களே உள்ளன.

R. No. 4266.

குமரேச சதகம்

KUMARĒSA SATAKAM.

Palm leaf. 15 × 1 inches. Foll. 1—20, Lines 4 on a page. Tamil. Injured. Old. Extent, 150, granthas.

Presented in1952-53 by Sri A. M. Subramaniyam, Ambodhi, Puliyampattui, Sattiyamankalam.

Incomplete;—Printed-

Folios 11, 13 to 16, 18, 19, 21 to 49 and 50 are missing.

Same work as that described under D. No. 143 ante:—

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 143-ஆம், எண்ணில் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்புக் காண்க. இதில் 26 பாடல்களே உள்ளன. மற்றவைகள் காணப்படவில்லை.

R. No. 4267.

மதுரைவீரையன் அம்மானை

MADURAI VĒRAIYAN AMMĀNAI.

Palm leaf. 17 × 1 inches. Foll. 1—70. Lines, 6 on a page Tamil. injured Old. Extent, 1,500 granthas.

Presented in 1952-53. by A. M. Subramaniyam, Ambodhi, Puliyampatti (post,) (via) Satyamañkalam.

Incomplete.

Same work as that described under D. No. 2179 ante.

(கு-பு.) —

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 2179-ஆம், எண்ணில் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிப்புக் காண்க. இதில், மதுரை வீரையன் பிறப்பு வரையில் உள்ளது.

R. No. 4268.

பிரகலாதன் நாடகம்

PIRAKLĀTAN NĀṬAKAM.

Palm leaf. 14 × 1 inches. Foll. 1—12. Lines. 4 on a page. Tamil, Injured Old Extent, 100 granthas.

Presented in 1952–53 by A. M. Subramaniyan, Ambodhi, Puliyam patti post, (via) Sattiyamaṅkalam

Incomplete.—

Same work as that described under D. No. 497.

(கு-பு.) —

இந்நூலின் விளக்கம், டிஸ்கிருப்டிவ் கேட்டலாக்கு, 497-ஆம், எண்ணில், கூறப்பட்டுளது. ஆண்டுக் காண்க. இதில் முதல் தொடக்கம் இல்லாமலும் இரணியன் பிறப்பும், பிரகலாதன் வருகையும், சம்பா சூரன் வருகையும், மட்டிலும் உள்ளன. முற்றுப் பெறவில்லை.

R. No. 4269.

மதுரை வீரையன் அம்மானை

MADURI VĒRAIYAN AMMĀNAI.

Palm leaf 16 × 1 inches. Foll. 12—48. Lines, 5 on a page. Tamil. injured Old. Extent, 320 granthas.

Presented in 1952–53, by A. M. Subramaniyan, Ambodhi, Puliyam patti (post) (Via). Sattiyasmankalam.

Incomplete.—

Wants beginning, middle and end.

Same work as that described under D. No. 2179 ante.

(கு-பு.)—

இந்நூலின் விளக்கம் டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 2179-ஆம் எண்ணில் கூறப்பட்டுளது. முதலிலும், இடையிலும், இறுதியிலும் நிறைந்த ஓலைகள் காணப்படவில்லை.

R. No. 4270.

இராம நாடகம் (சுந்தரகாண்டம்)

IRĀMANĀṬAKAM (Šuntarakāṇṭam)

Palm leaf. 14½. × 1 inches. Foll. 1—94. Lines, 5 on a page. Tamil. Injured. Old. Extent, 658 granthas.

Presented in 1952-53, by Sri A. M. Šubramaniyam, Ambodhi, Puliyampatti, (post,) Sattiyamaṅkalam.

Incomplete:—

Same work as that described under D. No. 473.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 473-ஆம் எண்ணில் விளக்கப் பட்டது. அதன் குறிப்புக் காண்க. இதில் ஒன்று முதல் ஐம்பத்தைந்து ஓலைகள் வரையில் ஒரு பகுதியும், ஒன்று முதல் நாற்பது ஓலைகள் வரையில் இரண்டாவது பகுதியுமாகப் பிரித்து எண்ணிக்கைத் தனித்தனியே இடப் பட்டுள்ளன. முற்றும் இல்லை. பிழையுள.

R. No. 4271.

அல்லியரசாணி மாலை

ALLĪYARASĀṆI MĀLAI.

Palm × 1 inches. Foll.1—62. Lines 4 on a page. Tamil. New, Injured. Extent, 456 granthas.

Presented in 1952-53 by A. M. Subramañiyam, Ambodhi, Puḷiyam patti post, (via). Sattiyamaṅkalam.

Incomplete.

Same work as that described under D. No. 2099.

(கு-பு.)—

இந்நூல், அல்லியரசாணி மாலை என்னும். பெயர்த்து டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 2099-ஆம், எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதன் குறிப்புக் காண்க. இதில் முதலும் இறுதியும் இடையேயும் உள்ள ஏடுகள் காணப்படவில்லை. மிகச் சிதலமாகவுள்ளது.

R. No. 4272.

குருக்ஷேத்திர நாடகம்

KURUṢHĒTTIRA NĀṬAKAM.

Palm-leaf. 15 × 1inches. Foll —161. Lines 8 on a page; Tamil Injured. Old, Extent, 1200 granthas

Presented in 1952-53, by Sri A. M. Subramaniyam, Ambodhi Puliyampatti, Sattiyamankalam.

Incomplete :—

By.—Saminathappulavar.

Same work as that described under R. No. 4447.

This is a folk-drama bearing a theme from the great epic Mahabha ratha. The story is not told in a cogent method. The style is poor and colloquial.

Beginning :

காப்பு.

சித்தம்பல நாதர் செல்வனெனும் வேலவரை
நித்தம்பல காலாய் நினைந்து—இத்தலத்தில்
கெந்துருவன் தன்கதையைக் கேள்வி நாடகம் பாடக்
கந்தருக்கு முன்பிறந்தோன் காப்பு.

செஞ்சடை யுள்ள நாதன்
சிவன் பதம் சென்னிவைத்தோன்
கஞ்சனை மார்கிழித்தோன்
கரியமா வழகர் பாதம்
நெஞ்சகந் தன்னில் வைத்து
நிகர்க்குருச் சேத்திரந் தன்னை
பஞ்சவர்க் காத்த நன்றி
பகருவேன் பெரியோர் முன்னே.

End :

அத்தனைக் கண்ட போது
அவன் செய்த கோரையும் போச்சு
நித்தனே வேணி நாதர்
நெற்றிக்கண் ணுள்ள தேவர்
உத்தமர் விசையந் தன்னை
உபாயமாய் ஒன்று பண்ணி
பத்தனே போவீ ரென்று
பரமனைப் பணிந்திட்டானே. (367)

(முற்றுப் பெறவில்லை)

(கு-பு.)—

இந்நூல், குருக்ஷேத்திர நாடகம் என்னும் பெயர்த்து, முற்றும் இல்லை. மிகச் சிதிலமாகவுள்ளது. முதல் 49 ஏடுகளில் மட்டும் இந்நூல் உள்ளது. பின்னே உள்ள ஏடுகள் முன்பின் தொடர்பில்லாமல் பாரதச் செய்யுட்கள் கொண்டதாக தெரியவருகின்றது. இந்த நூலைச் செங்குந்த மரபில் உதித்த புலவர். சாமிநாதன் என்பவர் இயற்றியுள்ளார். இன்னவாண்டு, இன்ன

மாதம் என்று இவரே முன்னேயுள்ள ஏடுகளில் குறிப்பிடுகின்றார். தெருக்கூத்து நாடகமாகும். நடை தாழ்ந்தது. இதுபோன்ற நூல், மூவருடைக் காட்டலாக்கு, 4447-ஆம் எண்ணில், இந்நூல் நிலையத்தில் காணலாம்.

R. Nos. 4273—4273 (a) (one bundle)

Palm leaf, 13 × 1 inches. Foll 1—26. Lines, 4 on a page. Tamil. Injured. Old, Extent, 1,000 granthas.

Purchased in 1952-53 from Sri A. M. Subramaniyam, Ambodhi Puliyampatti Post, (Via) Sattiyamaṅkalam.

R. No. 4273.

கருணாகர மாலை

KARUṆĀKARAMĀLAI.

Foll. 1--16. Extent, 50 granthas.

Complete :

Folious 3, 10 and 14 are missing.

The 32 verses in kalitturai metre are in praise of Lord Siva of Tiruppukkuli. The author, Muttupulavar is, however, a devotee of Sāraṅgapāni of Kumbakōṇam.

Beginning :

காப்பு.

அத்தி யுரித்தவர் புக்கொளியீசர் அண்ண(லா)ரிடத்தில்
சத்தி பெருங்கரு ணாகர மாலையைத் தானுரைக்க
முத்தமி ழோர்கள் இகழார் தன்பாலன் மொழியிதெனச்
சித்த மகிழ்ந்துகைக் கொள்வார் நம்புன்சொல் திரப்படுமே.

நூல்.

படியே யளந்த திருமாலுக் கிளைய பராபரியே
முடிவே முழுமுத லாகிய நாரி முழுமதியின்
வடிவே மறலி உயிர்கொண்டு போக வரும் பொழுது
அடியேனை யஞ்ச லென்றுள்வாய் பெருங்கரு ணாலயமே. (1)

முன்னை வினையைக் களைந்துனைப் போற்றி முத்திவழி
தன்னை யறிந்த பெரியோரைச் சேரவும் சற்குணமும்
பின்னையும் வேண்டியப் பாக்கிய மீந்தெனைப் பெற்றெடுத்த
அன்னையும் பாத மறவேன் றெரும்பங்கரு ணாலயமே. (2)

End :

நீயருள்வாக் கின்படியே நின்மீதில நினைந்து சொன்ன
நாயடி யேன்முப்பத் தொன்றுங் கலித்துறை நன்றெனவே
நேயமுடன் சொல்லெழுத் தசைசீர் குற்றம் நீபொறுப்பாய்
ஆய்கின்ற வேதப் புராணீ பெருங்கரு ணையமே. (30)

(முற்றும்.)

(கு-பு.)—

இந்நூல், கருணாகரமாலை என்னும் பெயர்த்து. மொத்தம் முப்பத் திரண்டு பாடல்கள் உள்ளன. திருப்புக்கொளி ஈசன்மீது பாடப்பட்டதாக இந்நூல், முதற்பாட்டிலிருந்து அறிய முடிகிறது. கலித்துறை என்னும் பாவினத்தால் ஆகியது. இதை இயற்றிய ஆசிரியர் பெயர், இதே நூலின் இறுதியில் எழுதப்பட்டிருக்கும் கலித்துறையால், முத்துப்புலவர் என்று அறிய வேண்டியுளது. அவர் குடந்தையில் எழுந்தருளிருக்கும் சாரங்க சுவாமியின் பக்தன் எனவும் விளங்குகிறது. அப்பாட்டு வருமாறு !

" தருள்வாங் குடந்தையிற் சாரங்க சுவாமி தன்னடியன்
முருகோன் றருள்பெற்ற முத்துப் புலவன் மொழிந்ததமிழ்
அருள்சேர் பெருங்கரு ணையமாலை அய்யாறுகவி
இருபோது மோதி யிருப்பார் தமக்கு இடரில்லையே." (31)

R. No. 4273 (a).

கருணாகரமாலை.

KARUṆĀKARAMĀLAI.

Foll. 17—26. Extent, 50 granthas.

Begins on fol. 17 of the manuscript described under R. No. 4273.

Complete.

Same as the above :—

(கு-பு.)—

இந்நூல், மேல் வந்த நூலோடொத்ததே. முற்றும் உள்ளது. சிதைந்துபோய் இருக்கிறது. ஏடு ஒவ்வொன்றுக்கும் நந் நான்கு பாடல்கள் வீதம் எழுதப்பட்டிருக்கின்றன ; மேல் வந்த நூலில், இரண்டே பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. அதன் குறிப்புக்காண்க.

R. No 4274.

கந்தரனுபூதி.

KANDARANUPŪTI.

Palm-leaf. 15 × 1 inches. Foll. 1—22. Lines 6 on a page. Tamil. Injured Old. Extent, 150 granthas.

Tri. Cat—66A

Presented in 1952-53, by Sri A. M. Subramaniyam, Ambodhi Puliyampatti, Sattiyamaṅkalam.

Complete—Printed.

Same work as that described under R. No. 1219 *ante*.

(கு-பு.)—

இந்நூல், மூவருடக் காட்டலாக்கு, 1219-ஆம், எண்ணில் வருணிக்க, பட்டிருக்கிறது. அதன் குறிப்புக்காண்க. பின்னே ஐந்து ஏடுகளில் சிறி முருகனைப் பற்றிய தோத்திரங்கள் உள. அவை அரை குறையாக எழுதப் பட்டிருக்கின்றன.

R. No. 4275.

விவேக சிந்தாமணி.

VIVĒKACINTĀMAṆI.

Plam leaf 15, 1 inches. foll. 1—38. Lines 5 on a page. Tamil, old Injured Extent, 226 granthas.

Presented iu 1952-53, by Sri A. M. Subramaniyam, Ambodhi, Pūliyampatti Post, Sattiyamaṅkalam.

Complete—Printed.

Same work as that described under D No. 199.

(கு-பு)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 199-ஆம், எண்ணில் விளக்கப் பட்டுளது. ஆண்டுக் காண்க. இதன்கண் ஓலை எண்கள் பல இடையிடை இன்றியும், ஏடுகள் பல சிதைந்தும், முறிந்தும் காணப்படுகின்றன.

R. No. 4276.

நஞ்சுண்டமாலை.

NAÑCUṆṬAMĀLAI.

Palm-leaf 15 × 1 inches. Foll. 1—11. Lines 4 on a page. Tamil. Injured. Old. Extent, 80 granthas.

Purchased in 1952-53, from Sri. A. M. Subramanugam Ambodhi, Puliyampatti, Sattiyamaṅkalam.

Complete.

This work praises Lord Nataraja in various names. This 'mālai s otherwise called 'nāmāvaḷi' 'Porritturuvahaval' of Tiruvasagam may be compared with this. The author is unknown.

Beginning :

உம்ப தம்பிரானே போற்றி !
ஒருமுத லானாய் போற்றி !
அம்பலத் தரசே போற்றி !
அடியவர்க் கெளியாய் போற்றி !
கம்பமாய் நின்றாய் போற்றி !
கப்பிளிப்பதியே போற்றி !
நம்பினேன் என்னை யாண்ட
நஞ்சுண்ட லிங்க போற்றி !

End :

மேவலார் புரம்எறிந்தாய் போற்றி !
விமலனே போற்றி போற்றி !
நாவலர் புகழுங் கூடல்
நஞ்சுண்ட லிங்கா போற்றி !

(கு-பு·)—

இந்நூல், நஞ்சுண்டமாலை என்னும் பெயர்த்து. இறைவனது திருநாமங்களை எடுத்துணர்த்துவது. நஞ்சுண்டகண்டனாகிய இறைவனது பெயர்கள் வாழ்த்தாகக் கூறப்படுகின்றன. யார் இயற்றியது என்பது புலப்படவில்லை. இதனை நாமாவளி என்றுங் கூறுவர்.

R. No. 4277

மரகதவல்லி மாலை

MARAKATAVALLI MĀLAI.

Palm-leaf. 14½ × 1 inches. Foll. 1—17. Lines, 5 on a page. Tamil. Injured Old. Extent, 100 granthas.

Complete.

Purchased in 1952-53, from Sri A. M. Subramaniyam, Ambodhi, Puliyampatti, (Post), Sattiyamaṅikalam.

Contains 51 verses in praise of Goddess Maragatavalliamman of Tiruppēraiyūr· These verses are also enlightening the minds of the devotees, The author remains unknown.

Beginning :

காப்பு.

பரகெதி யுதவும் பேரைப்
 பட்டி நாயகனார் பாதம்
மரகத வல்லி பேரில்
 மரகத மாலை சூட்டக்
கரதலங் குவித் தென்னாளுங்
 கடிமலர் தூவி வாழ்த்தி
அரகரா வென்று பட்டி
 ஆனையை வணங்கு வோமே.

நூல்.

திருவிருக்குஞ் செழுங் கொடித் தாமரை
செங்கண்மாலும் பிரமனுந் தேடிய
கருவிருக்குங் ககனமுற் சேவடி காட்டி
யென்னையுங் கைக்கொள்ள வேண்டுமோ
குருவிருக்குங் குறியறி வித்திடாய்
கொன்றை தாதகி தும்பை குராமலர்
மருவிருக்குஞ் சடாடவிக் குன்றிலே
வளரும் பேரை மரகத வல்லியே. (1)

தொண்டு பாடு மடியார்க்கு முன்னொரு
தொண்டு செய்த பயனோனின் சேவடி
கண்டு பாடும் பெருவாழ்வு தந்தென்னைக்
காத்த பேரைக்கட் போகக் காப்பையே
விண்டு பாடு முகாரி வயிரவி
மொகரஞ்சி குறிஞ்சி குராமலர்
வண்டு பாடு ஞ் சடாடவிக் குன்றிலே
வளரும் பேரை மரகத வல்லியே. (2)

End:

ஆழி வாழி மரகத மாலை பொன் [றன்பத்தொன்றும்
படித்தவர் கேட்டவர்
ஊழி வாழி யழியாத மோரனந்த
மொன்று மொன்று மகப் பெறு வார்களே
காழி வாழி பிறவா நெறி யெனுங்
கடவுள் வள்ளலடித் தாமரை மலர்
வாழி வாழி சடாடவிக் குன்றிலே
வளரும் பேரை மரகத வல்லியே. (51)

(முற்றும்.)

(கு-பு.)—

இந்நூல், மரகத வல்லி மாலை என்னும் பெயர்த்து. 51 பாடல்கள் கொண்டது. பாடியவர் இன்னாரென்று அறியக்கூடவில்லை. திருப்பேரை நகரில் வீற்றிருக்கும் மரகதவல்லி என்னும் அம்மன்மீது பாடப்பட்டத் தோத்திரப் பிரபந்தமாகும். தோத்திரமே யாயினும், படிப்போருக்கு அறிவு விளக்க முண்டாகு மளவில் பாடப்பட்டிருப்பது போற்றத்தக்கதாகும். எழுத்துப்பிழைகள் மலிந்துள.

R. No. 4278.

மரகதவல்லி மாலை:

MARAGADAVALLI MĀLAI.

Palm leaf. 11 × 1 inches. Foll. 1—19. Lines. 4 on a page. Tamil. Injured Old. Extent, 100 granthas.

Presented in 1952-53 by Sri A. M. Subramaniyam, Ambodhi, Puliyampatti (Post), Sattiyamankalam.

Complete.

Same as the above —

(கு-பு.)—

இந்நூல், மேல் வந்த நூலோடொத்ததே. அதன் குறிப்புக் காண்க. பிழைபட எழுதப்பட்டிருக்கிறது.

R. No. 4279.

தருமநெறி நீதிகள்.

TARUMANEṞI NĪTIKAḶ.

Palm leaf. 14½ × 1½ inches. Foll. 1—36. Lines 5 on a page. Tamil. Injured. Old. Extent, 500 granthas.

Complete.

Purchased in 1952-53 from Sri A. M. Subramaniyam, Ambodhi, Puliyampaṭṭi (Post), Sattiyamaṅkalam.

There are 99 stanzas upon the principles of virtue composed by an unknown author. The author seems to be not good at scholarship but to have got rich experience regarding virtues to be practised by the people. Though the virtues are abound in mistakes. Much can be learnt from them.

Beginning :

காப்பு.

பருதிமதி யிலகுபார் மிசையோர்க் கெல்லாம்
தருமநெறி நீதிதனை சாற்றக்—கருதியிடுத்
துங்கவெளுத் தயிந்துபொருட் சுந்தரர்பொற் செஞ்சடையிற்
கங்கைசுத்தத் தந்திமுகன் காப்பு.

நூல்.

சீர்பெறுந் தருமச் செய்கை
தெரிந்ததின் வழியே சென்று
பார்பெறப் புத்தி பண்ணில்
தனக்கது பலித்தி டாதே
யேர்பெறக் கரும மெல்லாம்
யாவர்க்கு மாகா தென்று
தேர்வுற விடுத்த றத்தை
யொல்லையிற் செய்வர் தாமே.

(பொழிப்புரை)—

தர்மமானதுவெல்லாம் கேட்கக் கடவனுமாய், கேட்ட பொருளைப் புத்தி பண்ண வல்லவனுமாய், தனக் காகாதக் காரியம் பிறருக்கு மாகாதென்று கடுகத் தருமங்களைப் பண்ணுவாம் என்றவாறு. (1)

நன்றுடன் தீதா றாகும்
அவரவர் நயந்து தன்னால்
பண்ணியப் பாவம் நன்மை
பலித்தவர் அனுப விப்பார்
சென்றிடு நூறு கற்பஞ்
செல்லினுந் தவிர்ந்தி டாது
அன்றுசெய் யனுபோகங்கள்
அனுபவித் திடவும் வேணும்.

(பொ-ரை)—

நன்றே யாகிலும், தீதே யாகிலும் தன்னாலே பண்ணப்பட்டப் புண்ணிய பாவம் இதுவிரண்டுந் தானே யனுபவிக்கவேணும் ; ஆதலால் கற்ப கோடிக் காலம் சென்றாலும் அனுபவியாமல் சும்மா போகாது என்றவாறு.

End :

சிவன்றனை யலாமற் கோடி
செய்திடுந் தரும மெல்லாம்
பவந்தனை யுதவு மல்லால்
பலத்தினை யுதவா வீசன்
றுவந்திடப் பாவங் கோடி
யியற்றினுமுயர்தி யானந்
தவந்தரு முத்தி தக்கன்
மேலவர் சாற்றுங் காலே.

(பொ-ரை)—

பரமேசுபரனுடைய பாதாரவிந்தந்திலே அன்பு வையாமல் விரதபாகம் பண்ணினாலும், முப்பத்திரண்டு அறத்துக்குள்ளாகப்பட்ட தருமம் எல்லாம் பண்ணினாலும் பிராணகண்டமே வரும். பரமேசுபரனுடைய பாதாரவிந்தத்திலே அன்பு வைத்து மகாபாவங்களைச் செய்தாலும் அந்தப் பாவங்களெல்லாம் தொலைந்துபோம் என்றவாறு. (99)

(முற்றுப் பெறவில்லை.)

(கு-பு.)—

இந்நூல், தரும நெறி நீதிகள் என்னும் பெயர்த்து. நூறு பாடல்கள் கொண்டது. இதில், 99-பாடல்களே உள்ளன. அவையும் எழுத்துப்பிழைகளும் சொற் பிழைகளும் பொருந்த எழுதப்பட்டுள. இதனை யியற்றிய ஆசிரியர் இன்னாரென்று விளங்கவில்லை. பல நூல்களையெல்லாம் கற்றுணர்ந்தப் பிற்காலத்துத் தோன்றிய நற்புலமை பெறாத ஒருவரால் செய்யப்பட்டிருக்க வேண்டும். காரணம், செய்யுட்களனைத்தும் சிறந்

நடையோடு பயின்றதல்ல. இருப்பினும், தன் கருத்துக்களைப் பிற்காலத்து மக்களுக்குத் அறிவிக்க வேண்டும் என்ற அவாவின்மேற்பட்டு, இந்நூல் யாத்திருக்க வேண்டும். இது போன்ற நடையுடைய நூல்கள் பல இந்நூல் நிலையத்தில் காணலாம். கல்வி அறிவு முழுதும் பெறாத மக்களுக்கு, எளிய நடையில் எடுத்துக்கூற, இது போன்ற நூல்கள் துணை செய்யக் கூடும்.

R. No. 4280

தரும நெறி நீதிகள்.

THARUMANERI NITHIKAL.

Palm eaf 14½ × 1½ inches. Foll. 1—36. Lines, 5 on a page. Tamil. Injured. Old. Extent, 400 granthas.

Incomplete.

Wants folios 32, 35 and 36.

Presented in 1952-53 by Sri A. M. Subramaniyam, Ambodhi, Sattiyamaṅkalam.

Same as the above.

(கு-பு.)—

இந்நூல், மேல்வந்துள்ள நூலோடொத்ததே. இதில் 95 பாடல்களே உள்ளன. சிதிலமாயது. இடையிடையே எழுத்துப் பிழைகளும் சொற் பிழைகளும் காணப்படுகின்றன. பிற அதன் குறிப்புக் காண்க.

R. No. 4281.

வில்லிப்புத்தூரார் பாரதம்

VILLIPPUTTŪRĀR BĀRATAM.

Palm leaf 15 × 1 inches. Foll. 1—399 Lines 10 on a page. Tamil Injured. Old. Extent, 1,500 granthas.

Presented in 1952–53 by Sri A. M. Subramaniyam, Ambodhi.

Complete.—Printed.

Vēttuma Parvam, Dhurōṇa parvam and Karṇa parvam.

Same work as that described under D. No. 527 ante.

(கு-பு.)

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்டலாக்கு, 527-ஆம் எண்ணில் வருணிக்கப் பட்டிருக்கிறது. அதன் குறிபபுக் காண்க. இதில், வீட்டும பருவம், துரோண பருவம், கர்ண பருவம் அடங்கியுள்ளன. சிதிலமாயது. இம் மூன்று பருவங்களும் முற்றும் உள்ளன. அச்சிடப்பட்டுள்ளது.

R. Nos. 4282—4282 (b) *(one bundle).*

Palm leaf, 15 × 1 inches. Foll. 1—106. Lines, 4 — 5 on a page. Tamil. Injured. Old. Extent, 1,160 granthas.

Presented in 1952-53 by Sri A. M. Subramaniyam, Ambodhi, Sattiyamaṅkalam.

R. No. 4282.

மரியாதை ராமன் கதை

MARIYĀDAI RĀMAN KATAI

Foll. 1—41. Extent, 500 granthas.

Incomplete.—*Printed.*

Folios 1 and 2 are missing. 42 (a) is left blank.

This work contains the witty and humorous stories of Mariyadhi Rāman, a legendary of figure but living in the minds of children. The stories are highly entertaining.

Beginning :

(நான்கு திருடர்கள் வழக்கு)

நான்கு திருடர்கள் ஒரு பட்டணத்தில் ஒரு கிழவியின் வீட்டிலிறங்கித் தாங்கள் திருடிப் பொதுவில் வைத்திருந்த உடைமைகளையும், பணங்களையும் ஒரு தவலையிலே போட்டு மேலே முத்திரையிட்டு நாங்கள் நாலு பேருமாக வந்து கேட்கும்போது "இதைக் கொடு, அதுவரை பத்திரமாகப் புதைத்து வை" என்று கொடுத்துச் சில நாள், அவள் வீட்டில் புசித்து வந்தார்கள். ஒரு நாள் அந்நால்வரும் எதிர் வீட்டுத் திண்ணையில் பேசிக்கொண்டிருக்கையில்...

....

புதைத்து வைத்திருக்கிற தவலையைத் தோண்டி எடுத்துவரச் சொன்னதாக நினைத்துக் கொண்டு தெருவில் வந்து அவனைத் தோண்டி எடுத்துவரச் சொன்னீர்களா வென்று கேட்க. * * * * *

* * * * * * * * *

End :

(இரத்தின வழக்கு)

* * * * * * * * *

* * * * * * * * *

ஓர் இராஜ கன்னிகை தான் படித்து முடிந்தவுடனே வித்தியா குருவிற்குத் தட்சணை கொடுக்கப் போனாள். அவள் அதிக ரூபவதியாகையால் அந்த வித்தியாகுரு அவள்மேலாசை கொண்டு............, ...

....

(முற்றுப் பெறவில்லை)

(கு.பு.)—

இந்நூல், மரியாதை ராமன் கதை என்னும் பெயர்த்து. முதலில் இரண்டு ஏடுகளும், இறுதியில் 42 (a) என்ற ஏட்டின் முன்புறம் எழுதப்படாமலும் விடப்பட்டுள்ளன. அப் பாகத்தில், " இரத்தின வழக்கு " என்ற கதையின் இறுதிப் பாகமும் " நவமி புருடர் வழக்கு " என்ற கதையும் காணப்பட வில்லை. அச்சிடப்பட்டுள்ளது. ஆனால், அதன் ஏடுகள் மிகச் சிதலமாக வுள்ளன. அச்சுநூலும் 1897-ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

R. No. 4282 (a).

இராயர் அப்பாஜி கதை.
IRĀYAR APPĀJĪ KATA.

Foll· 42 (b)—79 (a), Extent, 700 granthas.

Begins on fol. 42 (b) of the manuscript described under R. No. 4282.

Complete.—Printed.

This is one of the series of famous historical stories. Imgination blended with humour is the characteristic feature of these kind of tories. One hitherto unpublished story finds a place here.

Beginning :

இராயர் அப்பாஜி கதை.

அப்பாஜி முதல் மந்திரியானது.

இராயர் ராஜரீகம் பண்ணுகிற காலத்திலே அவர் தமக்குளடங்கிய குருகுல மன்னர்களையெல்லாம் வரச் சொல்லி உத்தரவு செய்தார். அங்ஙனமே எல்லாரும் வந்தனர். ஆனால், ஒரு மன்னன் மட்டும் தனக்குப் பதிலாகத் தன் மந்திரியாகிய அப்பாஜி என்பவனை அனுப்பினான். எல்லோரும் இராயர் தரிசனத்திற்குச் சென்றபோது, தனித்தனி அவரவர் பேரைக் கேட்டுத் திட்டஞ் செய்துகொண்டு வருகையில் கடைசியில் அப்பாஜி வந்தான் *

* * * * * * * * *

End :

பாச்சா மாறுவேஷம் போட்டது

* * * * * * * * *

* * * * * * * * *

பிற்பாடு இப்படிப்பட்ட மந்திரி இராயருக்கு இருக்கிறதனாலேதான் அவர் மற்றவர்களைப்போல் நமக்குப் பகுதி கட்டாமலிருக்கிறாரென்று தன் மந்திரி களிடம் விநயமாய்ச் சொன்னான்.

இராயர் அப்பாஜி கதை முற்றும்.

(கு.பு.)—

இந்நூல், இராயர் அப்பாஜி கதை என்னும் பெயர்த்து. முற்றும் உள் ளது. இருப்பினும், " விபசாரி மோசத்தைக் கண்டுபிடித்தது " என்ற கதை, அச்சுப் புத்தகத்தில் காணப்படவில்லை. இதில் அதிகமாக வுள்ளது. இது இரண்டாம் அத்தியாயம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

R. No. 4282 (b).

தெனலி ராமன் கதை.

TENĀLIRĀMAN KATAI.

Foll. 78 (b)—106. Extent, 400 granthas.

Begins on fol. 79 (b) of the manuscript descrisbed under R. No. 4282.

Complete—Printed.

Tenālirāman Katai is so famous in Tamilnad that every child knows about the hero who is noted for his witty and humorous deeds. The stories are really interesting.

Beginning :

(முதலாவது)

